
# செந்தமிழ் வள்ளல்

# சீதக்காதி



டாக்டர் எஸ். எம். கமால்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

372

# செந்தமிழ் வள்ளல்
# சீதக்காதி


ஆசிரியர்

தமிழ் மாமணி Dr. S.M. கமால்



பதிப்பகம்

சர்மிளா பதிப்பகம்

21, ஈசா பள்ளிவாசல் தெரு,

இராமநாதபுரம் 623501.

30,31.12.2000 தேதிகளில் கீழக்கரையில் நடைபெற்ற வள்ளல் சீதக்காதி 303 வது நினைவு விழா வெளியீடு

முதல் பதிப்பு : டிசம்பர் 2000

பிரதிகள் : 1000

© ஆசிரியர் உரிமை பெற்றது

**விலை : ரூபாய் 75 - 00**

வெளியீடு : வள்ளல் சீதக்காதி நினைவு விழாக்குழு
*" இஸ்லாமி பைத்துல் மால் "*
வள்ளல் சீதக்காதி சாலை,
கீழக்கரை.

அச்சும் அமைப்பும்
**K.M.S. கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ்**
19/18,T.J. காம்ப்ளக்ஸ்,
வள்ளல் சீதக்காதி சாலை,
கீழக்கரை.
போன்: 44789, 44786

# "பதிப்புரை"

கடந்த 300 ஆண்டுகளுக்கு மேலாக செத்தும் கொடுத்த வள்ளல் சீதக்காதி என்ற வழக்கு தமிழகம் அனைத்தும் வழங்கி வருவது யாவரும் அறிந்ததே. கீழக்கரையைச் சேர்ந்த சீதக்காதி மரைக்காயர் வள்ளல் மட்டும்தானா? அல்ல. அவர் ஒரு வணிக வேந்தர். சேது நாட்டு நிர்வாகத்திற்கு உதவிய ராஜதந்திரி. தமிழ் புலவர்களை ஆதரித்த கொடை நாயகர். நல்ல இஸ்லாமியர். இப்படியான பல்துறைச் செல்வராக விளங்கிய வள்ளல் சீதக்காதி மரைக்காயரை இன்று நாம் ஒரு வள்ளலாக மட்டும் கற்பனை செய்து கொள்கிறோம். அத்துடன் அந்தக் கற்பனையிலே இன்னும் பல விதமான கட்டுக்கதைகளும், அவரது வாழ்க்கையில் நடைபெறாத பொய்மைச் சம்பவங்களும், பொருத்தமற்ற ~சய்திகளும் அந்தக் கற்பனையில் கலந்து சீதக்காதி மரைக்காயரைப் ;றிய ஒரு தவறான வடிவத்தை தமிழ் மக்களுக்கு வழங்கிக் காண்டிருக்கிறது.

இந்த வள்ளலைப்பற்றிய ஆவணங்கள் பல இருந்தும் அவைகளை இதுவரை யாரும் ஆய்வு செய்யாது தங்களுக்குத் தெரிந்த வகையில் வள்ளலைப்பற்றிய நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டுள்ளனர்.

இத்தகைய குறைபாடான செய்திகளைக் கலைந்து வள்ளல் சீதக்காதி மரைக்காயரது சரியான வடிவத்தை வாசகர்களுக்கு வழங்கிய முறையில் சேது நாட்டு வரலாற்றுச் செம்மலான டாக்டர் **S.M. கமால்** அவர்கள் இந்த சிறு நூலினை வரைந்துள்ளார். வள்ளல் சீதக்காதி மரைக்காயரைப் பற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளும் முயற்சியில் இது ஒரு முதல் படியாகும்.

ஆதலால் இந்த நூலினை வாசகர்களுக்கு எங்களது பதிப்பாக வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

- பதிப்பகத்தார்

# “நெஞ்சம் மறப்பதில்லை”

வள்ளல் சீதக்காதியைப் பற்றிய இந்த வாழ்க்கை வரலாற்று நூலினை மிகக் குறைந்த காலத்தில் அமைத்து வெளிவருவதற்கு காரணமானவர்களை இங்கு குறிப்பிடவேண்டியது எனது தலையாய கடமையாகும். எனது உடல் நலக் குறைவினாலும், கண்பார்வை நலிவினாலும் சோர்ந்து போன நிலையில் இந்த நூல் வள்ளல் சீதக்காதி நினைவு விழா வெளியீடாக வெளிவருவதற்கு எனது கண்களாக பயன்பட்டு பல நூல்களின் ஆதாரங்களை திரட்டித் தந்த ஜனாபா **சர்மிளா சமீமையும்,** இந்த நூல் முழுமையும் உருப்பெறுவதற்கு எனது கரங்களாக பயன்பட்டு எழுத்துப்பணியை முழுமையாக செய்து முடித்த அருமைச் சகோதரர் கீழக்கரை ஜனாப் **K.M.S. சதக்கத்துல்லாஹ்** அவர்களையும் இந்த நூலின் அச்சுப்படிகளை ஆர்வத்துடன் திருத்தி செம்மை செய்து அளித்து உதவிய பேராசிரியர் **மை. அப்துல் சலாம்** அவர்களையும் இந்த நூல் உருவாவதற்கு உற்ற துணையாக விளங்கிய கீழக்கரை வள்ளல் சீதக்காதி நினைவு விழாக்குழுவினரையும் இந்த நூல் குறுகிய காலத்தில் அச்சிட்டு வெளிவருவதற்கு உதவிய கீழக்கரை **K.M.S. கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ்** நிறுவனத்தையும் மறப்பது என்பது இயலாததாகும்.

இவர்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த ஆழிய நன்றியை உரித்தாக்குகின்றேன்.

**டாக்டர் S.M. கமால்**

**10.12.2000**

**(நூலாசிரியர்)**

# BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| 1. Title | : SENTHAMIL VALLAL SEETHAKATHI |
| 2. Author | : Dr. S.M. Kamal |
| 3. Language | : Tamil |
| 4. Edition | : First ( December 2000 A.D) |
| 5. Copyright | : Author |
| 6. Size of the book | : 21.5 X 14 Cms ( Demi ) |
| 7. Type used for text | : 13 Pt ( Tamilarasi ) |
| 8. Pages | : 200 + 16 |
| 9. No of copies | : 1000 |
| 10. Printers | : K.M.S. Computer Printers<br>19/18, T.J. Complex,<br>Vallal Seethakathi Salai, Kilakarai. |
| 11. Publishers | : Sharmila Publishers<br>21, Esa Pallivasal Street,<br>Ramanathapuram - 623 501. |
| 12. Price | : Rs. 75.00 |
| 13. Subject | : Biographical Sketch of the GreatPhilanthrapist and Commercial Magnet of 17thCentury A.D. Viz, Vallal Seethakathi Maraicayar of Kilakarai, Ramnad Dt. |

ÉCOLE FRANÇAISE D'EXTRÊME-ORIENT ■ CENTRE DE PONDICHÉRY
P.O. Box No. 151 ☆ 16 & 19 Dumas Street ☆ Pondicherry 605001 ☆ India

முனைவர் **கோ. விசயவேணுகோபால்**
கல்வெட்டுத்துறை, பிரெஞ்சு இந்தியவியல் ஆய்வு நிறுவனம்
பாண்டிச்சேரி.

## அணிந்துரை

கெழுதகை நண்பர் *டாக்டர் எஸ்.எம். கமால்* அவர்கள் அண்மையில் எழுதியுள்ள **"செந்தமிழ் வள்ளல் சீதக்காதி"** எனும் நூலைப் படிக்கும் வாய்ப்புப் பெற்றேன். நூல் பன்னிரு இயல்களில் பாங்குற அமைந்துள்ளது. முதலாவது இயலில் கீழக்கரை ஊர் வரலாற்றையும், பழமைச் சிறப்பையும், கல்வெட்டுக்கள், பிறநாட்டார் குறிப்புக்கள் போன்ற சான்றாதாரங்கள்வழி நிறுவியுள்ளார். இரண்டாம் இயலில் கீழக்கரையைப் பற்றிய பழமையான போர்ச்சுகீசிய ஆவணங்கள்வழிக் கீழக்கரை மரக்காயர்கள் செய்த முத்து வணிகம், கேரள மன்னர் - போர்ச்சுகீசியர் கொண்டிருந்த உறவுகள், கீழக்கரையின் பழைய பெயர்கள் எனப் பல சுவையான வரலாற்றுச் செய்திகளைப் புலப்படுத்தியுள்ளார்.

மூன்றாவது இயலே நூலின் நாயகரான வள்ளல் சீதக்காதிபற்றி அமைந்துள்ளது. முன்னிரு இயல்கள் பின்னணிகளைப் புலப்படுத்துவன. இவ்வியலில் தரப்பட்டிருக்கும் வள்ளலின் முன்னோர்களைப் பற்றிய குறிப்புக்கள் பின் அவர்தம் வாழ்வு நெறியைப் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. இவ்வகையில் டச்சுக்காரரின் குறிப்புகள் தக்கவகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும் இக்குறிப்புக்களில் உள்ள தெளிவின்மையையும் ஆசிரியர் எடுத்துக்காட்டிப் **"பெரிய தம்பி"** என்ற பெயர்வழக்கு வள்ளல் சீதக்காதியையும் அவர்தம் தந்தையாரையுமே குறிக்கும் எனத் தெளிவுபடுத்தியுள்ளார். அடுத்த இயல் சேதுபதி மன்னரோடு வள்ளல் கொண்டிருந்த உறவுநிலைகளை விளக்குகிறது. இங்கும் பழைய டச்சு ஆவணங்கள், இராமநாதபுரம் சமஸ்தான ஆவணங்கள் ஆகியவற்றின் துணைகொண்டு வள்ளலின் தொண்டுகளைச் சிறப்புற விளக்கியுள்ளார். மேலும் வள்ளல் செய்த மற்றொரு முக்கியப் பணிபற்றியும் எடுத்துக் காட்டியுள்ளார். இப்பணி பாரசீக மொழியைப் பொதுமொழியாகச் செய்த பணியாகும். இதனை ஆசிரியர் சமஸ்தான ஆவணங்களில் காணப்படும் பல பாரசீகச் சொற்களை எடுத்துக் காட்டி நிறுவுகின்றார். சேதுமன்னர் -

வள்ளல் சீதக்காதி உறவுகள் சமய நல்லிணக்கத்திற்கேற்ற சான்றுகளாகத் திகழ்ந்தமையை - இன்றையச் சூழலுக்குப் பொருத்தமான வகையில் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளமை பாராட்டத்தக்கது.

ஆசிரியர் வள்ளல் சீதக்காதியின் மற்றொரு பரிமாணத்தை ஐந்தாவது இயலில் எடுத்துக் காட்டியுள்ளார். தலைமலை கண்ட தேவர், அழகிய சிற்றம்பலக் கவிராயர், படிக்காசுத்தம்பிரான், திருநெல்வேலி நமச்சிவாயப் புலவர், திருப்புவனம் கந்தசாமிப் புலவர் போன்ற தமிழ்ப்புலவர் பெருமக்களோடு வள்ளல் கொண்டிருந்த தமிழ்த்தொடர்பினை நன்கு விளக்கியுள்ளார். வள்ளலின் மீது பாடப்பெற்ற சீதக்காதி திருமண வாழ்த்துப்பாடல், நொண்டி நாடகம் ஆகியவற்றின் சிறப்புக் கூறுகளை எடுத்தியம்புவதோடு திருமணவாழ்த்து எங்ஙனம் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழக முசுலீம்களின் வாழ்வு நெறிகளையும் பழக்க வழக்கங்களையும் புலப்படுத்தும் அரிய கருவூலமாக விளங்குகிறது என்பதையும் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

இசுலாத்தின்மீதும் இசுலாமியப் புனிதரிடத்தும் வள்ளல் கொண்டிருந்த பெருமதிப்பை எடுத்துக் காட்டுகிறது ஆறாவது இயல். இமாம் சதக்கத்துல்லா *அப்பா* அவர்கள் மீது வள்ளல் கொண்டிருந்த பெரு மரியாதையை நன்கு விளக்கியுள்ளார். இப்பெருமதிப்புக்கு எடுத்துக் காட்டாக விளங்குவதே இன்று நாம் காணும் ஜாமிஆ மஸ்ஜித். இமாம் அவர்களின் அறிவுரைப்படி அமைக்கப்பட்டதே இப்பெருஞ்சின்னம். திராவிட-இசுலாமியக் கட்டடக் கலைக்குத் தக்க சான்றாக விளங்குவது இது.

ஏழாம் இயல் பெரியதம்பி மரக்காயர் - ஆங்கிலேயர் இடையேயான தொடர்புகளை விளக்குகிறது. அப்போதைய சென்னை மாகாண ஆளுநர் கைபோர்டு என்பவருக்குப் *பெரியதம்பி மரக்காயர்*(வள்ளல் சீதக்காதி) எழுதிய கடிதத்தை ஆதாரமாகக் கொண்டு இவை விளக்கப்பட்டுள்ளன. பாரசீக மொழியில் வள்ளல் எழுதிய கடிதம் இது. மேலும் இவ்வியலில் வள்ளலின் புகழும் செல்வாக்கும் எவ்வாறு இலங்கையிலும் பரவியிருந்தன என்பதும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

டச்சுக்காரர்கள் சீதக்காதி மீது எவ்வாறு பகைமை பாராட்டினர், அதனைச் சேதுபதி மன்னர் எவ்வாறு எதிர்கொண்டார் என்பது போன்ற சுவையான வரலாற்றுச் செய்திகள் எட்டாம் இயலில் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

ஒன்பதாம் இயலில் சீரும் சிறப்புமாகத் திகழ்ந்த பெருவள்ளல் சீதக்காதி மரக்காயரின் மறைவினைப் படிக்காசுப் புலவரின் இரங்கற்பாக் கொண்டு

ஆசிரியர் படிப்போர் மனமுருகும்படி வருணித்துள்ளார். பத்தாம் இயலில் வள்ளல் சீதக்காதியின் காலத்தை உறுதிப்படுத்தும் குறிப்புக்களைத் தந்துள்ளார். இவ்வியலில் தரப்பட்டுள்ள வள்ளலின் கொடிவழிப் பட்டியல் வரலாற்றாய்வாளர்க்கு மிகுதியும் பயன்படுவது. பதினோராம் இயலில் வள்ளலின் வழியினர் தாழ்நிலைக்குச் சென்ற நிலைகள் பற்றி ஆவணங்களின் துணைகொண்டு எடுத்துக்காட்டியுள்ளார்.

இறுதி இயல் நூலின் முத்தாய்ப்பாக அமைந்துள்ளது. வள்ளல் சீதக்காதிபற்றி உலவிவரும் கற்பனைச் செய்திகள் தக்க ஆதாரங்களுடன் மறுத்துரைக்கப்பட்டுள்ளன.

17ஆம் நூற்றாண்டில் தமிழகத்தே கடல் வாணிபத்திலும், நிருவாகத்திறமையிலும் சிறந்து விளங்கிய இசுலாமியச் சமயஞ்சார்ந்த அதேபோது தமிழையும் பாரசீகத்தையும் போற்றி வளர்த்த - வள்ளல் சீதக்காதியின் வரலாற்றை ஆசிரியர் நடுநிலையோடு காய்தல் உவத்தலின்றி எழுதியுள்ளமை மிகவும் பாராட்டத்தக்கது.

கிடைக்கும் போர்த்துக்கீசிய, டச்சு, ஆங்கில ஆவணங்களை ஆதாரங்களாகக் கொண்டு வரலாற்று நிகழ்வுகளை நிரல்பட விளக்கியுள்ளமை இங்குப்பெரிதும் குறிப்பிடத்தக்கது.

அனைத்திற்கும் மேலாக வள்ளல் சீதக்காதி பெயரால் வழங்கும் பல கற்பனைச் செய்திகளைத் தக்க சான்றுகளோடு பொய்ப்பித்து உண்மையை நிலைநாட்டியிருக்கிற திறம் போற்றுதற்குரியது. அழகிய புகைப்படங்கள், கல்வெட்டுக்கள், பின்னிணைப்புக்கள் ஆகியவற்றைக் கொண்டு நூல் சிறப்புற அமைந்துள்ளது.

கண்கள் பழுதடைந்த நிலையிலும்கூடக் கடமை தவறாமல் கடும் உழைப்பினை மேற்கொண்டு ஓர் வரலாற்று ஆசிரியனுக்கு இருக்கவேண்டிய பொறுப்புணர்ச்சியோடு எழுதப்பட்ட இந்நூலை மனமாரப்பாராட்டுகின்றேன்.

அன்பு நண்பர் *டாக்டர் எஸ்.எம். கமால்* அவர்கள் விரைவில் கண்ணலம் பெற்று மேலும் பல நல்ல நூல்களை எழுதியளிக்கவேண்டுமென மனமார வாழ்த்தி இவ்வுரையை நிறைவு செய்கின்றேன்.

பாண்டிச்சேரி
25.12.2000

அன்பன்,
இரா. வசந்த கோபால்.

## III

## இந்த நூலின் வரைவிற்கு பயன்பட்ட நூல்கள்


1. MANUAL OF RAMNAD SAMASTHANAM (1891) - T. RAJARAM ROW
2. PRINCE OF POETS AND PORTS - SANJAY SUBRAHMANYAM & DAVID SHULMAN
3. LIST OF SOUTH INDIAN INSCRIPTIONS (1909) - K.V. RANGACHARYA
4. ARCHAELOGICAL SURVEY OF INDIA - Vol IV - A.S.I., MYSORE
5. HISTORY OF PANDYA COUNTRY - K. NILAKANTA SASTRI
6. FOREIGN NOTICES OF SOUTH INDIA - K. NILAKANTA SASTRI
7. HISTORY OF MADURA NAYAKS - K. SATHYANATHA IYER
8. SOUTH INDIA AND HER MUHAMMEDAN INVADERS - Dr. S. KRISHNASAMY AYYANGAR
9. MUSLIMS IN SRI LANKA - Dr. M. SHUKRI
10. ECONOMIC CONDITIONS OF TAMILNADU IN AD1000-1200 - Dr. A. APPADORAI
11. PORTUGHEESE IN INDIA - DANVERS
12. PORTUGHEESE IN TAMIL NADU - Dr. A. JAYASEELA STEPHAN.
13. MALABAR MANUAL - PART I - MORGAN
14. RECORDS OF TAMILNADU ARCHIVES IN MADRAS
15. RECORDS OF KALONIAL ARCHIVES IN THE HAGUE
16. *ஷஹீது சரிதை* - முகம்மது இப்ராஹிம் லெப்பை
17. *தீன் நெறி விளக்கம்* - மீசல் வண்ணக்களஞ்சியப்புலவர்
18. *சங்க இலக்கியங்கள்*
19. *வள்ளல் சீதக்காதி* - Dr. ஹுசைன் நய்னார்
20. *கல்வெட்டுக்கள் கூறும்செய்திகள்*-T.V. சதாசிவ பண்டாரத்தார்
21. *இராமநாதபுரம் சமஸ்தான நிலமானிய ஓலைக்கணக்கு*
22. *ஆவணம்* (ஆண்டு இதழ்) 1997
23. *கீழக்கரை கல்வெட்டுக்கள்*
24. *பல்சந்த மாலை*
25. *சேதுபதி மன்னர் செப்பேடுகள்* - Dr.S.M. கமால்.

# பொருளடக்கம்

பக்கம்

1. கிழக்குக்கடற்கரையும், கீழக்கரையும் 1

2. கீழக்கரையில் போர்ச்சுக்கீசியர் 12

3. முன்னோர்கள் வழியில் சீதக்காதி மரைக்காயர் 25

4. சேதுபதி மன்னரும், வள்ளல் சீதக்காதியும் 36

5. தமிழிலே தோய்ந்த நெஞ்சம் 52

6. ஆசானிடம் அளவற்ற மரியாதை 68

7. பெரியதம்பி மரைக்காயரும், ஆங்கிலேயரும் 75

8. டச்சுக்காரர்கள் மோதல் 81

9. சீதக்காதி மரைக்காயரத் மறைவு 92

10. சீதக்காதியின் குடும்பமும், காலமும் 99

11. வள்ளல் பற்றிய வரலாற்றுச் சுவடுகள் 107

12. வள்ளல் சீதக்காதி பற்றி வழங்குகின்ற பொருத்தமற்ற செய்திகள் 113

# இணைப்புகள்

I. கீழக்கரை சொக்கநாதர் ஆலயக்கல்வெட்டுக்கள். 125

II. கீழக்கரை பழைய குத்பாப் பள்ளிவாசல் கல்வெட்டுக்கள். 129

III. கீழக்கரை காட்டுப்பள்ளி எஸ்.வி.எம். தோட்டத்திற்கு அருகில் உள்ள கல்வெட்டு. 131

IV. வேதாளை கூரைப்பள்ளிக் கல்வெட்டு. 131


V. வள்ளல் சீதக்காதி திருமண வாழ்த்து. 133

VI. வள்ளல் சீதக்காதி நொண்டி நாடகம். 164

# 1

# கிழக்குக் கடற்கரையும், கீழக்கரையும்

வங்கக் கடலின் விரிந்து பரந்த அலைக்கரங்கள் ஓடி ஆடி வந்து இந்தக் கரையை ஒரு நாளைக்கு எத்தனை முறைகள் தான் தொட்டுத் தழுவிச் செல்வது! கிழக்கே இருந்து ஊர்ந்து வரும் கொண்டல் காற்று இந்த அலைகளைத்தாலாட்டி மகிழ்வதுடன் அவைகளை வானை நோக்கி எழும்படி ஊக்குவித்து வருவதும் இந்தக் கடலில் நாள்தோறும் காணப்படும் காட்சியாகும்.




இந்தக் கடற்கரையில் எத்துணையோ ஊர்களும், பட்டினங்களும் எழுந்து செழித்து மறைந்தும் போயுள்ளன. இந்தக் கடற்கரையில் சிறப்புடன் விளங்கிய இருபட்டினங்களை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மருங்கூர், சாலியூர் என்ற அந்த இரு பட்டினங்களும் இருந்த சுவடுகளே இந்தக் கடற்கரையில் இன்று இல்லை. கிரேக்க மாலுமி தாலமி குறிப்பிடுகின்ற "அர்ரகார்" என்ற கடற்கரைச் சந்தையும் "பாசா" என்று இலங்கை வரலாறு


குறிப்பிடுகின்ற பட்டினமும் உலகப்பயணி இபுனு பதூதா "பத்தன்" என்று குறிப்பிடுகின்ற "பராக்கிரம பட்டினமும்" இதே கரையில் இருந்து மறைந்து விட்டன. இவையெல்லாம் காலச்சுழலில் கடந்தகால கடற்கரையின் செல்வ வளமை கூறும் சான்றுகளாக விளங்குகின்றன. இந்தப் பட்டினங்களில் விற்பனையான முத்துக்களையும் பிற பொருள்களையும் பெற்றுச் செல்வதற்காகவும், தங்களது நாட்டின் மட்கலங்கள், மதுக்கலசங்கள், மகரவீணை, பாவை விளக்கு போன்ற பொருள்களை விற்பனை செய்வதற்காகவும் கிரேக்கர்களும் ரோமர்களும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இங்கே வந்து சென்றதைப் பல சங்க இலக்கியங்களில் காண முடிகிறது அந்த இலக்கியங்கள் அவர்களை "யவனர்கள்" என குறிப்பிட்டுள்ளன.

இதனை அடுத்து இஸ்லாம் என்ற ஏகத்துவத்தின் பேரொளி அரபுத் தாயகத்திலிருந்து கிழக்கிலும் மேற்கிலும் பரந்து ஒளிர்ந்த கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் அரபுநாட்டு முஸ்லிம்கள் இந்தப்புனித மண்ணிலே பாதங்களைப் பதித்ததை வரலாறு விளம்புகின்றது. தமிழ்நாட்டின் வடக்கே கோவளத்திலும், மஹ்மூது பந்தரிலும் முறையே நாயகத்தோழர்களான தமீமுல் அன்சாரியும், உக்காசாவும் அடக்கம் பெற்றிருப்பது இங்கு நினைவு கூறத்தக்கது.

தமிழ் இலக்கியங்கள் இந்த அரபு நாட்டு வணிகர்களை முதலில் "யவனர்" என்றும், பின்னர் "சோனகர்" "துருக்கர்" "மரக்கலராயர்" என்றும் தொடர்ந்து குறிப்பிட்டு வந்துள்ளன. இவர்களது வணிகச் சாத்துக்கள் "அஞ்சுவண்ணம்" என்றும் "அஞ்சுவன்னம்" என்றும் குறிப்பிட்டுள்ளன. இவர்கள் மேலைக் கடற்கரையைக் கடந்து கிழக்குக் கடற்கரையில் காயல்பட்டினம், கீழக்கரை, பெரியபட்டினம், தொண்டி ஆகிய துறைமுக நகரங்களுடன் வணிகம் மேற்கொண்டதை பல கல்வெட்டு செய்திகள் குறிப்பிடுகின்றன. இவர்கள்



கி.பி. 12, 13 நூற்றாண்டுகளில் அரபு நாட்டிலிருந்து கிழக்குக் கடற்கரை துறைமுகங்களுக்கு அரபு நாட்டு குதிரைகளை ஏற்றி வந்த தோணியைக் குறிக்கும் ஓவியம் (நெல்லைச் சீமை திருப்புடையார் கோவில் கோபுர ஓவியம்)




கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வாணிபத்தில் செழுமை பெற்று விளங்கிய கடற்கரைப் பட்டினங்களைக் காட்டும் வரைபடம்.

கிழைக்கரையில் தங்கியது பற்றிய வரலாற்று ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை.

பெரும்பாலும் இந்த அரபிமுஸ்லிம்கள் இன்றைய கீழக்கரை நகரின் கிழக்குத் தெருவுக்கு அப்பால் குடியேறியிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. அதற்கான தடையங்களாக அங்கு அழிந்து போன குளங்களும், மணல் திட்டுக்களும் உள்ளன. இந்த வணிகர்கள் இந்த பகுதியில் வணிகம் செய்தபொழுது கி.பி. பதினான்காம் நூற்றாண்டு தொடக்கம் வரை இங்கு செலாவணியாக தங்களது நாட்டின் தங்க நாணயமான தினாரையும், வெள்ளி நாணயமான திர்ஹமையும் பயன்படுத்தி வந்தனர். இந்த இரண்டு நாணயங்களும் ஏற்கெனவே திருக் குர்ஆனில் சூரா 12:20-ல் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை இரண்டும் முறையே "தினாரா" எனவும் "திரம்மா" எனவும் தமிழ் மக்களால் வழங்கப்பட்டதை பல கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகிறது.

குறிப்பாக மதுரை, தஞ்சை, திருப்புத்தூர், அருப்புக்கோட்டை, திருத்துறைப்பூண்டி, குடுமியான்மலை, திருப்பராய்த்துறை, திருவடந்தை ஆகிய ஊர்க் கல்வெட்டுக்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. மேலும் இந்தப்பகுதி அஞ்சுவண்ணங்களில் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட திர்ஹம் என்ற வெள்ளி நாணயம் "அஞ்சுமேனி திரம்மம்" என பெயரிடப்பட்டிருந்ததாக பேராசிரியர் அப்பாத்துரை அவர்கள் குறிப்பிட்டுள்ளர்கள்.

மேலும் இன்று வழக்கில் உள்ள கீழக்கரை என்ற நகர் பதினைந்து, பதினாறாவது நூற்றாண்டுகளில் அனுத்தொகை மங்கலம் என்ற பெயரில் வழங்கப்பட்டதை கீழக்கரை சொக்கநாதர் கோவிலில் இருந்து படி எடுக்கப்பட்ட கல்வெட்டுக்களிலிருந்து தெரிய வருகின்றது. இந்த கல்வெட்டுக்கள் கி.பி. பதினாறாவது, பதினேழாவது நூற்றாண்டுகளைச் சேர்ந்தவையாகும். இவைகளில் கி.பி.1531

ஆம் ஆண்டு கல்வெட்டில் கீழக்கரையிலும் மற்றும் நாலுபட்டணத்திலுள்ள பதிணென் விஷயத்தார் என்ற வாணிபக்குழுவினர் ஒன்று கூடி பிள்ளையார் பூஜைக்கு தர்மமாக அதுவரை நடைமுறையில் உள்ளபடி முத்து விற்பவர்கள் நூறு முத்துக்கு ஒரு குழி முத்து கொடுத்து வந்ததை மாற்றி, நூறுபணத்திற்கு அரைப்பணம் கொடுக்க வேண்டுமென முடிவுசெய்ததை இந்த கல்வெட்டு தெரிவிக்கிறது. அடுத்த கல்வெட்டு கி.பி.1545ஆம் ஆண்டைச் சார்ந்ததாகும். இதன் வாசகத்தின்படி அச்சுதராய தும்பிச்சி நாயக்கர் பதிணென் விஷயத்தார் என்ற வாணிபக்குழுவினர் "மடிச்சீலை வரி" (துணிவரி) அளிக்க வேண்டுமென்ற நியதியை ஏற்படுத்தியதையும் அவர்களுக்கு காவல் உரிமை வழங்கியதையும் தெரிவிக்கின்றது. மூன்றாவது கல்வெட்டு இராமநாதபுரத்தை ஆட்சிசெய்த் திருமலை ரெகுநாத சேதுபதி மன்னர் (கி.பி. 1645 - 1674) அனுத்தொகை மங்கலமாகிய கீழக்கரை மீனாட்சி சுந்தரேசுவரருக்கு தானமாக ஊர் ஒன்றினை வழங்கியதை தெரிவிக்கின்றது.

இந்த மூன்று கல்வெட்டுக்களிலிருந்து அனுத்தொகை மங்கலமாகிய கீழக்கரை கி.பி.1531 முதல் 1545 ஆகிய ஆண்டுகளில் வாணிபத்தில் செழுமை பெற்றிருந்ததையும், அங்கு பதிணென் சாத்து போன்ற வாணிபக்குழுக்கள் நிலைபெற்றிருந்ததையும் முத்து, கைத்தறி துணி (மடிச்சீலை) ஆகிய பொருட்களில் சிறப்பாக வாணிபம் நடைபெற்று வந்ததையும் தெரிவிக்கின்றன. இதனைப் போன்றே இந்தப்பகுதி பதினேழாம் நூற்றாண்டில் இராமநாதபுரம் சேதுபதி மன்னரது ஆட்சிக்குள் அமைந்திருந்ததையும் அங்கு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் என்ற ஆலயம் இருந்ததையும் அறிய முடிகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் இன்றைய கீழக்கரை நகரின் தெற்குப் பகுதி இன்றளவும் "தண்டலை மேலக்கரை" என்ற பெயரில் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. தண்டலை என்பது கடற்கரையை அடுத்த செழிப்பான அல்லது பசுமையான பகுதி என்பதாகும். இன்றும்

தொண்டை மண்டல கடற்கரையில் தண்டலம் என்ற பெயருடன் சில ஊர்கள் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் "தண்டலையார் சதகம்" என்ற சிற்றிலக்கியத்தின் இறைவன் தண்டலத்தில் உள்ளவர் தண்டலையார் என குறிப்பிடப்பட்டிருப்பது இந்த தண்டலம் என்ற சொல்லின் அடிப்படையில் எழுந்ததாகும்.


முந்தைய அனுத்தொகை மங்கலம் என்ற பெருநகர் மிகச்சிறப்பாக விளங்கி வந்த காரணத்தினால் அந்த ஊரின் கிழக்கு மேற்கு பகுதிகளும் கீழைக்கரை, மேலைக்கரை என வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பது ஊகிக்கப்படுகிறது. கி.பி.1195 -ல் இன்றைய ஏறுபதியில் ஷஹீதான சுல்த்தான் செய்யது இபுறாகீம் வலியுல்லாஹ் அவர்களது வஃபாத்துக்குப்பிறகு நூறு ஆண்டுகள் கழித்து கடல்கோள் ஏற்பட்டதை "ஷஹீது சரிதை" என்ற நூல் தெரிவிப்பதும், கி.பி.1480 -ல் கிழக்குக் கடற்கரையில் மிகப்பெரிய சூறாவளிக்காற்றினால் கடல் அழிவு ஏற்பட்டு இன்றைய சிறு தீவுகள் புதிதாக தோன்றியதையும், பாம்பன் நீரிணைப்பு அகலமாகியதையும் "இராமநாதபுரம் மேனுவல்" என்ற நூல் குறிப்பிடுவது இங்கு ஆராயத்தக்கதாக உள்ளது.

மேலே கண்ட இரு கடல் அழிவுகளில் ஒன்றினால் அனுத்தொகை மங்கலம் என்ற பெருநகர் முழுமையாக அழிவு பெற்றதின் காரணமாகவும் அதன் கிழக்குப்பகுதி மட்டும் சற்று மேடாக அமைந்திருந்து காலத்தின் பேரழிவைச் சமாளித்து நின்றதால் ஊரின் முழுப்பெயர் மறைந்து முந்தைய கீழைக்கரை என்ற கிழக்குப்பகுதியே இன்றைய ஊரின் பெயராக மாறிவிட்டது எனலாம். இதனை அண்மையில் கீழக்கரை மாயாகுளம் எல்லையில் நடத்தப்பட்ட கள ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட கலவெட்டு ஒன்று உறுதிப்படுத்துகிறது.

இந்தக் கல்வெட்டின் வாசகப்படி அந்தப்பகுதியில் கி.பி. 1425-ல் "ஷக்கூர்" என்பவர் மரணமுற்றதை அந்தக்கல்வெட்டு

தெரிவிப்பதுடன் அதே பகுதியில் இன்னும் பலர் அடக்கம் செய்யப்பட்டதற்கான கலவெட்டுக்களும் அங்கு உள்ளன. இவைகளிலிருந்து அங்கே தண்டலை மேலக்கரையில் ஒரு பெரிய முஸ்லிம் மக்கள் குடியிருப்பு அமைந்திருந்து, கி.பி. **1480**-ல் ஏற்பட்ட கடல் அழிவினால் சேதமுற்றதை எளிதில் அறிந்துகொள்ளத்தக்கதாக இருக்கிறது. மேலும் இந்தப்பகுதிக்கு வடக்கே இரண்டு மைல் தொலைவிலுள்ள தில்லையேந்தலில் இந்த ஊரின் தொன்மையைக் குறிக்கும் பொருள்களாக (சுமார் நாற்பத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர்) கீழக்கரையின் மாவிலாத் தோப்பு பகுதியில் சீனநாட்டு பொற்காசுகள் ஏழு கண்டெடுக்கப்பட்டு இராமநாதபுரம் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஒப்படைக்கப்பட்டு அதனை உரிமை கொண்டாடுபவர் எவரும் இல்லாததால் அந்தக் காசுகள் பொதுஏலத்தில் விடப்பட்டு விட்டன. இந்தக் காசுகள் (மாத்து குறைந்த பொற்காசுகள்) சீன நாட்டைச் சேர்ந்தவை என்பதைக் குறிக்கும் வகையில் அந்தக் காசுகளில் சீன நாட்டு நாகப்பாம்புகள் உருவம் பொறிக்கப்பட்டிருந்ததை நான் பார்த்திருக்கிறேன்.

மேலும் கீழக்கரையின் பழமையைக் குறிக்கும் இந்த சான்று ஆதாரங்கள் மறைந்ததைப் போன்று இன்னும் இரு வரலாற்றுத் தடயங்களான சீனநாட்டுப் பளிங்குக் கோப்பைகள், தட்டுக்கள் உடைந்தவை தொகுதியாக இன்றைய கலங்கரை விளக்கப்பகுதியில் கிடந்ததையும் அதனையடுத்து கடற்கரையில் அப்பொழுதைய பேரூராட்சி தலைவர் மர்ஹூம் **A.S.V.M.** சேகு அப்துல் காதர் அவர்களது கிட்டங்கிக்கு அருகில் இரண்டு செவ்வக வடிவமுடைய கல் நங்கூரங்களும் மறைந்து விட்டன. இந்த கல் நங்கூரங்கள் அரபுநாட்டிலிருந்து வந்த கப்பல்களில் பயன்படுத்தப்பட்டவை. நீண்ட சதுரவடிவம், மத்தியில் வட்டமான துளை உள்ளவை. இத்தகைய கல் நங்கூரங்கள் இந்தக் கடற்கரையில் பெரியபட்டினத்திலும், பாம்பன் அருகிலும், தொண்டியிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த கல் நங்கூரங்கள் கி.பி.பனிரெண்டாம் நூற்றாண்டைச்




கீழக்கரை நகரின் அமைப்பு பற்றிய நில வரைவு படம்

சார்ந்தவை. இன்றைய கீழக்கரையின் பண்டகசாலை தெரு, ஜின்னா தெரு, பிரபுக்கள் தெரு, ஓடக்கரைத் தெரு,மேலத் தெரு ஆகியனவெல்லாம் அழிந்துபோன அனுத்தொகை மங்கலம் நகரின் வடக்குப் பகுதியாக இருந்து ஏறத்தாழ இருநூற்றி ஐம்பது ஆண்டுகளுக்குள் ஏற்பட்ட புதிய குடியிருப்புப் பகுதிகளாகும்.

இந்தக் கடல் அழிவில் அனுத்தொகை மங்கலமாகிய கீழக்கரை துறைமுகம் முழுமையாக கடலில் ஆழ்ந்து விட்டதுடன் கடல் நீர் நிலப்பரப்பில் புகுந்து இன்றைய சின்னக்கடை வீதி வரை பரவி நின்று பிறகு நீர் வழிந்து இன்றைய துறைமுகமாக காட்சி தருவது பழமையை நினைவூட்டுவதாக உள்ளது. மேலும் அப்பொழுது கடல் நீர் நிலப்பரப்பில் புகுந்து பல நாட்கள் அந்தப்பகுதியை ஆக்கிரமித்திருந்ததின் காரணமாக இன்றைய கடற்கரையின் வடக்கு தெற்கு பகுதிகளில் நிலம் கடலுள் முந்திச் சென்று (முன் சென்று) அமைந்த அந்த இரு முந்தல்களுக்கிடையில் கடற்கரை வில் வடிவில் வளைவாக அமைந்து காணப்படுவதும் இதற்கு தகுந்த சான்றாகும். மற்றும் இன்றைய பண்டகசாலை தெருவிற்கு சற்று தெற்கே உள்ள கடற்கரைப்பகுதி இன்றும் இறங்கு துறை என வழங்கப்படுவதும், அந்தப்பகுதியில் தோணிகள் நிறுத்தப்பட்டு சரக்குப் பொதிகள் இறக்கப்பட்டதும் இதற்கு காரணமாகும்.

கீழக்கரை என்ற பெருநகரைப்பற்றிய தொன்மையான ஆவணங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இந்த ஒரு காரணத்தினால் இந்தப் பெருநகர் சமீப காலத்தில் ஏற்பட்டதென்று முடிவுக்கு வருதல் பொருத்தமானதாகாது. காரணம் இதே கிழக்குக் கடற்கரையில் சற்று வடக்கே ஆற்றங்கரைக்கு அருகில் உள்ள அழகன்குளம் என்ற ஊரில் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் கிடைத்த சில தொன்மையான பொருள்களைக் கொண்டு அந்த ஊர் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது முடிவு

செய்யப்பட்டுள்ளது. அங்கு கிடைத்துள்ள ரோமானியர்களது மட்பாண்டங்கள், சங்கு பொருள்கள், ரோமப்பேரரசரது வெள்ளிப்பணம், மணிக்கற்கள் போன்றவைகள் அந்த ஊரின் தொன்மையை துலக்குவதாக உள்ளன. இதற்கு முன்னால் அந்த ஊரின் சிறப்புகளை தெரிவிக்கக்கூடிய வரலாற்று ஆவணங்கள், சான்றுகள், இலக்கியங்கள், கல்வெட்டுகள் போன்றவைகள் அந்த ஊருக்கு இல்லை. ஆனால் கீழக்கரையைப் பற்றிய காலச்சுவடுகளான வரலாற்று ஆவணங்கள் கிடைக்காத பொழுதும் இந்தப் பெரு நகர் மிகப் பழமையானது என்பதை எதிர்காலத்தில் கிடைக்கப்பெறும் சான்றுகள் இதனை உறுதிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.



2

# கீழக்கரையில் போர்ச்சுக்கீசியர்

கீழக்கரையைப்பற்றி நமக்கு கிடைக்கும் பழமையான ஆவணங்கள் போர்ச்சுக்கீசியருடையதாகும். ஐரோப்பிய கண்டத்தின் தென்மேற்கு மூலையில் மத்திய தரைக்கடலை அடுத்துள்ள "போர்ச்சுக்கல்" என்பது இவர்களுடைய நாடு.

செங்கடல், அரபிக்கடல், இந்து - மகாசமுத்திரம், சீனப்பெருங்கடல் ஆகியவைகளைக் கடந்து கி.பி.எட்டாம் நூற்றாண்டு முதல் அரபுநாட்டு முஸ்லிம்கள் இந்த நாடுகளின் வாணிப வளத்தையும், கடல்வழியையும் தங்கள் கையில் வைத்திருந்தனர். அப்பொழுது அரபு நாட்டில் தோன்றிய இஸ்லாம் மேற்கே ஆல்ப்ஸ் மலைகள், பிரன்னிஸ் மலைகள் ஆகியவைகளைக் கடந்து போர்ச்சுக்கல் நாட்டின் வடபுறத்தில் உள்ள ஸ்பெய்ன் நாட்டில் வலுவாக காலூன்றி இருந்தது. இதனைக் கண்டு பயமும் பொறாமையும் கொண்ட போர்ச்சுக்கல் மன்னர் பிலிப், அரபு முஸ்லிம்களது நடமாட்டமில்லாத புதிய கடல்வழிகளையும், வாணிபத் - திற்கு ஏற்ற நாடுகளையும் கண்டறியும் முயற்சியில் போர்ச்சுக்கீசியரை ஊக்குவித்து வந்தார். இஸ்லாம் என்ற

புதிய மார்க்கம் தனது நாட்டிலும் பரவாமல் தடுப்பதும், அரபுநாட்டு முஸ்லிம்களது வாணிபச் செழுமையை சிதைப்பதும் போர்ச்சுக்கல் மன்னரது நோக்கமாக இருந்தது. இவரது ஊக்குவிப்பினால் இந்தியா போன்ற கீழை நாடுகளுக்கு புதிய கடல் வழி ஒன்றை கண்டுபிடிக்கும் முயற்சியில் சென்ற கொலம்பஸ் என்ற மாலுமி கி.பி.1492-ல் அமெரிக்கக் கண்டத்தை கண்டு பிடித்தார். இவரைத் தொடர்ந்து வாஸ்கோடகாமா என்பவரும் அவரது குழுவினரும் தெற்கே அட்லாண்டிக் கடல் வழியாகச்சென்று ஆப்பிரிக்கக் கண்டத்தின் தெற்கு முனையான **"CAPE OF GOOD HOPE"** என்ற இடத்தைக் கடந்து வடகிழக்காக மேற்கொண்ட பயணத்தில் கி.பி.1498-ல் நமது நாட்டின் மேற்குக்கரையில் கோழிக்கோட்டில் கரையிறங்கினர். இவரது இலக்கு போர்ச்சுக்கீசியருக்கென தனியான கடல் வாணிபமும் கத்தோலிக்க கிறித்துவப்பிரச்சாரமும் ஆகும்.

கி.பி.1505-ல் கொச்சியிலிருந்து வாஸ்கோடகாமா கிழக்குக் கடற்கரைக்கு வந்தார். அப்பொழுது அவர் கண்ட காட்சி அவரை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.ஏனெனில் ஏற்கெனவே கேரளக்கரையிலுள்ள முஸ்லிம்கள் வாணிபத்தில் மிகவும் சிறப்புற்று விளங்கி வந்தனர். அதற்கு கோழிக்கோடு மன்னர் ஸமோரின் உறுதுணையாக இருந்தார். ஆனால் இங்கு தூத்துக்குடி, காயல்பட்டணம் பகுதியில் இருந்த முஸ்லிம்கள் வெளியார் உதவி எதுவுமின்றி அவர்களே கடல் வாணிபத்தில் ஒப்பாரும் மிக்காருமின்றி உயர்ந்து நின்றனர். அவர்களது செல்வச்சிறப்பும், வாணிபத்தின் வளமையும் அவர்களை தன்னரசு மன்னர்களைப்போல பெருமை பெறச் செய்திருந்தன.

இதனைக் கண்ட வாஸ்கோடகாமா அவர்களது வாணிப வளத்திற்கு உறுதுணையாக பரவர் இனமக்கள் பயன்பட்டு வருவதையும் குறிப்பாக கடல் அடியிலிருந்து முத்துக்களை வெளிக்கொணர்வதற்கு அவர்கள் உதவியதையும் அந்த முத்துக்கள் முஸ்லிம்களது வாழ்க்கை நிலையின் உயர்வுக்கு ஆதாரமாக இருப்பதையும் உணர்ந்தார். இதனால்

போர்ச்சுக்கீசியரும் முத்து வணிகத்தில் ஈடுபட்டால் பெருத்த வருவாய் கிடைப்பதற்கு வழி ஏற்படும் என்று முடிவுசெய்தார். ஆனால் இதற்கு பரவர்களது ஒத்துழைப்பு வேண்டுமே! அவர்கள் அனைவரும் முஸ்லிம் மரைக்காயரது அடிமைகளாகவல்லவா இருந்து வருகின்றனர்! அவர்களை தங்களது பக்கம் எவ்விதம் ஈர்ப்பது? இந்த பிரச்சனை வாஸ்கோடகாமாவிற்கும் அவரைப் போல கிழக்குக்கரைக்கு வந்த போர்ச்சுக்கீசியருக்கும் பல ஆண்டுகளாக தீர்க்கப்படாத புதிராக இருந்து வந்தது.

நாளடைவில் இது முஸ்லிம்கள் மீதான பொறாமையாகவும், வெறுப்புணர்வாகவும் மாறி கேரளக்கரைக்கும் பரவியது. இதனை உணர்ந்த கோழிக்கோடு மன்னர் போர்ச்சுக்கீசியரிடம் 20.11.1508 - ல் செய்து கொண்ட உடன்பாட்டிலிருந்து தெரிய வருகிறது. கேரளக்கரைக்கு காயல்பட்டணத்திலிருந்து வருகின்ற முஸ்லிம் வணிகர்களை போர்ச்சுக்கீசியர் எவ்வித தொந்தரவும் செய்யக் கூடாது என்பது அந்த உடன்பாட்டில் கண்ட ஒரு நிபந்தனை ஆகும். இதற்கிடையில் இலங்கை சென்று காயல்பட்டணம் வழயாக லிஸ்பனுக்குத் திரும்பிய தளபதி மிராண்டா என்பவர் கி.பி. 1519-ல் லிஸ்பன் மன்னரை மரியாதை நிமித்தமாக சந்தித்தபொழுது, காயல்பட்டணத்திலிருந்து வாங்கிச்சென்ற சில முத்துக்களை மன்னருக்கு அன்பளிப்பாக அளித்தார். அந்த முத்துக்களின் அழகும், ஒளியும் போர்ச்சுக்கல் மன்னரை மிகவும் கவர்ந்ததுடன் அந்த முத்துக்கள் மீது மன்னருக்கு அலாதியான ஆசையும் ஏற்பட்டது. இதனால் அவர் கோவாவிலும், கொச்சியிலும் உள்ள அவரது அலுவலர்களுக்கு ஆணைகள் அனுப்பி கிழக்குக்கடற்கரை முத்துக்களை கொள்முதல் செய்யுமாறு உத்தரவிட்டார். இந்த முயற்சியில் ஒத்துழைப்பு நல்குவதாக காயல்பட்டணம் மரைக்காயர்கள் போர்ச்சுக்கீசியருக்கு உறுதி அளித்தனர்.

அப்பொழுது கிழக்குக்கடற்கரை பெயரளவில் விஜயநகர மன்னருக்கு கட்டுப்பட்டதாக இருந்தது என்றாலும் விஜயநகர

அரசின் முழுமையான ஆதிக்கம் தமிழ்நாட்டில் ஏற்படாமல் கடற்கரைப்பகுதி முழுவதும் கண்காணிப்பில்லாமல் இருந்தது. இந்தக் கடற்கரை முழுவதையும், அவரது குமரி முனையிலிருந்து வடக்கே புலிக்காட் என்று அழைக்கப்படும் பவளவேர்க்காடு வரையான பகுதியை கண்காணிப்பதற்கும் கடல் போக்குவரத்தை கட்டுப்படுத்துவதற்கும் ஜாவோ புளோரஸ் என்ற அலுவலரை கி.பி.1520-ல் நியமனம் செய்தனர். அவர் புலிக்காட்டை தலைமை இடமாகக் கொண்டு இருந்ததுடன் பிப்ரவரி மாதங்களில் கன்னியாகுமரி வரை கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தார். மற்றும் முத்துக்குளிப்பதற்கு உரிமமும் வழங்கி வந்தார்.

அதுவரை தன்னிச்சையாக முத்துக்குளித்தலில் ஈடுபட்டிருந்த மரைக்காயர்கள் ஒரு சிறு தொகையை போர்ச்சுக்கீசியருக்கும் செலுத்தி காயல்பட்டணம், தூத்துக்குடி பகுதியில் முத்துக்குளித்தலைத் தொடர்ந்து வந்தனர்.

முத்துக்குளித்தல் அல்லது முத்துச் சிலாபம் என்பது பற்றிய சில செய்திகளை இங்கு வழங்குவது பொருத்தமாக இருக்கும் என எண்ணி இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆழ்கடலின் அடியில் வாழுகின்ற நூற்றுக்கணக்கான உயிரினங்களில் ஒன்று முத்துச்சிப்பி. உள்ளங்கையின் அளவைப் போன்று அமைந்த இரு பகுதிகளைக் கொண்டதுதான் இந்த சிப்பி. இதனை ஆங்கிலத்தில் PEARL OYSTER என வழங்கப்படுகிறது. மாரிக்காலத்து மழைத்துளி இந்த சிப்பிக்குள் சென்றதும் அங்கு தேங்கிய நீர்த்திவலை காலப்போக்கில் சில வேதியல் மாறுபாடுகளால் இறுக்கம் பெற்று வெண்மை நிறத்துடன் காண்பவர் கண்களைக் கவரும் ஒளிச்சிறப்புமிக்க பொருளாக அந்தச்சிப்பியில் ஏற்படும் போது அதனை முத்து என்று நவரத்தினங்களில் ஒன்றாக கணிக்கப்படுகிறது, உலக நாடுகளின் பல கடற்கரையை ஒட்டிய பகுதியில் பவழப் பாறைகளைப் போன்று இந்த முத்துச் சிப்பிகளும் ஆயிரக்கணக்கில் தோன்றுகின்றன. இவைகளின் வளர்ச்சியை

நன்கு கணித்த பிறகு இவைகளை கடலுக்கு அடியிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. இதனை "முத்துச்சிலாபம்" அல்லது முத்துக்குளித்தல் எனப் பெயரிட்டு அழைக்கின்றனர். நமது கிழக்குக் கடற்கரைக்கு எதிரில் இலங்கைக் கடற்கரையில் இதே பொருளில் "சிலாபத்துறை" (CHILAW) என ஒரு ஊர் அமைந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உலக நாடுகளிலேயே பரப்பளவிலும், நிறையிலும், வெண்மை நிறத்திலும் சிறப்பானதாகக் கருதப்பட்ட முத்துக்கள் இந்த மன்னார் வளைகுடாப் பகுதியில்தான் கிடைத்ததாக ஆவணங்கள் தெரிவிக்கின்றன. இந்த முத்துக்களைக் கடலிலிருந்து வெளிக்கொணரும்பணி (சிலாபம்) பொதுவாக ஆண்டில் இருமுறை நடைபெற்று வந்தன. முதலாவது சிலாபம் மார்ச், ஏப்ரல் மாதங்களிலும், இரண்டாவது சிலாபம் அக்டோபர் நவம்பர் மாதங்களிலும் நடைபெற்றுவந்ததாக தெரிய வருகிறது.

சோழ, பாண்டிய மன்னர்களது ஆட்சிக்குப்பிறகு முத்துச் சிலாபத்தில் மிகுதியாக காயல்பட்டிணம், கீழக்கரை மரைக்காயர் மட்டும் தமிழ்நாட்டில் முத்துவணிகத்தில் ஈடுபட்டு பெரும் ஆதாயத்தை ஈட்டிவந்தனர். இதன் காரணமாக முத்து வணிகத்தில் ஈடுபட்டிருந்த பெரும்பாலான கீழக்கரை முஸ்லிம் குடும்பங்களில் அவர்களது முன்னோர்களைக் (பாட்டனார்) குறிப்பதற்கு "முத்துவாப்பா" என்ற சொல்லை பயன்படுத்தி வருகின்றனர். கீழக்கரை துறைமுகத்தில் முத்துக்களை விற்பனை செய்வதற்காக "முத்துப்பேட்டை" ஒன்று இருந்ததாக கீழக்கரை சொக்கநாதர் கோவில் கல்வெட்டு தெரிவிக்கின்றது. மற்றும் இதே கடற்கரையிலுள்ள பெரியபட்டணத்தில் முத்துப்பேட்டை என்ற பெயரிலும் இராமேஸ்வரம் நகரில் முத்துச் சாவடி என்ற பெயரிலும் முத்துக்கள் விற்பனைக்கான நிலையங்கள் இருந்தது தெரிய வருகிறது.

தமிழ்நாட்டில் முத்துக்குளித்தலுக்கு முன்னோடியாக அரபு நாட்டிலிருந்து வந்த முஸ்லிம்கள்தான் முறையாக இந்த முத்துக்குளிக்கும் கலையை தமிழக முஸ்லிம்களுக்கு கற்றுக் கொடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முத்துக்குளித்தல் இங்கு நடைபெற்றதைக் குறிக்கும் தொன்மையான ஆவணம் உலகப்பயணி மார்க்கோபோலோ உடையதாகும். அவர் சீனநாட்டிலிருந்து அவரது தாயகமான போர்ச்சுக்கல் நாட்டிற்குச் செல்லும் வழியில் கடல் கொந்தளிப்பினால் அவரது மரக்கலம் உடைபட்டு அவர் பாண்டிய நாட்டு கடற்கரையில் ஒதுக்கப்பட்டார். இது நிகழ்ந்தது கி.பி.1274 ஆகும். அவர் இந்தப்பகுதியின் பாண்டிய மன்னர், மக்களது பழக்கவழக்கங்கள் ஆகியவைகளை விவரிக்கும் பொழுது அப்பொழுது நடைபெற்ற முத்துக்குளித்தல் ஒன்றினையும் விவரமாக வரைந்துள்ளார். முத்துக்குளித்தலுக்கு புறப்படும் படகுகள் “பத்தலார்” என்ற இடத்தில் கூடி பின்னர் அங்கிருந்து கிழக்கே 60கல் தொலைவிற்குச் சென்று முத்துக் குளித்ததாகவும், அந்த முத்துக்குளித்தலுக்கு தகுதியானவர்கள் கால்களில் சிறுகல்லைக்கட்டிக்கொண்டு கடலுக்கு அடியில் சென்றதாகவும், அந்த கல்லில் கட்டப்பட்ட கயிற்றின் நுனி படகில் இருந்தவர்களது கையில் இருந்ததாகவும், முத்து சேகரிப்பதற்காக கடலுக்குள் சென்றவர் முத்துச்சிப்பிகளை சில நொடி நேரத்தில் ஒரு கூடையில் சேகரித்த பிறகு அந்தக் கயிற்றை அசைத்தவுடன் படகில் இருந்தவர்கள் கயிற்றை இழுத்து முத்துக்குளித்தவரை கடலுக்கு மேலே படகிற்குள் தூக்கி விட்டதாகவும் மார்க்கோபோலோ குறிப்புகளில் காணப்படுகின்றன. மேலும் அந்தக் குறிப்புகளிலிருந்து முத்துக்குளிப்பவர் கடலுக்குள் குதிப்பதற்கு முன்னர் அந்தப்படகில் உள்ள மந்திரவாதிகள் முத்துக்குளிப்பவருக்கு தீங்குகள் செய்யாதவண்ணம் சுறா, திருக்கை மீன்களின் வாய்களை மந்திரத்தால் கட்டி விடுகின்றனர் என்றும் குறித்துள்ளார். அந்த மந்திரவாதிகளுக்குப் பெயர் “கடல்கட்டிகள்” (கடலைக்கட்டுபவர்கள்)என்பதாகும்.இந்த

உரிமம் பெறுவதில் கீழக்கரை மரைக்காயர்களும் கலந்து கொண்டு முத்து வணிகம் செய்து வந்ததால் கீழக்கரை காயல்பட்டணம் மரைக்காயர்களுக்கிடையே குரோதமும், வெறுப்பும் வளர்ந்து வந்தன. இவர்களது சச்சரவை தீர்த்து வைப்பது போர்ச்சுக்கீசிய அலுவலருக்கு பெருத்த தலைவலியாக அமைந்தது. இதனால் போர்ச்சுக்கீசியர் காயல்பட்டணத்தில் கி.பி.1525-ல் 16 வீரர்களைக் கொண்ட அணி ஒன்றினை நிறுத்தி வைத்தனர். கலக்கமடைந்த முஸ்லிம் வணிகர்களுக்கு ஆதரவாக கோழிக்கோடு மன்னர் அவரது படைவீரர்கள் கொண்ட அணியினை காயல்பட்டணத்திற்கு அனுப்பி வைத்தார். இந்த இரு படைகளுக்கிடையேயான மோதல்கள் அதிகரித்து வந்ததால் கி.பி.1528-ல் மற்றுமொரு அணியினையும் காயல் பட்டணத்திற்கு அனுப்பி வைத்தார். இந்த அணி போர்ச்சுக் - கீசியர்களால் முழுமையாக தோற்கடிக்கப்பட்டது.

இத்தகைய குழப்பமான சூழ்நிலை போர்ச்சுக்கீசியரது முத்து வணிகத்திற்கு சாதகமாக இல்லாத காரணத்தினால் போர்ச்சுக்கீசிய வணிகர்களும், அலுவலர்களும் காயல்பட்டணத்திற்கு பதிலாக இன்னும் சற்று வடக்கேயுள்ள கீழக்கரை மீது தங்கள் கவனத்தைச் செலுத்தினர்.

கடல் முத்துக்களைப்பற்றி ஏற்கெனவே போர்ச்சுக்கீயர்கள் அறிந்திருந்தனர். இந்த முத்துக்கள் பாபிலோன், எகிப்து, கிரீஸ், ரோம், சீனம், பாரசீக வளைகுடா ஆகிய இடங்களில் மிகுதியாக கிடைக்கிறது என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆனால் இந்த முத்துக்கள் தரத்திலும், அளவிலும் மிகவும் குறைவானதாக இருந்தன. அதனால் மன்னார் வளைகுடாவில் விளைகின்ற முத்துக்களை உலகின் பல பகுதியிலும் உள்ளவர்களும் விரும்பி வாங்கி வந்தனர். நமது நாட்டின் இதிகாசமான இராமாயணத்தில், கபாடபுரத்திலிருந்த பாண்டியனது மாளிகையின் நுழைவாயிலிலும், முகப்பிலும் இந்த முத்துக்களைக் கொண்டு அலங்காரம் செய்திருந்ததாக இராமாயண ஆசிரியர் வால்மீகி குறிப்பிட்டுள்ளார். நமது

சங்ககால இலக்கியங்களிலும் இந்த முத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக சிறுபாண் ஆற்றுப்படை, புறநானூறு, மதுரைக் காஞ்சி, முத்தொள்ளாயிரம் ஆகிய இலக்கியங்களில் தென்கடல் முத்துக்களைப்பற்றிய குறிப்புக்கள் ஏராளமாக கொடுக்கப்பட்டுள்ளன. சோழப்பேரரசின் பொழுது இந்த முத்துக்கள் தஞ்சாவூருக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள பெரிய கோயிலின் இறைவருக்கு தானமாக வழங்கப்பட்டதை அங்குள்ள கல்வெட்டுக்களிலிருந்து தெரிந்து கொள்வதுடன் அந்த முத்துக்களில் பலவகை இருந்ததையும் அந்த கல்வெட்டுக்கள் நமக்கு உணர்த்துகின்றன. இளங்கோ அடிகளது சிலப்பதிகாரத்தில் கண்ணகியை புகழும் கோவலனது கூற்றாக "மாசறு பொன்னே, வலம்புரி முத்தே" என குறிப்பிடுவதிலிருந்து முத்திலும் வலம்புரி முத்து என்ற ஒரு வகை இருந்ததை அறிய முடிகிறது. இது போலவே கீழக்கரை சொக்கநாதர் கோவில் கல்வெட்டில் "சூழி முத்து" என்ற ஒரு வகை குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்பான முத்துக்களை நம்மிடமிருந்து பெற்றுச் செல்வதற்காக யவனர்களும், அரபு முஸ்லிம்களும் கீழக்கரைக்கு வந்துசென்றனர் என்பது வரலாற்றுச் செய்தி. மேலும் ரோமாபுரியிலுள்ள அரசியும், அழகிகளும் இந்த முத்துக்களை மிகவும் விரும்பி வாங்கி தங்களது அணிமணிகளிலும், காலணிகளிலும் பொருத்தி அலங்காரம் செய்து கொண்டதன் காரணமாக ரோமநாட்டு தங்கம் தமிழ்நாட்டுக்கு அனுப்பப்பட்டு ரோமாபுரியின் அரசுக் கருவூலம் காலியானது என்ற செய்தியும் வரலாற்றில் பதிவு பெற்றுள்ளது. கி.பி. பனிரெண்டாம் நூற்றாண்டிலே அரபுநாட்டு முஸ்லிம்கள் முத்து வணிகத்திற்காகவே காயல்பட்டினம், கீழக்கரைப் பகுதிக்கு வருகை தந்ததுடன் இங்கேயே நிலையாகத்தங்கி தமிழ் முஸ்லிம்களாகி முத்து வணிகத்தில்

மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். இத்தகைய வணிகர்களைக் கண்டுதான் வாஸ்கோடகாமாவும் அவரது குழுவினரும் அதிர்ச்சியடைந்தனர் என ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம்.

அப்பொழுது இலங்கைக்கும் திருவடிதேசமென வழங்கப்பட்ட மலபாருக்கும் இடையில் நல்ல வணிகத் தொடர்புகள் இருந்து வந்தன. குறிப்பாக மன்னார் வளைகுடாப் பகுதியில் கிடைக்கப்பெற்ற முத்துக்கள் மலபாருக்கும், குஜராத்திற்கும் எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து அரேபியாவிற்கும் கொண்டு செல்லப்பட்டன. மேலும் வரலாற்று ஆசிரியர் டாக்டர் அப்பாத்துரை என்பவர், "இராமேஸ்வரம் நன் முத்துக்கள்" கோழிக்கோடுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பல நாடுகளுக்கும் அனுப்பப்பட்டதாக குறிப்பிட்டிருப்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாக உள்ளது.

அப்பொழுது இந்தப்பகுதி முழுவதும் மதுரையில் புதிதாக தோற்று விக்கப்பட்டிருந்த நாயக்க அரசின் ஆட்சிக்கு உட்பட்டதாக இருந்தது. மதுரை நாயக்க மன்னருக்கு நெருக்கமாக இருந்த தும்பிச்சி நாயக்கர் என்ற பரமக்குடி பாளையக்காரரது அனுமதி பெற்று இருந்த கீழக்கரை நெய்னார்* என்பவர் அந்தக்கடல் பகுதியில் கப்பல்கள் நடமாட்டத்திற்கும், முத்துக்கள் எடுப்பதற்கும் உரிமங்கள் வழங்கி வந்தார். இதன் வழி பெரும் ஆதாயத்தின் ஒரு பகுதியினை பரமக்குடி பாளையக்காரருக்கு அவர் செலுத்தி வந்தார்.

இதனை அறிந்த போர்ச்சுக்கீசியர் பரமக்குடி பாளையக்காரரை அணுகி அவருக்கு கையூட்டு வழங்கி கீழக்கரை நெய்னாருக்குப் பதிலாக கீழக்கரை கடற்பகுதியை அவர்களது பொறுப்பில் வைத்துக்கொள்வதற்கு அனுமதி பெற்றனர். இந்த நிகழ்ச்சிக்கு சற்று முன்னதாக கி.பி.1515-ல் இந்தப்பகுதிக்கு வருகை தந்த போர்ச்சுக்கீசிய நூலாசிரியர் "துர்ரத் பர்போஸா" என்பவர்; அப்பொழுது கீழக்கரைப்

* நெய்னார் என்பது அரபி மொழி பெயர்ச்சொல். தலைவர் என்ற பொருளை உடையது.

பகுதியில் இருந்த முஸ்லிம்கள் மன்னர்களைப்போல மிகச்சிறப்பாகவும், செல்வ வளத்தில் மிக்கவர்களாகவும் இருந்தனர் எனக் குறிப்பிட்டிருப்பது இங்கு நோக்கத்தக்கது. என்றாலும் தொடர்ந்து போர்ச்சுக்கீசியர்களது அலுவலராக அந்த நெய்னார் பணியாற்றி வந்தார். இவர் மிகுந்த அக்கரையுடனும், பொறுப்புடனும் போர்ச்சுக்கீசியரிடம் நடந்து கொண்டதை அவர்களது 18.10.1523ல் போர்ச்சுக்கல் நாட்டிற்கு அனுப்பிய ஆவணம் ஒன்றில் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ஆவணத்தில் போர்ச்சுக்கீசியர் கீழக்கரையை QUIL CARE (குயில்கரை), CALL CARE (கால்கரை), CALOE CARE (கலோ கரை) என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

தொடர்ந்து கீழக்கரைப் பகுதியில் முத்துக்குளித்தல் சிறப்பாக நடைப்பெற்று வந்தது. இதனை அறிந்த காயல்பட்டினம் நெய்னார்கள் கீழக்கரையில் முத்துக்குளிப்பதற்கு தங்களுக்கு அனுமதி அளிக்கும்படி கேப்டன் ஜாவோ ஃப்ளோரஸைக் கோரினர். இது நிகழ்ந்தது கி.பி.1520 - ல் இதனை அடுத்து கேப்டன் ஜாவோ ஃப்ளோர்ஸ் கீழக்கரை நெய்னாரும் கீழக்கரை முத்துக்குளித்தலில் போர்ச்சுக்கீசியருக்கு செலுத்த வேண்டிய தொகை பற்றி உடன்பாடு கண்டனர். கி.பி.1526-27 படி கீழக்கரை நெய்னார் போர்ச்சுக்கீசியருக்கு 3000 பர்தோஸ் (போர்ச்சுக்கீசிய நாணயம்) வருடந்தோறும் செலுத்தி வந்தார்.

கீழக்கரை முத்துக்குளித்தலில் இரண்டு வகையான முத்துக்கள் கிடைத்ததாகத் தெரிய வருகிறது. அவை "பெரோலஸ்"(PEROLAS), "அல்ஜோபர்" (AL-JOFER) என்பவையாகும். இதில் இரண்டாவது குறிப்பிடப்பட்டுள்ளது முதலாவதைவிட தரத்திலும் விலையிலும் குறைந்ததாகும். ஆனால் இத்தகைய முத்து (அல்ஜோபர்) கீழக்கரையிலிருந்தும் புன்னைக்காயலிலிருந்தும் லிஸ்பனுக்கு பதினாறாம் நூற்றாண்டில் எடுத்துச் செல்லப்பட்டதின் நிறை 700 அவுன்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வகையிலான சிறிய

அளவிலான முத்துக்களும் அதன் நொறுங்கிய துகள்களும் சிறந்த மருத்துவ குணம் உடையதாகக் கருதப்பட்டது.

இத்தகைய முத்துக்களது வணிகத்தில் போர்ச்சுக்கல் நாட்டு அரசுக்கு பெருத்த வருவாய் கிட்டியதால் போர்ச்சுக்கல் நாட்டு அரசு மட்டுமல்லாமல் சில தனியார்களும் இந்த வணிகத்தில் மிகுதியாக ஈடுபட்டனர். இதனால் போர்ச்சுக்கல் நாட்டு வணிகர்களும், அரசு அலுவலர்களும் கீழக்கரையிலும் , அடுத்துள்ள வேதாளையிலும் மிகுதியாகக் குடியேறினர். கீழக்கரையில் முத்துக்கள் விற்பனைக்கான சந்தை ஒன்று இருந்ததை கீழக்கரை சொக்கநாதர் கோவிலில் உள்ள கி.பி.1562 - ஆம் ஆண்டு கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது. கி.பி.பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் கீழக்கரையில் கூடிய பதினெண் விஷயத்தார் என்ற வணிகக்குழு சொக்கநாதர் கோவிலுக்கு மகமையாக அதுவரை நூறு முத்துக்கு ஒரு குழி முத்து கொடுக்கப்பட்டு வந்த பழக்கத்தை மாற்றி நூறு பணத்திற்கு அரை பணம் வழங்குவது என முடிவு செய்ததையும் அந்த கல்வெட்டு தெரிவிக்கிறது.

ஆனால் கி.பி.1584-ல் இந்த முத்து வணிகத்தில் எதிர்பாராத நிலைமை ஏற்பட்டது. அப்பொழுது நிலவிய தட்பவெப்பநிலை காரணமாக கீழக்கரை கடல் பகுதியிலிருந்த முத்துச்சிப்பி பூச்சிகள் வடக்கே யாழ்ப்பாண கரைக்கு இடம் பெயர்ந்து சென்றதால் கீழக்கரை முத்துக்களின் உற்பத்தி மிகவும் குறைந்துவிட்டது. இவ்விதம் கீழக்கரை முத்துக்களைப்பற்றிய செய்திகள் வரலாற்றில் பதிவு பெற்று இருந்தாலும் போர்ச்சுக்கீசியரைத் தவிர இங்கிருந்த மரைக்காயர் என அழைக்கப்பட்ட தமிழ் முஸ்லிம்களும் முத்து வணிகத்தில் போர்ச்சுக்கீசியருக்கு இணையாக ஈடுபட்டிருந்தனர். இன்னொரு ஆவணத்தின்படி கீழக்கரை முத்து வாணிபத்தை தங்களது உடமையாக்கிக் கொள்வதற்காக கீழக்கரையில் இருந்த போர்ச்சுக்கீசிய அலுவலருக்கு கையூட்டு முயற்சியில் தோல்வியுற்ற காயல்பட்டினம் நெய்னார்களைப் பற்றி செய்தி தெரிய வருகிறது.

இவைகளிலிருந்து போர்ச்சுக்கீசியர்களின் வலுவான ஆதிக்கம் மன்னார் வளைகுடாப்பகுதியில் ஏற்பட்டு ஏறத்தாழ நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்குப்பிறகு கிழக்குக் கடற்கரையிலுள்ள நாகப்பட்டிணம், சென்னை சாந்தோம் ஆகிய பகுதிகளிலும் விரிவடைவதற்கு கீழக்கரை ஒரு சிறப்பான தளமாக அமைந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. தொடர்ந்து போர்ச்சுக்கீசியர்கள் நாகப்பட்டினத்திலும், சென்னை சாந்தோமிலும் மிகுதியாக குடியேறி பலவிதமான வணிகப்பொருள்களை கிழக்குக் கடற்கரையிலிருந்து மலாக்கா, ஜாவா, அச்சைன், தாய்லாந்து போன்ற தொலைதூர நாடுகளுக்கு எடுத்துச்சென்று விற்பதிலும், அங்கிருந்து பொருட்களை இந்தக் கடற்கரைக்கு கொண்டு வந்து சேர்ப்பதிலும் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டனர். இவர்களது இந்த வணிக முயற்சிக்கு நாகப்பட்டினத்தைச் சேர்ந்த மரைக்காயர்களும், செட்டிகளும் மிகுதியாக உதவி வந்தனர். கி.பி.பதினேழாம் நூற்றாண்டின் தொடக்ககாலம் வரை போர்ச்சுக்கீசியர்களை இந்தக் கீழை நாட்டு வியாபார முயற்சியிலிருந்து வேறு யாராலும் அப்புறப்படுத்த முடியவில்லை. தமிழகத்திலிருந்து பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு நாட்டிலிருந்து வந்துள்ள இந்த வேற்று நாட்டவர் அவர்கள் மேற்கொண்டு வந்துள்ள கிறித்தவசமயப் பிரச்சாரத்தை விட பன்மடங்கான முறையில் தமிழகத்துடன் கீழைநாட்டு வணிகத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்ததை அவர்களது ஆவணங்கள் மிகத்தெளிவாக விளக்குவனவாக உள்ளன.

இதில் இன்னொரு சிறப்பான அம்சம், போர்ச்சுக்கீசியர் தொடக்க காலத்தில் குடியேறிய கேரளக்கரை முஸ்லிம்களுடன் கொண்டிருந்த உறவிற்கும், இங்கு கிழக்குக் கடற்கரையில் இருந்த முஸ்லிம்களுடன் கொண்டிருந்த தொடர்புகளுக்கும் பெருத்த வேறுபாட்டினைக் காண முடிகிறது. அவர்களுக்கு கோழிக்கோட்டு மன்னர் சமோரின் அளித்த ஊக்குவிப்புகளினாலும் அங்குள்ள முஸ்லிம்கள்மீது

கொண்டிருந்த வெறுப்பு காரணமாகவும் போர்ச்சுக்கீசியர் கோழிக்கோடு போன்ற நகரங்களில் மிகுந்த வெறியுடன் நடந்து கொண்டதை போர்ச்சுக்கல் நாட்டு வரலாற்று ஆசிரியரான "டான்வெர்" விவரித்துள்ளார். கோழிக்கோடு நகரிலுள்ள முஸ்லிம்களது தொழுகைப்பள்ளியை குதிரை லாயமாக மாற்றியதையும், அங்குள்ள முஸ்லிம் கன்னிப்பெண்களை நூற்றுக்கணக்கில் சிறைப்பிடித்து கோவாவிற்கு அழைத்துச் சென்று வன்முறையில் மதமாற்றம் செய்து கிறித்தவ வீரர்களுக்கு திருமணம் செய்து வைத்ததையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் தமிழகத்தின் கிழக்குக்கரையின் பல ஊர்களில் உள்ள முஸ்லிம்களுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்த போர்ச்சுக்கீசியரது போக்கில் இத்தகைய வெறுப்புணர்வு ஏற்பட்டதாக வரலாற்றில் காணமுடியவில்லை. மாறாக நாகப்பட்டினம் காஜா அகமது மரைக்காயர் போன்ற பெரும் முஸ்லிம் வணிகர்கள் போர்ச்சுக்கீசியரிடம் மிகுந்த பரிவும், பற்றும் கொண்டிருந்ததையும், அவர்களது வணிகத்திற்கு பல வகையிலும் உதவி புரிந்ததையும் வரலாறு விளம்புகிறது. எத்தகையதொரு இணக்கமான சூழ்நிலையில் கீழக்கரையில் முஸ்லிம்களும் போர்ச்சுக்கீசியரும் வாழ்ந்து வந்தனர் என்பதை யாரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.



# 3

# முன்னோர்கள் வழியில் சீதக்காதி மரைக்காயர்

கி.பி.1654-ல் இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்கள் காயல்பட்டணத்திலிருந்து கீழக்கரை வந்து நிலையாக தங்கியபிறகு இஸ்லாத்தைப் பற்றிய தெளிவான கருத்துக்களை சாதாரண மக்களும் புரிந்து கொள்ள முடிந்ததுடன் அரபிமொழியும் அதனைச் சார்ந்த இஸ்லாமிய தத்துவங்களையும் அவர்களால் எளிதில் உணரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இது ஒரு ஆன்மீகத் துறையின் வெற்றி எனச் சொல்லலாம். இமாம் அவர்களுக்கு முன்னர் கி.பி. 1650ல் அதிராம்பட்டினத்திலிருந்து கீழக்கரைக்கு குடி பெயர்ந்து கீழக்கரை மீன்காரத்தெருவில் (இன்றைய பழைய குத்பாப் பள்ளி தெரு) அரபி மத்ரஸா ஒன்றினை நிலைநிறுத்திய சின்ன நெய்னார் ஆலிம் அவர்களது பணி சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களது முயற்சிகளுக்கு முன்னோடியாக அமைந்தது.

இதனைப் போன்றே இஸ்லாமியத் தமிழ் இலக்கியத் துறையில் முதலாவது முஸ்லிம்

தமிழ் இலக்கியமாகிய "ஆயிரம் மசாலா" என்ற அதிசய புராணத்தை கி.பி.1572-ல் இயற்றிய வண்ணப் பரிமளப் புலவர் என்ற முகம்மது இஸ்ஹாக் புலவர் அவர்கள் கீழக்கரையைச் சார்ந்தவர். அவரது பணி இலக்கிய உலகிற்கு முன்னோடியாக அமைந்தது.

இவ்விதம் கீழக்கரை ஆன்மீகத்துறையிலும், அரபிமொழி வளர்ச்சியிலும், தமிழ் இலக்கியத்துறையிலும் சிறப்பான நிலையினை எய்தி இருந்ததைப் போன்று வணிகத்துறையிலும் செம்மாந்து நின்ற சோனகர் பெருமக்களைப் புகழ்ந்து பாடும் பொழுது "வானது நாணக் கொடையால் உலகை வளர்த்து அருளும் சோனகர்" என்று குறிப்பிட்டுள்ளனர்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழகத்தின் கிழக்குக்கடற்கரையில் வந்திறங்கிய அரபி முஸ்லிம் வணிகர்கள் தொடக்கத்தில் இங்குள்ள அரிய பொருள்களை வாங்கிச் செல்வதில் ஈடுபட்டனர். பின்னர் அவர்கள் தமிழகத்தில் நிலைத்து தமிழ்மக்களுடன் ஒன்றிணைந்து தமிழ் முஸ்லிம்களான பிறகு இங்கு கிடைக்கும் முத்து, சங்கு, வாசனைப் பொருள்கள் ஆகியவற்றினை கொள்முதல் செய்வதில் முனைந்து நின்றனர். பின்னர் அரபுக்குதிரைகளை இங்கு விற்பனை செய்வதிலும், அவர்களுக்கு தக்க பயிற்சிகளை அளிப்பதிலும், வைத்திய வசதிகளை செய்து கொடுப்பதிலும் ஈடுபட்டவர்களாக இருந்தனர்.

தமிழ்நாட்டின் கிழக்குப்பகுதியான இந்த மறவர் சீமையில் பல ஊர்களில் அவர்கள் நெசவுத்தொழிலிலும் ஈடுபட்டிருந்ததை இன்றும் அருப்புக்கோட்டை, பரமக்குடி, எமனேஸ்வரம், எக்ககுடி பனைக்குளம், சித்தார்க்கோட்டை ஆகிய ஊர்களில் வழக்கில் உள்ள "பாவோடி தெரு" என்ற சொல் புலப்படுத்துகிறது. முந்தைய கீழக்கரையிலும் முஸ்லிம்கள் நெசவுத் தொழிலிலும் ஈடுபட்டிருக்கவேண்டும் என்பதை கீழக்கரையின் கிழக்குப் பகுதியிலுள்ள "பருத்திக் காரத்தெரு" என்ற பகுதி அதனை தெரிவிப்பதாக இருக்கிறது.

மேலும் சேதுபதி மன்னர்கள் வழங்கியுள்ள பட்டயங்களில் "சோனகர் தறிக்கடமை நீக்கி" என்ற தொடர் உத்திரகோசமங்கை பட்டயத்திலும் "சோனகர் மற்றும் வேறு யாராக இருந்தாலும் தறிக்கு" என்ற சொல் இராமநாதபுரம் இராஜ துர்க்கை அம்மன் கோவில் செப்பேட்டிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இவர்களது நெசவில் நமது தமிழ்நாட்டிற்கு ஏற்ற வகையிலான "மூர்ரி" என்ற துணிவகை நெசவு செய்யப்பட்டதும் தெரிய வருகிறது.

மற்றும் சேதுபதி மன்னரது இன்னொரு செப்பேட்டில் கீழக்கரை சொக்கநாதர் கோவில் இராமலிங்க குருக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த மகமையில், கீழக்கரைத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் கீழ்க்கண்ட பொருள்களின் மீது எத்தகைய தீர்வையை இராமலிங்கக் குருக்கள் பெற்றுக் கொள்வது என்பது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அந்தப் பொருள்களின் பட்டியல் கீழ்க்கண்டவாறு.

1. தவசம் (நவதானியங்கள்)
2. நெல்
3. அரிசி
4. பாக்கு*
5. மிளகு*
6. பலசரக்கு
7. செம்பு*
8. துத்தநாகம்*
9. பட்டுப்புடவை
10. பன்னீர் *
11. ஏலம் *
12. கிராம்பு*
13. சாதிக்காய்*
14. சாதிப்பத்திரி*
15. பட்டுநூல் *
16. கருப்புக்கட்டி

17. பினாட்டு
18. புளி
19. கருப்புக்கட்டி கொட்டான்
20. கொட்டைப்பாக்கு*
21. தேங்காய்
22. சங்கு

இந்தப் பட்டியலை மேலெழுந்தவாரியாக ஒருமுறை பார்வையிட்டால் பாக்கு, செம்பு, துத்தநாகம் முதலிய 11 பொருட்கள் * இந்தத் துறைமுகத்தில் இறக்குமதியான பொருள்கள் என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம். இந்தப் பொருள்களின் வணிகத்தில் முழுமையாக ஈடுபட்டிருந்தவர்கள் கீழக்கரை மரைக்காயர்கள் என்று குறிப்பிடத்தேவையில்லை. கீழக்கரைத் துறைமுகம் இயற்கையின் வரப்பிரசாதமாக இலங்கை நாட்டின் எதிர்க்கரையில் அமைந்திருப்பதால் இந்தப்பொருள்களை கீழக்கரை முஸ்லிம்கள் எளிதாக இலங்கையிலிருந்து கீழக்கரைக்கு கொண்டுவந்து சேர்த்தனர். இத்தகைய வாணிபம் தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக நடந்து வந்துள்ளது.

இந்தப் பொருள்களின் வரத்து பெருவாரியாகவும், தொடர்ச்சியாகவும் இருந்ததால் கீழக்கரையில் கடற்கரையை ஒட்டி சீதக்காதி மரைக்காயருக்கு புதிய பண்டகசாலைகள் நிர்மாணிக்கப்பட்டன. இந்தப் பொருள்களில் குறிப்பாக சங்குகளை அறுத்து வளைகள், மாலைகள் போன்றவை தயாரிப்பதில் ஈடுபட்டனர். அவர்கள் சங்கு வெட்டிகள் என அழைக்கப்பட்டு அவர்கள் குடியிருப்புப் பகுதியும் சங்கு வெட்டித்தெரு என வழங்கப்படலாயிற்று.

இதனைப்போன்றே முத்து, சங்கு குளித்தலில் ஈடுபட்டவர்கள் குடியிருப்பு சங்கு குளிகாரத்தெரு எனவும் இன்றும் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு ஆவணத்தின் படி கீழக்கரையில் இருந்த 61 கப்பல்களில் 31 கப்பல்கள் சீதக்காதி மரைக்காயருக்கு சொந்தமானவை எனத் தெரிய வருகிறது.


தண்டல், சிராங்கு, சம்மாட்டி போன்ற பணிகளில் பலர் பணியாற்றி வந்தனர். இவர்களில் சிறப்பானவர்கள் பெயர்களில் இன்றும் கீழக்கரையில் ஈசாதண்டல் தெரு, நெய்னா முகம்மது தண்டல் தெரு, பரப்பான் சம்மாட்டி தெரு ஆகியன கீழக்கரை பேரூராட்சியின் பகுதிகளாக இருந்து வருகின்றன.


கி.பி.பதினாறாம் நூற்றாண்டில் இத்தகைய வாணிபத்தில் ஈடுபட்டு பெரும் பொருளைக் குவித்தவர்கள் சீதக்காதி மரைக்காயர் அவர்களது முன்னோர்களாகும். ஏறத்தாழ தன்னரசு மன்னர்கள் போன்று கீழக்கரையில் அவர்கள் வாழ்ந்து வந்தனர்.

இதனை ஓரளவு எடுத்துக்காட்டும் வகையில் கீழக்கரை பழைய குத்பா பள்ளிவாசலில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் வள்ளல் சீதக்காதி அவர்களது தாய் வழிப்பாட்டனார் வாவாளி மரைக்காயர் அவர்களது மீஸான்களும் மேலும் அவர்களது முன்னோர் மீஸான்களும் அழகாகவும், கலைச்சிறப்புடனும் அமைக்கப்பட்டுள்ளன. கீழக்கரையில் எந்த முஸ்லிம் பெருமக்களுக்கும் இல்லாத வகையில் இந்த மீஸான்கள் (நடு கல்) அமைக்கப்பட்டிருப்பதால் வள்ளல் சீதக்காதி மரைக்காயரது முன்னோர்கள் அவரை விட மிகவும் சிறப்பாக வாழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதனை வடிவமைத்த கல்தச்சர்கள் வேறு சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்ததாலும், திருக்கோயில் பணிகளில் அனுபவம் பெற்றவர்களாக இருந்ததாலும் மேலே சொல்லப்பட்ட மீஸான் கற்கள் திருக்கோயில்களில் காணப்பெறும் திருவாட்சி போன்ற அமைப்பில் அழகாக செய்யப்பட்டு அவைகளில் நல்ல தமிழ்ச்சொற்கள் பொறிக்கப்பட்டுள்ளன. (இந்தக் கல்வெட்டுக்களின் நகல்கள் நூல் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது).

கீழக்கரைக்குக் கிழக்கே வேதாளை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள வள்ளல் சீதக்காதி அவர்களது சகோதரர் சேகு இபுறாகீம் மரைக்காயர் அவர்களது மீஸானில் வள்ளலது







கீழக்கரை பழைய குத்பா பள்ளிவாசலிலுள்ள சீதக்காதி மரைக்காயரது பாட்டனார் மற்றும் அவர்களது முன்னோர்களின் மீஸான் கற்களின் ஒளிப்படங்கள்.

முன்னோர்களைப் பற்றிய பெயர்கள் முறையாக கொடுக்கப்பட்டுள்ளன. அதில் இறுதியாக உள்ளது பெரிய தம்பி, சேகு இப்ராகீம் என்பன. இந்த கல்வெட்டின்படி வள்ளல் அவர்களது மூதாதையர் ஐந்து பேரைப்பற்றிய பெயர்கள் * தெரிய வருவதால் வள்ளல் சீதக்காதி அவர்களது முன்னோர்கள் கி.பி. பதினான்காம் நூற்றாண்டு முதல் கீழக்கரையில் வாழ்ந்தவர்கள் என்பது உறுதியாகிறது.(இந்த கல்வெட்டின் நகல் இந்த நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது) மேலும் இதனை உறுதிப்படுத்தும் ஆவணம் ஒன்று கீழக்கரை நடுத்தெருவில் உள்ள வள்ளல் சீதக்காதி வழியினர் ஒருவரிடம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணம் கி.பி.1845-ஆம் ஆண்டைச் சார்ந்தது. இதன் நகல் 1990 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட "சேது நாட்டு பெரியதம்பி வள்ளல் சீதக்காதி" என்ற நூலின் 33- ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணத்தில் கண்டுள்ள வள்ளல் சீதக்காதி மரைக்காயரது முன்னோர்கள் பெயர்களுக்கும், வேதாளை கூரைப்பள்ளி கல்வெட்டில் கண்டுள்ள அவரது முன்னோர் பெயர்களுக்கும் சிறிது வேறுபாடு காணப்படுகிறது. என்றாலும் இந்த ஆவணம் சீதக்காதியின் பாட்டனார் (முத்துவாப்பா) மாமு நெய்னா மரைக்காயரிலிருந்து தொடரும் வம்சா வழியை உறுதிப்படுத்துகிறது.

ஆனால் டச்சுக்காரர்களது ஆவணங்கள் சீதக்காதி மரைக்காயரது வம்சாவழி பற்றிய விபரத்தை மிகவும்

---

* வள்ளலின் முன்னோர்கள் ஐந்து பேர்களின் பெயர்கள்
செல்லக்குட்டி மரைக்காயர்,
நத்துக் கணக்கப் பிள்ளை,
மழ மரைக்காயர்,
மாமு நெய்னா மரைக்காயர்,
பெரிய தம்பி மரைக்காயர்

குழப்பமடையச்செய்யும் வகையில் அமைந்துள்ளன. அந்த ஆவணங்களின் படி சீதக்காதி மரைக்காயரது குடும்பத்தினர் அனைவருமே "பெரிய தம்பி" என்ற பெயருடன் வழங்கப்பட்டனர் என்றும், குறிப்பாக கி.பி.1680 முதல் கி.பி.1715 வரை பெரியதம்பி என்ற பெயரில் மூவர் இருந்ததாக குறிப்பிட்டு மரைக்காயர் அவர்களது வழியினர் பற்றிய விபரங்கள் ஆய்வாளர்களை பெரும் குழப்பத்திற்கு ஆளாக்கி உள்ளது.

மேலே சொல்லப்பட்ட கீழக்கரை ஆவணம், வேதாளை கல்வெட்டு ஆகிய இரண்டு சான்றுகளும் வள்ளல் சீதக்காதி அவர்களது குடும்பத்தில் அவரது தந்தையாருக்கும், அவருக்கும் மட்டுமே அவர்களது இயற்பெயர் "பெரிய தம்பி" என்ற சிறப்புப்பெயரும் இருந்து வந்ததைத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன. இவர்களது முன்னோர்களுக்கும், இவர்களுக்குப்பின் வந்தவர்களுக்கும் பெரியதம்பி என்ற பட்டபெயர் இருந்ததாக எந்தச் செய்தியும், ஆவணமும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இந்நிலையில் வெளிநாட்டவரான டச்சுக்காரர்கள் இதனைத் தெளிவாக புரிந்து கொள்ளாமல் சீதக்காதி மரைக்காயருக்கும், அவரது குடும்பத்தினர் அனைவர்களுக்குமே "பெரிய தம்பி" என்ற பட்டப்பெயர் இருந்ததாகக் குறிப்பிட்டு சீதக்காதி மரைக்காயரது காலத்தை அறுதியிட்டு வழங்குவதை திசைதிருப்பி உள்ளனர். தமிழக முஸ்லிம்களது வரலாற்றைக் கணிப்பதில் ஏற்கெனவே உள்ள இடர்ப்பாடுகளுக்கெல்லாம் மேலாக டச்சுக்காரர்களது இந்த தவறும் மிகப்பெரிய இடர்ப்பாடாக விளங்கி வருகிறது.

ஆனால் வள்ளல் சீதக்காதி அவர்களது முன்னோர்கள் எந்தெந்தக் காலங்களில் எவ்விதமான வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெறவில்லை. என்றாலும் சீதக்காதி மரைக்காயர் அவர்கள் முத்து வணிகத்திலும், எதிர்க்கரையான இலங்கை நாட்டின் விளைபொருட்களான கொட்டைப்பாக்கு, கருவாப்பட்டை,

கிராம்பு, ஏலம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி போன்ற வாசனைப்பொருள்களை கொள்முதல் செய்து விற்பதிலும் ஈடுபட்டிருந்தார் என்பதை அவரது சமகாலத்தவரான டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியாரது ஆவணங்களில் இருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. மற்றும் மரைக்காயர் அவர்கள் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் சீமைகளில் நெசவு செய்யப்பட்ட கைத்தறித்துணிகளையும் வாங்கி, அரிசியையும் கொள்முதல் செய்து விற்பதிலும், மலையாள நாட்டில் விளையும் மிளகு, தேங்காய் முதலியவைகளையும் கொள்முதல் செய்து விற்பதிலும் ஈடுப்பட்டிருந்தார். இந்தப் பொருள்களுக்கு மரைக்காயர் அவர்கள் நிர்ணயிக்கும் விலைதான் அன்றைய சந்தை விலையாக மதிக்கப்பட்டது.

. இவை தவிர தென்கிழக்கு ஆசிய . நாடுகளிலிருந்து கொள்முதல் செய்த பொருள்களின் பட்டியல் சுருக்கமாக அவர்களது திருமண வாழ்த்து இலக்கியத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அவையாவன.

1. சீனநாட்டிலிருந்து சருக்கரை.
2. அச்சைன் நாட்டு குதிரைகள்
3. ஈழநாட்டு யானைகள்
4. வங்கநாட்டு புனுகு
5. மலாக்காநாட்டு கஸ்தூரி, அம்பர்,கற்பூரம், குங்குமப்பூ, பன்னீர்
6. மரகதம், வைரம், வைடூரியம், நீலம், நாகரத்னம், புட்பராகம், கோமேதகம், பதுமராகம், பவளம், முத்து ஆகிய நவமணிகள்.

இந்தப் பொருள் அனைத்தும் மரைக்காயர் அவர்களது வாணிபச் சிறப்பிற்கும், செல்வச் செழுமைக்கும் எடுத்துக்காட்டாக உள்ளன.

இத்தகைய செம்மாந்த நிலையில் வள்ளல் அவர்கள் விளங்கிய காரணத்தினால் அவரை "வகுதை நாட்டு மன்னன்" என்றும், "வச்சிராபுரிக்கு இறைவன்" என்றும்

புலவர்கள் பெருமித்ததுடன் புகழ்ந்து பாடியுள்ளனர். தமிழ் இலக்கியங்களில் இத்தகைய சிறப்பான நிலையிலிருந்த வணிகர் எவரையும் காண்பதற்கு இயலாததாக இருக்கிறது.

ஒரு மன்னரைப் போன்று வாழ்ந்து வந்த மரைக்காயர் அவர்களுக்கு அவரது மரபு வழியில் வந்த வள்ளன்மையும் பொருந்தி இருந்ததில் வியப்பில்லை. இதன் காரணமாக "ஈதல் இசைபட வாழ்தல் " என்ற இனிய வாழ்க்கை இலட்சியங்களைக் கொண்டு எளியவர்களுக்கும், இரவலர்களுக்கும், புலவர்களுக்கும் ஈந்து மகிழ்ந்தார். இதனை " ஈந்து சிவந்தது வள்ளலது இருகரங்கள் " எனப் புலவர்கள் அவரை வாயார வாழ்த்திப் பாடியுள்ளனர்.



# 4

# சேதுபதி மன்னரும் வள்ளல் சீதக்காதியும்

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆட்சியாளர்களாக விளங்கியவர்களை சேரர், சோழர், பாண்டியர், பல்லவர் என குறிப்பிடப்படுவதை யாவரும் அறிந்துள்ளனர். பிற்காலங்களில் பாண்டிய நாட்டின் கிழக்குக்கடற்கரைப் பகுதியில் ஆட்சியாளராக இருந்தவர்கள் சேதுபதிகள் என்ற மறவர் இனத் தலைவர்கள். இவர்களது ஆட்சிப் பரப்பில் இராமாயணம் சம்பந்தப்பட்ட சேதுஅணை அமைந்திருப்பதால் அந்தப்பகுதியின் தலைவர் என்ற பெயரில் சேதுபதிகள் என்ற சொல் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

வடமொழியில் சேது என்றால் அணைக்கட்டு என்பது பொருள். சீதையைக் கடத்திச் சென்ற இராவணனிடமிருந்து அவரை மீட்டு வருவதற்காக இராமபிரான் இலங்கைக்கு கடல் வழியாக அணை ஒன்றைக் கட்டியதாகவும் அந்த அணை இப்பொழுது அழிந்துபட்ட

தனுக்கோடியிலிருந்து தொடரப்பட்டதாக இந்து சமயநூல்கள் குறிப்பிடுவதால் அந்த தனுக்கோடியை சேது மூலம் என பல இலக்கியங்களில் வழங்கப்பட்டு வந்துள்ளது. இராவண சம்ஹாரத்திற்குப் பிறகு சீதாப் பிராட்டியுடன் இராமேஸ்வரம் கடற்கரை வந்த இராமபிரான் அங்குகடல் மண்ணால் செய்யப்பட்ட சிவலிங்கத்தை வழிபாடு செய்ததாகவும், அதனையும் சேது அணையையும் கண்காணித்து பராமரித்து வருமாறு அப்பொழுது இராமேஸ்வரத்திலிருந்த மறவர் இனத்தலைவரை அறிவுறுத்தினார் என்பதும் அவரது வழியினர்தான் சேதுபதி மன்னர்கள் என்பது பெரும்பாலோரது நம்பிக்கையாகும். அப்பொழுது சேதுநாடு சோழ மண்டலத்திலுள்ள திருவாரூர், மன்னார்குடி நகரங்களை வடக்கு எல்லையாகவும், திருச்சி, மதுரையை அடுத்த கள்ளர் சீமையை மேற்கு எல்லையாகவும், திருநெல்வேலிச்சீமையின் வடபகுதியான வேம்பாற்றங்கரையை தெற்கு எல்லையாகவும், பரந்துகிடந்த வங்கக்கடலினை கிழக்கு எல்லையாகவும் கொண்ட ஒரு பெரு நாடாக விளங்கியதுடன் தமிழரது வீரத்திற்கும் மான உணர்வினுக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்த சேதுபதி மன்னர்களது புகழ்பரந்த பெருநிலமாகவும் விளங்கி வந்தது.

இந்த நாட்டினை திறம்பட ஆட்சிபுரிந்து வந்த திருமலை ரெகுநாத சேதுபதி மன்னர் திடீரென காலமாகி விட்டதால் இந்த நாட்டில் பல பிரச்சனைகள் பயங்கரத் தோற்றத்துடன் எழுந்தன. ஏற்கெனவே தங்களது நாட்டின் கிழக்குப்பகுதியில் உள்ள நிலப்பரப்பை இழந்துவிட்ட தஞ்சை மன்னர் அதனை மீண்டும் சேதுபதியிடமிருந்து மீட்டுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தார். மதுரை நாயக்கப்பேரரசுக்கு நிகராக விளங்கி வந்த சேதுபதி சீமையை எப்படியாவது கைப்பற்றுவது என்ற நோக்கத்தில் மதுரை நாயக்கமன்னர் ஈடுபட்டிருந்தார். இவைகளுக்கெல்லாம் மேலாக சேதுநாட்டில் ஆங்காங்குள்ள பாளையக்காரர்களும் சேது நாட்டின் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு முயன்று வந்தனர். இந்த மன்னர்களைப் பற்றிய வரலாற்று ஆவணங்கள் கி.பி. 15 ஆம் நூற்றாண்டு

முதல் கிடைத்தாலும், மதுரையில் நாயக்க மன்னர்களது ஆட்சி முறை வலுப்பெற்ற கி.பி.17 ஆம் நூற்றாண்டு தொடக்கம் முதல் சேது மன்னர்களைப்பற்றிய செய்திகள் தொடர்ச்சியாக நமக்கு கிடைக்கின்றன.

இந்த மன்னர்களது தலைநகராக திருமெய்யமும், விரையாதகண்டனும் கி.பி.பதினாறாம் நூற்றாண்டின் இறுதிவரை அமைந்திருந்தன. பின்னர் கி.பி.1604-ல் ஆட்சியைத்தொடக்கிய முதலாவது சடைக்கன் சேதுபதி காலத்திலிருந்து இராமநாதபுரத்திற்கு மேற்கே எட்டுக்கல் தொலைவிலுள்ள புகழுர் (போகலூர்) என்ற ஊர் தலைநகராக இருந்து வந்தது. இங்கே ஆட்சி புரிந்த சேதுபதி மன்னர்களில் சிறப்பாக விளங்கியவர்கள் கூத்தன் சேதுபதி (1622-1630) இரண்டாவது சடைக்கன் என்ற தளவாய் சேதுபதி (1630-1645) திருமலை ரெகுநாதசேதுபதி (1645-1674) ஆவர். இவர்களது காலத்தில் சேதுநாடு என்ற மறவர் சீமை (இன்றைய இராமநாதபுரம் மாவட்டம்) பல துறைகளிலும் மிகவும் பின்னைடவு பெற்றிருந்தது. இந்த மன்னர்கள் அவர்களது ஆட்சிக் காலங்களில் குடிமக்களுக்கு இன்றியமையாத கண்மாய் களையும், கால்களையும், ஏந்தல்களையும் நிர்மாணிப்பதில் ஈடுபட்டு இருந்தனர்.

அதையடுத்து 1639 - 40ல் மதுரை மன்னரான திருமலை நாயக்கரது பெரும் படையெடுப்பினால் ஏற்பட்ட பேரழிவுகளைச் சந்தித்து இயல்புநிலையை ஏற்படுத்துவதில் இந்த மன்னர்களது காலம் முடிந்து விட்டது. ஆதலால் மறவர் சீமையில் போக்குவரத்து வசதிகள், மருத்துவ வசதிகள், கல்வி வசதிகள் போன்றவை மிகமிகக் குறைவாகத்தானிருந்தன. இத்தகைய இடர்பாடான சூழ்நிலையில் சேதுபதி மன்னர்களும் தங்களுக்கென விசாலமான மாளிகைகள் மற்றும் ஆடம்பர அமைப்புகள் எதனையும் மேற்கொள்ள இயலாத நிலையில் மிகவும் சாதாரணமாக போகலூர் கிராமத்தில் வாழ்ந்து வந்தனர். இந்த சூழ்நிலையில்தான் கீழக்கரை வணிகரான செய்கு அப்துல்காதர் மரைக்காயர் அவர்கள் அப்பொழுது சேதுபதியாக

இருந்த ரெகுநாத கிழவன் சேதுபதியை சந்திப்பதற்கு போகலூர் போய்ச் சேர்ந்தார். இந்த சந்திப்பு சேதுநாட்டு வரலாற்றில் மிகப்பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியதை சேதுநாட்டு வரலாற்றினை ஆழ்ந்து படிப்பவர்களுக்கு நன்கு புரியும்.

பொதுவாக மன்னர்களுக்கும் வணிகர்களுக்கும் நல்ல தொடர்புகள் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். பாண்டிய மன்னர்களது வரலாற்றில் வணிகர்களை தங்கள் அரசவையில் வரவழைத்துச் சிறப்புச் செய்ததையும் வணிகர்களுக்கு பாண்டிய மன்னர் "எட்டி" "ஏனாதி" என்ற விருதுகளை வழங்கி சிறப்பித்ததுடன் "ஏனாதி மங்கலம்" என்ற நிலக்கொடையை அளித்து பாராட்டியதையும் பாண்டியர் வரலாற்றில் காண முடிகிறது.

கிழவன் சேதுபதி மன்னரை அப்பொழுது சந்தித்த கீழக்கரை செய்கு அப்துல் காதர் மரைக்காயருக்கு ஏறத்தாழ முப்பது வயதிருக்கும். இவரது தந்தையின் பெயர் பெரிய தம்பி மரைக்காயர் என்று தெரிகிறது. பொதுவாக தமிழகத்திலுள்ள முஸ்லிம்கள் தமிழ் மக்களது சூழ்நிலையில் வாழ்ந்து வருவதால் அந்த மக்களைப்போன்றே பிச்சைத்தம்பி, சின்னத்தம்பி, செல்லத்தம்பி, நல்லதம்பி என்ற செல்லப் பெயர்களில் ஒருவரை ஒருவர் பெயரிட்டு அழைத்து வந்ததன் காரணமாக அப்பொழுது இருந்த கீழக்கரை செய்கு அப்துல் காதர் மரைக்காயரின் தந்தையரது பெயரையும் "பெரியதம்பி" என்ற செல்லப்பெயரில் அழைத்து வந்திருக்க வேண்டும். இதன் காரணமாகவே செய்கு அப்துல் காதர் மரைக்காயருக்கும் "பெரியதம்பி" என்ற பட்டப்பெயர் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தது.

இந்த பெரியதம்பி என்ற பெயர்களில் குழப்பமடைந்த வேற்று நாட்டாரான டச்சுக்காரர்கள் கீழக்கரையிலிருந்து ஒரு குடும்பத்தினரது பொதுப்பெயராக அந்தக் குடும்பத்திலுள்ள பலருக்கும் பெரியதம்பி என்ற பெயர் இருந்ததாக

குறிப்பிட்டுள்ளனர். இதனை அடியொற்றி வள்ளல் சீதக்காதியைப் பற்றி தில்லியைச் சேர்ந்த சஞ்சய் சுப்ரமணியன் என்பவர் வரைந்த கட்டுரையிலும், அப்பொழுது கீழக்கரையில் மூன்று பேர் பெரியதம்பி என்ற பெயருடன் இருந்தனர் என குறிப்பிட்டுள்ளார். டச்சுக்காரர்களுக்கு ஏற்பட்ட குழப்பம் அவர்களது ஆவணங்களைப் படித்த இந்தக் கட்டுரையாளர்களுக்கும் ஏற்பட்டதில் வியப்பில்லை. ஏனெனில் இதுவரை நமக்குக் கிடைத்துள்ள வள்ளல் சீதக்காதி அவர்களைப் பற்றிய ஆவணங்கள், இலக்கியங்கள், கல்வெட்டுகள் ஆகியவைகளிலிருந்து வள்ளல் சீதக்காதியின் தந்தையாருக்கும் அடுத்து வள்ளலுக்கும் பெரியதம்பி என்ற பெயர் இருந்து வந்தது தெரிய வருகிறது.

வேதாளை கிராமத்தில் அமைந்துள்ள வள்ளல் சீதக்காதி அவர்களது சகோதரர் சேகு இப்ராஹிமின் கல்லறை நடுகல்லில்

" பெரிய தம்பி மரைக்காயர்
சேகு இபுராகிம் மரைக்காயர் "

என்ற வாசகம் சீதக்காதி மரைக்காயரது தந்தையார் பெயர் " பெரியதம்பி " என்பதை உறுதிப்படுத்துகின்றன. இதனைப் போன்றே சீதக்காதி மரைக்காயரை சீதக்காதி திருமண வாழ்த்தில்,

"தேடும் புகழ்க்கவிதைச் செந்தமிழோர்க் கீந்துதவும்
நாடும் விசையரகு நாதப் பெரியதம்பி"

என புகழ்ந்து உரைப்பதிலிருந்தும் மற்றும் ஏனைய டச்சு ஆவணங்களிலிருந்தும் சீதக்காதி மரைக்காயருக்கும் பெரியதம்பி என்ற பெயர் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தது தெரிய வருகிறது.

நல்ல உயரம், சிவந்த மேனி, முழங்காலைத்தொடும் நீண்ட கரங்கள், யாரையும் வசீகரித்து தம்மவராக்கும் தன்மை கொண்ட குறுநகையுடைய அழகிய முகம். அதிலே

அமைந்துள்ள அன்பும் கருணையும் பொலியும் அழகிய கண்கள். அந்த முகத்தின் மேற்பகுதியில் தலைமுடியை முழுவதுமாக மறைத்த அழகிய வண்ணத்தொப்பி. அதனை மறைத்துச்சுற்றிய தலைப்பாகையாக காட்சி தரும் சீனப்பட்டுத்துண்டு. இந்த எடுப்பான தோற்றம்தான் பிற்காலத்தில் வள்ளல் சீதக்காதி என மக்களால் அன்புடனும் மரியாதையுடனும் வழங்கப்பட்ட செய்கு அப்துல் காதர் மரைக்காயரது அழகிய திருஉருவம். இவரது தோற்றத்திலும், அனுபவமிக்க அன்பு மொழிகளிலும் சேது மன்னர் இவரிடத்தில் அளவற்ற பற்றும், பாசமும் கொண்டதில் வியப்பில்லை.

கி.பி.1674-ல் கிழவன் சேதுபதியின் தாய் மாமனாரும், அவருக்கு முன்னாள் சேதுபதியாக இருந்தவருமான திருமலைரெகுநாத சேதுபதி ஆண் வாரிசு இல்லாமல் மரணமடைந்தார். அவரை அடுத்து சேதுபதியாக ராஜசூரியதேவர் என்பவர் மதுரை நாயக்கர்களால் வஞ்சகமாக கொலை செய்யப்பட்டார். இவருக்குப்பிறகு சேதுபதியான ஆதன ரெகுநாதத்தேவரும் திடீரென வாரிசு இன்றி காலமானார். அதனால் சேது நாட்டின் அரசியல் தலைமையான சேதுபதி பட்டத்திற்கு தகுதியானவர் யார் என்பது பற்றிய பிரச்சினை மிகவும் சிக்கலான நிலையில் இருந்தது. இறந்துபோன மன்னரது நெருங்கிய உறவினர் பலர் சேது நாட்டின் அரியாசனத்தில் அமர்வதற்கு முயன்று வந்தனர். அவர்களிடம் பல தகுதிகள் இருந்த பொழுதும் இராமநாதபுரம் அரண்மையில் உள்ள முதியவர்கள் கிழவன் என்ற ரெகுநாத தேவரை சேதுபதியாக்கினர்.

இதனால் விரக்தியடைந்த பல மறவர் தலைவர்கள் கிழவன் சேதுபதிக்கு எதிராக போர்க்கொடி தூக்கி நாட்டின் பல பகுதிகளில் குழப்பத்தையும், சீரழிவையும் ஏற்படுத்தி வந்தனர். இவர்கள் தவிர நாளுக்குநாள் வலிமை பெற்று வந்த மறவர் சீமையின் தன்னரசை அழிப்பதற்காக மதுரையிலிருந்த நாயக்க மன்னர்கள் ஒரு புறமும், இன்னொரு புறத்தில் கிழவன்

சேதுபதியின் மைத்துனரான (இரண்டாம் மனைவியின் சகோதரன்) ரெகுநாத தொண்டைமானும் இந்த நெருக்கடி நிலைக்கு தூபமிட்டு வந்தனர். இந்த குழப்பமான நிலையில்தான் மன்னருக்கும், கீழக்கரை செய்கு அப்துல் காதர் மரைக்காயருக்கும் மேலே கண்ட சந்திப்பு ஏற்பட்டது.

சேதுபதி மன்னருடன் அளவளாவிய மரைக்காயருக்கு மன்னரது சொந்த பிரச்சினைகள் அனைத்தும் புரிந்து விட்டன. உடுக்கை இழந்தவனது இடுக்கண் களைவதுதானே உண்மையான நட்பு ஆகும். ஆதலால் மரைக்காயர் அவர்கள் மன்னரது பிரச்சனைகளுக்கு வழங்கிய தெளிவான யோசனைகள் மன்னருக்கு மிகவும் ஏற்புடையதாக தோன்றியது. இதனையடுத்து மன்னரும் மரைக்காயர் அவர்களும் பலமுறை சந்தித்த காரணத்தினால் அவர்களிடையே ஒருவித நெருக்கமான நேசமும், பிணைப்பும் வளரத் தொடங்கின. இதனால் மரைக்காயர் அவர்கள் மன்னரது குடும்பத்தில் ஒருவராக மிகுந்த மரியாதையுடன் மதிக்கப்பட்டதில் வியப்பு இல்லை. மன்னர் மரைக்காயரை தனது உடன் பிறவாத சகோதரராக ஏற்றுப் போற்றி வந்தார். தமது குடும்பத்தினருக்குரிய “ விஜய ரெகுநாத ” என்ற சிறப்புப் பெயரையும் மரைக்காயருக்கு வழங்கி கௌரவித்தார். இதனால் சேதுபதி மன்னர் ஆவணங்களிலும், டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியாரது கடிதப் போக்குவரத்துகளிலும் மரைக்காயரை “ விஜய ரெகுநாத பெரிய தம்பி ” என குறிக்கப்பட்டுள்ளது.

சேதுநாட்டின் அரசியல் அரங்கில் அடுத்தடுத்து பல எதிர்பாராத நிகழ்வுகள் தோன்றி சேதுபதி மன்னருக்கு தீராத தலைவலியாக அமைந்தன. அவைகளில் ஒன்று, திருச்சியில் இருந்த மதுரை நாயக்க மன்னர் சொக்கநாதர் ஒருநாள் திருச்சி கோட்டையை விட்டு மாலைநேரத்தில் உலாவுவதற்கு வெளியே சென்ற பொழுது கோட்டைத்தளபதியாக இருந்த ருஸ்தம்கான் சொக்காநாத நாயக்கரை கைது செய்து

சிறையிலிட்டான். இதனை தனது நண்பர் கன்னிவாடி பாளையக்காரர் மூலம் அறிந்த கிழவன் ரெகுநாத சேதுபதி திருச்சிக்கு விரைந்து சென்று ருஸ்தம்கானைக் கொன்று சொக்கநாத நாயக்கரை மீண்டும் அரியாசனத்தில் அமரச் செய்தார். இதனைப் பாராட்டி மன்னரை சிறப்புச்செய்து இராமநாதபுரத்திற்கு வழியனுப்பிய பொழுது சேதுபதி மன்னருக்கு உதவியாக பணிபுரிவதற்கு குமாரப் பிள்ளையை தளவாயாக (தளபதி) சொக்கநாத நாயக்கர் அனுப்பி வைத்தார். இவர் தளவாயாக மட்டும் அல்லாமல் திருச்சி சொக்கநாத நாயக்காது இரகசிய ஒற்றனாகவும் வேவு பார்த்து வந்தார். சேதுபதி மன்னரை திடீரென சிறைப்பிடித்து திருச்சிக்கு கொண்டு செல்வதற்காக ஏற்பாடு செய்திருந்த சதியினை தெரிந்த மன்னர் தளவாயை கொன்று ஒழித்தார்.

கள்ளர் சீமை தலைவனான ரெகுநாத தொண்டமான் கி.பி.1686-ல் அதிருப்தி அடைந்த மறவர் தலைவர்களை தூண்டிவிட்டு சேது மன்னருக்கு எதிராக கலகக்கொடி தூக்குமாறு செய்தார். திருநெல்வேலிப் பகுதிக்கு சுற்றுப்பயணம் செய்தபொழுது சேதுபதி மன்னரை பதிமூன்று நாட்டு தலைவர்க்ள ஆறாயிரம் பேர் கொண்ட அணியுடன் சாயல்குடி பகுதியில் வழி மறித்தனர். மிகவும் தந்திரமாக அந்த நாட்டு தலைவர்களை மட்டும் ஒருவர்பின் ஒருவராக தம்மை வந்து சந்திக்குமாறு மன்னர் சொன்னார். மன்னரது பேச்சை நம்பி அவருடன் பேச்சுவார்த்தை நடத்த வந்த 13 தலைவர் களையும் கொடூரமான முறையில் கொன்று ஒழித்து விடும்படி ஏற்பாடு செய்தார்.

அடுத்து தஞ்சாவூரை ஆண்ட மராட்டிய மன்னர் முதலாவது சரபோஜி சேதுநாட்டை கைப்பற்றுவதற்காக மதுரை மன்னரது உதவியுடன் ரகசியமான முறையில் படையெடுக்க வந்த பொழுது எதிர்பாராத வகையில் சேது நாட்டின் வடக்கு எல்லையிலேயே மராட்டியப்படைகளை சேதுபதி மன்னர் அழித்து ஒழித்தார். இத்தகைய இக்கட்டான

நிலைமைகளுக்கு தமது அரிய அனுபவத்தினால் மன்னருக்கு மரைக்காயர் அவர்கள் வழிகாட்டியாக விளங்கினார் எனத் தெரிய வருகிறது. இதன் காரணமாக மன்னருக்கு அடிக்கடி தக்க ஆலோசனைகள் வழங்குவதற்கு ஏதுவான முறையில் இராமநாதபுரம் அரண்மனைக்கு அருகிலேயே வடபுறத்தில் மரைக்காயருக்கு ஒரு தனி மாளிகை ஒன்றை மன்னர் அமைத்துக் கொடுத்தார். இந்த மாளிகை அப்பொழுது "சின்ன அரண்மனை" அல்லது "புது அரண்மனை" என வழங்கப்பட்டது. சீதக்காதி நொண்டி நாடகம் இயற்றிய புலவர் செஞ்சிக் கோட்டையிலிருந்து கீழக்கரை சென்று சீதக்காதி மரைக்காயரைத் தரிசிக்க வந்த நொண்டி, மரைக்காயரை இராமநாதபுரம் மாளிகையில் தேடியதாகவும் பின்னர் கீழக்கரை சென்றதாகவும் இலக்கியத்தில் குறிப்பிட்டிருப்பது இங்கு ஆராயத்தக்கது.

மேலும் திருமலை ரெகுநாத சேதுபதி மன்னரது காலத்தில் மதுரை மன்னர் திருமலைநாயக்கர் அன்பளிப்பாக வழங்கிய திருநெல்வேலிச்சீமை கடற்கரைப் பகுதியில் இருந்த பரவர்களிடமிருந்து மன்னரது சார்பில் வரி வசூலிப்பு உரிமையையும் சேதுபதி மன்னர் மரைக்காயருக்கு வழங்கி இருந்தார். இதனைக் குறிப்பிடும் டச்சுக்காரரது ஆவணம் மரைக்காயரை "ரீஜென்ட் (அரசப்பிரதிநிதி) பெரியதம்பி" என குறித்துள்ளது. சேதுபதி மன்னர் மரைக்காயர் மீது கொண்டிருந்த நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் மற்றுமொரு எடுத்துக்காட்டாக இந்த செயல் அமைந்துள்ளது.


சேதுபதி மன்னரது வீரமும் புகழும் வளர்ந்து கொண்டே வந்தது. ஆனால் சேதுபதி மன்னர் எங்கோ ஒரு கிராமத்தில் (புகலூரில்) தமது தலைமை இடத்தை அமைத்து நிர்வாகம் செய்து வந்ததை கவனித்த மரைக்காயர் புகலூரிலிருந்து தலைமையிடத்தை மாற்றும்படியாக மன்னருக்கு ஆலோசனை வழங்கினார்.

மேலும் சேதுபதி மன்னரைப் போன்ற ஒரு தன்னரசு மன்னர் எவ்விதம் நிர்வாகம் நடத்த வேண்டும், எத்தகைய முறையில் வெளிநாட்டவரையும் தனது குடிமக்களையும் சந்திக்கவேண்டும், அதற்கான நெறிமுறைகளை எவ்விதம் அமைத்துக்கொள்ளவேண்டும் என்றெல்லாம் பல ஆலோசனைகளை மரைக்காயர் அவர்கள் எடுத்துக்கூறியது மன்னருக்கு மிகவும் இணக்கமானதாகவும், இயல்பானதாகவும் தெரிந்தது. இதனால் மரைக்காயரது ஆலோசனையின் பெயரில் புகலூருக்குப் பதிலாக இராமநாதபுரம் கோட்டை சேதுபதி சீமையின் தலைநகராக மாற்றம் பெற்றது. இதன் மூலமாக சேதுபதி மன்னரை மற்ற அரசர்களும், வெளிநாட்டு வர்த்தகர்களும் நேரில் அணுகுவதற்கும், மன்னரிடம் தொடர்பு கொள்வதற்கும் இந்தப்புதிய தலைநகர் ஏற்றதாக அமைந்தது.

அப்பொழுது இராமநாதபுரம் கோட்டை (தற்பொழுதைய கடைவீதியும் அரண்மனைப் பகுதியும், தெற்கிலும் வடக்கிலுமுள்ள குடியிருப்புகளைக் கொண்டதாக இருந்தது) மண் சுவர்களாலான சாதாரணக் கோட்டையாக இருந்தது. இதனை வலிமை மிக்க அரணாக மாற்றியதிலும் நமது மரைக்காயர் அவர்களுக்கு பெரும் பங்கு உண்டு. சுமார் இரண்டு மைல்களுக்கும் அதிக சுற்றளவுடன் செவ்வக வடிவில் கிழக்கில் மட்டும் ஒரு பெரும் தலைவாயிலுடன் இந்தக் கோட்டையை மரைக்காயர் அவர்கள் நிர்மாணிக்க உதவினார். கல்லாலான இந்தக் கோட்டையின் சுவர்கள் 27 அடி உயரமும், 5 அடி அகலமும் உடையதாக இருந்தது. இந்தக்கோட்டை மதிலில் ஆங்காங்கு நான்கு புறங்களிலும் கொத்தலங்கள் அமைத்து 32 பெரிய பீரங்கிகள் நிறுத்தப்பட்டன. அத்துடன் மன்னர் நிர்வாகத்திற்கு ஏதுவாகவும் சில பொழுது மன்னர் தங்குவதற்குகாக கோட்டையின் அரண்மனை வளாகத்தில் ஒரு பெரிய தர்பார் மண்டபத்தையும் நிர்மாணிப்பதற்கு மரைக்காயர் அவர்கள் உதவினார். இந்த மண்டபம் இப்பொழுது "இராமலிங்க விலாசம் அரண்மனை" என வழங்கப்பட்டு வருகிறது.



கிழவன் ரெகுநாத சேதுபதி மன்னரும், வள்ளல் சீதக்காதி மரைக்காயரும் இணைந்து நிர்மாணித்த இராமநாதபுரம் கோட்டைக்கு முன்மாதிரியாகக் கொண்ட அரபு நாட்டு கோட்டை ஒன்றின் வரைபடம் ( ARABSQUE)



கிழவன் ரெகுநாத சேதுபதி மன்னரது பயன்பாட்டிற்காக சீதக்காதி
மரைக்காயர் அமைத்த தர்பார் மண்டபம்
(இராமலிங்க விலாசம் அரண்மனை)

இந்த விவரங்களை "மேனுவல் ஆஃப் இராமநாதபுரம் சமஸ்தானம் " என்ற நூலின் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

மற்றும் இராமநாதபுரம் அரண்மனை அந்தப்புரத்திலிருந்து இரகசிய செய்திகள் வெளியில் செல்வதைத் தவிர்ப்பதற்காக அரண்மனை அந்தப்புரத்தில் பண்டைய தமிழ் மன்னர்களது முறைப்படி ஊமைகளையும், அலிகளையும் பணியாளர்களாக நியமனம் செய்தார். மன்னரது நிழல் படையாக பணிபுரிய முன்னூறு அபிசீனிய நாட்டு வீரர்களை வரவழைத்து மெய்க்காப்பாளர்களாக நியமனம் செய்தார். இவற்றிற்கெல்லாம் மேலாக இராமநாதபுரம் கோட்டைக்குள் மன்னருக்கு அபாய நிலை ஏற்படும்போது கோட்டைக்கு வெளியே எளிதில் தப்பிச்செல்வதற்காக இராமநாதபுரம் அரண்மனையிலிருந்து சுரங்கப்பாதை ஒன்றையும் (சுருங்கை வழி) அமைத்தார். மேலும் அரச அவையில் மன்னர் குடிமக்களது வழக்குகளை விசாரித்து தீர்ப்பு கூறுவதற்கும், வெளிநாட்டு அரசு அலுவலர்களை அரசவையில் வரவேற்பதற்குமான நெறிமுறைகளையும் மரைக்காயர் அவர்கள் வகுத்துக் கொடுத்தார். இவையெல்லாம் ஒரு பேரரசர், அவரது நிர்வாகம், பணியாட்கள், வீரர்கள் ஆகியோர் எங்ஙனம் இயங்க வேண்டும் என்பதை பல நாடுகளுக்கும் சென்று வந்ததினால் ஏற்பட்ட பட்டறிவைக் கொண்டு மரைக்காயர் சேதுபதி அரண்மனையில் பயன்படுத்தினார் என்றால் அது மிகையாகாது.

பொதுவாக சேதுபதி சீமையில் விளைபொருளான தானியங்கள் மூலம் கிடைக்கும் தீர்வை மட்டும்தான் சேதுபதி மன்னரது வருவாயில் பெரிய இனமாக அப்பொழுது இருந்து வந்தது. இதனைப் புரிந்து கொண்ட மரைக்காயர் அவர்கள், சேதுபதி மன்னரும் கடல் வணிகத்துறையில் ஈடுபட்டு அரசு வருவாயைப் பெருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக சில கப்பல்களையும் புதிதாக அமைக்குமாறு செய்தார். அந்தப் கப்பல்களை வங்கக் கடலிலும், அரபிக்கடலிலும் சேது நாட்டுக் கொடியுடன் சென்று வருமாறு செய்தார். அவைகளில் ஒரு

கப்பல் பாரசீக வளைகுடாவில் உள்ள ஹெர்முஸ் தீவிலிருந்து அரபிக் குதிரைகளை வாங்கி வருவதற்குப் பயன்பட்டது என்பதையும், இன்னொரு கப்பல் சேதுநாட்டுக் கடலில் எடுக்கப்பட்ட சங்குகளை ஏற்றிக்கொண்டு வங்க நாட்டுக்கு சென்றதையும் டச்சு ஆவணங்கள் தெரிவிக்கின்றன. இன்னொரு போர்க்கப்பல் ஒன்று கீழக்கரை துறைமுகத்தில் கட்டப்பட்டு வந்தது என்றும், அதில் பொருத்த வேண்டிய பீரங்கி ஒன்றை கொடுத்து உதவ டச்சுக்காரர் மறுத்ததையும் அந்த ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சேதுபதி மன்னர் பிறநாட்டவருடனும், வர்த்தகபிரதிநிதிகளுடனும் தொடர்புகொள்வதற்கு பொது மொழியாக பாரசீக மொழியை பயன்படுத்த மரைக்காயர் அவர்கள் ஏற்பாடு செய்தார். ஏனெனில் அன்றைய காலகட்டத்தில் வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே செஞ்சிக்கோட்டை வரை பரவியிருந்த முகலாயப் பேரரசின் ஆட்சி மொழியாக பாரசீக மொழி தொடர்பு இருந்து வந்ததே இதற்கு காரணமாகும். இதனால் சேதுபதி சமஸ்தானம் ஆவணங்களில் பாரசீக மொழிச்சொற்கள் கலந்து வழக்கிற்கு வந்தன. குறிப்பாக பசலி(ஆண்டு), கிஸ்தி (வரி), ஜப்தி(பறிமுதல்), குத்தகை (தவணை), ஹுசூர்(தலைமை), தாக்கீது(கட்டளை), அர்ஜி(உத்தரவு), பேஸ்குஸ்(வருஷப்பணம்), தாக்கல்(அனுப்புதல்), மிராசு(பாத்யதை), ஹத்து(வரையறை), பாக்கி(மீதப்பணம்),ஏலம் கஸ்வா(நகரில் ஒரு பகுதி), ராஜினாமா(பதவி விலகல்), பொக்கிஷம்(கருவூலம்) போன்றவை.

மேலும் அரசு ஆவணங்களில் சேதுபதி மன்னர்கள் இந்துசமய பஞ்சாங்கத்தின் படி கலியுக ஆண்டுகளையே (கி.பி.1780க்கு முன்பு வரை) பயன்படுத்தி வந்தனர். வள்ளல் சீதக்காதி அவர்களும், பிற வணிகர்களும் அப்பொழுது கேரளநாட்டுடன் வணிகத்தொடர்புகளை விரிவாகக் கொண்டிருந்த காரணத்தால் சேதுபதிமன்னர் ஆவணங்களிலும்

கேரளநாட்டு கொல்லம் ஆண்டுக் கணக்கை பின்பற்றத் தொடங்கினர். கொல்லம் ஆண்டு என்பது இந்திய நாட்டில் அப்பொழுது வழக்கில் இருந்த கலியுக ஆண்டு விக்ரம ஆண்டு என்பன போன்று கேரள மக்கள் மட்டும் அதுவரை பயன்படுத்திவந்த ஆண்டுக்கணக்கு முறையாகும். இந்த கணக்கு முறை ஆங்கிலப் பஞ்சாங்கத்தின் படி கி.பி.825 முதல் தொடக்கம் பெறுவதாகும்.

இந்த ஆண்டில் கொல்லங்கோட்டில் ஆட்சிசெய்து வந்த சேரமான் பெருமான் என்ற மன்னர் அரபுநாட்டு இஸ்லாமிய வணிகர்களது தொடர்பு காரணமாக இஸ்லாமிய நெறிகளில் ஈர்க்கப்பட்டு மக்காவுக்கு புறப்பட்டுச்சென்ற நிகழ்ச்சியைக் குறிக்கும் முகமாக இந்த ஆண்டு முறை கேரளத்தில் புதிதாக கி.பி.825 முதல் தொடக்கம் பெற்றது.


இவ்விதம் சேதுநாட்டு நலனுக்கும், சேதுபதி மன்னரது புகழுக்கும் பொருத்தமான பல பணிகளைப் பொறுப்புடன் மரைக்காயர் அவர்கள் மேற்கொண்டிருந்ததை வரலாறு என்றென்றும் விளம்பிக்கொண்டே இருக்கும்.

இவ்விதம் சேதுபதி மன்னருக்கும், சீதக்காதி மரைக்காயருக்கும் இடையே நிலவிய நெருக்கமான தொடர்பும், தோழமையும் காரணமாக சேது நாட்டு முஸ்லிம் மக்களுக்கு தங்களது எதிர்காலம் பற்றிய நல்ல நம்பிக்கை ஏற்பட்டது. சிறப்பாக பல தொழில்களிலும் முஸ்லிம் மக்கள் ஈடுபட்டு சேது நாட்டின் வளமைக்கு வழிகோலினர். இதனை நன்கு அறிந்த சேதுபதி மன்னரும் இந்த மக்களுக்கு அவர்களது வணிகத்தை சிறப்பாக நடத்துவதற்கு பல ஊக்குவிப்புகளையும் வழங்கினார் என்று குறிப்பிடத் தேவையில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக திருஉத்ரகோசமங்கை பகுதியில் இருந்த முஸ்லிம் தறிக்காரர்களுக்கு அவர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய வரியினின்றும் விலக்கு அளிக்கப்பட்டதை திருஉத்ரகோசமங்கை செப்புப் பட்டயத்தில் " நமது காவல்

குடியினரான முஸ்லிம்களது தறிக்கடமை நீக்கி" என்ற வாசகம் உறுதிப்படுத்துகிறது.

மேலும் சேதுபதி மன்னர் முஸ்லிம் மக்களது பள்ளிவாசல், தர்ஹா போன்ற பல சமுதாய அமைப்புக்களுக்கும் பல்வேறு உதவிகளையும், கொடைகளையும் வழங்கியதை இராமநாதபுரம் சமஸ்தான நில மான்ய ஓலைக் கணக்கிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

சேதுபதி மன்னர் சீதக்காதி மரைக்காயர் தொடர்பினால் சேது நாட்டில் சமய நல்லிணக்கமும் சமுதாய ஒற்றுமையும் வலுப்பெற்றது என்பதை பல நிகழ்ச்சிகள் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.



# 5

# தமிழிலே தோய்ந்த நெஞ்சம்

முன்பெல்லாம் சீதக்காதி மரைக்காயர் இராமநாதபுரம் கோட்டைக்கு மாதம் இருமுறை வந்து செல்வார். சேதுபதி மன்னருக்கு அரசியல் சம்பந்தப்பட்ட சரியான ஆலோசனைகளைத் தெரிவித்துவிட்டு கீழக்கரை திரும்பி விடுவார். ஆனால் இப்பொழுது 10 நாட்களுக்கு ஒரு முறை அவர் மன்னரைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலைகள் எழுந்தன. திருமலை சேதுபதி மன்னர் காலத்தில் (கி.பி.1645 - 1674) மதுரை திருமலைநாயக்க மன்னர் சேதுபதி மன்னர் செய்த அரிய உதவிகளுக்கு அன்பளிப்பாக திருநெல்வேலிச் சீமையின் கடற்கரைப் பகுதிகளையும், அந்தப் பகுதியில் முத்துக்குளிக்கும் பொழுது மதுரை மன்னருக்கு உரிய 96½ கல் முத்துக்குளித்தலில் 16 கல் முத்து குளிக்கும் உரிமையையும் சேதுபதி மன்னருக்கு அனுமதித்திருந்தார். ஆனால் இந்தப் பகுதியில் உள்ள பரவர்களிடமிருந்து தீர்வை வசூலிப்பதிலும், பரவர்களைக்கொண்டு முத்து குளிப்பதிலும் பல இடர்ப்பாடுகள் எழுந்தன. இதற்குக் காரணம் போர்ச்சுக்கீசியர் கி.பி.1568 வரை இந்தப்பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி

வந்த பொழுது, பரவர்களுக்கும், முஸ்லிம் மரைக்காயர்களுக்கும் இடையே ஏற்பட்ட சிறுசிறு பூசல்களைப் பெரிதாக்கி மரைக்காயர், பரவர் உறவுகளில் பெருத்த பிளவினை ஏற்படுத்தியது இதற்கு முக்கிய காரணமாகும். ஆண்டாண்டு காலமாக கடல் தொழிலில் மரைக்காயர்களிடம் அடிமையாக கட்டுப்பட்டு அவர்களது வாணிப வளத்திற்கு உதவிய பரவர்களை கி.பி.1537- ல் மதமாற்றம் செய்து அவர்களது நாட்டு (போர்ச்சுக்கல்) குடிமக்களாக மாற்றி அவர்கள் குடியிருப்புகளுக்கு பாதுகாப்பு கொடுத்து அவர்களது உழைப்பையும், பொழுதையும் தங்களது நலனுக்காக பயன்படுத்தி வந்தனர். காயல்பட்டினம், தூத்துக்குடி மரைக்காயர் தங்களது சொந்த ஊர்களிலிருந்து வெளியேறி பல இடங்களிலும் குடியேறினர்.

ஆதலால் அந்தப் பகுதியில் உள்ள பரவர்கள் பொருளாதார வகையில் உயர்வும், சிறப்பும் பெற்றிருந்ததால் இராமநாதபுரம் சேது மன்னரது ஆட்சிக்கு உட்பட்டு உரிய தீர்வைகளை செலுத்துவதற்கு இணங்காமல் வீணான சச்சரவுகளில் ஈடுபட்டு வந்தனர். இதனைச் சமாளிப்பதற்காக தமது விஜயரகுநாத பெரிய தம்பியான சீதக்காதி மரைக்காயரை சேதுபதி மன்னரது அதிகாரம் பெற்ற பிரதியாக நியமனம் செய்தார். அடிக்கடி திருநெல்வேலிப் பகுதிக்கு மரைக்காயர் சென்று வர வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

இதனைப் போன்று இன்னொரு பிரச்சினை. தொன்று தொட்டு மன்னார் வளைகுடாவின் எதிர்க்கரையான இலங்கையில் மன்னார் வரை கடலில் முத்துக்குளிக்கும் உரிமையை சேதுபதி மன்னர்கள் பெற்றிருந்தனர். குறிப்பிட்ட காலத்தில் சேதுநாட்டு முத்துக்குளிப்பவர்களை ஏற்றிக்கொண்டு செல்லும் படகுகள் மன்னார் பகுதியில் ஓரிரண்டு மாதங்கள் தங்கியிருந்து முத்துச்சிலாபம் முடிந்தபிறகு சேதுநாட்டு கடற்கரைக்கே திரும்புவது வழக்கம். ஆனால் அப்பொழுது இவ்விதம் முத்துச்சிலாபத்திற்கு சென்றிருந்தவர்களில் சிலர்

மன்னார் பகுதி கொண்டாச்சியில் தங்கி அக்கிரமமாக குடியிருந்து வருவதாகவும், அவர்கள் சேதுநாட்டுக் குடிமக்களாக இருப்பதால் அவர்களின் இந்த சட்ட விரோதச் செயலைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ்ப்பானத்திலிருந்த டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் சேதுபதிமன்னருக்கு புகார் செய்தனர். இதனை நேரில் சென்று விசாரிப்பதற்காக மன்னரது பிரதிநிதியாக சீதக்காதி மரைக்காயர் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம்.

இத்தகைய சூழ்நிலையில் சீதக்காதி மரைக்காயர் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து சில நாட்கள் இராமநாதபுரத்தில் தங்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. பெரும்பாலும் மாலை நேரங்களில் அரண்மனைக்குச் சென்று சேதுபதி மன்னரைச் சந்தித்து அளவளாவதையும், சேதுநாட்டு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தக்க ஆலோசனைகள் வழங்குதலையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். சில சமயங்களில் சேதுபதி மன்னரை தரிசித்து கொடைகள் பெற்றுச் செல்வதற்கு வருகின்ற தமிழ்ப்புலவர் பெருமக்களை சீதக்காதி மரைக்காயருக்கு மன்னர் அறிமுகம் செய்து வைப்பார். தமிழ் ஆர்வலரான மரைக்காயர் அவர்களும் புலவர்களுடன் இலக்கிய சர்ச்சைகளில் ஈடுபட்டு மனமகிழ்வார்.

மற்றும் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் வந்துவிட்டால் இராமநாதபுரம் கோட்டை மிகவும் கலகலப்பாக தோற்றமளிக்கும். தமிழ்நாட்டின் நெடுந்தூரத்திலுள்ள பட்டி தொட்டிகளிலிருந்து கூட தமிழ்ப்புலவர்கள் இராமநாதபுரம் அரண்மனை நோக்கி வருவார்கள். தொடர்ந்து ஒன்பது நாட்கள் நடைபெறும் நவராத்திரி விழாவில் தங்களது தமிழ்ப்புலமையையும், நுண்மான்நுழைபுலத்தையும் தெரிவிக்கும் பாங்காக பல தமிழ்க்கவிதைகளை இயற்றி சேதுபதி அரசர் முன்னர் அரங்கேற்றுவர். கவிதைகளின் தரத்தை ஓர்ந்த சேதுபதி மன்னரும் அந்தப் புலவருக்கு

மாதவிப்பட்டு அணிவித்து கைகளிலும், தோள்களிலும் பொற்கடகங்களையும், பதக்கங்களையும் பூட்டி மகிழ்வார். இத்தகைய கவியரங்கங்களில் மன்னருக்கு அடுத்தபடியாக அமர்ந்திருந்த சீதக்காதி மரைக்காயரும் தமிழ்ப்புலவர்களின் தமிழ்மொழித் தேர்ச்சியையும், இலக்கண, இலக்கிய திறனையும் புரிந்து மிகவும் மகிழ்ச்சி அடைவார். இந்தக் கவியரங்கினையும், புலவர்களையும் நினைக்கும் பொழுது மரைக்காயர் அவர்களின் கற்பனை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் காலத்திற்கே சென்று விடும். இப்னு சுவாது என்னும் அரபிக்கவிஞர் நாயகம் அவர்களைப் போற்றி மிகச் சிறப்பாக "கஸீதா" பாடியதை கேட்டு மகிழ்ந்த நாயகம் அவர்கள் தாங்கள் அணிந்திருந்த போர்வையை அந்த புலவருக்கு பொன்னாடையாகப் போர்த்தி சிறப்புச் செய்தார். இவ்விதம் தாமும் ஏன் இஸ்லாமியத் தமிழ்ப்புலவர்களை நாயகம் அவர்கள் காட்டிய முன்மாதிரியில் சிறப்புச் செய்து ஊக்குவிக்கக்கூடாது. என்ற உயர்ந்த எண்ணம் மரைக்காயரது உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது.

மேலும் மன்னரைச் சந்திக்க வந்த தலமலை கண்ட தேவர், அழகிய சிற்றம்பலக்கவிராயர், அமுத கவிராயர் போன்ற பெரும் புலவர்களது இலக்கிய விளக்கங்களை கேட்கும் பொழுதெல்லாம் சீதக்காதி மரைக்காயர் நெக்குருகி நெஞ்சம் குழைந்து போவார். புலவர்களுக்கு எத்தகைய பேராற்றலையும், புலமையையும் இறைவன் அளித்துள்ளான் என எண்ணி வியப்படைவார். இவர்களைப் போன்ற தமிழ்ப்புலவர்கள் இஸ்லாமிய சமுதாயத்தில் ஏன் இல்லை?... இந்தப் புலவர்களைப் போன்று முஸ்லிம்களும் தமிழ் மொழியின் இலக்கண இலக்கியங்களை கற்றுத்தேர்ந்து தமிழ்ச்சமுதாயத்தின் ஒரு அங்கமான முஸ்லிம் மக்களுக்கு இறைவனது திரு மறையையும், இறுதித்தூதரது இனிய வழிமுறைகளையும் இலக்கியங்களாக வழங்கினால் என்ன? தாய் மொழியும், தமிழ்ச்சமுதாயமும் சிறப்படையும் அல்லவா!

இந்த வினாக்கள் தமிழ்ப்புலவர்களை சந்தித்து உரையாடிய பிறகு சீதக்காதி மரைக்காயரது இதயத்தில் விடைகாண வேண்டிய வினாக்களாக எழுந்து நிற்கும். அதற்கான தீர்வுகளையும் மரைக்காயர் அவர்கள் சிந்தித்து வந்தார் . தமிழ்ப்புலவர்களை ஆதரித்து அவர்கள் இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களைப் படைத்து உதவுவதற்கு தக்க துணையாக அமைந்து உதவுவது என முடிவு செய்தார்.

இந்த முடிவு சீதக்காதி மரைக்காயரைப் பொறுத்த வரையில் மிகவும் எளிதான ஒன்றுதான். ஏனெனில் அவர் ஏற்கெனவே நாடி வந்தவருக்கு நலிவு தீர பொன்னும் பொருளும் வழங்கி மகிழும் வள்ளலாக விளங்கி வந்தார். ஈதல், அறம் என்ற இஸ்லாமிய கடமையை (ஜகாத், ஸதகா) பல ஆண்டுகளாக மிகச்சிறப்பாக நிறைவேற்றி வந்தார் அவர். ஆதலால் இஸ்லாமிய இலக்கியம் படைக்கும் புலவர்களைப் போற்றிப்புரப்பது என்பது அவரது ஈதல் கடமையின் ஒரு பகுதியானதுதான். மேலும் சீதக்காதி மரைக்காயர் பிறந்து வளர்ந்த கீழக்கரையின் புனித மண் பல இஸ்லாமிய அரபி, தமிழ் வித்தகர்களுக்கும் பிறந்தகமாக விளங்கி பெருமை பெற்றிருந்தது.

குறிப்பாக தமிழகத்தில் தமிழ் முஸ்லிம்கள் என்ற பிரிவினர் தமிழ்ச்சமுதாயத்தின் தவிர்க்க முடியாத அங்கமாக அமைந்து பல நூற்றாண்டுகளாகி விட்டன. அவர்களது குடியிருப்புக்கள் பல கடற்கரைப் பகுதிகளிலும் உள்நாட்டிலும் நிலை பெற்று அந்த மக்களது வாணிபமும் தங்குதடையின்றி வளர்ந்து வந்தது. தங்களது வாய்மொழியாக, வழிமொழியாக அவர்கள் வழங்கி வந்த அரபி மொழியினின்றும் மாறி, தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு தமிழ் முஸ்லிம்களாக விளங்கி வந்தனர். ஆனால் ஏனைய தமிழ்ச்சமுகத்தினரைப் போல தாய்மொழியாகிய தமிழுக்கு அணி செய்யும் இலக்கிய ஆற்றலை ஒரு நூற்றாண்டுக்கு முன்னர்தான் அவர்கள் பெற்றனர். இத்தகைய தாமதமான தேர்ச்சி நிலைக்கு

காரணம், அன்றைய தமிழக அரசியல் சூழ்நிலைதான். கி.பி.14 ஆம் நூற்றாண்டில் வட வேங்கடத்தைக் கடந்து தமிழகத்தில் புகுந்த வடுகர்கள் தமிழகத்தின் அரசியலை தமதாக்கி ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தை விஜயநகரப்பேரரசின் ஒரு பகுதியாக அமைத்து விட்டனர். அவர்களது தாய்மொழி தெலுங்காக இருந்ததால் அந்த மொழியும் ஆரியர்களது வடமொழியை மூலமொழியாகக் கொண்டிருந்ததால் விஜயநகர மன்னர்கள் அவர்களது ஆட்சியில் தெலுங்கிற்கும், வடமொழிக்கும் மட்டுமே ஊக்குவிப்புகளை அளித்து உதவி வந்தனர். தமிழ் மொழி அரசியல் செல்வாக்கை இழந்ததுடன் மக்களது ஆதரவின்றி தடுமாறிக் கொண்டிருந்தது. தமிழைக் கற்பித்து வந்த தமிழ்ப் புலவர்கள் வறுமையில் வாடினர். "சனியான தமிழைவிட்டு சதிராடக் கற்றோம் இல்லையே" என சஞ்சலப்பட்டனர். இத்தகையதொரு அவல நிலையில் தமிழை யார்தான் முறையாகக் கற்று தமிழ் இலக்கியம் படைக்க முன் வருவர். தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆய்வு செய்தால் தமிழகத்தை கி.பி.15 ஆம் நூற்றாண்டு முதல் 17 ஆம் நூற்றாண்டு வரை தமிழ்ப் புலவர்கள் தமிழ்க்காப்பியம் எதனையும் இயற்றவில்லை என்பது புலனாகும்.

என்றாலும் தமிழை தங்களது தாய் மொழியாகக் கொண்டிருந்த தமிழ் முஸ்லிம்கள் தங்கள் மொழியின் மீதுள்ள பற்றின் காரணமாக இந்த நெருக்கடியான நிலையில் பிற சமூகத்தினரைவிட தமிழ் மொழிக்கு பல இலக்கிய அணிகளைச்சூட்டி மகிழ ஆர்வத்துடன் முன் வந்தனர். அதிலும் கீழக்கரையைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் ஒருவர்தான் தமிழில் முதலாவது இஸ்லாமிய இலக்கியத்தை படைத்தளிக்கும் பெருமை பெற்றார். வண்ணப்பரிமளப்புலவர் என்ற கீழக்கரைப் பெருமகன் அந்த முதல் இலக்கியத்தை (1000 மசாலா என்ற அதிசய புராணம்) கி.பி.1572 -ல் இயற்றி மதுரை தமிழச்சங்கத்தில் அரங்கேற்றினார்.

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் காலத்தில் அரபிகளைத் தவிர கிறிஸ்தவர்களும், யூதர்களும் நாயகம் அவர்களது நல்லுபதேசத்தைக் கேட்டு மனம் மாறியவர்களாக ஏகத்துவ இஸ்லாமிய அணியில் சேர்ந்து வந்தனர். அப்போழுது "இப்னு ஸலாம்" என்ற யூத அறிஞர் ஒருவர் தமது தோழர்களுடன் நாயகம் (ஸல்) அவர்களை சந்தித்து அவர்களது ஐயப்பாடுகளை தீர்த்துக் கொண்டார். பொதுவாக இறைவன் யார்? இறைவனது படைப்புக்களான சொர்க்கம், பூமி, நரகம், தேவ தூதர்களின் சிறந்த பண்புகள், அறங்கள் பற்றி பல்வேறு வினாக்களை நாயகம் அவர்களிடம் சமர்ப்பித்து அதற்கு தெளிவு பெற்றார். இந்தச் செய்திகள் அடங்கிய சிறந்த காப்பியம்தான் ஆயிரம் மசாலா என்ற அதிசயப் புராணம் (ஆயிரம் மசாலா = ஆயிரம் வினாக்கள்)

இந்த விபரங்களையெல்லாம் நன்கு அறிந்தவர்தான் சீதக்காதி மரைக்காயர் அவர்கள். கி.பி.1572 லிருந்து கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக அந்த இலக்கியத்திற்கு கொடைநாயகராக விளங்கிய கறுப்பாறு காவலர் என்று புகழப்பட்ட கீழக்கரை பெரு மகனைப்போல கொடை நாயகர் எவரும் கீழக்கரையில் தோன்றவில்லையா? அல்லது வண்ணப் பரிமளப்புலவரைப் போன்ற புலவர் எவரும் தமிழில் இஸ்லாமிய இலக்கியங்கள் இயற்றவில்லையா? எது எப்படி இருந்தாலும் இஸ்லாமியத் தமிழ்ப்பணிக்கு தக்க துணையாக இருந்து உதவுவது என எண்ணினார். இதனையடுத்து சீதக்காதி மரைக்காயரது கீழக்கரை மாளிகையை நோக்கி தமிழ்ப்புலவர்கள் தலயாத்திரை மேற்கொண்டனர். அத்திமரம் பழுத்தால் பறவை இனங்களுக்கு அழைப்பு அனுப்புவா வேண்டும். ஆன்ற வள்ளலான சீதக்காதி மரைக்காயரது மாளிகை, தமிழ்ப்புலவர்களுக்கு தஞ்சமென்று சொல்லும் அடையா நெடுங்கதவுமாக விளங்கத் தொடங்கியது. சேது மன்னரை சந்திக்க வருகின்ற தமிழ்ப்புலவர்களெல்லாம் கீழக்கரையில் வள்ளலைக் கண்டு அருந்தமிழின் மாண்புகளைச் சொல்லி வள்ளலை மகிழச்செய்து அணியும், மணியும், பொன்னும், பொருளும் பெற்றுச் சென்றனர்.

இவ்விதம் சீதக்காதி மரைக்காயரை சந்திக்க வந்த புலவர்களில் குறிப்பிடத்தக்கவர் தொண்டை மண்டலத்து பொற்களந்தை கிராமத்தைச் சேர்ந்த படிக்காசுத் தம்பிரான் என்பவராவார். இவர் பழுத்த சைவத்துறவியும், பெரும்புலவருமாவார். இவரது பாடல்கள் தொட்டாலும் கை மணக்கும் ..... என்று சிறப்பாக புகழப்பட்டவையாகும். அவர் இராமேஸ்வரம் தீர்த்தயாத்திரை செல்லும் வழியில் சோழ மண்டலத்திலேயே சேதுநாட்டில் சீதக்காதி என்றொரு வள்ளல் சிறந்து விளங்குவதாக கேள்விப்பட்டார். அதன் காரணமாக ஆர்வம் மேலிட கிழக்கரை வந்து சேர்ந்தார். வள்ளலது வள்ளன்மையும், வரையாது தமிழ்ப்புலவர்களுக்கு வழங்கி உதவும் பண்பினையும் நேரில் கண்டு பெருமிதமுற்றார். அவரது இதயத்தில் வள்ளல் சீதக்காதியின் கொடை அழுத்தமாக பதிந்து விட்டது. அதன் காரமணமாக அவரது ஏடுகளை அழுத்தி எழுது கோலிலிருந்து எழுந்த இனிய பாடல்கள் பல. அவைகளில் ஒன்றுதான்

காய்ந்து சிவந்தது சூரிய காந்தி, கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண்
தொலைவில், பன்னூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்சம், அனுதினமும்
ஈய்ந்து சிவந்தது மால் சீதக்காதி இருகரமே

படித்துப்படித்து சுவைக்க வேண்டிய பாடல். வள்ளல் சீதக்காதியின் கொடையை இனிக்க இனிக்க எடுத்துச் சொல்வது.

இன்னும் இந்தப்புலவரைப் போன்று திருநெல்வேலி நமச்சிவாயப் புலவர், திருப்புவனம் கந்தசாமிப்புலவர் இப்படி வள்ளலின் கொடையிலே வடிவு பெற்ற கவிதைகள் பல.

சீதக்காதி மரைக்காயரது விருப்பப்படி இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைப் படைப்பதற்கான முன்னோடி புலவராக எட்டையாபுரம் உமர்கத்தாப் புலவர் முன் வந்தார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் சீதக்காதி மரைக்காயருக்கு நடந்த திருமண நிகழ்ச்சியை சிற்றிலக்கியமாக படைத்தார். இந்த சிற்றிலக்கியம் இப்பொழுது வள்ளல் சீதக்காதி திருமண வாழ்த்து என வழங்கப்படுகிறது. தமிழகத்தின் வரலாற்றையும் கலை, பண்பாடு, மரபுகள் போன்றவற்றை சித்தரிப்பதில் நாட்டுப்புற இலக்கியங்கள் எனப்படும் சிற்றிலக்கியங்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகின்றன. இந்த இலக்கியமும் அந்த வகையைச் சேர்ந்தது. தமிழக வரலாற்றிற்கு துணைபுரியும் இந்த வகை இலக்கியங்களில் அதுவரை பாடப்பெற்று வழக்கில் இருந்தவை 1. இராமப்பையன் அம்மானை, 2. ராஜதேசிங்குகதை ஆகும். இந்த இலக்கியங்கள் கி.பி.பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்தவை. மறவர் சீமையின் மீது தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக மதுரை மண்டலத்தைச் சேர்ந்த 72 பாளையக் காரர்களது பெரும் படையுடன் திருமலை நாயக்க மன்னரது தளபதி ராமப்பையன் சேது நாட்டிற்குள் சென்று இராமேஸ்வரம் தீவுச்சண்டையில் கி.பி.1640 -ல் இரண்டாம் சடைக்கன் சேதுபதியுடன் பொருதியதை இராமப்பையன் அம்மானை விவரிக்கிறது.

இதனைப் போன்றே கி.பி.1686 - ல் இந்தியப் பேரரசின் தலைவரான ஔரங்கசீப் செஞ்சிக்கோட்டையை கைப்பற்றுவதற்காக தமது தளபதி ஜுல்பிகார் கானை அனுப்பி வெற்றி கொண்டது ராஜா தேசிங்கு கதையாகும். இவைகளினின்றும் வேறுபட்டு அரசியல் அல்லாது வள்ளல் சீதக்காதி மரைக்காயரை பாட்டுடைத் தலைவராகக் கொண்டது சீதக்காதி திருமணவாழ்த்து ஆகும்.

இந்த இலக்கியம் தனிப்பட்ட மனிதர் ஒருவரை மையமாகக்கொண்டு புனையப்பட்டிருந்த பொழுதினும் இந்த நூல் பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் திருமணவிழா சம்பந்தமாக தமிழக முஸ்லிம்கள் மேற்கொண்டிருந்த பழக்கவழக்கங்கள், ஆடை அணிகலன்கள், மகளிரது அணிமணிகள் ஆகியவற்றை மிகத்தெளிவாகத் தெரிந்து கொள்ளும் வகையில் எளிய கண்ணிகளால் தொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நூலின் ஏடுகளின் சுவையை மென்று சுவைத்த சிதலைகள், நாற்பது கண்ணிகளை முழுமையாக விழுங்கி விட்டன. எஞ்சியுள்ள நானூறு கண்ணிகளும் சிற்றிலக்கியங்களுக்குரிய தசாங்கத்தில் தொடங்கி, வாழ்த்துடன் நிறைவு பெறுவதுடன், நமது அகக்கண்களில் வள்ளலது திருமண நிகழ்ச்சியை நிறுத்தி அந்த நறுமணத்தில் நம்மையும் கலந்து மகிழச் செய்கின்றன.

நாளை வதுவையென நல்லவர்கள் நிச்சயித்து விட்டனர். மணமகள் மாளிகையில் மங்கலக்கால் நாட்டப்படுகிறது. மூங்கில் கால் அல்ல பவளக்கால். பந்தர் தயாராகிறது. மறுக்கலவாத செம்பொன் வளை வெள்ளியினால் குறுக்கு வளை. வச்சிரத்தை இழைத்த வரிக்கைகள், பச்சை மரகதத்தால் பலகணிகள், அவைகளைப் பிணிக்க கனகக் கம்பிகள். தங்கத் தகட்டால் சாளரங்கள் மாணிக்க மணிக்கொடுங்கைகள், ஆணித்தரளத்தில் அணி அணியாக தூக்கப்படுகின்றன. நீலமணி, கோமேதகம், வைடூரியம், புருடராகம், பவளம், பதுமராகம் - சரங்கள் பத்தி, பத்தியாக தொங்கவிடப்படுகின்றன.

இன்னும் மயக்கும் எழிலும், மணமும் சேர்க்கும் வகையில் மல்லிகை, செண்பகம், முல்லை, பிச்சி, செங்கழுநீர், செந்தாழை, பைங்கமலம், பாதிரி, மந்தாரம் இருவாட்சி, பொற்கொன்றை, செவ்வாம்பல், செவ்வந்தி, மாதுளம், நீலோற்பம் - இந்த மலர்கள் இசைந்த சரங்கள் பந்தரிடமெல்லாம் பரந்த விதானமாக விரிக்கப்பட்டன. பூங்கமுகு பாலை, தென்னம்பூவிரி ,தேங்கதலி தார், செவ்விளநீர், கொழுஞ்சி, கூழைப்பலா, எலுமிச்சை கரும்பு கதலிக்காய், கமுகுக்காய் - இவையனைத்தும் குலைகுலையாக பந்தரைச் சுற்றித் தூக்கப்படுகின்றன. வானவில்லைப் போன்ற வண்ணச் சேலைகள் பின்னணியில் வகை வகையான விளக்குகளும், நிறைகுடங்களும் மங்கலக் காட்சியாக மிளிர்கின்றன.

மணவிழாவிற்கு மணமகன் புறப்படுவதற்கு அலங்காரம் மேற்கொள்ளப்படுவதை புலவர் சொல்லுகிறார்:

"சம்பங்கி பூந்தைலம் தான்முடியில் கோதி அம்பொன்
கும்ப நிறையும், குளிமஞ்ச னஞ்சொரிந்தார்
பூந்து கிலா வீரம் புலரப் புலர்த்தியபின்
வாய்ந்தபசும் பொன்னாடை வர்க்கந் தெரிந்தெடுத்து
வன்னச் சுளிகை வரிசை நிசாரணிந்து
பொன்னினரை ஞாணும்வச்ரப் பூட்டுமுருக் காணியிட்டுப்
பொன்னம்பர் கஸ்தூரி பூம்பன்னீர் சந்தனமும்
தென்னம் புழுகுசவ்வா தெல்லாம் புயத்தணிந்து
தோற்றுமணி வச்ராங்கிச் சோடணிந்து மேதினியோர்
போற்றி விலைமதியாப் பொன்னினடுக் கட்டிறுக்கிப்
பச்சை மணியுதர பந்தனமுஞ் சேர்ந்திலங்கும்
வச்சிரத்தி னாலிழைத்த வாகுவல யம்புனைந்து
வாகுபந்த னம்பூட்டி வயிரத்துறா அணிந்து
நாகரிகக் கைமேலே ரத்னகங்க ணம்புனைந்து
சீவரத்னத் தாலிழைத்த செய்யவீர வாளியிட்டுக்
காவையொத்த கைமேல் கரபந்த னந்தரித்துத்
தண்டரள மாலிகையுந் தங்கச் சரப்பளியும்
கண்டசர மும்பொற் கனபதக்க முந்தரித்து
பொன்னார மாலையிட்டுப் பூச்செண்டு கைப்பிடித்து
மின்னார் குரவையிட வெள்ளானை யேறினனே....

*கல்யான ஊர்வலம் ஊர்ந்து செல்கிறது. ஊர்வலத்தில் அரசர் மக்கள் செல்லுகின்றனர். தூணியும் வில்லும் பிடித்த தொட்டியர், கேடயமும், வாளும் பிடித்த குதிரை ராவுத்தர் கட்டியக்காரர், சந்திரனைச் சூழ்ந்து வரும் தாராகணம் போல இளைஞர், இசைக் கலைஞர் ஆகியோர் மணமகளை மொய்த்துச் செல்கின்றனர். அப்பொழுது முழங்கிய இசைக்கருவிகள்தான் எத்தனை? திமிரி, தடாரி, குடமுழவு, வீராணம், பேரிகை, பம்பை, பெருமுரசு, மல்லாரி, நாதசுரம் -இன்னும் ஆனை, குதிரை, ஒட்டகை மேல் டம்மாரம் -மேளம், கொம்பு எக்காளம், தாரை, நமரி, வாங்கா, வெண்சங்கு, வேங்குழல், மத்தளம், கின்னரம், வீணை ஆகியவைகளும் முழங்கிச் செல்கின்றன.*

*பவனிவரும் வீதியெல்லாம் மகரத் தோரணங்கள்,தீப தூபங்கள், நெய்விளக்கு, நிறை கும்பம், பன்னீர், பொன் ஆலத்தி மணமகனாக வருகின்ற வள்ளலது பவனி பார்க்க மாதரெல்லாம் ஆயத்த மாகின்றனர். பாடகம், பூஞ்சிலம்பு, சூடகம், சுற்றுமணி அணிந்து, பூம்பட்டும் பொற்சுரிகை, தொங்கலும் புனைந்து கொள்கின்றனர். மதன் வாளி பட்டு உடையுமென கச்சு அணிந்து கொள்கின்றனர். வாள் போன்ற தடங்கண்களுக்கு சாணை வைத்தது போல மையிட்டுக் கொள்கின்றனர். முத்து ஆரம்பு போன்ற மூக்குத்தியும், பொன்மலை போன்ற முத்துவடங்களையும் பூண்டு, காலாழி, கையாழிகளையும் பூட்டிக் கொள்கின்றனர். தங்கச் சவடிகள், பட்டுச்சுரிகை, பூடணம் ரவிக்கை அணிந்து கூந்தல் கோதி சந்தனம் தோய்ந்து, கண்ணாடி பார்த்து பவனி காண மாடத்திலும் மேடையிலும் குழுமி நிற்கின்றனர். மங்கை முதல் பேரிளம்பெண் வரையான பெண்பாலர் அனைவரும் சாளரங்களில் சந்திர உதயமாகக் காணப்படுகின்றனர்.*

*ஊர்வலம் வந்துவிட்டது. மாறன் மகட்கு மணவாளனாக மணமகன் வருகிறார். அவரது அழகில் மயங்கிய மாதர்களை புலவர் பார்க்கிறார். அவர்களை நாமும் பார்க்கின்றோம்*

**"மின்னினிடை தள்ளாட வெண்டுகில்போய் நிற்பாரும்
வன்னவளை போய்க்கை வளைக்கிரங்கி நிற்பாரும்
தாளழகைக் கண்டு தலைநாணி நிற்பாரும்
தோளழகைக் கண்டு துடிதுடித்து நிற்பாரும்
சீருலவப் பொங்குந் திருவடிவைப் பார்க்க வென்றே
காரிகையார் கண்ணைக் கடன்வாங்கிக் கொள்வாரும்
மாலைக் குழல்சரிய வச்சிரப்பொற் கொப்பசைய
ஒலைக் குழையாடி ஒடிவந்து பார்ப்பாரும்
செல்லுலவு செந்தூள் திரளால் தெரியாமல்
மெல்ல விழிமேல் விரலடுக்கிப் பார்ப்பாரும்
வண்டணுகாச் செவ்வாய் மலரவிழுந் தாமரைபோல்
கண்டமட மங்கையர்கள் கண்குளிரப் பார்த்து நிற்பார்**

*இந்நிலையில் மணமகன் மணவறைக்கு வந்துவிட்டார். கற்பூர ஆரத்தி முடிந்தது. பங்கயப் பூந்தாள் நடக்க பாவாடை இடப்பட்டு அதிலே மணமகன் நடந்து வந்து அரியாசனத்தில் அமர்ந்தார். அவரது பாதங்களை பன்னீரால் கழுவி, பீதாம் பரத்தால் துடைத்தனர். மணமகளுக்கு மஞ்சன நந்நீராட்டி, பூம்பட்டும் சட்டையும் உடுத்தி, வகைவகையான அணிமணிகளை அணிவித்தனர். மணவினைகள் தொடர்கின்றன. சுற்றமும் நட்பும், வேதியரும் காதியரும் வந்திருந்து இறைவனை புகழ இஸ்லாமிய திருமணப் பதிவு முடிவடைகிறது அந்த களரியில் கலந்து கொண்ட அனைவருக்கும் தாம்பூலத்துடன் சவ்வாதும், புனுகும், சந்தனமும் வழங்கப்படுகிறது.*

*பொன்னுக்கு அலங்காரம், பொன்னினால் செய்தது போன்ற மங்கை நல்லாளை அழைத்து வந்து மணமகனுக்கு வலமாக வைத்தனர். அதுவரை மணமகனது அழகில் அகமகிழ்ந்திருந்த மின்னிடையார் இப்பொழுது இருவரையும் பார்த்து இறும்பூது எய்துகின்றனர்.*

**"பெண்ணழகைப் பாரும் பெருவிரலைப் பாருமிரு**
**கண்ணழகைப் பாருமிரு கையழகைப் பாருமென்பார்**
**பெண்பெற்ற பேறும் பெருமான் றனைக் காணக்**
**கண்பெற்ற பேறுமின்று கண்டோம் எனமகிழ்வார்**
**திருமானைக் காணவரு சிந்தை களிகூரப்**
**பெருமானைக் காண நல்ல பேறு பெற்றோ மென்பாரும்**
**காதழகு மூக்கழகுங் கண்ணழகும் வெண்ணகையும்**
**சீதமணி வாயழகுஞ் செங்கமலங் காணுமென்பார்**
**கந்தரமுந் தோளழகுங் கையழகு மெய்யழகும்**
**சுந்தரமும் வேறுவுவமை சொல்லவரி தென்றுரைப்பார்**
**மின்னழகு மின்னை விரும்புந் துரைப்பெருமான்**
**தன்னழகைப்**
**பாருஞ் சமானஞ் சமானமென்பார்**
**கன்னி யழகுங் கணவரழ கும்பார்க்கப்**
**பின்னு மிருநாட்டம் பெற்றிலோம் நாமென்பார்.....**

இவ்விதம் களிப்பெய்திய கற்புடை மகளிர் மணமக்களை "செல்வம் தழைப்பீர் சிறப்பாக வாழ்ந்திருப்பீர்" என வாழ்த்தி குளவையிடுகின்றனர். தமிழ்நாட்டு மரபை ஒட்டி மணமகனும், மணமகளுக்கு தமது கையால் மங்கல நாண் பூட்டுகிறார். பல்லாங்குழி முதல் தந்தச் சிவிகை ஈறாக பல்வேறு பொருள் வரிசைகள் வழங்கப்பட்டன.

"பொன்னுமணியும் பொருந்துதல்போ லேபொருந்தி
எந்நிலமுந் தான்வாழ எப்போதும் வாழ்ந்திருப்பீர்!
குன்றில் விளக்காய்க் குலவிளக்காய் ஒங்கிநிலை
நின்ற பெரும்புவிமேல் நீடுழி வாழ்ந்திருப்பீர்!
என புலவரும் மணமக்களை வாழ்த்தி
இந்த இலக்கிய வாழ்த்தை முடிக்கிறார்.

சங்க இலக்கியங்களின் சாயலில் கலிங்கத்துப்பரணி, முத்தொள்ளாயிரம் ஆகியவைகளின் கருத்தையும் அழகையும் நினைவூட்டும் சிறந்த இலக்கியமாக இந்த வாழ்த்து திகழுவதுடன் முந்தைய தமிழ்ச் சமுதாயத்தில் நிலவிய பழக்கவழக்கங்கள், வணிகத் தொடர்புகள், அணிமணிகள், வீட்டுப்பொருட்கள், வெடி வாணங்கள், போர்க்கருவிகள் போன்றவைகளின் விவரங்களை வழங்குகின்ற கருவூலமாகவும் உள்ளது. ஆங்காங்கு கண்ணிகளில் அரபிச்சொற்கள் தமிழ்ச்சொற்களாக உருப்பெற்று ஒலிக்கின்றன. நூலாசிரியர் கீழக்கரையில் வாழ்ந்தவர் ஆதலின் இஸ்லாமிய வழக்கில் உள்ள வட்டாரச் சொற்களும் விரவி வந்துள்ளன. பொதுவாக இந்த வாழ்த்து சிற்றிலக்கியமாக மட்டுமன்றி, மொழிஇயல், வரலாறு, கலைகள் பற்றிய ஆய்வாளர்களுக்கு அரும் விருந்தாக உதவும் அரிய கையேடாகவும் விளங்கி வருகிறது.

இந்த நூலினைப்போன்றே வள்ளல் சீதக்காதி மரைக்காயரது பண்புகளையும், புகழ்ச்செய்திகளையும் தெரிவிக்கும் இன்னொரு நூல் சீதக்காதி மரைக்காயர் மீதான கோவை நூலாகும். துரதிரஷ்டவசமாக இந்த நூலின் படிகள் தமிழ் மக்களுக்கு இதுவரை கிடைக்கப்பெறவில்லை. ஆனால்

வள்ளல் காலத்தில் நடந்ததான செஞ்சிக்கோட்டைப் போரைத் தொடர்ந்து எழுதப்பட்ட மற்றொரு நூல்தான் சீதக்காதி நொண்டி நாடகமாகும்.

இந்த நாடகத்தின் முக்கிய பாத்திரமான மதுரை ஒடுங்காப்புலி என்ற கள்ளன் செஞ்சிக்கோட்டைக்குச் சென்று அங்குள்ள ஆற்காடு நவாபின் பாசறையிலிருந்து குதிரை ஒன்றை கவர்ந்த பொழுது பிடிக்கப்பட்டு ஒரு கையும், ஒரு காலும் வெட்டப்பட்டு வேதனையுற்ற நிலையில் தற்செயலாக அங்கு சென்ற கீழக்கரை சீதக்காதி மரைக்காயரின் முகவர் மாமு நெய்னாப் பிள்ளையின் அனுதாபத்திற்கு ஆளாகி அவரது உதவியுடன் செஞ்சியிலிருந்து கீழக்கரை வந்ததாகவும், அங்கு சீதக்காதி மரைக்காயரது அன்பையும், அனுதாபத்தையும் பெற்று இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பாவிடம் கலிமாச் சொல்லி இஸ்லாத்தை ஏற்று மக்கா சென்று இறையருளால் வெட்டப்பட்ட கையும் காலும் வளரப்பெற்று இறைவனுக்கு நன்றி செலுத்துவதாக இந்த நாடகத்தின் போக்கு அமைந்துள்ளது.

இந்த நாடகத்தைப் புனைந்த ஆசிரியர் பெயர் தெரியவில்லை. என்றாலும் அவர் அளித்துள்ள இரண்டு செய்திகள் மிகவும் பயனுள்ளவையாக உள்ளன. முதலாவதாக பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் பெரும்பாலான ஊர்களை நினைக்கும் தரை வழிப் பாதைகள் இல்லாத பொழுது செஞ்சிக்கோட்டையிலிருந்து கீழக்கரைக்கு உள்ள பாதை எந்த ஊர்களின் வழியாகச் சென்றது என்பதை ஆசிரியர் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

செஞ்சிக் கோட்டையிலிருந்து வாலிகண்டபுரம், அரியலூர், புதுக்கோட்டை, திருமெய்யம், மணமேல்குடி, தொண்டி, திருப்பாலைக்குடி, வாடி, தேவிப்பட்டினம், இராமநாதபுரம், சக்கரக்கோட்டை கண்மாய், உப்பளம், மோர்க்குளம், பாலையாறு, மணவச்சேரி, சிங்காரத்தோப்பு வழியாக கீழக்கரைக்கு அந்தப் பாதை வந்தடைந்ததாகத் தெரிகிறது.

இன்னொரு செய்தி. இராமநாதபுரம் கிழவன் ரெகுநாத சேதுபதிக்கும், வள்ளல் சீதக்காதி மரைக்காயருக்கும் அன்னியோன்யமான தொடர்பு இருந்ததை உறுதிப்படுத்தும் வகையில் மரைக்காயருக்கு இராமநாதபுரம் கோட்டைக்குள் ஒரு மாளிகை இருந்தது என்ற புதிய தகவலும் இந்த நூலில் இடம்பெற்றுள்ளது.

இந்த இலக்கியத்தின் கதாபாத்திரமாகிய நொண்டி பாடும் சந்தப்பாடல்கள், அவனது பெயருக்கு ஏற்றவாறு விட்டு இசைப்பனவாக உள்ளன. அந்தப் பாடல்களில் இனிய சந்தச்சுவையும், எளிதில் விளங்கும் சொற்களும் நாடகம் முழுவதும் விரவி நின்று கேட்பவர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுவனவாக அமைந்துள்ளன. இந்த நூல் முழுமையும் மனோரம்யமான ராகங்களான பூபாளம், நாதநாமக்கிரியை, மோகனம் போன்ற பண்களால் புனையப்பட்டு ஆதி தாளத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த நாடகத்தில் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகளைப்பற்றிய குறிப்புகளும் இந்த நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியத்தில் மிகவும் அரிதாகக் கிடைத்துள்ள சில நொண்டி நாடகங்களில் இந்த நாடகம் காலத்தால் முற்பட்டவையாகவும், வரலாற்றுச் செய்திகளையும் கொண்ட தொன்மையான நாடகமாகவும் கருதப்படுகிறது.

இந்த நூல்கள் இயற்றப்பட்டதின் வழியாக சீதக்காதி மரைக்காயரது இலக்கிய ஆசை ஓரளவு நிறைவு பெற்றது என்றே கூறலாம்.

# 6

# ஆசானிடம் அளவற்ற மரியாதை

சீதக்காதி மரைக்காயரது வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர் கீழக்கரை புனித இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்கள் ஆவார். செல்வச்சீமானான சீதக்காதி மரைக்காயர் தமது வாணிப அனுபவங்களுக்கு அப்பாற்பட்ட அரசியல் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டு சேதுநாட்டுக்கு மிகச்சிறந்த நிர்வாகத்தை வழங்குவதற்கு சேதுபதி மன்னருக்கு உதவியாக இருந்தார் என்பதை முன்னர் பார்த்தோம். அடுத்து அவரது இளமைப் பருவம் முதல் நன்கு அறிந்திருந்த இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களுடன் மரைக்காயருக்கு நெருக்கமான தொடர்புகள் ஏற்பட்டது பெரும்பாலும் கி.பி. 1680 க்கு பிற்பட்டதாகக் கொள்ளலாம். தமிழக இஸ்லாமியரது வரலாற்றிலே ஆன்மீகத்தை வளர்த்த அரும்பெரும் பணியாளர்களில் இமாம் அவர்கள் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளார். கி.பி. பனிரெண்டாம் நூற்றாண்டு இறுதியில் பாண்டிய நாட்டில் தீன் நெறியைப் பரப்பியவர் சுல்தான் செய்யது இப்ராகீம் ஷஹீது வலி அவர்கள். அடுத்து திருச்சியில் அடக்கம்

பெற்றுள்ள தப்லே ஆலம் என்று புகழப்பட்ட பாபா நத்ஹர் வலி அவர்களும், அடுத்து பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் சோழ மண்டலம் முழுவதும் தீனின் சுடர் ஒளிபடச் செய்தவர் நாகூர் ஆண்டகை எனப் போற்றப்படும் சாகுல் ஹமீது வலி அவர்களாகும். இவர்களை அடுத்து தமிழகத்தில் புதிதாக இஸ்லாத்தை ஏற்றுள்ள ஆயிரக்கணக்கான முஸ்லிம்களுக்கு சரியான ஆன்மீக விளக்கத்தை அளித்து மக்களை ஏகத்தவ நெறியில் இனணந்து வாழ வழிகாட்டியவர்கள் இமாம் ஆவார். இந்த காரணத்தினால்தான் இமாம் அவர்களது காலத்தவரான சீறாப்புராணம் பாடிய உமறுப்புலவர் அவர்கள்


நம்மை யாளுடையோன் வேத நபிதிரு வசனந்தீனோர்
சம்மதித் திடப்பா றெல்லாந் தழைக்கவே விளக்கஞ் செய்தோ
ரிம்மையு மறுமை யும்பே றிலங்கிய சதக்கத் துல்லா.
செம்மல் ரடியி ரண்டுஞ் சிந்தையி லிருத்தி னேனே

என அப்பா அவர்களது பெருமை துலங்கப்பாடியுள்ளார்.

இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பா என பிற்காலத்தில் போற்றப்பட்ட பெருமைக்குரிய புனிதர் கி.பி.1632 ல் காயல்பட்டினத்தில் பிறந்தார். அவரது பெற்றோர்கள் சுலைமான் ஆலிம் - பாத்திமா பீவி ஆவர். மிகச்சிறந்த மார்க்க மேதைகளின் வழியில் வந்த சுலைமான் ஆலிமின் ஐந்து புதல்வர்களின் சதக்கத்துல்லாஹ் அப்பாவும் ஒருவர். இளமைப்பருவத்தில் சோழ மண்டலத்திலுள்ள அதிராம்பட்டினத்தில் மிகச்சிறந்த மார்க்க மேதையாக விளங்கிய சின்ன நெய்னா லெப்பை ஆலிம் என்ற சான்றோரிடம் குரான் ஷரீபையும், ஹதீஸையும், பிக்ஹீகளையும் ஐயமறக்கற்றுணர்ந்தார். ஆன்மீகத்தில் முழுமையான தேர்ச்சி பெற்ற சதக்கத் துல்லாஹ் ஆலிம் அவர்கள் பல ஆண்டுகளுக்குப் பிறகு காயல்பட்டினம் திரும்பினார். அங்குள்ள இஸ்லாமிய மக்கள் ஒரு மார்க்க அறிஞருக்கு அளிக்க வேண்டிய மதிப்பையும், மரியாதையையும் மறந்து அவரை நடத்தியது அவருக்கு மிகுந்த சஞ்சலத்தை ஏற்படுத்தியது.

இந்த சமயத்தில் அதிராம்பட்டினத்தில் அவருக்கு ஆசானாக அமைந்து மார்க்கக் கல்வி புகட்டிய சின்ன நெய்னா ஆலிம் அவர்கள் கீழக்கரையில் வந்து தங்கியிருந்து (பழைய குத்பாப் பள்ளித்தெரு) மார்க்கக் கல்வியைப் பயிற்றுவிப்பதற்கு மத்ரஸா ஒன்றை நிறுவி இருந்தார். சில ஆண்டுகளில் ஆலிம் அவர்கள் காலமாகி விட்டதால் மக்களுக்கு மார்க்க போதனை அளிக்கத்தக்க ஆலிம் ஒருவர் இல்லாத நிலையை அறிந்து சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்கள் கீழக்கரைக்கு கி.பி. 1654 - ல் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது மனித நடமாட்டம் மிகுதியாக இல்லாத (இன்றைய) ஒடக்கரைப் பள்ளிக்கு மேற்கே ஓர் மத்ரஸாவினை சதக்கத்துல்லாஹ் ஆலிம் அவர்கள் நிறுவி தங்களது மார்க்கப் பணியைத் தொடர்ந்தார்கள். இமாம் அவர்களது எடுப்பான தோற்றம், கனிவான பேச்சு, பயான் சொல்லும் பாங்கு, தம்மிடம் வரும் முஸ்லிம்களிடம் நடந்து கொள்ளும் பண்பு ஆகியவைகளினால் இமாம் அவர்களுக்கு மிக விரைவிலேயே கீழக்கரை மக்களது ஆதரவும் செல்வாக்கும் தொடர்ந்தது.

இத்தகைய இணையற்ற இமாம் அவர்களது தொடர்பு வள்ளல் சீதக்காதி மரைக்காயர் அவர்களுக்கு ஏற்பட்டது அவரது வாழக்கையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. பல நாடுகளிலிருந்தும் வாணிபத்தின் வழியாக சம்பாதித்த ஹலாலான திரவியத்தை இறைவனது பாதையில் செலவழிப்பதற்கும் ஏழை எளிய மக்களது துயர் துடைப்பதற்கான துணிவினை அவருக்கு ஊட்டியது இமாம் அவர்களது போதனையாகும். செல்வத்தின் பயன் ஈதல் என்ற உயர்ந்த கொள்கையைக் கொண்டு வாழ்நாளெல்லாம் மிகச்சிறந்த வள்ளலாக மரைக்காயர் அவர்கள் வாழ்ந்ததற்கு இமாம் அவர்களது வழிகாட்டுதலே காரணமாகும் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சேது நாட்டின் வட கோடியில் வாழ்ந்த வள்ளல் பாரிக்குப்பிறகு சேதுநாட்டின் தென்கோடியில் வாழ்ந்த ஒரே வள்ளல் சீதக்காதி மரைக்காயர் மட்டுமே.



வள்ளல் சீதக்காதி மரைக்காயரது ஆன்மீக ஆசானாகிய மாதிஹுர்ரஸூல் இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பா (வலி) அவர்களது புனித அடக்கவிடம்

மேலும் மிகச்சிறந்த வள்ளலாகவும், வணிகராகவும் வாழ்ந்த அவர் ஒரு நல்ல ஆன்மீகவாதியாகவும் இஸ்லாமியராகவும் வாழ்வதற்கான வழிமுறைகளை இமாம் அவர்கள் வகுத்துக் கொடுத்ததின் காரணமாக மரைக்காயர் அவர்கள் திருமறையின் கட்டளைகளையும், இறைத்தூதரின் வழிமுறைகளையும் பற்றி சிறப்பாக ஒழுகி வந்தார் என்பதை உமர்கத்தாப் புலவரது கவிதை வரிகள் சான்றாக அமைந்துள்ளன.

"மனந்தனிலுஞ் சொல்லுகின்ற வாய்மையிலும் நித்திரைசெயும்
அனந்தரிலும் அல்லாவி னாணைமற வாதபிரான்"

"செப்பரிய ஹஜ்ஜு வண்மை செய்கின்ற சக்காத்து
முப்பது நோன்பும் முடிக்குந் தபோதனன்காண்"

"அய்யா நபில் நோன்பும் ஆசுறா நன்னோன்பும்
நையாமல் ஆசார நன்னோன்பு நோற்பவன் காண்"

இறைவனது கட்டளையான திருமறையை தவறாது பற்றி நடந்து வந்ததின் காரணமாக வள்ளலது இதயத்தில் இறை உணர்வு விஞ்சி நின்று எந்நேரமும் இறைவனை மறக்காதவர் என்பதைக் குறிக்க புலவர் அவர்கள் சீதக்காதி மரைக்காயரை உறக்கத்திலும் கூட உயர்ந்தோனாகிய இறைவனது கட்டளையை மறக்காதவர் என்பதை மேலே கண்ட கவிதை வரிகளில் மிகவும் அருமையாக புலவர் அமைத்துக் காட்டியுள்ளார்.

இமாம் அவர்களது அணுக்கத்தொண்டராகிவிட்ட சீமான் சீதக்காதி மரைக்காயருக்கு ஒரு புதுவிதமான சிந்தனை துளிர்த்தது. வாணிபச்செழுமையின் காரணமாக கீழக்கரையில் முஸ்லிம் மக்களது பெருக்கம் அதிகமாகிக் கொண்டிருந்ததால் அவர்களுக்குப் பயன்படும் வகையில் இறையில்லம் ஒன்றை நிர்மாணித்தால் என்ன என்பதுதான் அந்த சிந்தனை. செல்வத்தில் செம்மாந்து நின்ற சீதக்காதி மரைக்காயருக்கு இத்தகைய பள்ளியை அமைப்பது என்பது சிரமமான செயல்

அல்ல. ஆனால் ஏற்கனவே கீழக்கரையின் மின்காரத்தெருவில் பள்ளி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு மக்களது பயன்பாட்டில் இருந்து வந்ததும், அதில் போதுமான இடவசதி இல்லை எனபதையும் மரைக்காயர் அவர்கள் நன்கு அறிந்திருந்தார். என்றாலும் புதிய பள்ளியை அமைப்பதின் மூலம் அந்தப்பகுதி மக்களது வெறுப்பிற்கு ஆளாகிவிடுவோமோ என்ற ஐயமும் அவருக்கு இருந்தது. அத்துடன் ஒரே ஊரில் இரு பள்ளிகளில் வழமையான ஐந்து வேளைத் தொழுகையுடன் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையையும் நடத்துவது மார்க்க நெறிமுறைகளுக்கு உகந்ததாக இருக்குமா எனபதும் அவரது சிந்தனையில் சலனத்தை ஏற்படுத்திக் கொண்டே இருந்து வந்தது.

ஒரு நாள் தமது ஐயப்பாடுகளை தமது ஆன்மீக ஆசானாகிய சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களிடமே தெரிவித்து தக்க ஆலோசனை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். இமாம் அவர்களும் மரைக்காயரது ஐயப்பாடுகளை தெளிவு படுத்தியதுடன் புதிய பள்ளியை அமைப்பது பற்றிய ஆலோசனைகளையும் வழங்கினார்கள். அவைகளின் மறு உருவாக எழுந்ததுதான் இன்றைய ஜாமிஆமஸ்ஜித் என வழங்கப்படும் சீதக்காதி மரைக்காயரது தொழுகைப் பள்ளியாகும். தமிழகத்தில் இஸ்லாமியரது வழிபாட்டுக்கென கட்டப்பட்ட மிகச்சிறந்த கட்டுமானம் இந்தப்பள்ளியாகும். திராவிட இஸ்லாமிய கட்டுமானக் கலைக்கு கண் கூடான எடுத்துக்காட்டாக விளங்கும் இந்தப்பள்ளியை கட்டுவதற்கு சீதக்காதி மரைக்காயர் அவர்கள் பல மாதங்கள் சிந்தித்து திட்டமிட்டு அமைக்க, கால்கோள் இட்டார்கள். முழுவதும் மலைகளில் இருந்து வெட்டப்பட்டு எடுத்து வரப்பட்ட பாறாங்கற்களைக் கொண்டு வரிசை வரிசையான வெளித்தூண்கள், அழகிய ஒன்பது வாயில்கள், விசாலமான தொழுகைக் கூடத்தில் நெடிது உயர்ந்த வேலைப்பாடுகளைக் கொண்ட 36 (முப்பத்து ஆறு) தூண்கள். இமாம் தொழுகை நடத்தவும் பயான் செய்யவும் முறையே அழகிய கிப்லாவும்

மிம்பரும், மற்றும் பள்ளிவாசலின் மேற்புறத்தில் மன்னர்களது மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள சாளரங்களைப் போன்று வேலைப்பாடு அமைந்த முழுவதும் கல்லிலாலான இரு சாளரங்கள், தொழுகைக் கூடத்தின் மேற்கு சுவற்றின் அகல் விளக்குகளை வைப்பதற்கு ஏற்ற நான்கு தேவ மாடங்கள். மற்றும் இந்த இனிய இறையில்லத்தைச் சுற்றி நான்கு புறமும் 110 கல்தூண்களுடன் விதானத்தைக் கொண்ட சுற்றுப்பாதை, அதன் வடக்குப்புற நுழைவாயிலின் மேற்பகுதியில் அழகிய வேலைப்பாடுகளுடன் சிறந்த கட்டுமானம். இவைகளைக் கொண்ட சிற்பக்கருவூலம்தான் அந்த இறை இல்லம்.



# 7

# பெரியதம்பி மரைக்காயரும், ஆங்கிலேயரும்

சங்க காலத்தில் மேலை நாடுகளுடன் வாணிபத்தில் தமிழர்கள் தொடர்பு கொண்டிருந்ததைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம். இதைப் போலவே கீழை நாடுகளுடன் முதல் முறையாக சோழர்கள் காலத்தில் கடல் வாணிபத்தொடர்பு ஏற்பட்டதை வரலாறு. விளம்புகிறது. ராஜேந்திர சோழன் கங்கைச் சமவெளியையும், கடாரத்தையும் வென்றதை அடுத்து ஸ்ரீ விஜயா அரசையும் (இன்றைய மலேசியா, சிங்கப்பூர், இந்தோனிசிய நாடுகளின் பகுதிகள்) சோழப் பேரரசின் பகுதியாக இணையச் செய்தார். மேலும் ஸ்ரீ விஜய நாட்டு மன்னர் சைலேந்திர வர்மனது மகளையும் திருமணம் செய்து கொண்டதற்கு காரணமாக கீழை நாடுகளுக்கும், தமிழ்நாட்டுக்கும் அரசியல் தொடர்புகளுடன் வாணிபத் தொடர்புகளும் ஏற்பட்டன. தமிழகத்திலிருந்து வாணிபச் சாத்துக்களும், மணிக்கிராமத்தினரும் அங்கு சென்றனர். மலேசியா நாட்டு "தகோபர்" என்ற இடத்திலுள்ள தமிழ்க் கல்வெட்டுக்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

சோழப்பேரரசு நிலைகுலைந்த பின்னர் கி.பி.பதினான்காம் நூற்றாண்டு முதல் தமிழக அரசியலில் புதிய திருப்பத்தை ஏற்படுத்திய விஜய நகரப்பேரரசு கடல் வாணிப முயற்ச்சிகளுக்கு எவ்வித ஆக்கமும் அளிக்கவில்லை. இதனால் தமிழர்களது கடல் வாணிபம் வளர்ச்சி பெறவில்லை.

இந்நிலையில் ஐரோப்பாக்கண்டத்தில் பதினெட்டாம் நூற்றாண்டில் தொழில் புரட்சி ஏற்படுவதற்கு முன்னர் அந்தக் கண்டத்தில் உள்ள சில நாட்டு மக்கள் கீழை நாடுகளுடன் வியாபாரத் தொடர்புகள் ஏற்படுத்தும் முயற்சியில் நமது நாட்டிற்கும் வந்தனர். அவர்களில் முதலாவதாக வந்த போர்ச்சுக்கீசியர் தமிழர்களின் அடியொற்றி கீழை நாடுகளுடனான கடல் வாணிபத்தை பெருக்கியதுடன் இலங்கையையும் இந்தோனேசியத் தீவுகளையும் தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தனர். இலங்கை யாழ்ப்பாணத்தில் அவர்களது ஆளுநர் ஒருவரும், இந்தோனேசிய ஜாவா தீவில் பட்டேரியா நகரில் அவர்களது கவர்னர் ஜெனரலும் கி.பி.1658 வரை தலைமையகங்களைக் கொண்டிருந்தனர்.

அடுத்து தமிழகத்துடன் வாணிபத் தொடர்புகளைக் கொள்வதற்காக வந்தவர்கள் டச்சு, ஆங்கில, பிரெஞ்சு நாட்டவர்கள். இப்பொழுது வள்ளல் சீதக்காதியுடன் வாணிபத்தொடர்பு கொண்டிருந்த ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியாரைப் பற்றிப் பார்ப்போம். கிரேட் பிரிட்டன் என்றும் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து என்றும் வகைப்படுத்தி கூறப்படும் நாட்டைச் சேர்ந்தவர்களும் ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டவர்களும் ஆங்கிலேயர் எனப்பட்டனர். இவர்களில் பிரதானமான வணிகர்கள் கூட்டாக ஒரு அமைப்பை ஏற்படுத்தி ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியார் என்ற பெயரில் கிழக்காசிய நாடுகளில் வாணிகம் மேற்கொள்வதற்கு ஆயத்தமானார்கள். அப்பொழுது இங்கிலாந்து நாட்டின் பேரரசியாக விளங்கிய

முதலாவது எலிசபெத் மகாராணியாரிடம் பெற்ற பரிந்துரைக் கடிதத்துடன் சர் தாமஸ் மன்ரோ என்பவர் கி.பி.1600-ல் இந்தியப் பேரரசரான ஜஹாங்கீரை ஆக்ரா நகரில் சந்தித்தார். அவரும் ஆங்கில பிரதிநிதியின் வேண்டுகோளுக்கிணங்கி குஜராத் மாநிலத்தில் சூரத்திலும், வங்கமாநிலத்தில் கல்கத்தாவிலும் பண்டகசாலைகளை அமைத்து அவர்கள் வணிகம் தொடங்குவதற்கு அனுமதி வழங்கினார்.

நாளடைவில் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியார் தங்களது வாணிபத்தை வலுப்படுத்திக் கொண்டதுடன் தங்களது நடவடிக்கைகளையும் விரிவு படுத்தினர். ஆந்திரக் கடற்கரையோர நகரான மசூலிப்பட்டினத்திலும் பின்னர் தமிழ்நாட்டில் சென்னைப்பட்டினத்திலும் பண்டகசாலை அமைத்தனர். சந்திரகிரி மன்னரிடம் இருந்து கிரயம் பெற்ற சென்னை கடற்கரையில் ஒரு பண்டகசாலை பாதுகாப்பு நிலைகளுடன் கி.பி 1639 ல் நிர்மாணித்தனர். இங்கு அந்த குழுவின் நிர்வாகியாக பணியேற்று வணிகத் தொடர்புகளை மேற் கொண்டிருந்தவர் கவர்னர் என அழைக்கப்பட்டார்.

தொடக்கத்தில் இந்த வியாபாரக்குழுவினர் வாசனைப் பொருட்களை குறிப்பாக மிளகை கொள்முதல் செய்து இங்கிலாந்து நாட்டுக்கு அனுப்பி வைக்கும் பணியில் ஈடுபட்டனர். மின்சாரமும் குளு குளு வசதியும் கண்டுபிடிக்கப்படாத அந்தக் காலத்தில் வெளிநாட்டவரின் பிரதான உணவான இறைச்சியை பதப்படுத்தி வைத்துக்கொள்வதற்கு மிளகு மிகவும் இன்றியமையாததாக இருந்தது. இந்த வணிகத்தில் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனிக்கு நல்ல வருவாயும் கிடைத்தது.

அப்பொழுது தமிழகம் முழுவதும் மிளகு விற்பனையின் ஏகபோக ஆதிக்கம் பெற்றிருந்தவர் கீழக்கரையைச் சேர்ந்த நமது வணிக வேந்தர் ஷெய்கு அப்துல் காதர் என்ற பெரியதம்பி மரைக்காயர் ஆவார். இவரை ஆங்கிலேயரின் ஆவணங்களில் பெரியதம்பி மர்கான் என குறிப்பிடப்பட்டுள்ளது.

*கி.பி. 1686க்கும் 1690க்கும் இடைப்பட்ட ஐந்தாண்டு காலத்தில் மரைக்காயரைப் பற்றிய ஒரு சில ஆவணங்கள் மட்டுமே சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு ஆவணக்காப்பகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.*

*இவைகளில் 4.1.1687 நாளிட்ட பெரிய தம்பி மரைக்காயர் அவர்கள் புனித ஜார்ஜ் கோட்டை கவர்னர் கைபோர்டு அவர்களுக்கு பாரசீக மொழியில் எழுதிய கடிதத்தின் ஆங்கில மொழி நகலின் தமிழாக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

நான் நலமுடன் உள்ளேன். இதே போன்று நலம் அமைய விரும்புகின்றேன். உரிய நேரத்தில் தாங்கள் எழுதிய கடிதம் கிடைக்கப்பெற்று மட்டற்ற மகிழ்ச்சி கொண்டேன்.

மிளகைப் பொறுத்தமட்டில், நான் சென்னைக்கு கொண்டு வந்தால் நீங்கள் ஒரு கண்டி அளவுக்கு 15 பகோடா பணம் தர வேண்டும். உங்கள் ஆட்கள் இங்கு வந்து எடுத்துக் கொண்டால் கண்டிக்கு 12 பகோடாக்கள் தர வேண்டும்.

நமது முன்னைய ஒப்பந்தத்திற்கு இணங்க கூடுதல் விலைக்கு மிளகை வாங்கி, நான் பயன்பெறும் வகையில் மேலும் அதிகமான விலைக்கு உங்களுக்கு விற்க மனம் இடந்தரவில்லை. ஏனெனில் நான் தங்களின் நன்மதிப்பையும், அன்பையும் அரவணைப்பையும் என்றும் விரும்புகிறேன்.

எனக்குச் சொந்தமான கிடங்கு உள்ள பார்வதிசேகரநல்லூரில் வாரம் ஒருமுறை நடக்கும் பெரிய சந்தையில் 150 முதல் 200 பொதிமாடுகள் சுமை மிளகு வணிகத்திற்கு வருகிறது. ஒவ்வொரு பொதியும் ஏறத்தாழ 5 பண மதிப்புடையது. 150 பெரிய பணத்திற்கு 20 சுமை வாங்கலாம். இது 30 சக்கரம் அல்லது 16 பகோடாக்களுக்கு சமமானது. 2 பொதி மாட்டுச்சுமை மிளகை தேவிபட்டினத்திற்கோ அல்லது கிழக்கரை துறைமுகத்திற்கோ அனுப்பச் செலவு $1\frac{1}{3}$ கண்டிக்குரிய தொகையாகும். உங்களின் திருப்திக்கு ஏற்றாற்போல் மிளகின் எடையும், தரமும்

அமைந்திருக்கும். வேண்டுமானால் உங்கள் ஆட்களை அனுப்பி சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

நான் ஏற்கனவே தெரிவித்தபடி கொள்முதலுக்கும், ஏற்றுமதிச் செலவுக்கும் நீங்கள் முன்பணமாக பாதி தொகையைக் கொடுத்தால் மீதித் தொகையை நான் போட்டு வாங்கி அனுப்பி வைக்கின்றேன். பாதிப் பாரத்தை உங்கள் கப்பல்களிலும் மீதிப் பாரத்தை எனது கப்பல்களிலும் அனுப்பி வைக்கின்றேன் அல்லது முழுவதையும் என்னுடைய கப்பல்களிலேயே வழக்கமான கட்டணத்தில் அனுப்பி வைக்கவா? இந்த மிளகு பாரத்தை அனுப்பி வைப்பது உங்களின் நட்பையும் நல்லெண்ணத்தையும் பெறுவதற்காகவே தவிர வேறு எதற்குமில்லை. மற்றைய வணிகர்கள் இந்த வணிகத்தைப் பணம் பெறுவதற்காக மட்டுமே செய்வார்கள். நானோ உங்கள் நட்பையே பெரிதாக எண்ணுகிறேன். இந்தப் பகுதியில் தற்போது குழப்பம் நிலவுகிறது. குழப்பம் தீர்ந்தபின் என்னுடைய கப்பல்களில் சரக்கு அதிகம் அனுப்புகிறேன். இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

இங்கு நிலவி வரும் குழப்ப நிலையிலும், மழையில்லா வறட்சியாலும் நெல்லின் விலை அதிகமாக இருப்பதால், நான் 30 அல்லது 40 படகுகளை நெல்லைப் பெறுவதற்கு அனுப்பி வைக்கின்றேன். அரிசியைப் பெற்று வந்து உங்களிடம் ஒப்படைக்க இரண்டு கப்பல்களை அனுப்பி உள்ளேன்.

*இந்தக் கடிதத்திலிருந்து சீதக்காதி மரைக்காயர் ஆங்கிலேயருக்கு கீழக்கரை துறைமுகம் வழியாகவும், தேவிபட்டிணம் துறைமுகம் வழியாகவும் சென்னைப்பட்டினத்திற்கு அனுப்பப்படும் ஒரு கண்டி மிளகின் அடக்க விலை என்ன ஆகும் என்பதையும் அதைப்போன்றே சென்னையில் வழங்குவதற்கு அனுப்பப்படும் அரிசிக்கு அடக்க விலை எவ்வளவு ஆகும் என்பதையும் குறிப்பிட்டு எழுதி இருக்கிறார். இந்தக் கடிதத்திலிருந்து வெளிநாட்டவரான ஆங்கிலேயர் அப்பொழுது தமிழகத்தில் வாணிபத் துறையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாது விளங்கியவர் சீதக்காதி மரைக்காயர் ஒருவரே என்பது புலனாகிறது.*

இன்னொரு ஆவணத்தின்படி தேவரது (இராமநாதபுரம் சேதுபதி மன்னரது) நம்பிக்கைக்குரிய சிறந்த மனிதர் சீதக்காதி மரைக்காயர் என்பதும் தெரியவருகிறது. மேலும் மற்றொரு ஆவணத்தின்படி இலங்கையில் அப்பொழுது அரசர் விமலதர்ம சூரியாவினால் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஏழு ஆங்கிலேயரை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்படுவதற்கு பெரியதம்பி மரைக்காயரது செல்வாக்கு பயன்பட்டது என்பதும் தெரிய வருகிறது. கீழை நாடுகளில் கடல் வாணிபத்தில் நமது நாட்டினர் வேறுயாரும் பெற்றிராத வாணிபச்செழுமையையும் அதன் காரணமாக இலங்கை அரசர் போன்றவர்களிடம் பெரியதம்பி மரைக்காயரது எழுத்திற்கும், பேச்சிற்கும் நல்ல செல்வாக்கு இருந்தது என்பதும் புலனாகிறது.

இத்தகைய அரிய உதவியைச் செய்து ஆங்கிலேயரின் மானத்தைக் காப்பாற்றிய வணிகவேந்தர் பெரியதம்பி மரைக்காயரது காலத்தால் செய்த நன்றிக்கடப்பாடாக ஆங்கிலேயர் தமிழ் நாட்டிலிருந்து இங்கிலாந்து நாட்டின் லண்டன் துறைமுகத்தில் கரை இறங்கும் பெரியதம்பி மரைக்காயரது மிளகுப்பொதிகளுக்கு தீர்வையினின்றும் விலக்கு அளித்து உதவினர் என்பதும் தெரியவருகிறது. என்ன காரணத்தினாலோ ஆங்கிலேயருக்கும் பெரியதம்பி மரைக்காயருக்கும் கி.பி.1690க்குப் பிறகு வணிகத்தொடர்புகள் தொடர்ந்ததைக் குறிக்கும் ஆவணங்கள் சென்னையிலுள்ள தமிழ்நாடுஅரசு ஆவணக்காப்பகத்தில் இல்லை. இதனால் அப்பொழுது ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் மிளகு வர்த்தகத்தில் மட்டும் ஈடுபட்டிருத்தல் வேண்டும் என்பதும் பெரியதம்பி மரைக்காயரது மிளகுடன் ஏனைய வாசனைப்பொருள்கள் மற்றும் கைத்தறித்துணிகள், முத்து, மணிகள் போன்ற அனைத்து பொருள்களின் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்ததால் மிளகு வியாபாரத்தை ஆங்கிலேயருடன் தொடர்ந்து இலாபகரமான முறையில் நடத்த இயலாது போயிற்று என்பதும் ஊகிக்கப்படுகிறது.

8

# டச்சுக்காரர்கள் மோதல்

நெதர்லாந்து நாட்டில் இருந்து வந்த டச்சுக்காரர்கள் அவர்களது கிழக்கிந்தியக்கம்பெனி என்ற அமைப்பில் வியாபாரங்களை மேற்கொண்டனர். இந்த அமைப்பின் பெயர் **வி.ஓ.சி. (V.O.C)** என்பதாகும். இவர்கள் புலிகாட் என வழங்கப்படும் பவள வேற்க்காட்டிலும் பின்னர் இன்று பரங்கிப்பேட்டை என வழங்கப்படும் போர்ட்டோ நோவோவிலும் தங்களது பண்டக சாலைகளை அமைத்து வாணிபத்தை தொடக்கினர். இவர்கள் இந்தப் பகுதியிலும், இலங்கையிலும் ஏறத்தாழ ஒரு நூறு ஆண்டுகளுக்கும் மேலாக வாணிபம் நடத்தியதுடன் இலங்கையின் வட பகுதியான யாழ்ப்பாணத்தையும், கன்னியாகுமரி முதல் இராமேஸ்வரம் வரையிலான கடற்பகுதியையும் தங்களது ஆதிக்கத்தில் வைத்திருந்த போர்ச்சுக்கீசியரை கி.பி.1658-ல் தோற்கடித்த பின்னர் இந்த இரு பகுதிகளின் வாணிபம் முழுவதையும் போர்ச்சுக்கீசியருக்குப் பதிலாக அவர்களே நடத்தி வந்தனர்.

இவர்கள் கி.பி.1605-ல் முதன்முறையாக தமிழக கடற்கரைக்கு வந்தபொழுது இங்கு

போர்ச்சுக்கீசியர்கள் கடல் வாணிபத்தில் மிகுந்த செல்வாக்குடன் இருந்தனர். பலவேற்காடு என்றும் புலிக்காட் என்றும் வழங்கப்பட்ட பவழவேற்காட்டில் தங்களது வியாபார பண்டகசாலைகளை அமைத்த பொழுது போர்ச்சுக்கீசியருக்கும் இவர்களுக்கும் பலத்த மோதல்கள் ஏற்பட்டன. அப்பொழுது சென்னைப்பட்டணத்தை அடுத்த மைலாப்பூரிலும், சாந்தோமிலும், நாகப்பட்டிணத்திலும் வலுவாக நிலைபெற்றிருந்த போர்ச்சுக்கீசியர் இவர்களை அந்தப்பகுதியிலிருந்து விரட்டியடிப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டனர். இதற்கென போர்ச்சுக்கல் நாட்டிலிருந்து மூன்று முறை கப்பல் படைகள் சாந்தோமுக்கு அனுப்பப்பட்டு புலிக்காட்டிலும், நாகப்பட்டினத்திலும் இருந்த டச்சுக்காரர்களுடன் கடல் போர்கள் நடைபெற்றன. போர்ச்சுக்கீசியருக்கு ஆதரவாக அப்பொழுது செயல்பட்ட விஜயநகர பேரரசரையும், தஞ்சாவூர் அரசரையும் அவர்களது ஆதரவை விலக்கிக்கொள்ள செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொண்டனர். போர்ச்சுக்கீசியர்களது தளபதிகள் சுயநலமிக்கவர்களாகவும், அவர்களே தனியாக இந்தப்பகுதிகளில் சொந்த வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாலும் தீவிரமான முறையில் டச்சுக்காரர்களது வாணிகத்தொடர்புகளை அவர்களால் அழிக்க முடியவில்லை. இதன் காரணமாக டச்சுக்காரர்கள் போர்ச்சுக்கீசியர்களை தமிழகக் கடற்கரையில் மட்டுமல்லாமல் இலங்கையிலிருந்து போர்ச்சுக்கீசியர்களை இறுதியாக வெற்றி கொண்டனர்.

டச்சுக்காரர்கள் வடக்கே புலிக்காட், நாகப்பட்டிணம், ஆகிய சோழ மண்டலக் கரையிலிருந்து நகர்ந்து தெற்கே மன்னார் வளைகுடாப்பகுதிக்கும் வந்து சேர்ந்தனர். இந்தப் பகுதி மறவர்சீமை மன்னரான சேதுபதிக்கும், மதுரை நாயக்க மன்னருக்கும் உரிமை உடையதாக இருந்தது. சேதுபதிகளது நாட்டைப்பொறுத்த வரையில் அங்குள்ள விளைபொருளான நெல்லின் பல வகைகளும் குறிப்பாக

<u>சம்பா வகையில்</u>

1. செம்மிளகி.
2. சரபளி சம்பா
3. ஈக்கி சம்பா
4. கருடன் சம்பா
5. சிறு மணியன்
6. வரகு சம்பா
7. வெள்ள கட்டை
8. தில்லை நாயகம்
9. வெள்ளை மிளகி
10. பல்லுக்கு இனியான்
11. காவேரி சம்பா
12. கொம்பன் சம்பா
13. சீரக சம்பா
14. வரகு சிறுகுறுவை
15. பூம்பாளை

<u>அறுபதாம் கோடை</u>

1. இரங்கல்
2. .அரிகிரவி
3. அரியான்
4. குலவாழை
5. குற்றாலம்
6. சித்திரை கார்
7. குழியடிச்சான்
8. கறுத்த கார்
9. உருண்டைகார்
10. கல் மணல்வாரி
11. மணல் வாரி
12. வெள்ளை மணல் வாரி

13. பனை முகரி
14. முருங்கன்
15. நரியான்
16. வெள்ளை குருவை
17. கருப்பு குருவை
18. மொட்டை குருவை
19. செங்கணி குருவை

ஆகியவைகள் அவர்களைக் கவர்ந்தன. இவைகளில் சில வகை நெல்லை கொள்முதல் செய்து யாழ்ப்பாணத்திற்கும், காரைக்காலுக்கும் கொண்டு சென்று விற்பனை செய்வதில் ஈடுபட்டிருந்தனர். இது தவிர இந்தப் பகுதியில் உற்பத்தியாகும் கைத்தறி துணிகளிலும், கடல் முத்துக்களிலும் ஏகபோக உரிமை பெறுவதற்கு துடித்துக்கொண்டிருந்தனர். ஆனால் இவர்களுக்கு போட்டியாக பெரியதம்பிமரைக்காயர் இருந்து வருவதும், அவருக்கு இந்த நாட்டு சேதுபதி மன்னரது பேராதரவு இருப்பதும் பெரும் தடையாக இருந்தது. இதனால் இராமநாதபுரம் பகுதியிலிருந்து அரிசி கொள்முதல் செய்வதற்காக திம்மராசா என்ற இலங்கை வணிகரை இராமநாதபுரம் சேதுபதி மன்னரது அவைக்கு தூது அனுப்பினர். பலன் ஏதும் ஏற்படாததால் பெரியதம்பி மரைக்காயர் மீது மிகுந்த ஆத்திரம் கொண்டனர். தங்களது கவர்னர் ஜெனரலுக்கு (படேவியாவிலுள்ள) அனுப்பிய கடிதத்தில் அவர்களது கோபமும், ஆத்திரமும் கொப்பளிக்கின்றது.

இவ்வளவு மோசமான வகையில் பெரியதம்பி மரைக்காயரது குடும்பத்திரைப்பற்றி குறிப்பிடுவதிலிருந்து டச்சுக்காரர்களுக்கு பெரியதம்பி மரைக்காயர் மீது எவ்வளவு பகைமை இருந்தது என்பது புலனாகின்றது. கி.பி 1685-ல் பெரியதம்பி மரைக்காயர் சேது மன்னரது ரீஜன்ட் (அரசுப்பிரதிநிதி) என்ற வகையில் திருநெல்வேலிச்சீமை பகுதியில் சேதுபதி மன்னருக்கு வந்து சேர வேண்டிய தீர்வைப் பணத்தை அங்குள்ள பரவர்கள் செலுத்த மறுத்தபொழுது

பெரியதம்பி மரைக்காயர் தமது முழு அதிகாரத்தைப் பயன்படுத்தி வன்முறையில் அவர்களிடமிருந்து பணத்தை வசூலித்தது டச்சுக்காரர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. கி.பி.1698 வரை புதிதாக கிறிஸ்தவ மதத்தை ஏற்ற இந்த பரவ மக்கள் போர்ச்சுக்கீசியரது குடிமக்களாகவே இருந்து வந்தனர். டச்சுக்காரர்கள் போர்ச்சுக்கிசியரிடமிருந்து அந்தப்பகுதியின் ஆதிக்கத்தை மேற்கொண்டபொழுது பரவரின மக்களது புதிய காவலராக மாறினர். அத்துடன் அந்தப்பரவ இனமக்களின் ஆதரவில்தான் அவர்களது முத்து வாணிபம் அமைந்திருந்தது. ஆதலால் அவர்களது விசுவாசமான ஊழியர்களிடம் பெரியதம்பி மரைக்காயர் வன்முறையைப் பயன்படுத்தியது அவர்களுக்கு மேலும் வெறுப்பை வளர்த்தது. மற்றொரு நிகழ்ச்சியும் டச்சுக்காரர்களுக்கு மிகுந்த வேதனையை அளித்தது. தேவிப்பட்டினத்தில் குடியிருந்த " கார்னலீஸ் ஹீ " என்ற டச்சுக்காரரை பெரியதம்பி மரைக்காயரது ஆட்கள் அடித்துத் துன்புறுத்தியதனால் அவருக்கு மரணம் ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சிகள் பெரியதம்பி மரைக்காயருடனான வாணிபப் போட்டியை விட கூடுதலான வகையில் மரைக்காயர் மீது அருவருப்பும், சினமும் அடையச்செய்தது. இதற்கிடையில் கி.பி.1690-ல் சேதுபதி மன்னருடன் இரண்டாவது ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்ட போது பெரியதம்பி மரைக்காயரையும் அவரது குடும்பத்தைாரையும் மன்னார் வளைகுடாவின் வடக்குப் பகுதியான "POINT CALIMERE " ல் இருந்து தெற்கே கன்னியாகுமரி வரையான கடல் எல்லை வரை சேதுநாட்டு அரசியல் விவகாரங்களிலிருந்து அகற்ற வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

டச்சுக்காரர்களது இந்த வேண்டுகோள் அந்த உடன்பாட்டில் காகித அளவிலேயே இருந்துவிட்டது. சேதுபதி மன்னர் வழக்கம்போல் பெரியதம்பி மரைக்காயருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உரிய மதிப்பை வழங்கி வந்தார். இந்த ஒப்பந்தத்தின் முடிவு சேதுபதி மன்னருக்கு மட்டும் சாதகமாக இருந்தது. ஏனெனில் சேதுநாட்டுக்கு குதிரை வாங்கச்சென்ற


கப்பல் ஒன்றை அரபிக் கடலிலும், வங்கக் கடலில் சங்குகளை ஏற்றிச் சென்ற மற்றொரு கப்பலையும் வங்கக் கடலில் வழிமறித்து நிறுத்தி இருந்ததை டச்சுக்காரர்கள் அனுமதி அளித்து அவைகளின் பயணம்தொடருமாறு செய்தனர்.

பெரிய தம்பிமரைக்காயர் மன்னார் வளைகுடாவின் இலங்கைப் பகுதியில் சங்குகள் எடுப்பதற்காக டச்சுக்காரர்களிடம் முறையாக அவருக்கு உரிமம் வழங்க வேண்டுமெனக் கோரியிருந்தார். சந்தேகக் கண்களுடன் இந்தக் கோரிக்கையை அணுகிய டச்சுக்காரர்கள் அவருக்கு உரிமம் வழங்க மறுத்துவிட்டனர். இதனைப்பற்றி பட்டேவியாவிலுள்ள தமது கவர்னர் ஜெனரலுக்கு யாழ்ப்பாண பிரதிநிதி அனுப்பிய அறிக்கையில் பெரியதம்பி மரைக்காயர் முத்துக் குளிப்பதைக் குறியாகக் கொண்டு சங்கு எடுக்க மறைமுகமாக உரிமம் கோரினார் என குறிப்பிட்டிருந்தார். மேலும் இது போலவே மற்றொரு நிகழ்ச்சி டச்சுக்காரருக்கு பெரியதம்பி மரைக்காயர் மீதான சந்தேகம் குறையவில்லை என்பதை காட்டுகிறது. இலங்கை கல்பிட்டியாவில் மிகுதியாக விளையும் கொட்டைப் பாக்குகள் அனைத்தையும் கொள்முதல் செய்து கொள்வதாகக் கோரிய சீதக்காதி மரைக்காயரது விண்ணப்பத்தையும் டச்சுக்காரர்கள் புறக்கணித்து விட்டனர். கி.பி.1694-ல் பெரியதம்பி மரைக்காயர் கீழக்கரையில் வாணிபப்பிரிவு ஒன்றினை தொடங்கி தங்களது வியாபாரத்தை தொடருமாறு டச்சுக்காரர்களை வேண்டிக்கொண்டார். வாணிபம் சிறப்பாக நடைபெறுவதற்கு வாணிபத்தில் போட்டி அவசியம் என்பதை உணர்ந்திருந்ததால் மரைக்காயர் இந்த வேண்டுகோளை விடுத்திருந்தார்.

வழக்கம்போல டச்சுக்காரர்கள் இந்தக் கோரிக்கையை மறுத்ததுடன் பட்டேவியாவிலுள்ள தங்களது தலைமைக்கு அனுப்பிய அறிக்கையில், பெரியதம்பி மரைக்காயரை எந்த வகையிலும் நம்பமுடியாது என்றும் அதனால் கம்பெனியின் வியாபாரத்திற்கும், மதிப்பிற்கும் பெரும் இழப்பீடுதான் ஏற்படும்

எனக் குறிப்பிட்டிருந்தனர். இதிலிருந்து டச்சுக்காரர்களுக்கு பெரியதம்பி மரைக்காயர் மீது ஏற்பட்டுள்ள அவநம்பிக்கை ஒருபுறம் இருக்க அவரது வாணிபச் செல்வாக்கும், பெருந்தன்மையும் எந்த அளவில் இருந்தது என்பதை ஊகிப்பதற்கு உதவுகிறது. டச்சுக்காரர்களது பிரதான இலக்கு சேதுபதி சீமையில் வாணிபம் நடத்துவது என்பதை மட்டுமல்லாமல் சேதுபதி சீமையின் பிரதான துறைமுகமான பாம்பன் கால்வாயை அவர்களது ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் இதனை அவர்கள் சேதுபதி மன்னருடன் கி.பி.1685, கி.பி.1690-ல் ஏற்படுத்திக் கொண்ட இரண்டு உடன்பாடுகளின் மறைமுகப் பொருளாக அமைந்திருந்தது. தெற்கே கன்னியாகுமரி, தூத்துக்குடி பகுதிகளிலிருந்து வடக்கே நாகப்பட்டினம், சென்னைப்பட்டினம் ஆகிய துறை முகங்களுக்கு சரக்குகளை ஏற்றிச் செல்லும் நடுத்தர வகையான கப்பல்களும், தோணிகளும் பாம்பன் கால்வாய் வழியாக செல்வதினால் பயண காலமும், பயணத்திற்கான செலவும் மிகவும் குறைவு ஆவதை உணர்ந்திருந்த ஆங்கில பிரெஞ்ச் வணிகர்கள் தங்களது கப்பல்களை கொழும்பு துறைமுகத்துக்கும், பின்னர் இலங்கை நாட்டை சுற்றிக் கொண்டு நாகப்பட்டினம், சென்னை செல்வதற்கு பதிலாக குறுக்கு வழியாக பாம்பன் கால்வாய் வழியாக செல்வதையே விரும்பினர்.

பாம்பன் கால்வாயை சேதுபதி மன்னரது அனுமதி பெற்று தங்களது கட்டுப்பாட்டிற்கென வைத்துக் கொண்டால், சுங்கம், தீர்வை ஆகிய வகைகளில் தங்களுக்கு பெருத்த ஆதாயம் ஏற்படும் என்பதும் அதை விட பிற நாட்டவர்களது வாணிபப் பொருட்கள் அவைகள் போய்ச் சேருமிடம் ஆகிய வாணிபம் சம்பந்தப்பட்ட விவரங்களை தெரிந்து கொண்டு தங்களது வாணிகத்தைப் பெருக்குவதற்கும் பாம்பன் கால்வாயின் பிடிப்பு மிகவும் உதவும் என்பது அவர்களது கணிப்பு.




டச்சுக்கிழக்கிந்தியக் கம்பெனியார் தங்களது பொறுப்பில் வைத்துக் கொள்வதற்கு ஆசைப்பட்ட பாம்பன் கால்வாய் பகுதியைக் காட்டும் வரைபடம்.

இந்த பேராசைமிக்க பெருந்திட்டத்திற்கு பெரும் தடையாக இருந்தவர் பெரியதம்பி மரைக்காயர் ஆவார் சேதுபதி மன்னருக்கு பாம்பன் கால்வாயை டச்சுக்காரர்களுக்கு குத்தகைக்கு விடுவதன் முலம் சேதுநாட்டு அரசுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்பது உண்மை என்றாலும், தம்மைப் போன்ற மரைக்காயர்களது வாணிப மரக்கலங்களும், சேதுபதி மன்னரது கப்பல்களும் பாம்பன் கால்வாயை கடந்து செல்வதில் டச்சுக்காரர்களது அனுமதியைப் பெற வேண்டியிருக்கும் என்ற பரிதாப நிலையை சேதுபதி மன்னருக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லி டச்சுக்காரர்களது பேராசைக்கு பெரியதம்பி மரைக்காயர் முற்றுப்புள்ளி வைத்தார். இத்தகைய ஆலோசனையுடன் செயல் பட்ட சேதுபதி மன்னர், டச்சுக்காரர்கள் எதிர்பார்த்தபடி அவர்களுக்கு ஏமாற்றுக்காரராகவே தென்பட்டார்.

இதற்கிடையில் 1697-ல் காயல்பட்டினம் கடலில் முத்தக்குளிப்பதற்கான ஏற்பாடுகளை டச்சுக்காரர்கள் தொடங்கினர். பொதுவாக முத்துக்குளித்தல் ஒவ்வொரு ஆண்டும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் தொடங்கினாலும் அதற்கு முன்னதாகவே பிப்ரவரி, மார்ச் மாதத்தில் முத்துச் சிப்பிகள் கடலுக்கு அடியில் வளர்ச்சி பற்றியும் ஆய்வு செய்வது வழக்கம் காயல்பட்டினம் மணியக்காரரான "பொலிக்காசு மரைக்காயர்" என்பவர் இவ்விதம் முத்துச்சிப்பிகளின் ஆய்விற்குச் சென்றுவிட்டு பரவர் குடியிருப்பு வழியாக பல்லக்கில் சென்ற பொழுது அவரை மேலும் செல்லவிடாமல் தடுத்தும், பல்லக்கை உடைத்தும் அவரை பரவர்கள் திருப்பி அனுப்பினர். இந்த விவரம் அறிந்து ஆத்திரமடைந்த மரைக்காயர்கள் பரவர் குடியிருப்பைத் தாக்கி, அவர்களது குடிசைகளை தீயிட்டு பெருத்த சேதத்தை ஏற்படுத்தினர். இந்தக் தாக்குதலில் கலந்து கொண்ட இரு தரப்பினருக்கும் பலத்த உயிர்ச்சேதமும் ஏற்பட்டது. இன்னொரு சம்பவத்தில் அந்த ஆண்டு நடைபெறும் முத்துச்சலாபம் பற்றிய அறிவிப்பினை

செய்வதற்காக இராமநாதபுரம் கடற்கரைப் பகுதிக்குச் சென்ற டச்சுக்காரரது லஸ்கர் ஒருவரை வேதாளை கிராமத்திலுள்ள மணியக்காரரும், முஸ்லிம்களும் துன்புறுத்தி விரட்டி அடித்தனர். தேவிப்பட்டினம் கிராமத்திற்கும் சென்ற லஸ்கருக்கும் இதே நிலைஏற்பட்டது. இவைகளைப்பற்றியும், இவைகளுக்கெல்லாம் காரணமானவர் பெரியதம்பி மரைக்காயர் என்பதையும் ஒரு புகாரில் குறிப்பிட்டு அதனை டச்சுக்காரர்கள் சேதுபதி மன்னரிடம் நேரில் சமர்ப்பித்தனர். விசாரித்த மன்னர் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு பெரியதம்பி மரைக்காயர் பொறுப்பானவர் அல்ல என்பதை தீர்மானித்ததுடன் வேதாளை, தேவிப்பட்டினம் மணியக்காரர்களுக்கு மட்டும் அபராதம் விதித்து ஆணையிட்டார். டச்சுக்காரர்கள் எதிர்பார்த்தபடி பெரியதம்பி மரைக்காயரை குற்றவாளியாக சேதுபதி மன்னர் கொள்ளவில்லை. தொடர்ந்து பெரிய தம்பி மரைக்காயருக்கு சேதுபதி மன்னரிடம் மதிப்பும், மரியாதையும் குறையவில்லை.

அடுத்து **1698** மார்ச் மாதத்தில் காயல்பட்டினத்திற்கு வடக்கே கடலில் முத்துக்குளிப்பதற்கு டச்சுக்காரர்கள் ஏற்பாடு செய்தனர். முத்துக்குளிக்க வருபவர்களிடம் தீர்வை வசூலிப்பதற்காக மதுரை மன்னர் சுங்கச்சாவடி ஒன்றை ஏற்படுத்தி இருந்தார். இந்த முத்துக்குளிப்பு பற்றி கடற்கரை ஊர்கள் பலவற்றுக்கும் டச்சுக்காரர்கள் அறிவிப்பு கொடுத்திருந்தும் போதுமான அளவில் முத்துக்குளிப்பதற்கு முத்து வணிகர்களும் முத்துக்குளிப்பவர்களும் முன்வரவில்லை. இதற்கு முக்கியமான காரணம் முத்துக்குளிப்பவர்களுக்கு சம்பந்தப்பட்ட முத்து வணிகர்கள் வழக்கம் போல் முன்பணம் கொடுக்க மறுத்து விட்டனர். இதற்கும் பெரியதம்பி மரைக்காயர்தான் காரணம் என டச்சுக்காரர்கள் நம்பினர்.

மேலும் டச்சுக்காரர்கள் இந்த முத்துச்சிலாபத்தில் **1305** முத்துக் குளிப்பவர்களைக் கொண்ட **172** தோணிகள் மட்டுமே கலந்து கொள்ளும் படி செய்தனர். இதில் காயல்பட்டிணத்திலிருந்தோ, கீழக்கரையிலிருந்தோ, தோணிகள்

கலந்து கொள்ளவில்லை. இதனால் டச்சுக்காரர்களுக்கு இந்த முத்துக் குளிப்பு ஒரு பெரிய இழப்பீடாக அமைந்தது. இதனால் வேதனையும் சஞ்சலமும் கொண்ட டச்சுக்காரர்கள் அதிகாரப்பூர்வமான ஒரு தூதுக்குழுவினரை சேதுபதி மன்னரிடம் அனுப்பினர். அவர்கள் சேதுபதி மன்னரைச் சந்தித்து கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டனர்

1. சமீபத்தில் நடந்து முடிந்த முத்துச்சிலாபத்தில் பெரியதம்பி மரைக்காயரது சூழ்ச்சியினால் முத்துச்சிலாபம் தோல்வியில் முடிந்ததாகவும் அதனால் ஏற்பட்ட இழப்பு 24,000 பரோதாஸ் (டச்சு நாணயம்) பணம் அவர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

2. இந்த இழப்பிற்கு காரணமாக அமைந்த பெரிய. தம்பி மரைக்காயரையும் அவரது மூன்று கூட்டாளிகளான மரைக்காயர்களையும் தண்டித்தல் வேண்டும்.

3. இந்த முத்துக் குளிப்பில் தோல்வி ஏற்படும் வண்ணம் பிரச்சாரம் செய்ததுடன் வேதாளைக்குச் சென்ற டச்சு ஊழியர்களை மிகவும் அவமதிப்புடன் நடத்திய வேதாளை மரைக்காயர், மணியக்காரரையும் மற்றும் வேதாளையைச் சேர்ந்த மியான் நெய்னார், குட்டி நெய்னார் என்பவர்களையும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக ஒப்படைத்தல் வேண்டும்

டச்சு தூதுக்குழுவின் இந்தக் கோரிக்கைகளை கேட்டு அறிந்த சேதுபதி மன்னர் அவர்களுக்கு புத்திமதி சொல்லி திருப்பி அனுப்பிவிட்டார். மறப்பதும் ,மன்னிப்பதுமாகிய கிறிஸ்தவ சமய அடிப்படையில் அமைந்த மன்னரது முடிவு டச்சுக்காரர்களுக்கு ஆறுதலை அளிக்கவில்லை.

டச்சுக்காரர்களுக்கும், சீதக்காதி மரைக்காயருக்கும் இடையே பகைமை தொடர்ந்தது.

# 9


# சீதக்காதி மரைக்காயரது மறைவு

சீதக்காதி மரைக்காயரது வாணிப வளர்ச்சிக்கு பல வகைகளிலும் முட்டுக்கட்டையாக டச்சுக்காரர்கள் இருந்து வந்தனர். சேதுபதி மன்னருக்கும் மரைக்காயருக்கும் இடையே உள்ள தனிப்பட்ட உறவுகளைக்கூட பாதிக்கும் வகையில் அவர்களது போக்கும், சேதுபதி மன்னருக்கு அடிக்கடி கொடுத்து வந்த புகார்களும் மரைக்காயருக்கு மிகுந்த மன உலைச்சளை ஏற்படுத்தி வந்தன. என்றாலும் சேதுபதி மனனர் மரைக்காயரிடம் கொண்டிருந்த பற்றும் பாசமும் குறையவே இல்லை. டச்சுக்காரர்களது நடவடிக்கைகளில் வெறுப்பும், விரக்தியும் நீடித்து வந்தன. கீழக்கரையில் சேதுபதி மன்னருக்காக கட்டப்பெற்ற மூன்று கப்பல்களில் ஒன்றில் பொருத்து -வதற்காக பீரங்கி ஒன்றினை சீதக்காதி மரைக்காயரது ஒன்று விட்ட சகோதரர் மாமு நெய்னார் மரைக்காயர் டச்சுக்காரர்களிடம் கோரிய பொழுது அதனை வழங்க அவர்கள் அப்பட்டமாக மறுத்து விட்டனர். நமது நாட்டின் மண்ணில் இருந்து கொண்டே வியாபாரம்


மூலம் பொருள் ஈட்ட வந்த இந்த அன்னியர்களுக்கு எவ்வளவு மன அழுத்தம்! அவர்கள் எதிர்பார்த்த சலுகைகள் சேதுபதி மன்னரிடமிருந்து கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காகவும் சீதக்காதி மரைக்காயரது ஆலோசனையை அப்படியே மன்னர் ஏற்றுவந்ததாலும் அவர்கள் மன்னரது நலன்களுக்கு எதிராக நடந்து வந்தனர்.

இவர்களை எவ்விதம் வாணிபத்துறையில் சமாளிப்பது என்பதைப் பற்றிய சிந்தனை எப்பொழுதும் சீதக்காதி மரைக்காயருக்கு இருந்து கொண்டே வந்தது. மேலும் அவர்கள் சென்ற இரண்டு ஆண்டுகளில் காயல்பட்டினம், தூத்துக்குடி கடல்பகுதியில் முத்துச்சிலாபங்கள் நடப்பதற்கு அவர்கள் மேற்கொண்ட செயல் முறைகளும் குறிப்பாக சேதுநாட்டு மரைக்காயர்களிடமும் முத்துக் குளிக்கச் சென்ற மீனவர்களிடமும் டச்சுக்காரர்கள் நடந்து கொண்ட ஒருதலைப்பட்சமான முறைகளும் சீதக்காதி மரைக்காயருக்கு மிகுந்த மன அழுத்தத்தை ஏற்படுத்திக் கொண்டே இருந்தன. இதனால் நாளடைவில் மரைக்காயர் அவர்கள் திடீரென உடல் நலம் குன்றிக் காணப்பட்டார். மருத்துவர்களால் இன்ன நோய் என கண்டுபிடிக்க இயலாத நிலையில் அவர்களது மருந்துகளும் பயனற்ற நிலையில் சீதக்காதி மரைக்காயர் இவ்வுலகை விட்டு மறைந்தார்

ஏழை எளியவர்க்கு அன்னதாதாவாகவும், கற்றோர்க்கும் மற்றோர்க்கும் வேண்டியன விழைந்து அளிக்கும் கற்பகதருவாகவும் புலவர் பெருமக்களது வறுமையையும், சிறுமையையும் களைந்து தமிழுக்கு தொண்டு செய்யத்தூண்டும் நம்பிக்கை நட்சத்திரமாகவும் சேதுபதி மன்னருக்கு வலது கரமாக அமைந்து சேது நாட்டு நலனுக்கு உழைத்த நல்லவரும், கீழை நாடுகளுக்கு கப்பல்கள் ஓட்டிய முதல் தமிழருமான வள்ளல் சீதக்காதி மரைக்காயர் மறைந்து விட்டார்.



கீழக்கரை ஜாமிஆ மஸ்ஜித் வளாகத்தில் அமைந்துள்ள வள்ளல் சீதக்காதி அவர்களது நினைவைப் போற்றும் மண்டபம்.



வள்ளல் சீதக்காதி மரைக்காயர் அவர்கள் நிர்மாணித்த கீழக்கரை ஜாமிஆ மஸ்ஜித் வளாகத்தில் அமைந்துள்ள வள்ளல் அவர்களது அடக்கவிடம்.

தனது இறுதிக்காலத்திலும் இறைவனிடம் இறைஞ்சி, இல்லை என்று சொல்லாத இதயம் வேண்டுமென கேட்டுக் கொண்ட இதிகாச வீரன் கர்ணனுக்குப் பிறகு கலியுகத்தில் காலமெல்லாம் கொடைகள் வழங்கி வாழ்ந்த கோமகன் சீதக்காதி மரைக்காயர் மறைந்து விட்டார்.

தனது மறைவிற்குப் பிறகும் தன்னை நாடி வரும் புலவருக்கும், மற்றவருக்கும் பொன்னும் பொருளும் வழங்கி உதவ வேண்டும் என்ற பெரும் திட்டத்தை ஏற்படுத்திய ஒரே வள்ளல் " செத்தும் கொடுத்த " சீதக்காதி மறைந்து விட்டார்.

இவரது மறைவு கேட்டு மன்னரும், மக்களும் அடைந்த வருத்தத்தை வெளியிடக்கூடிய வார்த்தைகளே இல்லை என்று சொல்லலாம். கீழக்கரை மட்டுமல்லாமல் சேதுநாடு முழுவதுமே பகலவன் இல்லாத பகல் போல் காட்சியளித்தது. போக்குவரத்துவசதியில்லாத அந்தக்காலத்தில் வள்ளலது மறைவுச் செய்தியை அறிந்த மக்கள் நாள்தோறும் கீழக்கரைக்கு வந்து தங்களது வேதனையையும் வருத்தத்தையும் வெளியிட்டு புலம்பி அழுது சென்றனர்.

தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த படிக்காசுத் தம்பிரான் ஒருநாள் கீழக்கரைக்கு வந்தார். ஏற்கனவே சீதக்காதி மரைக்காயரை சந்தித்து அளவளாவி அவரிடமிருந்து பொன்னும் பொருளும் பெற்றுச் சென்றவர். இப்பொழுது அவர் கேட்ட செய்தியை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இவ்வளவு சிறிய வயதில் வள்ளல் சீதக்காதி மரைக்காயர் மறைந்து விடுவார் என யார்தான் எதிர்பார்த்திருக்க முடியும் வள்ளல் மீது புலவர் கொண்டிருந்த பற்றும் மரியாதையும் பாடல்களாக அவரது வாயிலிருந்து வெளிவந்தன. தேவேந்திரனையொத்த அழகனாகிய வள்ளளது பேரும் புகழும் மண்ணிலுமட்டுமல்லாமல் விண்ணிலும் பரந்து விளங்குகின்றது. கமல மலர் போன்ற அழகிய வதனத்தையுடைய கண்ணுக்கினிய வள்ளல் மண்ணுக்குள்ளே புகுந்துவிட்டாரே! இது என்ன கொடுமை?

*இந்த உலகில் மறந்தும் கூட அரைக்காசு பணத்தை தானம் செய்யாத மனிதர்கள் இருந்தும் என்ன இல்லாமல் போனால் என்ன வள்ளல் சீதக்காதி மீண்டும் இவ்வுலகிற்கு வந்து பிறப்பாரா அவர் வந்து பிறக்காவிட்டால் புலவர்களது பாடலைக்கேட்டு பரிசு வழங்ககூடியவர் யார் இருக்கிறார்? புலவர்களுக்கு பிழைப்பே இல்லை புகழ் மிகுந்த சீதக்காதி மறைந்து விட்டார். மண்ணுக்குள் இதனால் புலவர்களது வாயிலும் மண் விழுந்து விட்டது. இனி எப்படி வாழ்வது?*

*புலவர் பெருமான் படிக்காசு தம்பிரானது வேதனை நிறைந்த எண்ணங்களின் வெளிப்பாடே மேலே கண்டவையாகும், அவைகள் புகுந்து புனைந்துள்ள புலவரது பாடல்களை இப்பொழுது கீழே பார்ப்போம்.*


“விண்ணுக்கு மண்ணுக்கும் பேராய்
விளங்குதே வேந்தரனெனுங்
கண்ணுக் கினிய துரைசீதக்
காதி கமல நிகர்
பண்ணுக்கிசைந்த வதனசந்த்
ரோதய சாமியிந்த
மண்ணுக்கு ளேயொலித் தான்புல
வோர்முகம் வாடியதே”

“மறந்தா கிலுமரைக் காசுங்
கொடாமட மாந்தர் மண்மேல்
இறந்தாவதென்ன இருந்தாவ
தென்ன இறந்து விண் போய்ச்
சிறந்தாளுங் காயற் றுரைசீதக்
காதி திரும்பிவந்து
பிறந்தா லொழியப் புலவோர்
தமக்குப் பிழைப்பில்லையே ”

" தேட்டாளன் காயற் றுரைசீதக்
காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கும் நாட்டிவைத்
தான்றமிழ் நாவலரை
ஒட்டாண்டி யாக்கி யவர்தம்
வாயி லொருபிடிமண்
போட்டான் அவனு மொளித்தான்
சமாதிக் குழிபுகுந்தே"

வேதனையின் வடிவாக வெளிப்பட்டுள்ள வார்த்தையின் முத்துக்காளாக இந்தப்பாடல்கள் அமைந்துள்ளன. வள்ளல் அவர்களிடம் சில பொழுது பழகிய ஓர் சைவத் துறவியின் உணர்வுகள் எப்படி இருக்கின்றன பார்த்தீர்களா! இதுபோல வள்ளல் அவர்களிடம் பல காலம் பழகியவர்கள், பாராட்டும் பரிசும் பெற்றவர்கள், வறுமை நீங்கப்பெற்று வள்ளலது உதவியினால் வாழ்க்கையில் உயர்ந்தவர்கள் இப்படியாக எத்துனையோ பேர்களது உணர்வுகளும் வேதனைகளும் எப்படி இருந்திருக்கும். சாதி சமயம் கடந்து தமிழால் பிணைக்கப்பட்ட இந்த அன்புள்ளங்களின் வேதனை எப்படி தீரும்?

கடைச்சங்க காலத்திற்குப்பிறகு தமிழகத்தில் தோன்றிய தனிப்பெரும் வள்ளல் சீதக்காதி மரைக்காயர் ஒருவரே. வாராது வந்த இந்த வள்ளலை தமிழ் உலகம் என்றென்றைக்கும் நன்றிக் கடப்பாட்டுடன் நெஞ்சில் வைத்து நினைவு கூறும் என்பதில் ஐயமில்லை. தமிழ் நிலைத்திருக்கும் வரை வள்ளலது கொடையும் பெயரும் நிலைத்திருக்கும்.



10

# சீதக்காதியின் குடும்பமும், காலமும்

வள்ளல் சீதக்காதியைப்பற்றி கிடைத்துள்ள செய்திகள் அனைத்தும் அவர் ஒரு சிறந்த கொடையாளி என்பதையும், தமிழ்ப்புலவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டவர் என்பதை மட்டுமே குறிப்பிடுகின்றன. அத்துடன் அவரது குடும்பத்தினரைப் பற்றியோ அவர் பிறந்த நாளையோ அல்லது மறைந்த நாளையோ குறிப்பிடுபவனாக இல்லை. இதற்கு முக்கியமான காரணம் வள்ளல் அவர்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்து மறைந்த கீழக்கரையிலேயே அவரைப்பற்றிய ஆவணங்களை பத்திரப்படுத்திவைக்க தவறியதே ஆகும். வள்ளல் சீதக்காதி அவர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபத்துறையில் மிகுதியாக ஈடுபட்டிருந்தார் என்பதை முன்னர் பார்த்தோம். அந்த வாணிப அமைப்பின் ஆவணங்களும், கடிதத்தொகுப்புகளும், பேரேடுகளும் கீழக்கரையிலிருந்த அந்த அமைப்பின் அலுவலகத்தில் இருந்திருக்கவேண்டும் ஆனால் முன்னூறு ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பொழுது அவைகள் இல்லை என்ற

சூழலில் அந்த ஆவணங்கள் எப்படி மறைந்தன என்பதை கற்பனை செய்து பார்ப்பது கூட இயலாததாக உள்ளது. கி.பி. 1914ல் ரஷ்ய நாட்டில் மக்கள்புரட்சி வெடித்த பொழுது செயின்ட் பீட்டர்ஸ் வர்க் என்ற ரஷ்ய நாட்டின் தலைநகரை பொடம் கின் என்ற கப்பலிலிருந்து மாலுமிகள் தாக்கியதன் நினைவாக அந்த முழுக்கப்பலை இன்னும் அப்படியே அந்த நாட்டில் ஓர் வரலாற்றுப் பெட்டகமாக பாதுகாத்து வருகின்றனர். இதைப் போலவே கி.பி. 17ஆம் நூற்றாண்டில் பல நாடுகளுக்கும் சென்று வந்த கப்பல் கொள்ளையன் பிரான்சிஸ் டிரேக் என்பவனது கடல் அனுபவ ஆவணங்களும், அவன் பயன்படுத்திய கப்பலின் மாதிரியும் லண்டனில் உள்ள பிரிட்டீஸ் மியூஸியத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இன்னும் இது போன்ற எத்தனையோ உதாரணங்கள் இங்கு குறிப்பிடலாம். ஆனால் இதன் திரண்ட கருத்து பழைய ஆவணங்களை மேலை நாட்டவர் மிகுந்த அக்கறையுடன் வரலாற்றுக்கு உதவும் விலைமதிப்பற்ற தொல்பொருளாக காத்து வருகின்றனர். வள்ளலைப்பற்றி அறியக்கூடிய செய்திகள் நமக்கு இராமநாதபுரம் சமஸ்தான ஆவணங்களும், டச்சு ஆவணங்களுமே ஆகும். இவைகள் ஓரளவுதான் வள்ளல் பற்றிய செய்திகளை வழங்குவதாக இருக்கின்றன. அவரைப்பற்றி இதுவரை வெளிவந்துள்ள சில நூல்களும் வள்ளலைப்பற்றிய சரியான தகவல்களை அளிக்காமல் சொந்தக்கற்பனைகளைக் கொண்ட செய்திகளை தருவதாக உள்ளன. குறிப்பாக வள்ளலது பெற்றோர்கள் பற்றிய செய்திகளில் அவர் கீழக்கரை மௌலா அலி என்பவருக்கும், பாத்திமா நாச்சியார் என்பவருக்கும் மகனாகப் பிறந்தவர் என்றும், இரண்டொரு நூல்களில் அவர் காயல்பட்டிணத்தில் பிறந்தவர் என்றும் தவறுதலாக வரைந்துள்ளன. இதற்கான ஆதாரங்களையும் அந்த நூல்களில் கொடுக்கப்படவில்லை.

சீதக்காதி மரைக்காயர் கீழக்கரையில் மிகச்சிறப்பாக வாழ்ந்த ஒரு வணிகரது குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதும்,

அவரது தந்தையார் பெரிய தம்பி மரைக்காயர் என்பது மட்டும் தெரிய வருகின்றது. இந்தச் செய்தியை உறுதிப்படுத்தும் வகையில் வள்ளலது திருமணத்தைப் பற்றி பாடிய எட்டையபுரம் உமர் கத்தாப் புலவர் தமது வாழ்த்தில்

"பிந்தாத செல்வம் பெரியதம்பி கண்மணியாய்
மந்தார தாருவென வந்த செய்தக் காதிமன்னன்"
கண்ணிஎண் 64

என சீதக்காதியின் தந்தை பெரியதம்பி எனக் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது. மேலும் இராமநாதபுரம் வட்டம் வேதாளை ஊரில் அடக்கம் பெற்றுள்ள சீதக்காதி மரைக்காயரது மூத்த சகோதரர் சேகு இப்ராஹிம் மரைக்காயரது அடக்கவிடத்தில் நடப்பட்டுள்ள மீஸான் கல்லில் சேகு இப்ராஹிம் மரைக்காயரது முந்தையோர் ஐவரது பெயர்கள் வரிசையாக குறிக்கப்பட்டுள்ளன. இந்த பட்டியலின்படியும் சேகு இப்ராஹிம் மரைக்காயரது தந்தை பெரியதம்பி என விளக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தியை கீழக்கரை நகர் நடுத்தெருவிலுள்ள சீதக்காதி வழியினர் ஒருவரிடம் இருந்து பெற்ற வம்சாவழிப்பட்டியலும் உறுதி செய்கின்றது. இந்தப்பட்டியலில் சீதக்காதி மரைக்காயரது தந்தை பெரிய தம்பி என்றும், அவர் உடன் பிறந்தவர்கள் மூத்தவர் சேகு இப்ராஹிம் மரைக்காயர், இளையவர் லெப்பை நெய்னார் மரைக்காயர் என்றும் தெரிவிக்கின்றது. மேலே கண்ட இந்த மூன்று ஆதாரங்களில் சீதக்காதியின் தாயார் பெயர் என்ன என்பது அறியத் தக்கதாக இல்லை.

மற்றும் சீதக்காதி மரைக்காயருடன் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகத்தில் போட்டியாளராக இருந்த டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியாரது ஆவணங்கள் சீதக்காதி மரைக்காயரது தந்தையாரைப் பற்றிய செய்திகளைத் தவறாகக் கொடுத்து விஷயத்தை மேலும் குழப்பமடையச் செய்வதாக உள்ளன. இந்த ஆவணங்களைப் பற்றி விமர்சனம் செய்துள்ள ஆய்வாளர் சஞ்சய் சுப்ரமணியன் என்பவர், பெரியதம்பி என்பது ஒரு தனிப்பட்ட மனிதரை மட்டும் குறிப்பிடுவதாக இல்லை என்றும்

கீழக்கரையிலுள்ள ஒரு குறிப்பட்ட வணிகக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு உரிய பட்டப்பெயர் என்றும் அந்தக் குடும்பத்திலுள்ள அனைவரையும் அந்தப்பெயர் குறிப்பிடுவதாக உள்ளது என்றும் வரைந்துள்ளார். மேலும் அவர் டச்சுக்காரர்களது ஆவணங்களின் படி கீழக்கரையில் பெரியதம்பி என்ற பெயருடன் மூவர் இருந்தனர் என்றும் அவர்களில் முதல்வர் கி.பி. 1682 முதல் கி.பி. 1698 வரை வாழந்த சேக் அப்துல் காதர் என்பவரையும் , இரண்டாமவர் கி.பி.1698 முதல் கி.பி.1707 வரை வாழ்ந்த அப்துல் காதர் என்றும், மூன்றாமவர் கி.பி.1715 வரை வாழ்ந்த அப்துல் காதர் மகன் என்றும் குறிப்பிட்டுள்ளார் . (இவரது பெயரையும் குறிப்பிடவில்லை)

இதிலிருந்து பெரியதம்பி எனக் குறிப்பிடப்பட்டுள்ள சீதக்காதி மரைக்காயர் யார் என்பதை அறிய முடியாதபடி ஒரு குழப்பத்தை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த மூவரில் மூத்தவர் பெயர் ஷேக் (செய்யது) அப்துல் காதர் என்று குறிப்பிடுவதிலிருந்து பெரியதம்பி என்ற பட்டப்பெயருடன் வழங்கப்பட்ட செய்யது அப்துல் காதர் மரைக்காயர்தான் (சீதக்காதி) என்பதை டச்சு ஆவணங்கள் உணர்த்த தவறிவிட்டன. பெரிய தம்பி மரைக்காயர் என்ற பட்டம் சீதக்காதியின் தகப்பனாருக்கு இருந்ததை வேதாளை கல்வெட்டு தெரிவிக்கின்றது. இதே பட்டம் சீதக்காதி மரைக்காயருக்கும் இருந்தது என்பதை சீதக்காதி மரைக்காயரின் திருமணப்பாடலில்

> " தேடும புகழ்க்கவிதைச் செந்தமிழோர்க் கீந்துதவும்
> நாடும் விசையரகு நாதப் பெரியதம்பி "

என்று குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆதலால் பெரியதம்பி என்ற பட்டம் சீதக்காதி மரைக்காயரது தந்தையாருக்கும், சீதக்காதி மரைக்காயருக்கும் மட்டுமே பயன்படுத்தப்பட்டது என்பது தெளிவு. டச்சு ஆவணத்தில் கண்டபடி இந்தப்பட்டம் சீதக்காதி மரைக்காயர் குடும்பத்தில் வேறு யாருக்கும் வழங்கப்படவில்லை என்பதைக் குறிக்கும் ஆவணங்கள் எதுவும் இல்லை. டச்சு ஆவணங்களில் குறிப்பிடப்படுகின்ற

இரண்டாவது பெரியதம்பியான அப்துல் காதரும், அவரது மகனாகக் குறிப்பிடப்படுகின்ற மூன்றாவது பெரிய தம்பியும் யார் என்பதை இனங்கண்டுகொள்ள இயலவில்லை. ஏனெனில் இந்தப் பெயர்கள் வள்ளல் சீதக்காதியின் முன்னோர்களையும், பின்னவர்களையும் விளக்கமாகக் காட்டுகின்ற கீழக்கரை நடுத்தெரு வம்சாவழிப்பட்டியலில் இந்த இரண்டாவது, மூன்றாவது பெரியதம்பியைப் பற்றி விபரங்கள் காணப்படவில்லை. ஆனால் சீதக்காதி மரைக்காயரது முகவராக (AGENT) பணியாற்றிய மாமு நெய்னார் பற்றிய விபரம் சீதக்காதி நொண்டி நாடகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலே கண்ட வம்சா வழிப்பட்டியலிலிருந்து மாமு நெய்னார் என்பவர் வள்ளல் சீதக்காதியின் தந்தையான பெரியதம்பி மரைக்காயரது உடன்பிறந்த சகோதரரான மீராப் பிள்ளை மரைக்காயரது மகன் என்பதும் அந்த வம்சாவழிப்பட்டியலிலிருந்து தெரியவருகிறது.

சீதக்காதி மரைக்காயரது பிறந்த நாள் வருடம் பற்றிய விபரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் இவர் இராமநாதபுரத்தில் ஆட்சி செய்த கிழவன் என்ற ரெகுனாத சேதுபதியின் காலத்தவர் என்பதற்கான சான்றுகள் பல உள்ளன. விஜய ரெகுனாதப் பெரியதம்பி என்ற பட்டம் கிழவன் ரெகுனாத சேதுபதி மன்னரால் சீதக்காதி மரைக்காயருக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதாகும். இதிலிருந்து சீதக்காதி மரைக்காயர் கிழவன் ரெகுனாத சேதுபதியின் சமகாலத்தவர் என்பது தெரிய வருகிறது. சேதுபதி மன்னருக்கும், சீதக்காதி மரைக்காயருக்கும் மிகவும் நெருக்கமான தொடர்புகள் இருந்து வந்ததையும் சேது நாட்டு அரசியலில் முக்கியமான முடிவுகளை சீதக்காதி மரைக்காயரது ஆலோசனையின் பேரில் தான் மேற்கொண்டார் என்பதும் சேது நாட்டுக் கடற்கரைப் பகுதியில் குடியிருந்தவர்களிடமிருந்து வரி வசூலிக்கும் அதிகாரத்தை சீதக்காதி மரைக்காயருக்கு வழங்கி இருந்தார் என்பன போன்ற பல செய்திகளுக்கு டச்சு ஆவணங்கள் சான்றாக அமைந்துள்ளன.

கிழவன் ரெகுனாத சேதுபதியின் ஆட்சிக்காலம் கி.பி.1678 முதல் 1710 வரை ஆகும். இந்த காலகட்டத்தில்தான் சீதக்காதி மரைக்காயர் சேதுபதி மன்னரிடம் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தார். அப்பொழுது சீதக்காதி மரைக்காயரது ஆலோசனையின் பேரில் சேதுபதி மன்னர் தமது தலைமை இடத்தை போகலூர் கிராமத்திலிருந்து இராமநாதபுரத்திற்கு மாற்றினார். மற்றும் அப்பொழுது மண்கோட்டையாக இருந்த இராமநாதபுரத்தை கற்கோட்டையாக மாற்றியும், அரண்மனை வளாகத்தில் மன்னருக்கான கொலுமண்டபம் ஒன்றையும் அமைக்க சீதக்காதி மரைக்காயர் உதவினார் என இராமநாதபுரம் சமஸ்தான மேனுவல் ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கதாக உள்ளது. மற்றும் சேதுபதி மன்னர் தமது குடும்பச்சிறப்புப் பெயரான " விஜய ரெகுநாத " என்ற விருதை சீதக்காதி மரைக்காயருக்கு வழங்கி " விஜய ரெகுநாத பெரிய தம்பி " என அழைத்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. மேலும் சீதக்காதி மரைக்காயரை சேது நாட்டின் கடற்கரைப்பகுதியில் தீர்வை வசூலிக்கும் அதிகாரத்தை வழங்கியதை டச்சு ஆவணங்கள் குறிப்பிட்டிருப்பதும் சீதக்காதி மரைக்காயர் சேதுபதி மன்னரிடம் இவ்விதம் நெருக்கமான உறவுகள் கொண்டிருந்த காலம் கி.பி. 1682 முதல் கி.பி.1698 வரை என எளிதாக வரையறுக்க முடிகிறது. டச்சு ஆவணங்களில் சொல்லப்படுகின்ற முதலாவது பெரியதம்பியே சீதக்காதி மரைக்காயர் என்பது சந்தேகத்துக்கு இடமில்லாமல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை டச்சுக்காரர்களது ஆவணங்கள் "கி.பி.1682 முதல் 1698 வரை முதலாவது பெரிய தம்பியைப்பற்றிய செய்திகள் கிடைக்கின்றன " என்று குறிப்பிட்டு இருப்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்


சீதக்காதி மரைக்காயருக்கும், கிழவன் ரெகுனாத சேதுபதிக்கும் ஏற்பட்ட முதலாவது தொடர்பு கி.பி 1682 என்பதை நம்பகமாகக் கொள்வதற்கு மேலே கண்ட டச்சு ஆவணம் உதவுகிறது. அப்பொழுது சீதக்காதி மரைக்காயருக்கு வயது 32. அதாவது கி.பி.1650-ல் பிறந்ததாகக் கொள்ளலாம். ஆனால் இதனை

உறுதிப்பபடுத்தக்கூடிய வேறு ஆவணங்கள் எதுவும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. இதனைப் போன்றே சீதக்காதி மரைக்காயரது மறைவு பற்றிய விபரங்கள் அளிக்கத்தக்க ஆவணங்களும் இல்லை. ஆனால் சீதக்காதி மரைக்காயர் கி.பி.1698-ல் புகழுடம்பு (வ.:பாத்) பெற்றிருக்க வேண்டும் என்பது உறுதி. இதனை டச் ஆவணம் ஒன்று உறுதிப்படுத்துகிறது.

கி.பி. 1698 மார்ச் ஏப்ரலில் தூத்துக்குடி கடல் பகுதியில் நடைபெற்ற டச்சுக்காரர்களது முத்துச் சலாபத்தில் பெரும் இழப்பீடும் தோல்வியும் ஏற்படுவதற்கு சீதக்காதி மரைக்காயர் காரணமாக இருந்தார் என்பதை சேதுபதி மன்னருக்கு தெரிவிக்க டச்சு அலுவலர் ஆதம் வான்டெர் டயன் தலைமையில் தூதுக்குழு சென்றது மன்னரிடம் பரிகாரம் பெறுவதற்கு. சீதக்காதி மரைக்காயர் அண்மையில் இறந்துவிட்டதால் அந்தப் பிரச்சனையை அப்படியே விட்டு விடுமாறு மன்னர் அறிவுரை கூறியதிலிருந்து சீதக்காதி மரைக்காயர் பெரும் பாலும் மே அல்லது ஜூன் இறுதியில் 1698-ல் மரணமுற்றிருக்க வேண்டும் என்பது தெரிய வருகிறது.

இன்னொரு செய்தி. வள்ளல் சீதக்காதி மரைக்காயர் இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களிடம் மிகுந்த மரியாதை உடைய அனுக்கத் தொண்டராக இருந்து வந்தார். ஏதோ ஒரு காரணமாக இமாம் அவர்கள் மரைக்காயரிடம் சற்று கோபமாக பேசிய சில சொற்கள் பலிதமாகி மரைக்காயர் அகால மரணம் அடைந்தார் என்ற செய்தியை சீறாப்புராணத்தைப் பதிப்பித்த காயல்பட்டிணம் கண்ண அகுமது மருதூம் புலவர் அந்த நூலின் பதிப்பாசிரியர் உரையில் குறிப்பிட்டிருப்பது மரைக்காயர் அவர்களது மரணத்தை நிர்ணயிப்பதற்கு உதவுவதாக இருக்கிறது. ஏனெனில் இமாம் அவர்கள் கி.பி 1702-ல் வ.:பாத்தாகி விட்டார்கள். அதற்கு முன்னர்தான் மேலே கண்ட நிகழ்ச்சி வள்ளல் சீதக்காதியின் மரணம் நேர்ந்திருக்க வேண்டும் என நம்புவதற்கு ஏற்றதாக உள்ளது. அதாவது இமாம் அவர்களது வ.:பாத்திற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கி.பி.1698-ல் வள்ளல் அவர்கள் வ.:பாத்தானார்கள் என்பதே.

மேலும் டச்சு ஆவணங்கள் வள்ளல் அவர்கள் மறைந்த காலத்தைப் பற்றி அதாவது கி.பி 1698 என்பதை மிகத்தெளிவாக குறிப்பிட்டுள்ளன. ஆனால் அந்த ஆவணங்கள் வள்ளலது மறைவு எந்த மாதம், எந்த நாள் என்பதைப்பற்றிய விபரத்தை அளிக்கவில்லை.



11

# வள்ளல் பற்றிய வரலாற்றுச் சுவடுகள்

இதுவரை சீதக்காதி மரைக்காயர் பற்றிய சிறப்பான செய்திகள் அனைத்தையும் படித்து அறிந்தோம். மிகச்சிறந்த நிர்வாகியாக, வள்ளலாக வணிக வேந்தராக, தமிழ் இலக்கிய கொடை நாயகராக இவைகளுக்கு எல்லாம் மேலாக நல்ல மனிதாபிமாணியாக வாழ்ந்த சீதக்காதி மரைக்காயர் திடீரென காலமான பிறகு அவரது பெயரும், புகழும் வரலாற்றில் பரந்து நிற்பது ஒருபுறம் இருக்க அவரது குடும்பம், அவரது பெருமுயற்சியால் வளர்ச்சியடைந்த வெளிநாட்டு உள்நாட்டு வணிக அமைப்புக்கள் என்னவாயின என்பதற்கான விடை எளிதில் கண்டுகொள்ளத்தக்கதாக இல்லை. இதற்கான காரணங்கள் எவை என்பதையும் அறியத்தக்க ஆவணங்களும் கிடைக்கவில்லை. ஏன் இந்த அவல நிலை? என்பது அனைத்து வாசகர்களது சிந்தனையில் எழுவது இயல்பு.

பல ஆண்டுகளாக வள்ளல் அவர்களைப்பற்றிய வரலாற்றுச் செய்திகளையும், இலக்கியங்களையும் ஆய்வு செய்து

வந்ததன் காரணமாக மேலே கண்ட வினாக்களுக்கு ஓரளவு விளக்கம் அளிக்கலாம் என எண்ணுகிறேன்.

வள்ளல் சீதக்காதி மரைக்காயரது மறைவிற்குப்பிறகு அவரது உள்நாட்டு வெளிநாட்டு வாணிபத்தை மேற்கொண்டு நடத்தியவர் யார் என்பது புரியவில்லை. டச்சுக்காரரது ஆவணங்கள் அவரை இரண்டாவது பெரிய தம்பியாகிய அப்துல் காதர் எனக் குறிப்பிடுகின்றன. அவருக்கும் மறைந்த சீதக்காதி மரைக்காயருக்கும் என்ன உறவு என்பது புரியவில்லை. என்றாலும் அந்த நபர் சீதக்காதி மரைக்காயரைப் போன்று வாணிபத்தில் சிறப்பான அனுபவமும் நுண்ணறிவும் உடையவராகத் தெரியவில்லை. இதன் காரணமாக டச்சுக்காரர்களது வியாபாரப்போட்டியை அவரால் சமாளிக்க இயலவில்லை. தொடக்கத்தில் டச்சுக்காரர்களது வாணிபத்தில் அவர் ஒத்துழைப்பு நல்கி வந்தார். மதுரை, இராமநாதபுரம் சீமைகளில் கைத்தறித்துணிகளுடன் மான் தோல்களை சேகரிப்பதிலும் டச்சுக்காரர்களுக்கு அவர் உதவி வந்தார்.

கி.பி.1704 முதல் 1706 ஆண்டுகளில் சுமார் 1,20,000 மான் தோல்களை டச்சுக்காரர்கள் கொள்முதல் செய்ததிலிருந்து இந்த உண்மை புலப்படுகிறது. என்றாலும் அவர்கள் தொடர்ந்து அந்த நபரை சந்தேகக்கண் கொண்டு பார்த்து வந்ததுடன் அழிக்கப்பட வேண்டிய எதிரியாகவே கருதி வந்தனர். இதனால் அந்த நபரைப்பற்றிய பொய்யான புகார்களையும் சேதுபதி மன்னரிடம் தெரிவித்து வந்தனர். சீதக்காதி மரைக்காயர் காலம் முதல் கீழக்கரை முஸ்லிம் வணிகர்களிடம் குறிப்பாக சீதக்காதி மரைக்காயரது குடும்பத்தினர் மீது மன்னருக்கு பரிவும் பற்றும் இருந்து வந்ததால் டச்சுக்காரர்களது முறையீடுகள் எதனையும் அவர் காதில் போட்டுக் கொள்ளவில்லை. எப்படியாவது சீதக்காதி மரைக்காயரது குடும்பத்தினர்களை சேது நாட்டு அரசியலிலிருந்து அப்புறப்படுத்திவிட்டால் தாம் விரும்பிய சலுகைகளை மன்னரிடமிருந்து பெற்றுவிடலாம் என்ற திட்டத்தில் டச்சுக்காரர்கள் செயல்படுவதை மன்னர் நன்கு அறிந்திருந்தார்.

மேலும் சோழமண்டலக்கரை வழியாக வங்காளநாட்டுக்குச் செல்லும் சேதுபதி மன்னரது கப்பல்களுக்கு கடவுச்சீட்டு வழங்குவதில் வீணாண காலதாமதம் செய்து வந்ததுடன் பெரியதம்பி மரைக்காயரது கப்பல் ஒன்றினை கொழும்பு துறைமுகத்துக்கு கடத்திச் சென்று அதிலிருந்த இரும்பு, துணிகள் போன்ற சரக்குகளின் பொதிகளை பறிமுதல் செய்து அவர்களது உபயோகத்திற்கு எடுத்துக்கொண்டனர். இதுபற்றி மன்னரும், பெரியதம்பி மரைக்காயரும் நீண்ட கடிதத் தொடர்பை டச்சுக்காரர்களிடம் கொண்டிருந்தும் பயனில்லை. இவ்விதம் டச்சுக்காரருக்கும், பெரியதம்பி மரைக்காயருக்கும் கடுமையான மோதல்கள் தொடர்ந்தன. இதற்கு முத்தாய்ப்பு வைப்பது போல கி.பி.1708ல் நடந்த தூத்துக்குடி முத்துக்குளிப்பு நிகழ்ச்சிகள் அமைந்தன.

கீழக்கரை, தேவிப்பட்டினம், சுந்தரபாண்டி பட்டினம் ஆகிய ஊர்களிலிருந்து முத்துச் சிலாபத்திற்குச் சென்ற படகுகளும், முத்துக்குளிப்பவர்களும் சொந்த ஊர்களுக்குத் திரும்பி விட்டனர். தொடர்கதையான போட்டியையும் சமாளிக்க முடியாது அந்த பெரியதம்பி மரைக்காயர் விலகி விட்டார். இந்த ஆழ்ந்த சிந்தனையில்லாத முடிவு சீதக்காதி மரைக்காயர் இல்லாத அந்த குடும்பத்தினருக்கு மிகப்பெரிய இழப்பீட்டையும், சமுதாய நிலையில் இழிவையும் ஏற்படுத்திவிட்டன.

அடுத்து இந்தக் குடும்பத்தின் பிரதிநிதியாக வாணிபத்தில் ஈடுபட்டவர் ( பெயர் அறியத்தக்கதாக இல்லை. ஆனால் டச்சு ஆவணங்கள் அவரை இரண்டாவது பெரியதம்பியான அப்துல் காதரது மகன் என குறிப்பிடுகின்றன) இவர் இளைஞராகவும், வாணிபத்துறைக்கு முற்றிலும் புதியவராகவும் இருந்த காரணத்தினால் முறையாக செயல்படவில்லை. மிகப்பெரிய எதிரியான டச்சுக்காரர்களை அவரால் சமாளிக்க முடியவில்லை என்றே தெரிய வருகிறது. கிழவன் ரெகுநாத சேதுபதியின் ஆட்சிக்காலம் வரை டச்சுக்காரர்களால் இந்த இளைஞருக்கு சிரமம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால் கி.பி.1710ல் கிழவன் சேதுபதி

மரணம் அடைந்து அவரது பதவியிடத்தில் முத்துவிஜய ரெகுநாத சேதுபதி ஆட்சிக்கு வந்த பொழுது சீதக்காதி மரைக்காயரது குடும்பத்தைச் சேர்ந்த அந்த இளைஞர் அரசியலை சரியாகப் புரிந்துகொள்ளாமல் கிழவன் சேதுபதியினால் வழங்கப்பட்ட சலுகைகளை அவருக்கு தொடர்ந்து இருப்பதாக எண்ணிக்கொண்டு அடாவடித் தனமாக நடந்து வந்தார். அதில் இரண்டு நிகழ்ச்சிகளை முக்கியமாகக் குறிப்பிடலாம்.


முதலாவதாக கீழக்கரையில் டச்சுக்காரர்கள் புதிதாக ஏற்படுத்த இருந்த பண்டக சாலையை அடியாள்களுடன் ஒருநாள் சென்று தாக்கி டச்சுக்காரர்களுடைய பொருள்களுக்கு மிகுந்த சேதத்தை ஏற்படுத்தினர். அப்பொழுது அந்த சச்சரவை தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுப்பட்ட சேதுபதி மன்னரது அலுவலர் ஒருவரையும் மோசமாக தாக்கி விட்டனர்.

இரண்டாவதாக, மறைந்த கிழவன் சேதுபதியின் மகனும் இராமநாதபுரம் சேதுபதி பட்டத்திற்கு தகுதியற்றவராக புறக்கணிக்கப்பட்டவருமான பவானி சங்கரன் என்பவர் அப்பொழுதிருந்த முத்து விஜய ரெகுநாத சேதுபதிக்கு எதிராக மறைமுகமான போர் முயற்சியில் ஈடுபட்டு வந்தார். இராமநாதபுரம் அரசுக்கு எதிரிகளாக விளங்கிய மதுரை நாயக்கர் மன்னரையும் தஞ்சாவூர் மராட்டிய மன்னரையும் தமது நடவடிக்கைகளுக்கு உதவி பெறுவதற்கும் அவர்களை தொடர்பு கொண்டிருந்தார். இந்த முயற்சியில் குதிரைப்படை அணி ஒன்றினை அமைப்பதற்கு சீதக்காதி மரைக்காயரது குடும்பத்தைச் சேர்ந்த அந்த இளைஞனை அனுகினார். அவரும் அவசரப்பட்டு பாவானி சங்கரத் தேவருக்கு பொது உதவி செய்தார். தமது அரசை அகற்றுவதற்கு செய்யப்படும். இந்த சதியில் அந்த இளைஞர் ஈடுபட்டிருந்ததை சேதுபதி மன்னர் அவரை ஒரு இராஜ துரோகியாக முடிவுசெய்து சிறையிட்டு பல வழிகளிலும் துன்புறத்தினார். அவருக்கு விலங்குகள் இடப்பட்டும், கைவிரல்களின் நகக்கணுக்களை குறடு கொண்டு நசுக்கி சித்ரவதை செய்ததையும் டச்சு ஆவணங்களில் காண முடிகின்றது.

இதற்கு மேலாக கீழக்கரையில் வழிவழியாக வாணிபச் செழுமையிலும் செல்வ வளத்திலும் சிறந்து நின்ற ராஜ குடும்பத்தையொத்த சீதக்காதி மரைக்காயரது குடும்பப் பெண்களை கச்சேரிக்கு இழுத்து வந்து மானபங்கப்படுத்தும் வகையில் நடத்திய கொடுமையையும் அந்த ஆவணங்கள் மூலம் தெரியவருகின்றன. இவைகளுக்கெல்லாம் காரணம் அந்த ஆவணங்களில் வரையப்பட்டிருப்பது போல"சிறிதும் புத்தியில்லாத" அந்த இளைஞரே.

இவ்விதம் யாரும் எதிர்பாராத வகையில் சீதக்காதி மரைக்காயரது வழியினருக்கு ஏற்பட்ட ராஜதுரோக குற்றமும், அதன் வழி அவர்கள் பொதுமக்களது பார்வையில் மிகவும் கேவலமாக கருதப்படும் நிலையும் ஏற்பட்டது காலத்தின் கொடுமையேயாகும். எந்த அளவுக்கு சீதக்காதி மரைக்காயரது வள்ளல் தன்மையும், மனிதாபிமான நடவடிக்கைகளும் கீழக்கரை மக்களைக் கவர்ந்து அவரை ஒரு மிகச்சிறந்த மனிதராக போற்றிப் புகழ்ந்த காலம் எங்கே? அவரது வழியினருக்கு ஏற்பட்ட தலைக்குனிவும் தாழ்வும் மக்களது மனத்திலே பல காலமாக நிலைத்துவந்த காரணத்தினால் வள்ளலின் வழியினரைப் பற்றிய விபரங்கள் ஆவணங்களும் நாளடைவில் சிறிது சிறிதாக குறைந்து விட்டன. வள்ளலது வம்சாவழிப்பட்டியலில் கண்டுள்ளபடி சீதக்காதி மரைக்காயருக்கு இருந்த ஒரே மகனான சேகு கண்ணு மரைக்காயரும் அவருடைய ஒரே மகனான மீரா சாகிபு மரைக்காயரும் வாரிசு இல்லாமல் அடுத்தடுத்து மரணித்து விட்டதால் அந்தக் குடும்பத்தின் கௌரவத்தையும் ஆவணங்களையும் காப்பதற்கு தக்க சூழ்நிலை ஏற்படவில்லை. மேலே கண்ட இந்தக் காரணங்களினால்தான் வள்ளல் அவர்கள் மறைந்த 300 ஆண்டுகளுக்குள் அவரது குடும்பத்தினர், அவரது வாணிப நடவடிக்கைகள், வெளிநாட்டு தொடர்புகள், சொத்துக்கள் போன்ற விபரங்கள் மக்களது நினைவிலிருந்து அகன்று விட்டன. அவைகளை எதிர்கால சந்ததிகளுக்கு தெரிவிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. வள்ளல் அவர்களது கொடையுள்ளத்தை தெரிவிக்கும் புலவர் பெருமக்களது தமிழ்ப்பாக்கள் மட்டும்

நூற்றாண்டு காலமாக தமிழகத்தில் வழங்கி வந்து கொண்டிருக்கின்றன. தமிழ் இருக்கும் வரை அந்த பாக்களும் இருக்கும். அவைகளில் ஒடுங்கியுள்ள வள்ளலது பெரு வடிவும் புகழுடம்பும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.



12

# வள்ளல் சீதக்காதி பற்றி வழங்குகின்ற பொருத்தமற்ற செய்திகள்

வள்ளல் சீதக்காதி மரைக்காயரைப் பற்றி கடந்த மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக பலவிதமான கற்பனைச் செய்திகள் தமிழகத்தில் வழக்கில் இருந்து வந்துள்ளன. அவைகளில் ஒன்று வள்ளல் சீதக்காதி அவர்கள் தெற்கே காயல்பட்டினத்தில் பிறந்தவர் என்பதும், கீழக்கரையில் வந்து வாழ்ந்தவர் என்பதும் ஒன்றாகும். இதில் காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பது போல காயல்பட்டினப் பெருமக்களும் கீழக்கரைப் பெருமக்களும் இந்த உணர்ச்சிப்பூர்வமான விவாதத்தில் ஈடுபட்டு வந்திருப்பதை அவர்களது கடந்த கால நூல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக காயல் மர்ஹூம் ஹா:பிஸ் செய்யது அகமது என்ற அறிஞர் கி.பி.1978-ல் காயல்பட்டினத்தில் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய முன்றாவது மாநாட்டில் வெளியிட்ட "இஸ்லாமியத் தமிழ்

இலக்கியக்கட்டுரைக் கோவை " (பக்கம் 17 முதல் 44 வரை) என்ற நூலிலும், கி.பி.1993-ல் ஜனாப் K.S.அப்துல் லத்தீப் M.A. அவர்கள் வெளியிட்ட "காயல்பட்டினம் " என்ற நூலிலும் வள்ளல் சீதக்காதி அவர்கள் காயல்பட்டினத்தில் பிறந்தவர் என்பதை உறுதியாக வரைந்துள்ளனர். ஆனால் அவர்கள் கூற்றுக்கு ஆதாரமாக எந்தவித சான்றுகளையும் குறிப்பிடவில்லை. இன்னும் சில கட்டுரையாளர்கள் வள்ளல் சீதக்காதி அவர்களும், அவரது உறவினர்களும் இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பா போன்று கி.பி.பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காயல்பட்டினத்திலிருந்து இடம்பெயர்ந்து கீழக்கரைக்கு குடியேறியவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இன்னொரு பிரிவினர் வள்ளல் சீதக்காதி அவர்கள் காயல்பட்டினத்தைச் சார்ந்தவர் என்பதற்கு ஆதாரமாக படிக்காசுத் தம்பிரான் அவர்களது வள்ளலைப்பற்றிய பாடலில், தென்காயல் பதியானே, தினம் கொடுக்கும் கொடையானே... என்ற தொடரில் உள்ள தென்காயல் என்ற சொல்லை அவர்களுக்கு ஆதரவாக எடுத்துக் கொள்கின்றனர். மேலே கண்டவைகளிலிருந்து வள்ளல் சீதக்காதி அவர்கள் காயல்பட்டினத்தில் பிறந்தவர் அல்லது அந்த ஊரைச் சார்ந்தவர் என்பதற்கான தெளிவான செய்தி எதையும் யாரும் புரிந்து கொள்ளமுடியாது. ஆனால் நமக்கு கிடைத்துள்ள ஆவணங்களிலிருந்து வள்ளல் அவர்களும், அவர்களது மூதாதையர்களும் கீழக்கரையைச் சார்ந்தவர்கள் என்பதை எளிதில் கூற முடியும்.

கீழக்கரைக்கும் காயல்பட்டினத்திற்கும் ஏற்பட்ட தொடர்பு கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டது மட்டுமல்ல தூத்துக்குடியிலும், காயல்பட்டினத்திலும் முஸ்லிம்களுக்கும், பரவர்களுக்கும் இடையே எழுந்த பகை உணர்வு, பூசல், மோதல் ஆகியவைகளின் காரணமாக கடல் வாணிபத்தில் ஈடுபட்டிருந்த அந்த பகுதியைச் சேர்ந்த முஸ்லிம்

பெருமக்கள் அந்த ஊர்களை விட்டு கீழக்கரை, வேதாளை, தொண்டி போன்ற ஊர்களுக்கு கி.பி.1537லேயே இடம்பெயர்ந்து குடியேறினர். ஆதலால் இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பா, தைக்காசாஹிப் வலி, மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஆகியவர்களால் போன்று வள்ளல் சீதக்காதி அவர்கள் குடும்பத்தினர் கீழக்கரைக்குக் குடியேறினர் என்பது சிறிதும் பொருந்தாத உண்மையாகும்.

மேலும் வள்ளல் சீதக்காதி அவர்களின் தாய்வழிப் பாட்டனாரான வாவா அலி மரைக்காயர் என்பவர் மிகச்சிறந்த வணிகராக கீழக்கரையில் விளங்கி 25.11.1614 -ல் காலமானதையும் அவர்களது முன்னோர்கள் சிலரும் கி.பி. 1604, கி.பி. 1609 ஆகிய ஆண்டுகளில் மரணமுற்றதையும் கீழக்கரை பழைய குத்பாப் பள்ளியில் உள்ள அவர்களது கப்ருஸ்தானின் மீஸானிலுள்ள கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றது. இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்கள் கி.பி.1654-ல் கீழக்கரையில் குடியேறியவர். இதிலிருந்து வள்ளல் சீதக்காதி மரைக்காயரது முன்னோர்கள் கி.பி. 16ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே கீழக்கரையில் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது உறுதிப்படுத்தப் படுகிறது.

மற்றும் படிக்காசுத் தம்பிரானது பாடலில் உள்ள காயல் என்ற ஒரு சொல்லை மட்டும் எடுத்துக்கொண்டு காயல் என்பது காயல்பட்டினத்தைக் குறிப்பது என்று கொள்வது பொருத்தமானது அல்ல. தமிழில் காயல் என்ற சொல் உப்பளம் அல்லது உப்பங்கழி என்பதை பொதுவாகக் குறிக்கும் சொல்லாகும். இதனை காயல்பட்டினத்திற்கு மட்டும் உரியது என வலிந்து பொருள் கொள்வது தமிழ் வழக்கிற்கு ஏற்புடையது அல்ல. கீழக்கரை நகருக்கு சற்று முன்னதாகவே உப்பங்கழியும், உப்பளங்களும் தொடர்ந்து இருந்து வருவதை இன்றும் யாவரும் காணத்தக்கது.

மேலும் இராமநாதபுரம் சமஸ்தான மேனுவலில் உள்ள ஒரு செய்தி. வள்ளல் சீதக்காதி கீழக்கரை (ஷெய்கு அப்துல் காதர் மரைக்காயர்) என்பவர் இராமநாதபுரம் கோட்டையையும், இராமநாதபுரம் அரண்மனையையும் நிர்மாணிப்பதில் அப்பொழுது இராமநாதபுரம் மன்னராக இருந்த கிழவன் ரகுநாத சேதுபதிக்கு மிகவும் உதவியாக இருந்தார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செய்தி வள்ளல் அவர்கள் கீழக்கரையைச் சார்ந்தவர் என்பதை மிகத்தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவைகளிலிருந்து வள்ளல் சீதக்காதி அவர்கள் காயல்பட்டினத்தைச் சார்ந்தவர் என்ற கூற்று பொய்யாகி விடுகிறது.

அடுத்து வள்ளல் அவர்கள் இராமநாதபுரம் சேதுபதி மன்னருக்கு மிகவும் நெருக்கமாகவும் விசுவாசமாகவும் இருந்த காரணத்தினால் அவரை ஒரு எல்லைத் தகராறு சம்பந்தமாக எட்டையபுரத்துக்கு சேதுபதி மன்னர் அனுப்பி வைத்தார் என்றும் அங்கு அரண்மனையில் உமறுப்புலவரைத் தற்செயலாக சந்தித்தபொழுது கீழக்கரைக்கு வந்து நபிகள் நாயகம் அவர்களது வாழ்க்கை வரலாற்றைக் காப்பியமாக இயற்றித்தருமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க புலவர் கீழக்கரை வந்து சீறாப் புராணத்தை பாடினார் என்பது பரவலாகப் பேசப்படும் செய்தியாகும். இதுவும் உண்மைக்கு புறம்பானது ஆகும்.

ஏனெனில் அப்பொழுது எட்டையபுரத்தில் வாழ்ந்தவர் உமறுப்புலவர் அல்ல அவர்களது சரியான பெயர் உமரு கத்தாப் புலவர். அவர் இயற்றியது சீதக்காதி மரைக்காயரது திருமண வாழ்த்து என்பதாகும், சீறாப்புராணம் என்ற காப்பியம் அல்ல. இந்த பெரும் படைப்பை இயற்றியவர் கீழக்கரையைச் சேர்ந்த உமறுப்புலவர் ஆவார். இந்த உண்மையை சீறாப்புராணத்தின் சிறப்புப்பாயிரத்தில் (அச்சிற்பதிப்பித்த வரலாறு) காயல்பட்டணத்தைச் சேர்ந்த புலவர் நாயகம் சேகனாப் புலவர், சீறாப்புராணம் பாடிய உமறுப்புலவர் கீழக்கரையைச் சார்ந்தவர்

என்பதை அறுதியிட்டு தெளிவாக வரைந்திருப்பது அறியத்தக்கதாகும். மேலும் உமறுப்புலவருக்குப் பிறகு நபி அவதார அம்மானை என்ற இலக்கியத்தை இயற்றிய கீழக்கரையைச் சேர்ந்த சிந்துக் களஞ்சியப் புலவர் என்பவர் உமறுப்புலவரது மகன் என்பதை அந்த இலக்கியத்தில் குறிப்பிட்டிருப்பது இங்கு ஆராயத்தக்கது ஆகும்.

மேலும் உமறுப்புலவர் பாடிய சீறாப்புராணத்திற்கு வள்ளல் சீதக்காதி அவர்கள் காரணமாக இருந்தார் என்பதற்கான அகச்சான்று எதுவும் சீறாப்புராணத்தில் இல்லை. மாறாக சீறாப்புராணம் பாடியதற்கு மூலகாரணமாக இருந்த கீழக்கரை வணிகரும் கொடைநாயகருமாகிய அபுல் காசிம் மரைக்காயர் அவர்களைப்பற்றிய சிறப்புத்தொடர்கள் சீறாப்புராணத்தில் பல இடங்களில் காணப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றும் வள்ளல் சீதக்காதி அவர்களைப் பற்றி தமிழகமெங்கும் பரவலாக சொல்லப்படும் இன்னொரு வழக்கு "செத்தும் கொடுத்தார் சீதக்காதி" என்பதாகும். பொதுவாக மனிதர்கள் இறந்து விட்டபிறகு அவர்கள் மீண்டும் இந்த உலகத்திற்கு வந்ததாக செய்தி இல்லை. அத்துடன் வள்ளல் அவர்கள் சார்ந்துள்ள இஸ்லாம் மார்க்கத்தில் இறந்து விட்ட ஒரு முஸ்லிம் மீண்டும் கியாமத்து நாளில் (ஊழிக்காலத்தில்) தான் இறைவனால் உயிருடன் எழுப்பப்பட்டு அவரவர் செய்கைகளுக்குத் தக்க கூலி வழங்கப்படும் என்பது முடிவான கொள்கையாகும். ஆதலால் இறந்து போன வள்ளல் அவர்கள் உயிருடன் வந்து கொடைகொடுத்தார் என்பது அறிவுபூர்வமாகாது.

செய்திப்போக்குவரத்தும், வாகன வசதிகளும் இல்லாத அந்தக்காலத்தில் வள்ளல் அவர்கள் காலமான செய்தி தமிழகத்தின் பல இடங்களுக்கும் போய்ச் சேர்வதில் மிகவும் தாமதம் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த நிலையில் ஏற்கனவே வள்ளலைப்பற்றி கேள்விப்பட்ட புலவர் ஒருவர் கீழக்கரைக்கு

வந்த பிறகு வள்ளல் அவர்கள் ஏற்கெனவே காலமாகிவிட்டார் என்ற செய்தி அந்த புலவருக்கு வேதனையையும், விரக்தியையும் ஏற்படுத்தியிருக்கும் என்பது உறுதி. இதனை அறிந்த வள்ளல் அவர்களது மாளிகையில் உள்ளவர்கள் புலவருக்கு தேறுதல் சொல்லி வள்ளல் அவர்களது நினைவாக பொன்னும் பொருளும் கொடுத்து அவரை அனுப்பி வைத்திருந்தல் வேண்டும்.இந்த உண்மையைத்தான் செத்தும் கொடுத்தான் சீதக்காதி என்ற வழக்குக்கு ஆதாரமாகக் கொள்ளலாம்.

ஆனால் நமது தமிழகத்து நூலாசிரியர்கள் மேலே சொல்லப்பட்ட புலவர் கீழக்கரையில் அமைந்த வள்ளலது சமாதிக்குச் சென்று தமது கையறு நிலையை கூறி வருத்தப்பட்டதாகவும் அப்பொழுது சமாதியிலிருந்து வள்ளல் அவர்களது வைர மோதிரம் அணிந்த கை விரல் ஆறுதல் அளிக்கும் வண்ணம் வெளியே வந்து புலவருக்கு காட்சி தந்ததாகவும், அந்த மோதிரத்தை தமக்கு வள்ளல் அவர்கள் வழங்கியதாக புலவர் எடுத்துச் சென்றதாக கற்பனையுடன் புனைந்திருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். இந்தக் கற்பனைக் கதைதான் தமிழக மக்களிடம் இன்று வரை செத்தும் கொடுத்தார் சீதக்காதி என்பதற்கு தகுந்த சாட்சியுமாக வழங்கி வருகிறது. மேலே குறிப்பிட்டவைகளிலிருந்து வள்ளல் சீதக்காதி அவர்களைப்பற்றி நமது தமிழக ஆசிரியர்கள் பொறுப்பற்ற முறையில் ஆழ்ந்த சிந்தனை இல்லாமல் வரைந்துள்ள பொய்மைக் கதைகள் இனியும் தொடராது என்பதை நம்புவோமாக!

வள்ளல் அவர்களைப்பற்றிய பிறிதொரு செய்தி. நமது வரலாற்றுக்கு எந்த வகையிலும் பொருந்தாததாக வழங்கி வருகிறது. அதாவது தில்லியில் அப்பொழுது முகலாயப் பேரரசராக விளங்கிய ஆலம் கீர் என்ற ஒளரங்கசீப் கீழக்கரையில் இருந்த இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பா என்ற சூ:பி மகானிடம் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் என்றும் அதனால் அவரை தில்லிப் பேரரசின் வங்க

மாநிலத்திற்கு ஆளுநராக பணியேற்றுக்கொள்ள பேரரசர் கேட்டுக்கொண்டார் என்பது ஒரு செய்தி. இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களது ஆன்மிகப் பணியையும் அவர் ஒரு சிறந்த சூ:பி ஞானி என்பதையும் முகலாயப் பேரரசர் நன்றாகவே அறிந்திருந்தார். இந்த நிலையில் சூ:பி ஞானியான இமாம் அவர்களை முகலாயப்பேரரசு ஆளுநராக பணியேற்குமாறு கேட்டுக்கொள்வாரா என்பது கேள்விக் குறியானதாகும். மேலும் பேரரசரது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாத இமாம் அவர்கள் தமது அணுக்கச்சீடரான வள்ளல் அவர்களை வங்க நாட்டு ஆளுநராக பணியேற்குமாறு செய்தார் என்றும் அந்த நாட்டு வெப்ப தட்ப நிலைகள் நமது வள்ளல் அவர்களுக்கு பொருந்தாததாக இருந்ததால் சிறிதுகாலத்தில் அவர் கீழக்கரைக்கே திரும்பி வந்துவிட்டார் என்பதும் இந்தச் செய்தியின் முடிவாகும்.

முகலாயப் பேரரசைப் பொறுத்தவரையில் பாபர் முதல் இரண்டாம் பகதூர்ஷா வரை அதாவது கி.பி.1526 முதல் கி.பி.1857 வரையான காலகட்டத்தில் முகலாய ஆட்சியைப் பற்றிய விரிவான அதிகாரப்பூர்வமான ஆவணங்கள் பல உள்ளன. அதில் நமது வள்ளல் அவர்கள் வங்க நாட்டு ஆளுநராக சிறிது காலம் பணியாற்றியதற்கான குறிப்புகள் எதுவும் இல்லை என்பது உறுதி.

மற்றுமொரு செய்தி. வள்ளல் சீதக்காதி அவர்களுக்கும், இராமநாதபுரம் சேதுபதி மன்னருக்கும் (கிழவன் என்ற ரெகுநாத சேதுபதி) இருந்த மிகவும் அன்னியோன்யமான தொடர்பைக் கொண்டு வழங்கும் செய்தியாகும். சேதுபதி மன்னரது உடன்பிறவாத சகோதரராக விளங்கி வந்த காரணத்தினால் வள்ளல் அவர்களை சேதுபதி மன்னர் கிழக்குக் கடற்கரைப்பகுதியை கண்காணிக்கும் பொறுப்புள்ள அலுவலராக நியமித்திருந்தார் என்பதுதான் டச்சு ஆவணங்களிலிருந்து கிடைக்கும் முக்கியமான செய்தியாகும்.

ஆனால் வள்ளல் சீதக்காதி அவர்கள் வகித்து வந்த பதவியின் காரணமாக அவர் இராமேஸ்வரம் திருக்கோயிலின் கட்டுமானத்தை மேற்கொண்டிருந்தார் என சொல்லப்பட்டு வருகிறது. இந்தச் செய்தியும் உண்மைக்கு புறம்பானது என்பது தெரியவருகிறது. ஏனெனில் கி.பி.1678 முதல் கி.பி.1710 வரை ஆட்சியிலிருந்த கிழவன் ரெகுநாத சேதுபதியின் ஆட்சிக்காலத்தில் இராமேஸ்வரம் திருக்கோயிலில் எந்தவிதப் பெரிய கட்டுமானத்தை மேற்கொண்டதற்கான ஆதாரங்கள் இராமநாதபுரம் சமஸ்தான கோப்புகளில் காணப்படவில்லை. வழக்கமாக சேதுபதி மன்னர் தங்களது ஆட்சிக்காலங்களில் இராமேஸ்வரம் திருக்கோயிலில் ஏதாவது ஒரு புதிய கட்டுமானத்தை செய்தும், ஆண்டு விழாக்களும், அன்றாட வழிபாடுகளும் நடத்துவதற்கு தேவையான நிலக்கொடைகளை வழங்கி வந்திருப்பதை பல ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

கிழவன் ரெகுநாத சேதுபதிக்கு முன்னிருந்த திருமலை ரெகுநாத சேதுபதி கூட அந்தக் கோயிலில் பிரமாண்டமான இரண்டாவது பிரகாரத்தை அமைத்துள்ளார். ஆனால் என்ன காரணத்தினாலோ கிழவன் ரெகுநாத சேதுபதி பல நிலக்கொடைகளை வழங்கி இருந்தும் கூட கட்டுமானம் எதையும் அங்கு மேற்கொள்ளவில்லை. இத்தகைய நிலையில் உண்மைக்கு புறம்பாக வள்ளல் சீதக்காதி அவர்கள் சேதுபதி மன்னரின் சார்பாக இராமேஸ்வரம் திருக்கோயிலில் கட்டுமானத்தை மேற்கொண்டிருந்தார் என்பதில் துளியும் உண்மை இல்லை.

மற்றும் வள்ளல் அவர்கள் வெளிநாடு சென்று திரும்பும்பொழுது கடலில் ஓரிடத்தில் அவரது கப்பல் தடைபட்டு நின்றதாகவும் அது சம்பந்தமாக கப்பல் ஊழியர்கள் கடலுக்குள் சென்று ஆய்வு செய்தபொழுது கடலுக்கடியில் மிகப்பெரிய பச்சை மரகதக்கல் பாறை ஒன்று கண்டெடுக்கப்பட்டு அதனை அவர்கள் கீழக்கரைக்கு கொண்டு வந்ததாகவும், அதன் ஒரு பகுதி கீழக்கரைக்கு அண்மையில் உள்ள திருஉத்திரகோசமங்கை

திருக்கோவிலுக்கு வள்ளல் அவர்களால் வழங்கப்பட்டது என்றும் பரவலாக பேசப்பட்டு வருகிறது. இந்த மரகதக்கல்லிருந்து அழகிய சிவலிங்கம் ஒன்று அமைக்கப்பட்டு திருக்கோவிலின் வழிபாட்டில் வைக்கப்பட்டதாகவும் நம்பப்படுகிறது. இந்த மரகதலிங்கம் ஆண்டுதோறும் மார்கழி திங்கள் ஆருத்ரா நாளன்று மட்டும் மக்களது தரிசனத்திற்காக வைக்கப்படுகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தச் செய்திக்கு ஆதாரமாக அமையக்கூடிய ஆவணம் எதுவும் இராமநாதபுரம் சமஸ்தானத்தில் இல்லை என்பதும் இராமநாதபுரம் சமஸ்தான மேனுவலிலும் திருஉத்திரகோசமங்கை தலபுராணத்திலும் எவ்விதக் குறிப்பும் இல்லை என்பதும் இங்கு குறிப்பிடப்படுகிறது.

# இணைப்புகள்


| | | பக்கம் |
|---|---|---|
| I. | கீழக்கரை சொக்கநாதர் ஆலயக் கல்வெட்டுக்கள். | 125 |
| II. | கீழக்கரை பழைய குத்பாப் பள்ளிவாசல் கல்வெட்டுக்கள். | 129 |
| III. | கீழக்கரை காட்டுப்பள்ளி எஸ்.வி.எம். தோட்டத்திற்கு அருகில் உள்ள கல்வெட்டு. | 131 |
| IV. | வேதாளை கூரைப்பள்ளிக் கல்வெட்டு. | 131 |
| V. | வள்ளல் சீதக்காதி திருமண வாழ்த்து. | 133 |
| VI. | வள்ளல் சீதக்காதி நொண்டி நாடகம். | 164 |

## இணைப்பு I

### கீழக்கரை சொக்கநாதர் ஆலயக் கல்வெட்டுக்கள்

1. AR. 397/1907

வரி. 1- 4 ................

5. திருமலை சேதுப
6. தி மகாராசர் அவ
7. ர்கள் ..... த்தொ
8. கை மங்கலமா
9. கிய நினைத்தது மு
10. டித்த வினாயற்
11. பட்டணமாகி
12. ய கீழக்கரை மீ
13. னாட்சி சுந்தரே
14. ச்சுவருக்கு தா
15. னம் பண்ணி குடு
16. த்த கிராமம் கொ
17. ........................
18. ........................
19. க்கு எல்கை
20. கொ ...............
21. ........ சருகாவி
22. க்கும் சொகக
23. னாதர் கோவி.
24. லுக்கும் ஏசு

25. கோவிலுக்கும் ப
26. னா விரியற்
27. துறைக்கும் பே
28. மற்கு சமுத்த
29. ரக் கரைக்கு வட
30. க்கு பள்ளியார்
31. முனை முந்தலு
32. க்கும் காளலி
33. ங்கம் கோ
34. விலுக்கும் கோ
35. தை சமுத்திரப் பு
36. னாந்தை காவை
37. க்கும் கிழக்கு புளுந்
38. தைக் குடியிருப்
39. புக்கும் ............
40. டம் ..........
41. ணக்கும் செக்
42. பாதைக்கும் தெ
43. ற்கு பாதி செக்கு

2. A.R. 398/1907 சகம். 1462 (கி.பி. 1545)

1- 7 ................
8. ணன் சாடிக்க
9. ஈறர் கண்டன் ச
10. ம்மட்டி நாராயண
11. ன் வ ......... துட்ட

12. கெருட ........ காக
13. நானா வன்னி
14. மண்டலிகர் க
15. ண்டன் ஸ்ரீமது
16. அச்சுத ராய
17. தும்முசி நாயக்கர்
18. கீழக்கரை யா
19. ன நினைத்தது
20. முடித்தான் பட்டி
21. னத்து பதினென்
22. விஷையத்தாற்
23. க்கு சறுவ மானிய
24. ம் ஆகக் கல்லு
25.வெட்டி நாட்டி
26. க் குடுத்த படி மடி
27. ச் சிலைவரி உண்டா
28. னதும் காவலும் இ
29. நுத்து சுகத்திலே இ
30. ருக்கவும் செட்டு
31. என்கிற மானியத்
32. துடனே நடத்திக்
33. கொள்ள கடவோம்
34. ஆகவும்.

3. A.R. 396/1907 சக ஆண்டு 1453 மாசி மீ.13. (கி.பி.1531)

1-7 ......................

8. செம்பி நா

9. ட்டு அனுத்

10. தொகை

11. மங்கலத்து

12. நயினார்

13. நினைத்தது

14. முடித்த

15. பிள்ளையார்

16. பூசைக்கும்

17. திருப்பணி

18. க்கும் நாலு

19. பட்டணத்

20. தில் பதிநெ

21. ண் விஷெ

22. யத்தார் தன்

23. ம மாக குளி

24. முத்து வேண்

25. டாம் என்று

26. கற்பித்துக்

27. கிழைக்கரை

28. யில் யாதா

29. மொருத்தர்

30. முத்து விற்

31. கிறவர்களை

32. நுற்றுக்கு
33. அரைப்பண
34. ம் குடுப்போ
35. மாகவும் இது
36. க்கு அகுதம்
37. நினைத்தவர்கள்
38. கெங்கைக்
39. கரையிலே கா
40. ராம் பசுவை
..........................

## இணைப்பு II

### கீழக்கரை பழைய குத்பா பள்ளிவாசல் கல்வெட்டுக்கள்

1. கீழ்புறம்

1. கொல்லம் 790 வருஷம்
2. ஆனந்த வருஷம் காத்
3. திகை மாதம் 26 தேதி வெட்டு
4. ம் பெருமாள் பெத்த
5. னா மரக்காயர் காதி
6. யார் மன்னன் சமா
7. யினா வாவு மரக்கா
8. யர் வாவாலி மாப்
9. பிள்ளை வெள்ளிக்கிழ
10. மை பகல் மரித்தார்
(கி.பி. 1614)

2. மேல்புறம்

1. கொல்லம் 835
2. வருஷம் விளம்பி வருஷம் பங்
3. கூனி மாசம் 22 தேதி கப்ப
4. ல் நயினா மரைக்காய
5. ர் செயிகு இவுறாகீமரை
6. க்காயர் கப்பல் நயினா ம
7. ரைக்காயர் செயிகு இ
8. வுறாகீமரைக்காய
9. ர் கப்பல் நயினா மரை
10. க்காயர் செயிகு இவு
11. றாகீ மரைக்காயரவர்
12. கள் திங்கள்கிழமை
13. யிரவு மவுத்தானார்
(கி.பி. 1659)

3. தென்புறம்

1. கொல்லம் 779
2. மாசி மாதம் 13 தேதி துக்குனி
3. சீ சேனா அப்புநயினா
4. நயினாசியார் குட்டி
5. மாயினா அப்பு மரக்
6. காயர் வியாழக்கிழ
7. மை பகல் மரித்தார்

(பின்புறம் அரபு மொழியிலும் எழுதப்பட்டுள்ளது கி.பி.1603)

## இணைப்பு III

### கீழக்கரை காட்டுப்பள்ளி கல்வெட்டு

(எஸ்.வி.எம். தோட்டத்துக்கு அருகில்)

1. கொல்லம் 64
2. 2 ஆவது காத்தி
3. தை மாசம் 14 தேதி
4. புதன் கிழமை
5. இரவு சகரர்
6. மரி* த்தார்
   (கி.பி. 1466)

* ரி - திபோல எழுதப்பட்டுள்ளது.

## இணைப்பு IV

### வேதாளை கூரைப்பள்ளி கல்வெட்டு

இடம்; கால்ப்பகுதியில் நடப்பட்டுள்ள நடு கல்லின் வெளிப்புறத்தில் 10 வரிகளும், உள்புறத்தில் 14 வரிகளும் உள்ளன.

காலம் - கி.பி. 1687

1. கொல்லம் 863 ஆண்டு
2. பிரபவ வருஷம் வைய்காசி 2 தேதி
3. செல்லக்குட்டி மரைக்காயர்
4. நத்துக்கணக்கப்பிள்ளை

5. மழ மரைக்காயர்
6. மாமு நயினா மரைக்காயர்
7. பெரிய தம்பி மரைக்காயர்
8. சேகு இபுராகிம் மரைக்காயர்
9. வெள்ளிக்கிழமை இரவு
10. மரித்தார்
11. இந்த சன்னதியாவது திருவடி
12. சீமை தேசாதியத்துக்கு மணிய
13. மாக நின்று நசுருக்கள் ஏழு
14. கரை துறைக் கோளிலும்
15. சுட்டு இடிக்கக் கீர்த்தியும்
16. மிகவிருதும் பெத்த பெரிய தம்பி
17. மரைக்காயர் குமாரரான சேகு
18. இபுராகிம் அவர்களுக்கு
19. அல்லாகுத் தாலாவுடைய
20. திதுமத்தும் திருக்காட்சியும்
21. பிழைபொறுக்குதலும்
22. இரகுமத்தும் இரசுல் சல்லல்லாகு
23. அலைகிவசல்லமுடைய தாவத்து
24. முண்டாவதாகவும் ஆமீன்.

## இணைப்பு V

எட்டையாபுரம் உமறு கத்தாப் புலவர் பாடிய

# வள்ளல் சீதக்காதி திருமண வாழ்த்து

1. கார் கொண்ட ஞாலம் ககனாதி யும்பலவும்
ஏர்கொண் டமைத்த இறையொருவ னைப்பணிவாம்

2. சீர்மேவு செல்வச் சிறப்பாகி எப்பொருட்கும்
பேர்மேவி நின்ற பெரியோனைப் போற்றிசெய்வாம்

3. முத்தொளியில் வந்த முகம்மது றசூல் நபியை
நித்தலுமே நெஞ்சில் நினைந்து துதிப்பாமே

4. தாயிற் கருணைவைத்த தற்பரனைப் போற்றிசெய்வான்
வாயிற்கல் வைத்த அபூ பக்கர் பதம்பணிவாம்

5. விண்பாத்த வெங்கதிரோன் மெய்கறுப்பச் செங்கமலக்
கண்பார்த் தருள்உமறு கத்தாப் சரண்நினைவாம்

6. வேதப் பொருள்தெரிந்து மிக்கபுவி யிற்சிறக்க
ஓதும் உது மானை எம துள்ளந் தனில்நினைவாம்

7. வாட்டிறத்தால் நேர்ந்த மருவார் குறும்படக்கும்
ஆட்டிறத்தால் மிக்க அலியார் பதம்பணிவாம்

8. ஆதி நபிமகளார்க் கன்பா மகவான
நீதி அசன்உசைனை நித்தலுமே போற்றிசெய்வாம்

9. தகையதீன் எல்லாம் தழைக்கப் புவியில்வந்த
முகையதீன் செய்ய முளரிப் பதம்பணிவாம்

10. கருங்கொண்ட லார்சர்க் கரைமழை பெய்யவந்த
பெருங்கொண்டல் வாவா பிரசமலர்த் தாள் பணிவாம்

11. நிதக்கத்துள் ளாக்குபிறர் நெஞ்சம் பிளக்கவரும்
சதக்கத்துல்லா உபய தாமரைத்தாள் போற்றிசெய்வாம்

12. ஒருவ னருள்பெற் றுலகில் ஒலி யாகவந்த
தருமுதலி யார்லெவ்வை தாமரைத்தாள் போற்றிசெய்

13. மாகாலம் வந்த மறைப்பொருளைத் தான்விளக்கும்
சேகாலி லெவ்வை செழுங்கமலத் தாள்பணிவாம்

14. நல்லோர் பெரியோர்கள் நாயனருள் பெற்றிருந்த
எல்லோர் தமையும் இதயத் தனில்நினைவாம்.

15. மானபரன் செய்ய வகுதா பதி*க்கிறைவன்
தான பரன் பெரிய தம்பி வரபாலன்

16. நன்மை விசயரகு நாதப் பெரிய தம்பி
தன்மபரி பாலன் தமிழ்க்காய லாதிபதி

17. பூபன் பெரியதம்பி புத்திரன் செய் தக்காதி
சோபன வாழ்த்தும் சுகவாழ்த்தும் வாழ்த்துகிறேன்

18. செங்கமலை மார்பிற் சிறந்தசெய் தக்காதி
மங்கள வாழ்த்தும் மணவாழ்த்தும் வாழ்த்துகிறேன்

## வள்ளல் சீதக்காதியின் சிறப்புகள்

19. தேனைத் தகர்த்திடையே திங்கட்கோட் டாலுழக்கி
வானைத் தடவும் மணிமரக தக்கிரியான்

20. நிரைகொழிக்கும் முத்தும் நிதியும் திரைக்கரத்தால்
கரைகொழிக்கும் செல்வக் கறுப்பாறு காவலவன்

25. மெய்ப்பந் தயமுரைக்கும் மேவார் சிரம்பிடுங்கிக்
கைப்பந் தடிக்குங் கரடவெள்ளை யானையினான்

26. மீனைக் கொடிப்புலியை வில்லைவென்று மேவலர்கள்
சேனைத் திரள்முறிக்குஞ் சிங்கக் கொடிவேந்தன்

27. தெம்முனைகல் யாணஞ் சிறந்த கொடை யென்றியம்பும்
மும்முரசு நின்று முழங்குமணி வாயிலினான்

28. மனந்தனிலுஞ் சொல்லுகின்ற வாய்மையிலும் நித்ரைசெய்யும்
அனந்தரிலும் அல்லாவி னாணைமற வாதபிரான்

*வகுதாபதி - வகுதை நாட்டு கோனகர், கீழக்கரை.

29. முந்துதமிழ்க் கீர்த்தி முடிமேற் றிரண்டதெனச்
சந்த்ரகலை யொன்றுஞ் சறுவந்து* மாமுடியான்

30. மெச்சுபுகழ் மாறன் விருந்தளித்துச் சாணகத்தால்
எச்சில் தெளித் தானென் றிதயந் தனில் நினைந்து

31. மீனவற்கு† நாமும் விருந்தளிக்க வேணுமென்று
தானைமன்ன ரெல்லாந் தலைவாசல் காத்துநிற்பப்

32. பொன்கூடந் தன்னிற் புருடரா கத்தளத்தில்
தென்கூட லாதிபனைச் சிங்கா சனத்தில்வைத்துச்

33. செங்கனகப் பள்ளயம் பொற் சேனைகால் மீதில்வைத்துப்
பங்கயக்கை பூசநறும் பன்னீர் மிகச்சொரித்து.

34. கன்னல்முத்தும் வேயின் முத்தும் கஞ்சமுத்தும் பூகமுத்துஞ்
செந்நெல்முத்துந் தந்திமுத்துந் தெங்கின் முத்தும் சங்கின்முத்தும்

35. விலைமதியா நாகமுத்தும் மீனின்முத்து மானின் முத்தும்
அலைகடலி லாணிமுத்தும் அன்ன மாகச்சொரித்து

36. மாணிக்கம் பச்சை வயிரம் வயிடூரியங்
காணிக்கை யான கறியாக வேபரப்பி

37. நீயருந்தி மிச்சில்வைத்த நித்திலத்தி னெச்சிலுக்கு
நாய்பிணங்கு தென்றுபுகழ் நாட்டுபிர தாபதுங்கள்

38. கைதவனுங் கேட்டுக் களிகூர்ந்த தென்றதற்பின்
மைதவமுங் கூடமதை வன்னிக் கமுதாக்க

39. ஏதென்றீர் சாணக மிட்டாற்போ மெங்களெச்சில்
சூதொன்று முங்களெச்சில் சுட்டாற்போ மேன்றதுங்கன்

40. நாணித் தலைகவிழ்ந்த நன்மாறன் பொன்மார்பில்
மாணிக்கங் கொண்டெறிந்த வச்ரா யுதபாணி

41. பாண்டியன் முன் வந்து நின்று பாவடிகை யாலமுத்தத்
தாண்டுபரி மீதேறுஞ் சங்கராம கெம்பீரன்

* சறுவந்து - தலையில் அணியும் ஒருவகை அணி

† மீனவற்கு - பாண்டிய மன்னனுக்கு

42. பின்னிற்கு மாரனெனும் பேரரசு மாறனவன்
முன்னிற்கு மாரனென மூவுலகுங் கீர்த்திபெற்றோன்

43. மைவருக்கஞ் சூழ்சோலை மாமதுரைப் பாண்டியர்கள்[1]
ஐவருக்கு மாறக ஆறாம்பேர் கொண்டபிரான்

44. நிலமகளுஞ் சயமகளும் நிற்ப வழுதிசெல்வக்
குலமகளைக் கைப்பிடித்துக் கொண்ட மணவாளன்

45. வேனீட்டுஞ் செங்கை விறல்வழுதி தன்கொலுவில்
கானீட்டும் வாசல் கடந்தானை மீதுவந்தோன்

46. மாறடங்கார் போற்றும் வழுதி மனையாட்டி
வீறடங்க வேலைக்கு வேல்கொண்ட தாட்டீகன்

47. விருப்பினா லைங்காதம் மீனவன் பெண் வீடுமட்டுங்
கருப்பினால்* பந்தலிட்டுக் கல்யாணம் செய்தபிரான்

48. தொழலில் மாற்றலர்கள் சுற்றப் படைகலத்தால்
மழவன் றனைக்காத்து மாநிலத்தில் வைத்தபிரான்

49. மட்டில்லா நானூறு வாசிக்கு மார்பேற்ற
செட்டிகளை யன்று சிறைமீட்ட புண்ணியவான்

50. செட்டி சிறைமீட்டுத் தென்னிலங்கை தன்னிலுங்கோ
முட்டி சிறைமீட்டு மூவுலகும் பேர்படைத்தோன்

51. வாரிதனி லேயறிந்த வங்கம் விட்டி லங்கைபிடித்த
தாரியனை மிக்கா யரியா சனத்தில்வைத்தோன்

52. தந்நிகரி லைந்துவகைச் சாதியானு மாந்தையில்வாழ
கம்மியரைத் தன்மகவாய்க் காக்கு மபிமானி

1 பாண்டியர்கள் ஐவர் - பன்னிரண்டு பதின்மூன்றம் நூற்றாண்டுகளில் நிர்வாக நலனுக்காக பாண்டிய நாடு ஐந்து பகுதிகளாகப்பிரிக்கப் பட்டு இருந்தது. அங்கு ஆளுநர்களாக இருந்தவர்கள் பஞ்சபாண்டியர் என அழைக்கப்பட்டார்கள்.

*கருப்பு - கரும்பு என்ற சொல்லின் திரிபு

53. பாண்டிக் கரையளித்து பட்டினவ ரைப்புரந்து
நீண்டக்கரையாரை நிர்த்தூளி யாகவென்றோன்

54. சேரன் குடையெடுப்பத் தென்னன்கொடி யேந்திடவார்த்
தாரான் துகிலெடுப்பச் சங்கப் புகழெடுத்தோன்

55. பாரைமுழு தாளும் பாராசர் கொண்டாட
வீரைநகர் மாவலியைக் காத்த விறல்வேந்தன்

56. அமரரா னோர்க ளடங்கலுங்கொண் டாடவென்று
சமரகோ லாகனைத் தற்காத்துத் தாபநித்தோன்**

57. வெல்வீரர் மேவலரை வீறடக்கி முக்குவர்க்கு
நல்வீர மும்மூக்கும் நாக்கும் படைத்தபிரான்

58. ஆணா கரிகன் அடைக்கலங்காத் தோன் வலங்கைச்
சாணார் தமைக்காக்குத் தர்ம பரிபாலன்

59. தென்மண் டலமுஞ் செழித்தசெம்பி நன்னாடும்*
பொன்மண் டலமும் புரக்குந் துரைப்பெருமான்

60. எண்டிசையும் போற்று மிரதக் கிணறுடனே
தண்டரள வாரிச் சலாபத் துறை# யுமுள்ளோன்

61. வந்தாடத் தோகை மயிலாடக் கொம்பாடுஞ்
சந்தாட விக்கிறைவன் தாதாடும் பூம்புயத்தான்

62. சொன்னாடும்*** பொன்னாடுஞ் சோணாடும் மேனாடும்
எந்நாடுங் கொண்ட இறைவன்வச்ர நன்னாடன் ****

** தாபநித்தோன் : (வடசொல் திரிபு) நிலை நிறுத்தியவன்

* செம்பி நன்னாடு : பாண்டிய நாட்டின் கிழக்கு கடற்கரை பகுதி நாடு கீழ் செம்பியநாடு, வடதலைச்செம்பிநாடு என இருவகையாக இருந்தது.

# சலாபத்துறை : முத்துக்குளிக்கும் பகுதி

*** சொன்னாடு : (சொர்ணநாடு) சோனகநாடு

****வச்ர நன்னாடன்: சீதக்காதியின் முன்னோர்கள் அரபு நாட்டில் இருந்து தமிழகம் போந்தவர்கள் என்ற பழமையைக் குறிக்கும் வண்ணம் சீதக்காதி இவ்விதம் குறிக்கப்பட்டுள்ளார்.

63\. பேறாக வந்த பெரியதம்பி கண்மணியாய்
மாறம லேவளர்க்க வந்த செய்தக் காதிமன்னன்

64\. பிந்தாத செல்வப் பெரியதம்பி கண்மணியாய்
மந்தார தாருவென வந்தசெய்தக் காதிமன்னன்

65\. தரணி புகழ்பெரிய தம்பிவரத் தாலுதித்த
கருணைமுகி லானசெய்தக் காதி நரபாலன்

66\. வங்களம்கர் நாடகம் மலையாள முச்சீனம்
சிங்களம் மராடம் தெலுங்கு குருநாடம்

67\. கலிங்கம் குசலம் கவுதம்திரி கூடம்
குலிங்கம் கடாரம் குடகம் துளுநாடம்

68\. மாகரைநல் ஈழமச்சை மஞ்சம்பாஞ் சாலம்டில்லி
ஆகரை கபாடம் அயோத்தி கலியாணம்

69\. பல்லவம்காம் பீலிமக்கம் பப்பாவம் குச்சரியங்
கொல்லமாச் சீனம் கண்டி கொங்கணம் தாரிசப்றா

70\. கிட்டா மலாக்காயிஸ் கிரீஸூ பிராஞ்சுலாந்தா
அட்டாள திக்கிலும்கிள் ளாக்கைச்* செலுத்துவிரான்

71\. சீனத் திருத்துவந்த சீனும்ப ரங்குவிக்க
மானத்து முத்துமொலி வாரிமுத்த முந்தெறிப்ப

72\. மரகதம் வச்ரம் வயிடூரியம் நீலம்
அரவின் மணிபுஷ்க ராகங்கோ மேதகமும்

73\. பைகோவை யிற்செம் பதுமரா கம்பவளம்
கைகோவை யாகவிலை காட்டியொரு பாற்குவிக்க

74\. ஈழத்திற் கிட்டாலி லேற்றிவந்த கப்பலர்க்கு
வேழத் திரள்களெல்லாம் வீதிதொறுஞ் சேர்த்துநிற்ப

75\. அச்சைனும்* மித் தேசத் தரசர் வரவிடுத்த
பச்சைப் பரிகளைப்பல் பந்திபந்தி யாய்நிரைப்ப

* கிள்ளாகி: வணிகக்கப்பல் அல்லது ஆணை.
* அச்சைன்: இந்தோ - சீன நாடு

76. வங்காள நாவி மலாக்காகஸ் தூரியம்பர்
கொங்காருங் காசறையுங் குங்குமப்பூப் பன்னீரும்

77. சந்திரமும் மோகரமுஞ்** சம்பூறும் பல்லங்கியும்
வந்ததங்கக் காசும் மலிந்தகுதி ரைக்குளம்பும்

78. வெள்ளித்தகட் டவ்வாசு மிக்கரூ பாயிறையால்
அள்ளிப் பலதிசையும் அட்டகிரி போல்குவிக்கத்

79. தெண்டிரையிற் பொன்னும்பல் தேசத்துப் பொன்னும்வரக்
கண்டுகளி கூருங் கருணு கடாட்சமுகில்

## திருமண நாள் நிர்ணயித்தல்

80. தேடும் புகழ்க்கவிதைச் செந்தமிழோர்க் கீந்துதவும்
நாடும் விசையரகு நாதப் பெரியதம்பி

81. தேசம் புகழ்செய்தக் காதியெனும் பூபதிக்குக்
காசினியி லின்பக் கலியாண மென்றுசொல்லி

82. மண்ணரசர் போற்றுகின்ற மன்னியகெம் பீரனுக்குப்
பெண்பேசிக் கொண்ட பெருமை தனைப்புகல்வாம்

83. பிரச மலர்மானைப் பெற்றோர் மனையகத்தில்
வரிசைக் கிளையோரும் மற்றேருஞ் சேர்ந்திருந்து

84. வில்லமையும் வாணுதலார் வேளெனுஞ்செய் தக்காதி
வல்லமை பேசும் வகையதனைக் கேளுமினி

85. ஆதி யொருபொருளை அஞ்சுவக்தும் தப்பாமல்
நீதி யுடன்வணங்கு நேமமற வாதபிரான்

86. செப்பரிய ஹஜ்ஜு வண்மை செய்கின்ற சக்காத்து
முப்பது நோன்பும் முடிக்குந் தபோதனன்காண்

87. அய்யா நபுல்நோன்பும் ஆசுற நன்னோன்பும்
நையாமல் ஆசார நன்னோன்பு நோற்பவன் காண்

** மோகரம்: பொன் நாணயம்

88. வேதியர்க்குங் கற்றேர்க்கும் மிக்கோர்க்கும் பக்கீர்க்கும்
சாதி யெவர்க்கும் அன்ன சத்ரம் வளர்ப்பவன்காண்

89. புவிநாலு திக்கும் புகழெலாங் கொண்டாடும்
கவிநா வலவர்கலிக் கங்குலுக்கோர் சூரியன்காண்

90. பாரனைத்தும் போற்றும் பரராசர் கொண்டடும்
வீரவிக்ர மாறனென வெற்றிகொண்ட வெம்புலிகாண்

91. கோரப் பறங்கி* குலங்களெல்லாம் வேரறுத்துச்
சூரத் தனமிருத்த சுத்தரண கேசரிகாண்

92. இரணிய கெர்ப்ப இரவிகுல ராசன்
தரணிய புகழுந் தனுக்கோடி காத்தமுகில்

93. மூவுலகை யாளும் முடிமன்னர் போற்றவந்த
தேவைரகு நர்தேந்த்ரன் சிந்தை களிகூர

94. அட்டகச மன்னமத யானைத் திரள்கோடி
வட்ட மிடுங்கவன வாசித் திரள்கோடி

95. ஆரங்கி யாக அண்ட கூடந் தகர்த்திடிக்கும்
பீரங்கி கோடி பிடிகோடிதேர்கோடி

96. பச்சைக் கடகம் பரியகலிக் கத்துறாய்
வச்சிரப் பந்தி வயிடூரி யக்கடுக்கண்

97. சீனச் சுருட்டுச் சிவந்தசக லாத்துவெகு
மானச் சுளிகையங்கி வச்ராங்கி பொற்சோடு

98. உச்சிதமாய்க் கட்டி யுரகத் துடன்கொடுக்க
மெச் சியிவன் நிக்காஹ் வேந்தனென வேமகிழ்ந்து

99. தண்டிகைமுன் பின்வெள்ளைச் சாமரைகா ளாஞ்சிகுஞ்சம்
அண்ட முகடுடைய ஆனை மேற் பேரிகையும்

100. சொல்லரிய சாமித் துரோகிகண்ட தண்டயமும்
வல்லமையாய் நல்க வரிசைபெற்ற மன்னவன்காண்

* பறங்கி: ஐரோப்பியரைக் குறிக்கும் பொதுச்சொல் இங்கு போர்ச்சுக்கீஸியரை குறிக்கிறது.

101. வேலிக் கடல்புடைசூழ் மேதினியோர் கொண்டாடத்
தாலிக்கு வேலி சத்தசமுத் ராதிபன்காண்

102. முரசு முழங்குமணி முன்றிலான் மன்னர்க்
காசுநிலை யிட்ட அதிகமரி யாதையன்காண்

103. செல்வத் துரைமகள்காண் சேவகன்காண் சீவகன்காண்
பல்லக் கரசர் பணியும் பதாம்புயன் * காண்

104. பூமே லிருக்குமொரு பொன்னின்விளக் கேந்திரண்டு
மாமேரு வென்ன வளர்ந்தெழுந்த திண்புயன்காண்

105. அருண கிரணவிம்ப வம்புயம்போல் யாவருக்கும்
கருணை குடியிருந்த கண்ணன்காண் கன்னன் ** காண்

106. வாளுக்கு வீமன்காண் வாய்மைரிச் சந்திரன்காண்
ஆளுக்கு மன்மதன்காண் அறிவுக் ககத்தியன்காண்

107. பொறைக்குத் தருமன்காண் புந்திக்கு மந்திரிகாண்
நிறைக்கும் பெருஞ்செல்வ நித்யசுப சோபனன்காண்

108. கூறச் சரக்குவிலை கூறிநிச மாய்மதிக்கும்
மாறாச் சவுபாக்ய வர்த்தக சிரோமணிகாண்.

109. இன்னதன்மை யாகவந்த எங்கள்பெரு மானெனவே
சொன்னவுட னேபொருந்திச் சோபனமென் றேமகிழ்ந்து

110. தம்மி லிசைந்து வெகு சந்தோட*** மாச்செனவே
செம்மை யுடன்வலது செங்கை கொடுத்தபின்பு

## பந்தற்கால் நாட்டுதல்

111. ஓதும் பெரியோரும் உற்றோரும் பெற்றோரும்
ஏதமில்லா நன்னு ளிதுவே முகிழ்த்தமென்று

*பதாம்புயன்: பாதம்புஜம் என்ற வட சொற்கள் திரிபு
கால்களும் தோள்களும் என்பது பொருள்

**கன்னன்: கர்ணன் என்ற கொடைவள்ளல்.

*** சந்தோடம்; சந்தோஷம் என்ற வடசொல் திரிபு

112. மேள முழங்க விருதுசின்ன மார்ப்பரிக்கத்
தாள மதிரத் தவில்முரசு தாம்கறங்க

113. ஏத்தரிய நல்லோரு மெல்லோருங் கையேந்திப்
பாத்திகா வோதிப்பரிந்து துவாவோதி

114. நானில்மெல் லாமதிக்க நன்முகிழ்த்த வேளைதனில்
கானுலவு செம்பவளக் காலெடுத்து நாட்டினரே

## பந்தல் அமைப்பும் அலங்காரமும்

115. மறுக்கலவாச் செம்பொன் வளைபரப்பி வெள்ளியினுல்
குறுக்கு வலையதன்மேற் கொண்டு பரப்பினரே

116. வச்ர மிழைத்து வரிச்சுக் களைப்பரப்பிப்
பச்சை மரகதத்தால் பலகணிவா யில்வகுத்துச்

117. செங்கனகக் கம்பியினுல் சேர வகுந்திருக்கித்
தங்கத்தகட் டால்வேய்ந்து சாளாங்கள் தாம்வகுத்தார்

118. மாணிக்கத் தாலே மணிக்கொடுங்கை தான்சேர்த்து
ஆணித் தரள மணியணியாய்த் தூக்கினரே

119. நீல மணியும் நிறைந்தகோ மேதகமுங்
கோலவயி டூரியத்தின் கோவையுடன் தூக்கினரே

120. பொங்கொளிசேர் கின்ற புருடரா கச்சரமும்
எங்குமொளி வீசு மிலங்குபவ ளச்சரமும்

121. பதுமரா கச்சரமும் பத்திபத்தி யாய்த்தூக்கி
நிதிகுலவு முன்முகப்பு நித்திலத்தில் வேய்ந்தனரே

122. மல்லிகையுஞ் செம்பகமும் வாய்ந்தகுட மல்லிகையும்
முல்லையொடு பிச்சி முறைமுறையாய் முன்தூக்கிச்

123. செங்கழுநீர் வெண்டாழை செந்தாழை பைங்கமலத்
தங்குமலர் பாதிரிமந் தார மிருள்வாசி

124. செவ்வந்தி பொற்கொன்றை செவ்வாம்பல் மாதுளம்பூ
அவ்வந்தி நேர்மலர்ந்த அழகிய நீ லோற்பலமும்

125. இந்தமல ரெல்லாம் இசைந்தர மாய்த்தொடுத்துப்
பந்தரிட மெல்லாம் பரிந்துவிதா னித்தனரே

126. பூங்கமுகின் பாளைதென்னம் பூவிரியுங் காவிரியும்
தேங்கதலித் தாறுநிரை செவ்விளநீர்ப் பைங்குலையும்.

127. மிச்சமென்று கூறுமெலு மிச்சம் பழத்துடனே
இச்சகங்கொண்டாடுங்கொ ளுஞ்சிப் பழம்பலாக்காய்

128. வாழைப்பழமும் வளர்தமரத் தம்பழமும்
கூழைப் பலாவின் குடக்கனியுந் தூக்கினரே

129. பொற்குடம்போல் வாய்குவிந்த்த பூமாது ளங்கனியும்
பற்பலசிங் காரமதாய்ப் பந்தரெங்குந் தூக்கினரே

130. கரும்புடனே பைங்கதலி காய்க்கமுகு கொண்டாடும்
கரும்புலவச் செம் பவளத் தூண்கடொறுஞ் சேர்த்தினரே

131. மேகவண்ணப் பட்டுடனே வீரவா ளிச்சேலை
வாருபெற ருத்ரவன்னி வாழ்சந்த்ர வன்னியுடன்

132. மாந்தளிர்போற் பூத்தொழிலின் வன்னமிகு சூர்யபடம்
காந்திபெறும் பொற்சரிகைக் கம்பிக் கரைச்சேலை

133. வண்ணவண்ண மாக வகைவகையே கொய்துகொய்து
மின்னொளிசேர் காவணத்தை மிக்கா யலங்கரித்தார்

134. வந்தநவ ரத்ன மணவறையில் வெண்கிரணச்
சந்த்ரகலைச் சிங்கா சனமு மமைத்தனரே

135. தேகங் குளிர்ச் சிறுகொண்டல் வீசிவரப்
பாகங்க டோறும் பலசா ளரம்வகுத்தார்

136. பக்கமெல்லாங் கோடி பகலோ னுதித்ததென
மிக்கநவ ரத்ன விளக்கெல்லாம் நின்றொளிரத்

137. தூண்டா மணிவிளக்குத் தூக்குவிளக் குஞ்சிறப்பக்
கூண்டா யிரங்கோடிக் குத்துவிளக் கேற்றினரே

150. சம்பங்கிப் பூந்தயிலம் தான்முடியிற் கோதியம்பொற்
கும்ப நிறையுங் குளிர்மஞ்ச னஞ்சொரிந்தார்

151. பூந்துகிலா வீரம் புலரப் புலர்த்தியபின்
வாய்ந்தபசும் பொன்னு டை வர்க்கந் தெரிந்தெடுத்து

152. வன்ன சுளிகை வரிசை நிசாரணிந்து*
பொன்னினரை ஞானும்வச்ரப் பூட்டுமுருக் காணியிட்டு

153. பொன்னம்பர் கஸ்தூரி பூம்பன்னீர் சந்தனமும்
தென்னம் புனுகுசவா தெல்லாம் புயத்தணித்து

154. தோற்றுமணி வச்ராங்கிச் சோடணிந்து** மேதினியோர்
போற்றி விலைமதியாப் பொன்னினடுக் கட்டிறுக்கிப்

155. பச்சை மணியுதர பந்தனமுஞ் சேர்ந்திலங்கும்
வச்சிரத்தி னு லிழைத்த வாகுவல யம்புனைந்து

156.வாகுபந்த னம்பூட்டி வயிரத்துறா அணிந்து
நாகரிகக் கைமேலே ரத்னகங்க ணம்புனைந்து

157. சீவரத்தைக் தாலிழைத்த செய்யவீர வாளியிட்டுக்
காவையொத்த கைமேல் கரபந்த னந்தரித்துத்

158. தண்டரள மாலிகையுந் தங்கச் சரப்பளியும்
கண்டசர மும்பொற் கனபதக்க முந்தரித்து

159. மாணிக்க மாலையுடன் குங்குமத்தார் மார்பிலணிந்
தாணிக்கு வேளெனக்கண்ணுடி நிழல்பார்த்து

160. வீசுசரு வந்து முடி மீதுநவ ரத்தினத்தின்
வாசிங்கம் பூட்டி வயிரத் துறா நிறுத்திப்

161. பொன்னு ர மாலையிட்டுப் பூச்செண்டு கைப்பிடித்து
மின்னு ர் குரவையிட வெள்ளானை யேறினனே

---

* நிசார்: (உருதுச்சொல்) கால்சட்டை

** சோடு : (உருதுச்சொல்) காலணி

## ஊர்கோலம் வருதல்

162. விடவரவி னுடனெளிய மிகுவடவை கெட இடறு
தடவிகட கெறுவ*மதத் தவளவெள்ளை யானையினன்

163. சொடியவிட வரவுபடக் குவடிடிய வடவைகெடத்
தொடுகடலினகடுடையத் தோன்று வெள்ளை யானையினன்

164. மொகுமொகென அளிகுலவு முதிருமத சலமொழுகு
விகடரண முககலனை வெள்ளானை யேறினனே

165. திடதிடென . . . . . . நடவிகட செயவிசய
தடகரட மடையொழுகு தவளவெள்ளை யானையினன்

166. தடவிகட கரட கடத் தவனமது மொகுமொகெனத்
தடவிகட கரட கடத் தவன வெள்ளையானை யேறினனே

167. பிரசமுறு வாகைப் பெருந்தொடையல் சூடிவெற்றி
அரசர்மக்கள் கோடிவெள்ளை யானைதனைச் சூழ்ந்துவர

168. ஆணியல்பு காட்டி அலகம்பி சேர்சுரிகை
தூணியும்வில் லும்பிடித்துத் தொட்டியர்**பல் கோடிவரக்

169. கேடகஞ்செங் கோடி கிரணவடி வாளெடுத்துக்
கோடையிடிபோல் கோடி குதிரைரா வுத்தா வரக்

170. கட்டியக் காரர் கனவிருது கூறிவரப்
பட்டவித் வாங்கிசர் பலதிசையுங் கொண்டாடச்

171. சந்திரனைச் சூழ்ந்துவருந் தாரா கணம்போல
முந்து கிளைஞர் மொகுமொகெனச் சூழந்துவரத்

172. திமிலி தடாரி திடுமன் கனகதப்புக்
குமுறும் பதலை குடமுழவு வீராணம்

173. பேரிகை பம்பை பெருமுரசு மல்லாரி
பூரிகை நாகசுரம் பொங்குகடல் போல்முழங்க

174. ஆனைமேற் பேரி அதிருமிடி போற்கறங்கக்
கூனல்முது கொட்டையின்மேற் கொண்டடம்மா னம்மதிர

---

* கெறுவம் : கர்வம் என்ற வடசொல்

** தொட்டியா: வடுகரில் ஒரு பிரிவினர்

175. எற்றுங் குதிரை யிடம்மானந் தான்கலிப்ப
வெற்றிநா கேசமென மேளமிக முந்தொனிப்ப

176. தாரை நமரிகொம்பு சத்தமிடு மெக்காளம்
வீரகரு ணுவாங்கா வெண்சங்க முந்தொனிப்ப

177. முத்துக் குடையு முழுவயிரப் பொற்குடையும்
பத்தியொளி வீசு பவளச் செழுங்குடையும்

178. செம்பொற் குடையுந் திகழும்வெள்ளி வெண்குடையும்
சம்பத்தில் வந்துபுவி தாங்காச் சமுத்திரமும்

179. சுற்று நிரைத்துவரத் தூயசிங்க கேதனமும்
அற்றமில்லா வீரவெள்ளை யானை நெடுங்கொடியும்

180. பக்கம் பிடிக்கப் பலபேருந் தரம்சூழத்
தக்கவியன் மத்தளங்கைத் தாள முழங்கிவர

181. வாய்ச்சங்கு தித்திசுர மண்டலமுங் கின்னரமும்
வேய்ச்சங் கிதமுமுக வீணைதண்டை வாத்தியமும்

182. வீணை கயிலாச வீணையிசை காமாட்சி
வீணைருத்ர வீணை விளங்குகிற பாவுடனே

183. சரமண் டலமுடுக்கை சந்திரவளை யங்குளிர
நாமண் டலம்புகழும் நல்லிசையார் தாம்வணங்கத்

184. தாளம் வழுவாமற் சங்கீதந் தான்கறங்க
மேளம் வழுவாமல் வீதிதொறுந் தான்முழங்கக்

185. கண்டா*ரா கத்துடனே கல்யாணி காம்போதி
கொண்டல்சொரி மேகக் குறிஞ்சிசங்க ராபரணம்

186. தோடி வராளி சுத்ததன்னி யாசிகெளரி
பாடிசுதி கூடியிசைப் பாடகர்முன் பாடிவரச்

187. சத்த தளத்திலேழு தாள முழங்கிவர
ஒத்தகுச் சாதியுயரசக் கனிவுடனே.

188. பாத முறை தப்பாது பவுரிக்கேற்பக்
காதலத்தில் நட்டுவன்மார் கைத்தாள மொத்திடவே

* கண்டா: கானடா என்ற ராகம்

189. நெருங்குஞ் சிலம்பாட நீள்சதங்கை தானுட
மருங்குதுவண் டாட மயிலார் நடமாடத்

190. தங்கத் தீவட்டி தயங்குவெள்ளித் தீவட்டி
கங்குல் பகலாக்கு மாறுகால் பந்தமுடன்

191. ஏணி விளக்கும் ரதவிளக்குத் தன்னுடனே
பாணி விளக்கும் ரதவிளக்கும் நின்றிலங்கச்

192. சூல விளக்குத் துலங்கைந்து கால்விளக்கும்
ஞாலம் விளக்கும் பகலா மெனவிலக

193. பத்தியொளி வீசும் பகல்வத்தி நின்றொளிரத்
தத்துதிரை போலுபய சாமரைக டாமிரட்டப்

194. பாவாடை முன்விரிக்கப் பஞ்சவண்ணத் தால்விளங்கும்
பாவாடை வீசவியற் பாவாணர் கொண்டாட

195. எங்கும் புகழ்வெள்ளை யானைப் பிடரேற்றி
மங்களஞ்செய் தூரைவல மாகவரு வேளைதனில்

196. வச்ரத் திருநாட்டு மன்னவன்செய் தக்காதி
பச்சைப் பரியான் பவனிவரும் வீதியெல்லாம்

197. தோரணங்கள் நாட்டிடுவார் தூபதீ பங்கள்வைப்பார்
பூரணகும் பம்பதிப்பார் பூம்பன்னீ ரால்தெளிப்பார்

198. வான்முகட்டுத் தோயும் மகமேரு நாட்டிடுவார்
தேன்முழக்கும் பூங்குறிஞ்சி தெருக்க ளலங்கரிப்பார்

199. இருகுரும்பை போலுமுலை யேந்திழையா ராடுதற்குத்
திருகுகம்பை நாட்டித் தெருவை யலங்கரிப்பார்

200. மெல்லியதண் புட்ப விமானங்கள் தம்முடனே
சொல்லரிய நீண்மகர தோரணங்கள் நாட்டிடுவார்

201. கைவந்த சித்திரத்தாற் கண்களிக்கச் செய்துவைத்த
பௌவந்தத் திற்சூத்ரப் பதுமைபிடித் தாட்டிடுவார்

202. ஆசைகொள்ளு மினனு ரவரவர்கள் தாங்கூடி
வாசல்தொறும் நெய்விளக்கு வைத்துநிறை கும்பம் வைப்பார்

203. கன்னல் நடுவார் கமுகு நிரைத்திடுவார்
அன்னமென வந்துசெம்பொன் னலத்தி யேந்திடுவார்

204. ஏருலவு தென்காய லெங்கள்செய்தக் காதிமன்னன்
பாருலகில் யானைப் பவனிவர மாதரெல்லாம்

205. பாடகங்கள் பூஞ்சிலம்பு பங்கயத்தாள் மீதணிந்து
சூடகஞ்சேர் காந்தளங்கை சுற்று மணியணிந்து

206. பட்டுடைமின் னார்பவனி பார்க்கில்மதன் வாளிநெஞ்சில்
பட்டுடையுமென்றுமுலைப் பாரமிசை வாரணிவார்

207. நாணைவிட்டு மங்கலப்பொன் னணணிந்து கையரத்தால்
சாணை வைத்த வாள்போல் தடங்கணுக்கு மையெழுதி

208. பொற்சரிகை மேலணிந்த பூம்பட்டு முந்திதனில்
பொற்சரிமை தொங்கலிடைப் பொய்யினில் மெய் யாயணிந்து

209. சித்தசன்பைந் தேனுறையுஞ் செம்பவள மீதிலொரு
முத்த ரும்பினபோல் மூக்குத்தி முத்தணிவார்

210. பொன்மலைமேல் வெள்ளிப் புரிகிடந்து தாழுதல்போல்
வன்முலைமேல் முத்து வடங்கள் கிடந்தாட

211. மாலாழி நீந்த வசையறியா மங்கைநல்லார்
காலாழி பூட்டியபின் கையாழி யிட்டனரே

212. தங்கச் சவடிகளுந் தானிழைத்த பொற்பணியும்
பொங்குநவ ரத்னவொளிப் பூடணமும் மேற்புனைந்தார்

213. மச்சு ளிருக்கும் மடவார்கள் கோத்தமுத்துக்
குச்சு ளிருக்கும் குளனு லணியாடச்

214. சொல்லிய பட்டுச் சுளிகைரவிக் கையணிந்து
எல்லமையுங் கொம்பனையா ரெல்லோருந் தாம்கூடி

215. கொங்கைமேல் சந்தனக் குழம்பணிந்து குங்குமத்தைச்
செங்கரத்தால் வாங்கித் திருக்கழுத்தின் மேல்பூசி

216. முல்லையிருள் வாசிமுகிழ்மல் லிகைகொழுந்து
அல்லனைய கூந்தற் கழகா யலங்கரித்துச்

217. சாரும்பவளந் தனைச்சிவப்பக் காய்ச்சினபோல்
சேரும் படிபாக்குத் தின்று சிறப்பாகத்

218. திலக மணிந்து திரும்பத் திருப்பியணிந்
திலகுவிரல் சேப்ப இருகண் சிவந்திடுவார்

219. மொய்குழலே நன்றய் முடிந்து முடிந்தவிழ்த்துப்
பய்யமணிக் கண்ணாடி பார்த்துச் சினந்தெறிவார்

220. பொற்கடகம் பூட்டிப் புரிவளேயா ரெல்லோரும்
கற்கடக மெல்லாங் கனராசி வெண்கொடிசேர்

221. கன்னனென வந்தசெய்தக் காதிமக ராசன ன்பாய்
வன்னமணி வீதிவரும்பவனி கண்டெதிர்போய்க்

222. கயங்காத செம்பொற் கரத்தா மரைகடுப்ப
முயங்கா தெழுந்த முகத்தா மரைமலர்கள்

223. மேடை மிசை மொளிர் வெண்புரிசைச் செச்சையினும்
தேடறிய பொற்சிகரத் தெற்றியினு நின்றேறி

224. உப்பரிகை மீது முயர்மா ளிகைமீதும்
செப்பரிய பொன்மாடத் தின்முகப்புஞ் சேர்ந்துநின்று

## மணமகள் அழகு கண்டு வியத்தல்

225. நன்மதிலே யொட்டியதில் நாடிவைத்து நாணிநின்று
தென்மதுரைக் கோனணங்கு சிங்கமோ வென்றுசொல்வார்

226. சாளரங்க டோ றும்வெகு சந்த்ரோத யங்களென்ன
வாளரங்கொள் கண்ணூர் வதனம்வைத்துப் பார்த்து நிற்பார்

227. மாறன் மகட்கு மணவாள ஞகியின்பப்
பேறுதவுஞ் செங்கை பிடிக்கவந்தா னென்பாரும்

228. இவர் காகான் என்பாரும் இந்திரன்கா ணென்பாரும்
தவறத வாய்மையரிச் சந்திரன்கா ணென்பாரும்

229. செஞ்சந் தனங்களபம் தேனெழுகுங் கொங்கைநல்லார்
அஞ்சம்பு கொண்டுவரு மடல்மதனன் காணுமென்பார்

230. மின்னினிடை தள்ளாட வெண்டுகில்போய் நிற்பாரும்
வன்னவளே போய்க்கை வளேக்கிரங்கி நிற்பாரும்

231. தாளழகைக் கண்டு தலைநாணி நிற்பாரும்
தோளழகைக் கண்டு துடிதுடித்து நிற்பாரும்

232. சீருலவப் பொங்குந் திருவடிவைப் பார்க்கவென்றே
காரிகையார் கண்ணைக் கடன்வாங்கிக் கொள்வாரும்

233. கர்ணனென்ற பேரைவிழி காட்டுமென்று சொல்வாரும்
வர்ணமணி மார்பில் மதிமயங்கி வீழ்வாரும்

234. கந்தனிவ னென்பாரைக் கையமர்த்தித் தையல்நல்லார்
செந்தலைச் செல்வர்க்குச் சிங்கவிரு தென்றுரைப்பார்

235. வாளுட்டரசு மகபதியொப் பாமடவீர்
காநாட்டு வேந்தர் பிரான் கண்ணூட்ட மெத்தவென்பார்

236. காமனென்பார் காமனுக்குக் கங்குல்மத யாலையல்லால்
பான்மொழியீர் வெள்ளைப் பருப்பதமே தென்றுரைப்பார்

237. அன்ன நடையீ ரரிகே தனன் வகுதைக்
கன்னன் பெரியதம்பி கண்ணின்மணி காணும் என்பார்

238. சேலை கவர்ந்தெமது சிந்தைகவர்ந் தானெனினும்
மாலை வழங்க மனமிலைகாண் என்பாரும்

239. பெருமானை காத்தினிய பொன்மானை ஓடியெய்து
திருமானை வைத்தபுயன் சீமானைப் பாரும் என்பார்

240. பச்சைப் பரியானைப் பண்ணைப் பரித்தானை
இச்சைப் படியே இனிப்பாரும் என்பாரும்

241. காலழகை வெள்ளானைக் காது மறைத்ததெனச்
சேலழகாங் கண்ணூர் சினத்துருக்கிப் பார்ப்பாரும்

242. நேராந் தொடையை நிசார்மறைத்துக் கொண்டதுகாண்
பாராயிதுவும் பகைநமக்கே என்றுசொல்வார்

243. இடையழகைப் பொன்னரைஞா ணீண்டுசுற்றிக் கொண்டதென்றோ
படைவிழியீர் மெய்ந்நாணைப் பார்க்கவீட்டீர் என்பாரும்

244. வரைமார்பைக் குங்குமப்பூ மாலை மறைத்ததென்றோ
விரைவாகி மாலை வெளியாக்கி விட்டதென்பார்

245. தார்ப்புயத்தைச் செஞ்சந் தனம்ஒளித்துக் கொண்ட தென்றோ
வார்திகழும் பூணூர் மணித்தனங்கள் காட்டி நின்றீர்

246. கண்டசர மெங்கோன் கழுத்தை மறைந்த தென்றோ
விண்ட சரமாக மேலாடை நின்றதென்பார்

247. துலக்கும் வயிரத் துறாமுடியைச் சூழ்ந்ததென்றோ
இலங்கும் பெருங்காத லென்னமுடி யாதுநின்றீர்

248. மாலைக் குழல்சரிய வச்சிரப்பொற் கொப்பசைய
ஓலைக் குழையாடி ஓடிவந்து பார்ப்பாரும்

249. செல்லுலவு செந்தூள் திரளால் தெரியாமல்
மெல்ல விழிமேல் விரலடுக்கிப் பார்ப்பாரும்

250. தரிக்குஞ் சவாது மணம் தான்வீச வந்தெல்லாம்
பரிக்குமிதழ்ச் செங்கமலப் பாவைமணம் வேண்டிஎன்பார்

251. கஸ்தூரி வாசமெழு காதமட்டும் வீசநம்மை
முத்தாரப் பூண்முலையார் முகமட்டும் என்றுரைப்பார்

252. ஓங்குசனங் காணநம்மை ஓடாதிப் போதானை
தூங்கலென நின்று துரிதநடை பாரும் என்பார்

253. வெற்றிப் பகலோனை மேக மறைத்ததெனக்
கொற்றக் குடைமறைத்துக் கொள்ளுமோ என்றயர்வார்

254. வந்தானை மூர்க்க மதயானை முன்னடக்க
முந்தானை விட்டு முலையானைகாட்டிநிற்பார்

255. வாய்மழலைப் பிள்ளைமதிபோலும் பேதையர்கள்
தாயர்தமைக் குங்குமப்பூத் தார்வாங்கித் தாரும் என்பார்

256. உண்டில்லை யென்னுமிடை யொன்றியுமொன் றாய்ச்சோர
வெண்டரளஞ் சேர்பெதும்பை மின்னார்கள் சூழ்ந்துவர

257. வண்டணுகாகச் செவ்வாய் மலரவிழுந் தாமரைபோல்
கண்டமட மங்கையர்கள் கண்குளிரப் பார்த்துநிற்பார்

258. கரிக்கொம்பு போலுமுலைக் கண்டமடந்தை மார்கூடி
நரிக்கொம்பு முள்ள நயக்கார னென்பாரும்

259. அங்கசன்போ ராடு மரிவைமார் கும்பமுலை
எங்கும் பசுந்தேன் இனங்கறுக்க வந்துநிற்பார்

260. திக்கில்மதன் செங்கோல் செலுத்தத் தெரிவைநல்லார்
கைக்களிறே நாங்கள் பிடிகாணு நில்லுமென்பார்

261. விரவிஅமுதெடுத்த வெண்பாற் கடல்நிகர்ப்பப்
பெருகுசுகங் கண்டுவந்த பேரிளம்பெண்ணா ர்சூழ

262. இவ்வாறு மன்னு ரியம்பவகு தைக்கதிபன்
அவ்வீதி விட்டங் கடுத்ததொரு வீதிவந்தான்

## வாண வேடிக்கைகள்

263. ஓங்குபீ ரங்கி உருமேறு போல்முழங்கத்
தாங்கியதுண் டுக்குழலுஞ் சத்தவெடி யும்மதிரத்

264. கும்பவெடி செந்தீக் குடக்கைக் கலசவெடி
அம்புவெடி பூமி யதிரு மிரட்டைவெடி

265. கைக்குழலும் பட்டைக் கனகுழலாந் தாய்க்குழலும்
ஒக்கமருந் திட்டோ ரொருமுகமா கத்தீர

266. பூச்சக்ர வாணமெல்லாம் பொற்பூச் சிதறுநபோல்
மாச்சக்ர வாணநெடு வானி லொளிபரப்ப

267. மோகார மண்ட முகடுடைத்துச் சிந்துதல்போல்
ஆகாச வாணத் தடங்குகண்டங் கொப்பளிப்பக்

268. கொம்படைப்புச் சக்கரமும் கூட்டு மிசுக்குடனே
அம்பரத்தில் மெம்பி யடர்ந்தேறுஞ் சக்கரமும்

269. கொல்லும்படைவாணம் குமாரவா ணத்துடனே
செல்லும் எலிவாணஞ் சீறும்பாம் பின்வாணம்

270. பூதவா ணங்கள் பொரும்பரிசை வாணமுடன்
வீதி நிறை யச்சொரியும் வெண்சா மரைவாணம்

271. மைபூத்த விண்ணில் மணிநீலம் வீழ்வனபோல்
கையிற் தடித்தநிலா காயாம்பு சிந்தினவே

272. கப்பல்வா ணங்கள் கனகுதிரை வாணமுடன்
கும்பல்கும்ப லாய்ச்சொரியும் கூடைப் பெருவாணம்

273. ஆடுமயில் வாணமதிருநிலாச் சக்கரமும்
தேடுகூம்ப வாணஞ் சிரட்டை வாணத்துடனே

274. மண்டு விசிறிகளும் வாய்ந்த நிலாவெடியும்
குண்டணி வாணங் குறித்தகம்பத் தூடுசெல்ல

275. ஒருகோடி சூரியர்க ளோடித் திரிவனபோல்
திருநாடிக் கம்பத் திரியெல்லாம் நின்றொளிர

276. நிரைத்த படைக்கு நிலாவெறியு மேழ்கடல்போல்
இறைந்து டபீரென றிடியேறு போல்முழங்கச்

277. கம்பவா ணக்காட்சி கண்டு களிகூர்ந்து
செம்பொன்துடி பூலோகத் தேவேந்த்ரன் வந்தனனே

## மணமகன் மணப்பந்தல் சேருதல்

278. கல்விக் கருணை கடல்பெரிய தம்பிபெற்ற
செல்வன் வந்தா னென்றுவெற்றிச் சின்னம் பணிமாற

279. சந்தா டவிசுரபி சங்கநிதி பத்மநிதி
சிந்தா மணியெனப்பொற்சின்னம் பரிமாறப்

280. பாவடிவைக் கூடற் பதிவடிவே லான்றோட்பூஞ்
சேவடிவைத் தோனெனப்பொற் சின்னம் பரிமாற

281. உறைவாங்கு வாட்கை யுடன்வாங்கி யொன்னலரைந்
திறைவாங்கும் போசனெனச் சின்னம் பரிமாற

282. வங்காரக் கொங்கையர்க்கு மணமாலை நல்குமெனச்
சிங்காரக் காரனெனச் சுன்னம் பணி மாற

283. வெங்களிற்று மேலவர்கள் வெம்போர் கடந்த வெற்றிச்
சிங்கம்வந்தா னென்றுசெம்பொற் சின்னம் பணிமாற

284. குங்குமத்தார் பூண்டு குவலயத்தார் போற்றுநல்ல
சிங்கம்வந்தா னென்றுவெற்றிச் சின்னம் பணிமாற

285. இன்னபடி சின்ன மியம்பிட்டு வெள்ளானை
தன்னை யிறங்கித் தருகா வனத்தில்வர

286. வாய்ந்த மணவாளன் வந்தா னெனமகிழ்ந்து
சேத்த மலரடியார் சிற்றடியாரையேவ

287. மாரன் ரதியென்ன மங்கையரிந்த் ராணியென்ன
ஆரமணி கற்பூர மாலத்தி தானெடுத்தார்

288. மங்களவாக் யம்படைத்த மாப்பிள்ளைரா சேந்திரனுக்குப்
பங்கயப்பூந் தாள்நடக்கப் பாவாடையிட்டனரே

289. இட்டபா வாடையின்மே லேகியரி யாசனத்தே
அட்டமங்க ளம்மார்ப்ப ஆண்மகன் வீற்றிருந்தான்

290. சிங்கா சனத்திருந்த செல்வமண வாளனுக்கு
மங்கா வதிருப மானுர் எதிர்நடந்து

291. பாதாம் புயம்விளக்கிப் பன்னீர் மிகச்சொரிந்து
பீதாம்பரத்தாற் பிரசமலர்த் தாள்துடைத்துச்

292. செய்யு முறைமை செய்துவெற்றிச் சிற்றடியார்
மெய்யில் வெயர்வரும்ப மீள நடந்தற்பின்

## மணமகளுக்கு அலங்காரம்

293. சுந்தரஞ்சேர் பூங்கொடியைத் தோழிமா ரெல்லோரும்
வந்து மனமகிழ்ந்து மஞ்சனநன் னீராட்டிப்

294. பொன்னுக் கலங்காரம் பொன்னினுல் செய்ததெனத்
தன்னிகரில் லாதசரிகைப்பூம் பட்டுடுத்திப்

295. பாணிக்கு மேலழகு பாணித்து வைத்ததென்ன
மாணிக்கப் பொற்கட்டு வச்ரமணிச் சட்டையிட்டுக்

296. கூந்தல் தலையொழுங்காய்க் கோதி மலர்முடித்துச்
சேந்த கரத்திற் றிருச்சூளி றந்தரித்துக்

297. கன்னல் மொழிமடவார் கற்புடை காரிகைக்குப்
பின்னல் தரித்துப் பிறையுந் திருவும்வைத்து

298. பற்பரா கத்துடனே பச்சைவச் சிரநீலக்
கற்பதிக்க கட்டிவட்டங் கட்டி யலங்கரித்து

299. மணியினலுக் குத்து மரகதப்பூ கொப்புமணி
அணிஞ்சுலுக்கி யாவும் அரசிலைப்பூத் தொங்கலுடன்

300. ஒன்னப்பூ வச்ர முபயகண்ணு டியொத்த
கன்னத்தில் நின்றிலங்கக் காதுக் கணிந்தனரே

301. இன்னவிலை யென்றுரையா வீத்தங்காச் செம்பவளப்
பொன்னசர விக்கோவைப் பூட்டுஞ் சரப்பளியும்

302. தும்பிப் பதக்கம் துலங்கும் கிளிப்பதக்கம்
அம்புவியெல் லாமதிக்கும் ஆளிமுகத் தாளிவில்லை

303. வன்னிக்கஞ் செங்கனக மாராடிக் கொத்துவடம்
கன்னிக் கமுகனைய கந்தரத்தின் மீதனிந்து

304. பொன்னரிசு தோள்மூடி புசபத்த னத்துடனே
தன்னிகரில் லாவளையுந் தரத்துமணி யட்டியலும்

305. முன்கைவளை ரத்னசரி முந்துசந்து காறையுடன்
மின்மருவு பொன்மணியும் மேவுபச்சைப் பொற்கடையம்

306. திக்கெட்டு மொன்றகிச் செப்பி விலைமதியாக்
கற்கட்டு வச்ரங் கரகதனி லேயணிந்தார்

307. தண்டை சிலம்பு சதங்கைகைதங்கப் பாடகமும்
வெண்டரளந் தாரகைபோல் மேல்முடிச்சுச் சங்கிலியும்

308. கட்டுசரம் பொற்பீலி காலாழி செம்பொன்னும்
மெட்டு மயிலடிகால் மெல்விரலில் தூக்கினரே

309. காவடர்ந்த மாவிடத்திற் காய்த்துப் பசந்தபிஞ்சு
மாவடுவை வென்ற வரிவிழிக்கு மையெழுதிப்

310. பொன்னுக் கணிகலனும் பொன்னமுதை மற்றுமின்னார்
கண்ணெச்சில் தீண்டாமல் கஸ்தூரி யாற்பூசித்

311. திலங்கிஅச ருப் பூத் தொடையல்கட்டிப் பொன்போல்
அலங்கரித்துக் குப்பாய மன்பாக வேபோற்றி

312. அருந்ததிபோற் கற்புடைய அன்னநடை மின்னரசைத்
திருத்துமட மாதர் சிறப்பித்து வைத்தபின்னர்

## திருமண நிகழ்ச்சி

313. பந்தலிலே மிக்கநகர்ப் பார்த்திபரு மாதுலரும்
தந்தையரும் நல்லோருஞ் சாதிப் பெரியோரும்

314. கற்றவரும் வேதியரும் காதியா*ரும் வந்திருந்து
குற்றமில் லாத குறித்தமுகிழ்த் தந்தனிலே

315. சொல்லரிதாங் கொத்துவா**வோதிப்பொருனிசைத்து
வல்ல மிகுறு மொகரா*** எழுதினரே

316. நிக்கா வெழுதி நிறைந்த களரியெல்லாம்
ஒக்கவே பாத்திகாஓதிப் புகழ்ந்தபின்பு

317. சீவிவைத்த பாக்குஞ் சிவந்த வெள்ளே வெற்றிலேயும்
நாவி சவாது நறும்புழுகு சந்தனமும்

318. வெள்ளியின் வட் டாவில் விளங்குதங்க வட்டாவில்
அள்ளி அள்ளிக் கையால் அவரவர்க்கே தாம்கொடுத்தார்

319. உலமாக்கள் ஆலிம்கள் ஓதுகின்ற வேதியர்க்கும்
அலமாப்பு தீரப்பொன் னுடை மிகக்கொடுத்தார்

320. செவ்வி முதுயோர்க்குந் தீனோர்க்கு மாதுலர்க்கும்
இவ்வரிசை யெல்லாம் இயல்பாகச் செய்ததற்பின்

321. பூப்பிள்ளே நிர்த்தமிடு பொன்மணிச்சிங் காசனத்தை
மாப்பிள்ளே ராயன் மகிழ்ந்திருக்க மாதரசைப்

322. பொற்சரோ ருகமானைப் போற்றருமை மாதுலனல்
கற்புடைய மாதைக் கணவன்வல மாகவைத்தார்

## மணமக்கள் பொருத்த சிறப்பு

323. கன்னிகையும் வந்து கணவன் வலத்திருக்க
மின்னிடையா ரெல்லோரும் விழிகுளிரப் பார்த்துரைப்பார்

## மணமக்களே வியந்து உரைத்தல்

324. பெண்ணழைப் பாரும் பெருவிரலேப் பாருமிரு
கண்ணழகைப் பாருமிரு கையழகைப் பாருமென்பார்

---

* காதியார் : காஜிஎன்ற அரபிச் சொல்லின் திரிபு இஸ்லாமிய சட்ட
விற்பன்னர்

** கொத்தவா: குத்பா என்ற அரபிச் சொல்லின் திரிபு. பிரார்த்தனே

*** மொகரா; உருதுச் சொல்_ தங்கநாணயம்.

325. பெண்பெற்ற பேறும் பெருமான் றனைக்காணக்
கண்பெற்ற பேறுமின்று கண்டோம் எனமகிழவார்

326. திருமானைக் காணவரு சிந்தை களிகூரப்
பெருமானைக் காணநல்ல பேறுபெற்றே மென்பாரும்

327. மின்னழகு மின்னை விரும்புந் துரைப்பெருமான்
தன்னழகைப் பாருஞ் சமானஞ் சமானமென்பார்

328. கன்னி யழகுங் கணவழ கும்பார்க்கப்
பின்னு மிருநாட்டம் பெற்றிலோம் நாமென்பார்.

329. வல்லமண வாளன் மதயானை கைபிடிக்குஞ்
செல்வம் படிந்த திருவடிவைப் பாருமென்பார்

330. கூர்த்தடங்கண் மானழகுங் கொற்றவனுர் தம்மழகம்
பார்த்து நமக்கதிக பாக்கியங் காணெனன்பார்

331. செல்வந் தழைப்பீர் சிறப்பாக வாழ்ந்திருப்பீர்
மல்வளர்ந்த தின்புயந்து மைந்தரனே சுகம்பெறுவீர்

332. தேனையும் மன்னர் திலகனையுந்தாம் போற்றி
மானை நிகர்விழியார் வாழ்த்தித் துவா வோதிக்

333. குணமாக வெல்லோருங் கூடிக் குரவையிட
மணவாளன் றன்கையால் மங்கலியங் கட்டினரே

334. ஆள்வீரன் ரத்னமணி யாசனத்தி னின்றிறங்கி
வாள்போல் விழிநுதலில் வட்டப் பணம்முழுத்தி

## வாழ்த்துனர் நகையாடல்

335. தாள்பிடிக்கு மொன்னுர் தளத்திளொரு சிங்கமென்றல்
வாள்பிடிக்கக் கூசுவதேன் வாருமென்பார் மைத்துனர்கள்

336. ஏவாகள் நாயகமா மெங்கள் மணவாளன்
பூவானைக் கையில் பொருந்தப் பிடியுமென்பார்

337. மைத்துனன்மார் செங்கிரண வாள்பிடியும் என்ற சொல்ல
சித்த்மகி ழச்சரசம் செப்பக் களிகூர்ந்து

338. பின்னமெவரைப் பிளக்கு . . . . . மது
முன்னனே வாளின் முனைநோக்கும் என்றுரைத்தார்

339. மையலிலே சிந்தையுறு மாற்றலரை வென்றவரே
கையிலே வாள்பிடிக்கக் காணாம் எனவுரைப்பார்

340. மதிகொண்டடையாரை வென்றமண வாளன்
கதிர் கொண்ட கூரிலேவாள் கையிற் பிடியுமென்பார்

341. மாற்றலரை வெல்லுவது மாத்திரமல் லாமலெம்முன்
கோற்றெடிகை வாள்பிடிக்க்க் கூடுமோ என்றுரைப்பார்

342. மைத்துனன்மா ரிந்த வழக்குரைக்க மாறத
சுத்த ரணவீரத் தோழர் மறுத்துரைப்பார்

343. தென்னவனை வென்றரண சிங்கமெங்கோ னிச்சிறிய
கன்னியர்கள் முன்னே கதிர்வாள் பிடிப்பதென்பார்

344. கோதைவடி வேலெடுத்த கொற்றவனென் றெண்ணாமல்
பேதையர்கை வாளைப் பிடியுமெனவுரைத்தீர்

345. கடவா ரணந்தகர்த்த கைவாளை வீரனையும்
மடவார்கள் முன்னே வடிவாள் பிடியுமென்றீர்

346. என்ன இவர்க ளியம்ப மனமகிழ்ந்து
மன்னவர்கோன் கீர்த்தி வழங்குந் துரைப்பெருமான்

347. பூவையர்கள் செவ்வாய் பிதைத்துக் குரவையிடக்
காவலவன் செங்கதிர்வாள் கையிற் பிடித்தனரே

348. மங்கையர்க்குங் காதில் வரிசைபல உள்ளதெல்லாம்
சங்கைபெறச் சொல்லித் தடக்கைவாள் வாங்கினரே

349. வாகைக் கதிர்வடிவாள் வாங்கியபின் மானெண்ணல்
பாகைதிருப்பிப் பகருவார் பாவை நல்லார்

## மணமக்களுக்கு வாழ்த்து

350. நன்மைமண வாளனையும் நங்கையையும் கண்குளிரப்
பொன்மயிலார்கள் புகழ்ந்து புகலலுற்றர்

351. பேர்பெறுவீர் வாழவு பெறுவீர் மகப்பெறுவீர்
சீர்பெறுவீர் எல்லாச் சிறப்பு மிகப்பெறுவீர்

352. என்றுமிக வாழ்த்தி யிதயங்குளிர்ந்துமின்னா்
மன்றல் மகிழ்நயத்து மன்னனைப்பார்த் தேதுசொல்வார்

## மணமக்களுக்கு பாராட்டு

353. சோதிக் கிரணத் துலங்குமணித் தொட்டிலிலே
சாதிக்கு நாயகனாய்த் தான்வளர்ந்த மன்னவன்காண்

354. பொன்னுரு மண்டபத்தில் பூப்பந்தல் நன்னிழலில்
மின்னார்கள் பாராட்ட மிக்காய் வளர்ந்தவன்காண்

355. சந்தரவத னன்பெரிய தம்பிமரக் காயனவன்
மைந்தனெனப் பெற்று வளர்த்த மறப்புலிகான்

356. அய்யமற வன்னைசுற்ற மன்பாக முன்னாளில்
செய்தவ மொன்றாய்த் திரண்ட முழுமணிகாண்

357. பொருதூ டெழுந்தலொன்னார் போர்க்களத்தி லேயே
விருதூது வாரவரை விருதுகண்ட மன்னவன் காண்

358. மருவார்கள் கண்டு வணங்கமருக் கூந்தல்
மருவாருங் கொங்கையர்சேர் மார்க்கண்ட னனவன்காண்

359. ஐயனைக்கண் டிவ்வா றதிசயத்து மங்கைநல்லார்
கையெடுத்து மூக்கில் வைத்துக் கன்னியைப்பார்த் தென்சொல்லுவார்

360. செம்பதுமம் விட்டுச் சிறந்தநவ ரத்னமொளிர்
ஐம்பொன்மதில் வீட்டில் வந்த அரும்பொருளைப் பாரு மென்பார்

361. காதழகு மூக்கழகுங் கண்ணழகும் வெண்ணகையும்
சீதமணி வாயழகுஞ் செங்கமலங் காணு மென்பார்

362. சுந்தரமுந் தோளழகுங் கையழகு மெய்யழகும்
சுந்தரமும் வேறுவமை சொல்லவரி தென்றுரைப்பார்

## வரிசை வழங்கல்

363. விறுப்பாறு பாய்கடலில் வியாபாரி யாகுமெங்கள்
கறுப்பாறு காவலவன் காணுங்கறுப்பாறும்

364. ஆர்க்கலியுந் தீர்ப்பதாக யாகவீ ரொக்கமொரு
தூர்கலிய மும்வகுதை யூர்ககபா ணந்திகமும்

365. மோகரங்கள் வாரி முயன்று வரும்படகும்
சாகரங்கு லாவிவச்சரந் தாங்கி வருஞ்சுலுப்பும்

366. மதிச்சோங்கு பச்சை மரகதத்தாள் கொண்டுவரும்
புதுச்சோங்கு செந்நெல் பொருப்பொன்று தோணிகளும்

367. உண்மையுடன் வெள்ளி உருப்பியா ஏற்றிவரும்
வன்மைபெறு கின்ற வளமும்வள மாய்க்கொடுத்தார்

368. விடாத செம்பொன்மணி வீடுங் கொடுத்துநிதம்
நாடா துலா நிகழும் நல்லவெள்ளை வாரணமும்

369. கடக்குமலை வீசு கடலை யெடுத்துறிஞ்சும்
நடக்கும்மலை போலவரும் நல்லவெள்ளை வாரணமும்

370. கவடிகள்மெய் பாயக் கவடிவைத்துத் தாவும்
கவடிவைத்துத் தாவுங் காமர் குரகதமும்

371. முந்து பதுமை குடியிருக்கும் மொய்ம்பனுக்குத்
. தந்தர் சிவிகை தனிச்சிவிகை யுங்கொடுத்தார்

372. நாடோறுங் கீர்த்திகொண்டு நானிலத்தில் நாவலர்கள்
ஈடேற வந்தவனுக் கேறுகன தண்டிகையும்

373. சருவந்து பூமுடியும் தங்கச் சரப்பளியும்
பருவந்தப் பாதுதவிர் பாங்கான தோள்முடி

374. முன்கை முதாரி முழுவயிரப் பொற்கடகம்
நன்குபெறு செம்பொன் நவரத்ன மாலிகையும்

375. துய்யகதிர் முத்துத் துறாப்பதக்கம் கண்டசரம்
செய்யவிர லாழியருஞ் செம்பொன்னுல் தோள்வளையும்

376. மாணிக்கச் சட்டை வரும்பொற் கபாய்கள் மற்றும்
பூணத் தகுவதெல்லாம் பொற்பாக வேகொடுத்தார்

377. வரிசைபெற வாங்கும் வரும்பெரிய கத்திவட்டப்
பரிசை யடனே பருவாளுங் கைக்கொடுத்தார்

378. நீளுமுனை காட்டியெழ நேரிசமுங் கைவேலும்
ஆளு முனைச்சுரிகை ஆயுதமுந் தாங்கொடத்தார்

379. வேளாஞ் சினேகவி வேந்தர்முடி வேந்தனெனக்
காளாஞ்சி குஞ்சங் கணமிகுவெண் சாமரமும்

380. பொன்னிட் டகப்டை புதுச்சித்ர வெள்ளிமிடா
மன்னுமிரு கால்சேர் மணிவயிரப் பாக்குவெட்டி

381. செம்பொற் கரண்டகமும் சீவிவைத்துத் தான்முடியும்
பைம்பொன்முடி சீருமுதல் பாங்காக வேகொடுத்தார்

382. விற்பூட்டுப் பெட்டகமும் மேவியொளி சேர்கனகப்
பொற்பூட்டுப் பூட்டிப் பொருந்துநிலைப் பெட்டகமும்

383. வெள்ளியினுல் குத்து விளக்குடன்வெண் பட்டுமெத்தை
கொள்ளுந் தழுவனையுந் கூறுசப்ரக் கொள்கையுடன்

384. கூறிய பொற்கொட்டுக் கூடைதங்க சட்டுவமும்
வீறிய காந்தியெங்கும் வீசுவெள்ளி வெண்குடமும்

385. பொன்னரிக்கஞ் சட்டி குதுச்சித்ர வெள்ளிமிடா
மன்னு சிறுகுடங்கள் வாய்குவிந்த பொற்கலசம்

386. மாந்தளிர்செம் பட்டு வருமேக வர்ணியுடன்
ஏந்தபுள்ளிப் பட்டோ டிளமா துளைச் சேலை

387. இச்சைக் கினிதா யிசைந்த மணிக்கிணங்கி
பச்சைக் கிளியுமந்தப் பஞ்சவர்ணப் பூங்கிளியும்

388. பலமணிக ளிட்டாடும் பல்லாங் குழியுமின்னுர்
நலமனையி லாடும் நவரத்ன வம்மனையும்

389. உமிழும் படிக்கம் உயர்படிக்க முங்கலமும்
கமலப் படிக்கம் காளாஞ்சிச் சேனெய்க்கலம்

390. கட்டிவருஞ் செம்பவளக் கட்டில்தலை காணிமெத்தை
இட்டமக லாதே யிருக்கவந்த பாங்கியரும்

391. தாளடியில் நின்று தலைபணிந்து வேலைசெய்ய
ஆளடியா ராயிரமும் ஆணடியா ராயிரமும்

392. செப்புந்தைய லார்நினைந்த சீவரத்னம் வைக்குமுத்துச்
செப்புந் தாலாவும் செய்யபொன்னின் வட்டாவும்

393. சிந்தைமகிழ் கின்றதந்தச் சீப்புஞ் சினுக்கரியும்
வந்தவரைத் தன்னிடத்தில் வைக்கும் நல்ல ஈர்கொலியும்

394. நாக்குத் திருந்துமொழி நங்கையருங் கொங்கைகொண்டு
மூக்குத் திருந்த முழுமணிப்பொற் கெண்டிகளும்

395. பெய்தக்கால் காந்தி பெருகுதங்கப் பள்ளையம் போற்
செய்தக்கால் நம்மையெனச் சேனைக்கா லுங்கொடுத்தார்

396. பூங்கா வனமும் புதியதென்னஞ் சோலைகளும்
நீங்காமல் மங்கையர்கள் நீராடும் வாவிகளும்

397. பாலுக் கெருமை பசுமாடும் ஆடுகளும்
மேலுக்கு மேலுமெண்ணி வீறுபெறத் தாம்கொடுத்தார்

398. வையம் மகிழ்ந்திடநன் மாம னெழுந்திருந்து
செய்யும் வரிசையெல்லாம் செய்தோம் எனக்கொடுத்தார்

## புலவர் வாழ்த்துரை

399. இந்த வரிசைபெற்ற ஏந்திழையு மன்னவரும்
மைந்தர்பதி னறும் வகையாகப் பெற்றெடுப்பீர்

400. பொன்னு மணியும் பொருத்துதல்போ லேபொருத்தி
எந்நிலமுந் தான்வாழ எப்போதும் வாழ்ந்திருப்பீர்

401. நன்றி பெறுவீர் நயம்பெறுவீர்ஆண்பெறுவீர்
என்றுந் துனியாவில் ஈமான் மிகப்பெறுவீர்

402. குன்றில் விளக்காய்க் குலவிளக்காய் ஓங்கிநிலை
நின்ற பெரும்புவிமேல் நீடுழி வாழ்ந்திருப்பீர்

403. துய்ய ஈசுபு துணையாம் சுலைகாபோல்
வய்ய நடு எந்நாளும் அன்பாக வாழ்ந்திருப்பீர்

404. சுலைமா னன்னபியும் தோகைபல் கீசையும்போல்
அலையாத செல்வமொடும் அழகாக வாழ்ந்திருப்பீர்

405. மன்றாட்ட முள்ள மகம்மது கதீஜாபோல்
நன்ற யிரும்வீரும் நலமாக வாழ்ந்திருப்பீர்

406. விளங்கும் அலி யுல்லாவும் வீவிபாத்து முத்தை யும்போல்
வளங்குலவ மேன்மேலும் வாகுபெற வாழ்ந்திருப்பீர்

**வள்ளல் சீதக்காதி திருமண வாழ்த்து முற்றிற்று.**

## இணைப்பு VI

# வள்ளல் சீதக்காதி நொண்டி நாடகம்

கண்டவர்கள் கொண்டாடும் கன்னன் வகுதையில் வாழ்
　　மண்டலிகன் பெரியதம்பி மரைக்காயன் அருளுதித் தோன்
கொண்டவர்கள் கலிதீர்க்குங் குருசெய்தக் காதிதன்மேல்
　　நொண்டிநா டகத்தைப்பாட முதல்வனே காப்புத்தானே.
கார்கொண்ட கரதலத்தான் வகுதைச் செய்தக்
　　காதிமனு நீதிமன்னன் புகழ்கொண் டாடச்
சீர்கொண்ட முழுமதுரச் செழுஞ்சொற் பாவாற்
　　சிறக்கு நொண்டி நாடகத்தைத் தெரிந்து பாட
நேர்கொண்ட கரியகொண்டல் கவித்த கோலின்
　　நிழல்கொண்ட முத்தொளிவை நீதி வாழ்வை
ஏர்கொண்ட தோழமைக்கொண் டவனே காப்பன்
　　எம்பிரா னெவ்வுயிர்க்குந் தம்பி ரானே.

### இறைவணக்கம்

திருவு லாவிய வகுதை நகர்வரு
　　கருணை வாரிதி தருமகு ணாநிதி
செய்தக் காதியென் றெய்தக் காமனே
　　யே . . . கொண்டாடிடவே
உருவ மேயெனி லுருவ மலனல
　　வருவ மேயெனி லருவ மலனெனு
மொரு வனேதுணே யொரு வனேதுணே
　　யே . . . எந்நாயகனே.　　　　( 1 )

## நபிநாயகம் வாழ்த்து

நகுல னென்கிற சுகில னென் கொடை
முகிலெ னுங்கரன் பெரிய தம்பி
நராதிபன் செய்தக்காதி தன்புக
ழே .... கொண்டாடிடவே
முகில் கவிந்திடு கவிகை கொண்டருள்
முகம்ம தென்றிடுநபி சரண்களே
முழுது மன்பொடு தொழுதி றைஞ்சுவ
னே .... எந்நாயகனே. ( 2 )

## அபூபக்கர் வாழ்த்து

காவிப் புதுமலர் வாவிக் கரைகயல்
தாவிக் குலவிய காயற் றுரைசெய்தக்
காதிக் கினியசொல் லோதித் துதிசெய
வே... கொண்டாடிடவே
பூவிற் றிருமகள் போலத் தருமக
ளாரைத் திருநபி நாதர்க் குதவும
பூபக் கரையிசை நாவிற் புகழ்
வே.... எந்நாயகனே ( 3 )

## உமறு வாழ்த்து

தருவி சயரகு நாதப் பெரிய
தம்பி யையிய லிசைக ளாகவே
தருசெ முந்தமி ழதனி லன்பொடு
தான் கொண்டாடிடவே
அருமை மகனெடு தாதைக் கிழவனை
முறைமை தவறின தாலே வெட்டிய
அரச ருமறையென் னுவி னிற்புகழ்
வே ..... எந்நாயகனே ( 4 )

## உதுமான் வாழ்த்து

திக்கி லெழுபா ருக்குள் வளர்கா
　　ரிக்குள் வளர்பூ ரிக்க மால்நிகர்
செய்த காதியேன் றெய்தக் காமனே
　　யே ..... கொண்டாடிடவே
மிக்க மறைநு லேத்தி ரட்டினோர்
　　தக்க விசுலா மிற்ற லேமைசெய்
வெற்றி சேருது மானைப் புகழ்
　　வே ...... எந்நாயகனே (5)

## அலி வாழ்த்து

காயல் நகரன பாய குலனு
　　பாய மெமதுச காய னுயர்செய்தக்
காதிக் கினிய சொல் லோதித் துதிசெய
　　வே ... கொண்டாடிடவே
வாயு வெனுமதி வேக மார் துல்துல்
　　வான் பரியொரு வாளு முடையவர்
வலிமை கொண்டிடு அலிசரண் டுணை
　　யே ........ எந்நாயகனே (6)

## ஹஸன் ஹுஸைன் வாழ்த்து

அதிக குணவான் மதுர மொழியர்க
　　ளழகு தருமத வேள்வி சயனே
யான ரகுநாத பெரிய தம்பியை
　　யன்பிற் கொண்டாடிடவே
மதின நகர்வாழ் புலியலி யருள்
　　மைந்த ரெனவரு மசனே யுசனேயென்
மனதி லன்பொடு தொழுதி றைஞ்சுவ
　　னே ...... யெந் நாயகனே. (7)

## முகியித்தின் வாழ்த்து

மரும ர்ப்புசன் றரும் சற்குண
வாள லாகிய தொள்ளு மாமணி
வகுதை யூர் செய்தக் காதி மன்புகழ்
வாழ்த்திக் கொண் டாடிடவே
குருவினுத்தம சருவ சற்சனக்
கோன்மு கியித் தீன்ச ரண்கனைக்
குறியினோ டுகண் சிரசில் வைத்துக்கொண்
டே .... னெந் நாயகனே ( 8 )

## நொண்டியின் சபையுலா விருத்தம்

தன்ம்மும் போறையுங் கொண்ட சற்குண் னிதிபோல் வந்த
மன்மதன் வச்ர நாடன் வகுதைவாழ் செய்தக் காதி
பொன்மக நிர்த்த மாடப் பூமகள் புகழ்கொண்டாட
நன்மைசேர் கொலுவி னெண்டி நயத்தொடுந் தோன்றினனே

## சிந்து

இந்நி லம்புகழ்ப்ர தாபன் - விசய
இரகுநாத பெரிய தம்பிம கீபன்
கன்னு வு தாரனையன் புகழ்பாடி - நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னனே ( 1 )
ஆலிக்கும் வீரதண்டை கட்டி
கண்டையிற் பலகறை வெண்டயமுக் கட்டிக்
காலுக்குப் பந்தமுங் கட்டி - நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே ( 2 )
அந்தமாயிச் சருபந்து கட்டி - மெய்யி
லகலாத்தும் சகலாத்து டகலாவுங் கட்டிக்
கந்தைக்குப் பாயமுங் கட்டி - நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னனே ( 3 )

மெய்யிற்குங் குமவாடை பூசி - நொண்டி
விருதான வழிக்கொல்லாம் மகத்துவம் பேசி ( 4 )
கையிற்குஞ் சமெடுத்து வீசி - நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே ( 5 )
புதுமலர்க்குங் குமத்தார் சூடி - காயற்
போசன் செய்தக் காதி புகழைக்கொண் டாடிக்
கதையொடு காவியங்கள் பாடி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே ( 6 )
கண்ணாடி போற்பரிசை பதித்து - நொண்டி
கால்வீசி வட்டமிட்டு மேன்மீசை திருத்தி
சுண்ணாம்புக் கல்லுப்பல்லுக் காட்டி - நொண்டி
தொந்தோமென் றடிக்கொள்ளத்
துசங்கட்டி னானே ( 7 )
வல்லாண்மை மந்த்ரவித்தைக் குள்ளன் - எங்கும்
வலைபுகுந்த நரிபோல வந்திருக்கு முள்ளன்
கல்லிலே நாருரிக்குங் கள்ளன்
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னுனே. ( 8 )
ஆனைமா றட்டஞ்செயுந் தீரன் - இசுலா
மானபேர்க் கெல்லாமொரு வருமைக்கு மாரன்
கானிலங்குங் குங்குமப்பூந் தாரன் - நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னுனே ( 9 )
எத்தலமு மெச்சுபிர சண்டன் - வீர
தீரர்பட் டாணிகள் ராவுத்தர் கண்டன்
கர்த்தனைத் தொழுவோர்க்குத் தொண்டன் - நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டினுனே ( 10 )
வாதாடும் பேர்களைத் தடுப்பேன்
மாற்றலர் மூக்கிற்றும்பைச் சாற்றையே
விடுப்பேன்

வேதாந்த குருவைக்கை யெடுப்பேன் - கள்ள
விச்சைக்குப் பத்திரட்டி பிச்சையுங் கொடுப்பேன் ( 11 )
தேச மெழுகடலுஞ் செல்வேன் -என்றுந்
திண்டுமுண்டு கொண்டவண்ட நொண்டிகளைக் கொல்வேன்
பாச மறுசமயம் வெல்வேன் - செல்வப்
பார்த்திபன் செய்தக்காதி கீர்த்தியையுஞ் சொல்வேன். ( 12 )
குபிரான் நொண்டிகளை நகுவேன் - என்றுங்
கோதற்ற தீனோர்கள் பாதத்திற் புகுவேன்
அபிராம தீனெறியிற் புகுவேன் - நசு
றணிகள் மார்பில் முளை யாணிகள் அறைவேன் ( 13 )
கன்னன் செய்தக் காதிபுகழ் துதிப்பேன் -அவன்
கால்கும்பிடாரை நொண்டிக் காலால் மிதிப்பேன்

என்னை வணங்கும் பேரை மதிப்பேன் -விரு
திட்டுச் சண்டை யிடுவார் முனெட்டிக் குதிப்பேன் ( 14 )

## சுய சரிதை
## (ஒடுங்காப்புலி செஞ்சிநகர் புகுதல்)

### விருத்தம்

உரைப்பருந் தமிழ்ப்பா வாணர்
உரையையுங் காத்து நீண்ட
திரைப்பெரும் புவணங் காத்துத்
தீனவர் குலமுங் காத்த
வரைப்பெரும் புயத்தன் காயல்
மன்னவன் செய்தக் காதி
துரைப்பெருஞ் செல்வம் பாடித்
துதித்திடு நொண்டி நானே

## சிந்து

மாலைக் கறுப்பழகன் -சொக்கர்
மச்சுன னாகிய அச்சுதவேள்
சோலைக் கிரிதனிலே - கள்ளத்
துங்க னெனுஞ்சேமன் வங்கிசத்தில் ( 15 )
இல்வாழ்க்கை கொண்டபிரான் - கள்ளர்க்
கெல்லாந் தலைமைசெய் வல்லாளன்
கல்லாவிற் பால்கறப்போன் - வணங்
காப்புலி சேயொடுங் காப்புலிநான் ( 16 )
நானா விதக்களவும் - மாய
நஞ்சங்க ளாகிய வஞ்சனையு
மானா பரன்சேமன் - கற்று
வைத்துப் பதுக்கிய பொத்திகமும் ( 17 )
அகலாத வித்தையெல்லாம் - படித்
தாளானே னானெல்லாக் கோளாறும்
வகையாய்த் தெரிந்த பின்பு - நம்மை
வாழ்விக்குஞ் சொக்கரைச் சேவிக்கவே ( 18 )
வேணு மெனநினைந்தே - தமிழ்
மீனவன் கூடலிற் போனபின்பு
தானு திரியம் பகனே - நீயே
தம்பமென் றேகொடிக் கம்பமுன்னே ( 19 )
முன்னேனைத் தெண்டனிட்டேன் - அந்த
மூவர் பிரான்கோயிற் றேவடியாள்
பொன்னாரும் பூண்முலையாள் -கஞ்சப்
போதகச் சண்பகக் கோதையுடன் ( 20 )
கோதை யபிராமி -முத்துக்
குங்குமக் கோதையாள் சங்குமுத்துச்
சீதை சிவகாமி -பொன்னின்
சின்னச் சவுந்தரி யன்னமுத்து ( 21 )

முத்தமாலை மீனுட்சி -யவள்
முன்னடந் தாள்நான் பின்னடந்தேன்
கத்தூரி வாணுதலாள் -என்னைக்
கண்டாள் திருமணி மண்டபத்தில் ( 22 )
பத்திசேருந் தூணருகே -நின்று
பார்த்தா ணமக்கிவள் வாய்த்தாளென்றே
கொத்துலாவும் பூங்குழலா -ளந்தக்
குங்குமக் கோதைம ருங்கிற்சென்றேன் ( 23 )
சென்றேனைக் கைப்பிடித்தாள் -எந்தத்
தேச முமக்கென்று பேசிக்கொண்டாள்
நன்றாச்சு தெனமகிழ்ந்தே -என்தன்
நாட்டைச்சொன் னேன்வாரும் வீட்டுக்கென்றள் ( 24 )
என்றாள் அருந்துமென்றாள -கையி
லாகுந்தந் தாளிலைப் பாகுந்தந்தாள்
மன்ற ரறிந்திடவே -இறு
மாப்புட னேமனை போய்ப்புகுந்தேன் ( 25 )
புகுந்தேனை யாதரித்தாள் -தங்கள்
பூருவ சிநேகம்பொற் சோறுந்தந்தாள்
மிகுந்த பரிமளமும் -உடல்
மீதினிற் பூசச்சவ் வாதுந்தந்தாள் ( 26 )
தரளத் துணைமுலையாள் -வாயிற்
தம்பலந் தந்தாள்க ரும்பதுபோல்
அருளே யதென் சொல்வேன் -குளி
ராட்டிக்கொண்டெமச்சு வீட்டிற்சென்றேன் ( 27 )
வீட்டிற் பரிமளமுங் -கட்டில்
மெத்தையுஞ் சுற்றினிற் சித்திரமும்
பூட்டுந் திரைத்துகிலுஞ் -சொக்கப்
பொற்கட்டி யாற்கட்டு மேற்கட்டியும் ( 28 )

கட்டு விதானமெல்லாம் -நானே
கண்டிருந் தேன்மனங் கொண்டிருந்தேன்
பட்டு ரவிக்கைக்குள்ளே -வைத்த
பச்சிள நீர்தந்தா ளுச்சிதமாய் ( 29 )
உச்சி நகம்பதித்தே -இத
முண்டுகொண்டேன் சுகங் கண்டுகொண்டேன்
மெச்சிச்சவ் வாசெனவே -கட்டி
மேவிக்கொண்டாள் குரல் கூவிக்கொண்டாள் ( 30 )
கொண்டாடி முத்தமிட்டாள் -மிக்க
கொஞ்சிச் சரசத்தின் மிஞ்சிக் கொண்டாள்
கண்டாசை கொண்டவர்போல் -என்னைக்
கைகலந் தாளதில் மெய்மறந்தேன் ( 31 )
மெய்வேர்வை மாறுமுன்னே -பாக்கு
வெற்றிலை யும்புகைச் சுற்றுந்தந்தாள்
கைவேர்வை யும்மருந்தும் -பல
காரத்து டன்கூட்டிச் சேரத்தந்தாள் ( 32 )
தந்த மருந்தாலே -மெத்தத்
தள்ளாடித் தள்ளாடி யுள்ளானேன்
சிந்தை தடுமாறி
சிட்டுப் போல் நானகப் பட்டுக் கொண்டேன் ( 33 )
கொண்ட பயல்போல -மெள்ளக்
கொங்கையுள் வைத்தெனைச் சிங்கிக்கொண்டாள்
உண்ட மருந்தாலே -கையி
லுள்ளதெல் லாங்கள்ளி கொள்ளைகொண்டாள் ( 34 )
கொள்ளை கொடுத்தவர்போல் -நானுங்
கோப்புக்கெட் டேனெ டுங் காப்புலிதான்
தள்ளத்தள் ளந்திரிந்தேன் -அவள்
தாய்ப்புலிக் குள்ளானேன் ஈப்புலிபோல் ( 35 )

புலிபோல வீறிடுவாள் -வாடா
போருக்கென் பாள்போடா ஊருக்கென்பாள்
கலியோ விதிப்படியோ -சொக்கர்
கற்பானே யோமாமி சற்பனேயோ ( 36 )
சற்பமுங் கீரியும்போல் -மாமி
சன்னமிட் டாளூரிற் கன்னமிட்டேன்
பொற்பூ டணம்புடவை -கண்ட
பொன்னேயெல் லாங்கொண்டு முன்னம்
வைத்ததேன் ( 37 )
வைத்தேன் மனங்குளிர்ந்தாள் -வெறு
வாய்க்கிலே யுங்கொட்ட தாய்க்கிழவி
அத்தை வகைக்காரி -பின்னும்
ஆதரித் தாளதி லேதரித்தேன் ( 38 )
தரித்தே னொருமாதம் -அங்கே
சஞ்சரித் தேன்வல்லி பஞ்சரித்தாள்
சிரித்தே முகம் பார்த்தாள் -ஒரு
சின்னச் சிறைவேணு மென்னச் சொன்னுள் ( 39 )
சொன்ன வயணமெல்லாம் -அவள்
தோத்திர மாய்ச்சொன்ன மாத்திரத்தே
பொன்னே மடமயிலே -இதோ
போறேன் சிறைகொடு வாரேனென்றேன் ( 40 )
பெண்டு போலக் கண்ணீர் சொரிந்தாள் - என்மேல்
பேதலித் தாளென் மனங்காதலித்தாள் ( 41 )
காதல் கொண் டாரெனவே -என்னைக்
கட்டிச் சிணுங்கிக்கும் பிட்டுக்தொண்டாள்
பேதை முகம்வாடி -ஒரு
பேச்சும் விட் டாள்பெரு மூச்சும் விட்டாள் ( 42 )

தொழுது கடன் கழத்தாள் - அவள்
தோந்திர மாயிநின்ற மாத்திரத்தே
பொழுது விடியுமுன்னே -நீரும்
போய்பாரு மென்றவள் தாயுஞ்சொன்னுள் ( 43 )
சொன்ன படிதுணிந்தேன் -ஈசர்
சொக்கரை யுந்தொழு தக்கணமே
பின்னற் கருங்குழலாள்
பின்னிழுக்க விதி முன்னிழுக்க ( 44 )
இழுக்கொன்றும் பாராமல் -காசு
மேவின் துங்குயில் கூவினதும்
ஒழக்கமென் றேநினைத்தே -சென்றங்
கொல்லையி லேதிண்டுக் கல்லில்வந்தேன் ( 45 )
வந்தேன் கடைத்தெருவில் -அங்கே
வங்கண மாக்கண்டேன் சிங்கணனைச்
சந்தோஷ மாச்சுதென்றே -சோறுத்
தண்ணீருந் தந்தவ னுண்ணுமென்றன் ( 46 )
உண்டேன் பசிதீர்ந்தேன் -அவ
ஞெத்தாசை யாலங்கே நித்திரையுங்
கொண்டே னெழுந்திருந்தேன் -கோழி
கூப்பி முன்வேளை வாய்ப்பெனவே ( 47 )
வேறென்றும் பாராமல் -போனேன்
வென்றிச் சிரகிரி கண்டுசென்றேன்
ஏறொன்று வெம்பரியார் -செவ்வந்
தீசரைக் கும்பிட்டுப் பூசைசெய்தேன் ( 48 )
செய்யாருங் காவேரி -யாடிச்
சீரங்க மானம காரங்கத்தில்
ஐயர் பதந்தொழுதேன் -தொழு
தஞ்சாறு நாளங்கே சஞ்சரித்தேன் ( 49 )

சரித்திரமெல் லாங்கேட்டே -என்னைச்
சந்தித்துப் பேசவே சிந்தித்துக்கொண்
டொருத்தன் திருப்பதியான் -அந்த
ஊரில்வந் தானவன் பேருஞ்சொன்னுன் ( 50 )
பேரான கள்ளனென்றே -அவன்
பேச்சுக்கொண் டேதுணை வாய்ச்சுதென்றே
நீரா ரெனப்பகர்ந்தேன் -அந்த
நேரத்தில் தன்வழி சேரச்சொன்னுன் ( 51 )
சொற்கேட் டகமகிழ்ந்தேன் -ஒரு
சோடா விருவருங் கூடிக்கொண்டோம்
பொற்கோ புரவாசல் -தன்னிற்
போய்நின்று சத்தியஞ் செய்துகொண்டோம் ( 52 )
கொண்ட திருவரங்கம் - எனுங்
கோவடி மைத்தொழிற் றேவடியாள்
தண்டா மரைமுகத்தாள் -என்னுஞ்
சந்த்ர கலாவதி சிந்தாமணி ( 53 )
சிந்தை களிகூர -ரொக்கஞ்
செங்கையி லேபண யங்கொடுத்தோம்
அந்திப் பொழுதுதனிற் -சென்றங்
காளுக்கோர் தேவடியா ளைத்தொட்டோம் ( 54 )
தொட்ட கலவியலே -என்னைத்
தோய்ந்தவள் கண்டூங்கிச் சாய்ந்தவிட்டாள்
நிட்டூர மாய்நினைந்தே -கடு
நித்ரையிற் சொக்குப் பொடிதூவினேன் ( 55 )
தூவியன்ன மென்னடையாள் -முத்துக்
குச்சுவச்ரக் கொப்புக் கச்சுடனே
கோவைமுத்து மாலையுடன் -முத்துக்
குச்சுவச்ரக் கொப்புக் கச்சுடனே ( 56 )

உடைமையுண் டானதெல்லாம் -சேர
ஒக்கச் சுருட்டிய டக்கிக் கொண்டு
திடமா யெழுந்து வந்தேன் -அந்தத்
திருப்பதிக் கள்ள னிருப்பிடத்தே ( 57 )
இருபேருங் கைகலந்தே -அதில்
ஏங்கிக் கலங்கிக்கண் தூங்கிவிட்டான்
சரிசாம வேளையிலே -அவன்
றன்னையு முச்சவென் றந்நேரம் ( 58 )
மேலான சொக்குப்பொடி -போட்டு
வீட்டுக் கிராணத்திற் பூட்டிவிட்டேன்
நாலா வகைப்பணியும் -அந்த
நள்ளிருட் சாமத்திற் கொள்ளைகொண்டேன் ( 59 )
கொள்ளைய யணிகளெல்லாங் - கட்டிக்
கூட்டிமேல் மாராப்புப் போட்டுக்கொண்டேன்
மெள்ள வெழுத்து வந்தேன் -அந்த
வீதிவிட் டேசெஞ்சிப் பாதையிற்போய் ( 60 )
போனே னிராவழியே -கள்ளப்
போர்கடந் தேன்கண்ண னூர்கடந்தேன்
கூனு மதிதவழுஞ் -செஞ்சிக்
கோட்டைகண் டேன்வாசற் பேட்டைகண்டேன் ( 61 )
கண்டேன் பல தெருவும் -கடைக்
காவண மும்வீதி யாவணமும்
கொண்டாடு மாரியம்மன் -கோயிற்
கோசிகன் போல்வந்த பூசிகனைக் ( 62 )
கனமா யுறவுகொண்டேன் -தோளிற்
கட்டிக்கொடுவந்த பொட்டணமும்
மனமே திடமறிந்து -வைத்து
வைத்தங்குச் சோறும மர்த்திக்கொண்டேன் ( 63 )

மத்யபா னங்கொடுப்பான் -சோறும்
வாய்ப்புட னேதரச் சாப்பிடுவேன்
நித்யகா லமுஞ்சுகித்தேன் -என்னை
ரெட்சித்துப் பிள்ளைபோல் வச்சக்கொண்டான் ( 64 )
[ அபரங்குசேகுவின் சேனை செஞ்சியிற் பாளயமிறங்கியது ]

## விருத்தம்

வைத்தவ னிருகண் போல வளர்த்தெனைக் காக்குநாளில்
முத்தலம் புகழுஞ் செஞ்சி முதுநக ராமுராஜன்
அத்தல மிழந்த வாறு மபரங்கு சேகுசாய்வு
கைத்தலம் பரிமாக் கொண்டு கலந்ததும் விளம்புவேனே

கசரத துரகதத் தான் -காயலில்
விசய ரகுநாதப் பெரியதம்பி
புசபல ரணசூரன் -புகழ்வளர்
திசைகளி லுயர்செஞ்சி நகர்தனிலே ( 65 )
மாறாட்டத் துறைகளிலே -மதகரி
யேறான சீகோஜி ராயன்மைந்தன்
தேறார்கள் பணிசரணன் -திசையெங்கும்
வீறான நகரெங்கும் விளங்குபிரான் ( 66 )
செகமண்ட லீகர்கண்டன் -செவ்விமதி
முகமண்டலசுகந்த மோகமதன்
மகிபதி சுகலளிதன் -வாதாடும்
இகல்மரு வலர்புலி ராமுராயன் ( 67 )
வெங்கோப வாரணத்தான் -விகசிது
பங்கே ருகமுக பாக்கியவான்
சங்க்ராம கெம்பீரன் -தரையினில்
செங்கோல் மனுமுறை செலுத்துமந்நாள் ( 68 )

துரைமுகில் சுலூபுகான் -சிங்கத்
துரைபதி யாமக்க யிசுமாலுகான்
நரபதி தாவூதுகா -னெசப்ப
நாயக்கன் நாதிருகா னப்பாசுகான் ( 69 )
தத்துலுகான் சவ்வாசுகான் -லாடமனத்
தாடாளி சத்துருசிங் காராவுடன்
சுத்தவீர ரணசூரன் -மகவுலு
சுமுகரித்தமிசு சமுசேருகான் ( 70 )
அதிசூர னிகுத்தாறு கான் -பூலேகான்
அதிதீர னிமாமு கான் அலிமருகான்
மதியூகி நவ்வாசுகான் -கானுகான்
மலுக்கு சம்மந்தருகான் முகம்மதுகான் ( 71 )
ஆகரை நகர்புரக்கு -மனுமதி
அவரங்கு சேகுசாய் பருட்படியோர்
சேகர மாகக்கூடி -ஒசீருகள்
தெக்கண திசைமுற்றுந் திறைகொள்ளவே ( 72 )
அடல்மத கரியுடனே -அறுபதி
னாயிரங் குதிரையும் பொந்தலியரும்
வடவரை கிடுகிடென -அடையலர்
மலங்கிட வேகெற்பங் கலங்கிடவே ( 73 )
வந்திறங்கி வேலூருடன் -அணிவந்த
வாசியுங் கொண்டாரந்த வாசியாலே
சந்திரோயி வயிரோயி -கோர்ப்பரே
தளத்தைத் துரத்திரண களத்துடனே ( 74 )
குறுகலர் திறையிடவே -நடந்தொரு
கூட்டத் துடனே செஞ்சிக்கோட்டையின்மேல்
கறைபடி வேலரசர் -பேரிகை
கறங்கிடப் பாளைய மிறங்கினரே ( 75 )
தாடாண்மை யுடனேவந்து -செஞ்சித்
தலைவரை சுற்றுமட்ட குலவரைபோற்

கூடார மும்மடித்தே -படங்குகள்
கோட்டி நிசான்களு நாட்டினரே ( 76 )
கடகரித் திரள்களெல்லா -நிரைநிரை
சுருங்கிரி யெனச்சுற்றி நெருங்கிடவே
மிடைதருஞ் செடியறவே -காடுகள்
வெட்டினுர் குதியையுங் கட்டினரே ( 77 )
ஒட்டகைத் திரளுடனே சுமையெடுத்
தொருதிர ளாய்வந்த எருதுகளும்
கட்டின ரணியணியாத் திசையெட்டில்
காவலும்வைத் தார்கள்கள்ளச் சேவருக்காய் ( 78 )
வடுகருங் கன்னடருஞ் சோலைதொறு
மடங்க டொறுமிருந்தா ரிடம்பெறவே
தொடுகடல் வளைந்ததுபோற் பாளையந்
தொகுத்தினி தரசரும் வகுத்தனரே ( 79 )
நரபதி தளமல்லவே யொட்டிரெட்டி
நால்கொண்ட கோல்கொண்ட தளமல்லவே
பெருகிய கடலதுபோல் வந்ததெல்லாம்
பேச்சறி யாத்துலுக்க ராச்செனவே ( 80 )
சூட்சம தாத்துலுக்கர் இனிப்போர்
துடிப்பா ரேசிறை பிடிப்பாரே
யாட்சிமனம் வெறுத்ததென்றே எதிர்த்தமர்
ஆடின ரென்றுகுடி யோடினரே ( 81 )
வீட்டையும் வாராமல் கச்சுக்கட்டில்
மெத்தையுந் தலையணை குத்துவிளக்கும்
மாட்டையும் பாராமல் நடந்தோடி
வாராத மக்களையும் பாராமலே ( 82 )
காட்டனிற் புகுவாரும் வாஞ்சித்த
கைக்குழந்தை யொக்கலை யிடுக்குவாரும்

தேட்டத்தி விச்சையுடனே -மனதினில்
திடமற்றுப் பதுங்கியே கிடப்பாரும் ( 83 )
அருமைக்கு ழந்தைகளையே -தப்பவிட்
டலைவாரு மெண்ணத்தான் தொலையாதே
பொருமிப் பொருமியழுதே -அங்கங்கே
போவாரும் மனமிகவே நோவாரும் ( 84 )
அலைந்திடும் பட்சிபோலே -காட்டிற்சென்
தலைவாரும் பசியினு லுலைவாரும்
தலைவிதி மீதுவெனவே -மடங்களில்வி
நரிப்பாருந் தூங்கமுந்தி விரிப்பாரும் ( 85 )
தப்பாகை யில்லாமல் -அகப்பட்டுத்
தவிப்பாருஞ் செங்கைகளைக் குவிப்பாரும்
இப்படிச் சனங்களெல்லாம் -மனதுநொந்
தேங்க குடிவலசை வாங்கினரே ( 86 )
போனவ சந்தோறும் -போய்ப்பார்த்தேன்
பூனையில்லா மனையினி லெலிபோலே
நானதெல்லாமறிந்தே -விடுதிக்குள்
நண்ணினேன் மனத்திலொன் றெண்ணினேனே ( 87 )
கால விபத்தினால் -நமக்கினிக்
கைக்கான சிறையொன்றும் சிக்காதென்றே
சூலூபு கான்ராயன் -பாளையத்தில்
துரக மொன்றுகொண்டு வரநினைத்தேன் ( 88 )
கோதடி தானெடுத்தேன் -கஞ்சாக்
குடுக்கை கைக்குட்படு தடுக்குடனே
மாதடி கோடாலி -குண்டா
மயிற்பீலி விருதங்கி சக்ரமுடன் ( 89 )
கம்பளிக் கயிறுடனே -இடுப்பினிற்
கந்தையுங் கமர்பந்தும் கட்டிக்கொண்டேன்

வெம்புலி போற்சிவந்தேன் -தவசிகள்
வேஷமாய் வெண்ணீறு பூசிக்கொண்டேன் ( 90 )
ஆண்டிகள் வேஷங்கொண்டேன் -எண்ணாமல்
அடர்ந்தேறிப் பாளையத்தில் நடந்தேனே
வேண்டிய வீதிகண்டேன் -அவரவர்
விடுதியெல் லாங்கண்டேன் சடுதியிலே ( 91 )
கடைத்தலை வீதியிலே -மணியக்
காரியக் காரர்தலை யாரிகளும்
திடத்தொடு இருக்கக்கண்டேன் -துரைகள்ஓ
சீறுக ளிருக்குங்கூ டாரங்கண்டேன் ( 92 )
நலம்புனை சுலூபுகான் -கூடாரத்
தாசார வாச லதுவுங்கண்டேன்
ஈடற்ற படைநெருங்கும் -வங்கார
ஏசப்ப நாயக்கன் வாசல்கண்டேன் ( 93 )
கூடார வாசனிலே -லாடர்கள்
கூட்டமும் பக்கீருக் கூட்டக்களுஞ்
சோடாக விருக்கக்கண்டேன் -மனதினிற்
சூழ்ச்சியாய்க் கையெடுத்துத் தாழ்ச்சிசெய்தேன் ( 94 )
ஆவுரேகான்சே ஆத்தேயென்றார் -சாய்புநான்
ஆபுலக்கா புலாத்தோ ஆயாவேன்றேன்
காவுரே கானா வேன்றார் -இதுநல்ல
கருமமென் றேசென் றருகிருந்தேன் ( 95 )
கடைபடு கஞ்சாத்தண்ணீர் -பாத்திரத்திற்
கட்டளையிட் டார்பிரமன் கட்டளையென்றே
இடையூறு பேசாமல் -மண்டிபோட்
டிருந்து பிசுமிச்சொல்லி யருந்தினனே ( 96 )
கறிகளும் ரொட்டிகளும் -அவரவர்
கையார மெய்வழக்கஞ் செய்தார்களே

அறிவுள பெரியவர்போல் -நானுமதை
ஆசாரத் துடன்கொண்டேன் கூசாமலே ( 97 )
கலங்கிய பங்கி வெறியால் -கண்சிவப்புங்
கலந்திட நாவும் பல்லு முலர்ந்திடவே
மயக்கமுந் தியக்கமுமாய்க் -காலுங்கையும்
மடக்கி யொருபு றத்தில் முடங்கினனே ( 98 )
கிறுகிறென் றேமயங்கிக் -கோதடியிற்
கிடந்தேன் சூரியனு மடைந்தானே
நறுமலர்த் தொடைமார்பன் -ஏசப்ப
நாயக்கன் புண்யச காயத்தினால் ( 99 )
போனகக் காரர்வந்து -வண்டகம்
போஞ்செய வாவென்றார் வாஞ்சையுடன்
ஈனமிலா தெழுந்திருந்தேன் -பாத்திரம்
எடுத்தேன் பந்தியிற்சென் றடுத்தேனே ( 100 )
கூண்டிருந் தசனஞ்செய்தேன் -பசியிலேற்
குறைந்த வயிறது நிறைந்திடவே
வேண்டிய சோற்றையுண்டேன் -அதில்வயிறு
வீங்கியே கண்களுந் தூங்கினேனே ( 101 )
விடிந்த பின் னெழுந்திருந்தேன் -பாளைய
வீதியு மவரவர் சேதிகளும்
உடந்தையாய்ப் பார்த்தறிந்தேன் -அங்கங்
குறவுகொண் டவரவர் திறவுங்கண்டேன் ( 102 )
கோப்புகள் தனையுங்கண்டேன் -பட்டாணிக்
கூட்டமு நாட்டமுங் குறிப்புங்கண்டேன்
காப்புகள் தனையுங்கண்டேன் -தலையாரி
காவலும் படுக்கையுங் களமுங்கண்டேன் ( 103 )
அறிந்திடும் பழையவர்போல் -ஆளோடே
ஆளாகப் பதினைந்து நாளிருந்தேன்
மறந்திகழ் சுலூபுகான் -ஏறிய
வாசியி லுத்தமத் தேசிதனை ( 104 )

காத்திருந்தேவல் செய்யும் -பயல்கள்வங்
கணமாச் செனக்கது வுங்குணமாச்சே
சூத்திர மாக்குதிரைப் -பாஷையுந்
தொழிலையும் பரிச்சித்தேன் வழிவசமாய் ( 105 )
வாசியைக் களவுகொள்ள -இன்றமா
வாசி யிருட்டுவந்து வாய்ச்சுதென்றே
ஈசலைப் போலொதுங்கித் -தனித்தோ
ரிடத்தினில் சென்றுநான் படுத்தேனே ( 106 )
ஒளித்தே படுத்திருந்தேன் -பேசாமல்
ஊமனைப் போல்நடுச் சாமத்திலே
விழித்தேன் எழுந்திருந்தேன் -கச்சைகட்டை
மெல்ல விறுக்கிக்கொண்டேன் சல்லடத்தை ( 107 )
கண்ணுக்குத் தெரியாத -குளிசமுங்
கட்டிக்கொண் டேன்திலத மிட்டுக்கொண்டேன்
எண்ணிக்கை யில்லாமல் -பாளையத்
திறங்கின பேரெல்லா முறங்கக்கண்டேன் ( 108 )
மாயமா யொண்டியேபோய் -இதுநல்ல
வாய்ப்பென்று கூடாரம்போய்ப்புகுந்தேன்
தேயத்திற்கிடையாத -உத்தமத்
தேசியைப் பிடிக்கவு பாயமிட்டேன் ( 109 )
மரகத மலைதனையே -உருச்செய்து
வைத்துக் கடைந்தெடுத்த சித்திரம்போல்
குரகதத் தருகு சென்றே -காலைத்தொட்டு
கும்பிட்டேன் மேலைத்தொட்டு முகந்தடவி ( 110 )
திரள்மணிக் கடிவாளம் -வாயினிற்
செறித்தேன் வாயினுரை தெறித்திடவே
குரலுக்கு மேலான -தளைவிட்டுக்
குறிப்பாய்க் கழுத்தினில் தெறிப்பும்விட்டேன் ( 111 )

முறுக்கிட்ட பாளாசு -தனைவிட்டு
முறுக்குப் போட்டுச்சுறு சுறுக்குடனே
சறுக்காமல் விழிப்புடனே -குசைக்கச்சைத்
தாங்கி வெளியில் மெள்ள வாங்கினனே ( 112 )
வெளிக்கொண்ட குதிரையின்மேல் -அடியேன்
மேற்கொள்ள வேண்டுமென் றாக்ரமித்தேன்
கழிக்கம்புச் சோணங்கிநாய் -விழித்தென்னைக்
கலைத்திட வொருசத்தங் குலைத்திடவே ( 113 )
சடுதில்நாய் குலைத்ததென்றே -உறங்கிய
சாணிப் பயல்களும் பட்டாணிகளும்
திடுதிடென் றோடிவந்தே -குதிரையைத்
தேடினார் சுற்றும்பிற்று மோடினாரே ( 114 )
தக்காது குதிரையென்றே -விட்டொளிக்கத்
தலமற்று நடக்கப் பலமுமற்றுப்போய்
பக்காழிப் பொதியெடுக்குந் -துருத்திக்குள்
பதுங்கிக்கொண் டொருபுற மொதுங்கினனே ( 115 )
பறிபட்டுத் தேடினபேர் -முறுக்கிட்டுப்
பாயும் புரவிநின்ற சாயல்கண்டே
தெறிபட்ட கள்ளனையே -பதனமாத்
தேடும் வழிக்காவல் போடுமென்றர் ( 116 )
பந்தமும் பகல்வத்தியுந் -தீவட்டியும்
பார்த்த திசையெலாங்கண் பூத்திடவே
அந்தவல் லிருட்டை யெல்லாம் -பட்டப்பக
லாக்கினார் திசையெங்கும் நோக்கினாரே ( 117 )
தெற்றிய குடிசைகளும் -புல்லுக்கட்டும்
திரைகளும் காணக்கொப் பரைகளுடன்
சுற்றிய விடுதிகளும் -இடம்பெறச்
சோதித்தா ரென்று மனம் பேதித்தேனே ( 118 )

துருத்திக்குட் பதுங்கிக்கொண்டு -கிடப்பது
துறையல்ல தப்புவது முறையெனவே
பொருத்தமுற் றெழுந்திருந்தே -ஓடிப்போய்ப்
பொடுபொ டெனவிறகு நடுவொளித்தேன் ( 119 )
துணிவுட னிருக்கையிலே -சாய்ந்திடுந்
தோட்சுட்டி லொருசுருந் தேட்கொட்டவே
அணிகொட்டுத் தடுமாறித் -தேள்விடம்
ஆற்றாமல் மதியையுந் தோற்றேனே ( 120 )
எரித்திடுங் கடுப்பதனால் -படபடென்
நீரல் துடித்திடக்கண் ணீர்சொரிந்தேன்
ஒருத்தனாய் மலைத்திருந்தேன் -பாப்பாத்தி
உப்புக்கண்டம் போக்கடித்த ஒப்புப்போலே ( 121 )
மறுமொழி பேசாமல் -கச்சைக்குள்
மருந்திருந் ததையெடுத் தருந்தாமல்
குறுகுறென் றேவிழித்தேன் -கள்ளனைத்தேள்
கொட்டின் தென்பதன் மட்டுமாச்சே ( 122 )
கறுப்புக்கண் டால்வருவார் -துருக்கர்
கபடரென் றேநினைத் தவிடம்விட்டேன்
சுறுக்குடன் கிடந்துருண்டேன் -நான்செய்த
துர்ச்சனத்துக் கானகர்ம லட்சணம்போல் ( 123 )
ஐயையோ நெருஞ்சிமுள்ளும் -முனைக்கல்லும்
அழுத்தி முதுகுநெஞ்சைக் கிழித்திடவே
கைகால்கள் பதறிக்கொண்டே -உருண்டிடும்
கலக்கத்தி லேவிழுந்தேன் சலக்கத்திலே ( 124 )
தாழ்ந்துருண் டோடிவிழுந்தேன் -ஏதுங்கெட்ட
சதுக்கான குழியிலே சொதுக்கெனவே
வீழ்ந்தவன் கள்ளனென்றே -காரியம்
வெற்றிதா னெனவந்து சுற்றினாரே ( 125 )

சுற்றிலே வளைந்துகொண்டே -துருக்கரும்
தொடுகட லெனவந்த வடுகருடன்
பற்றுவான் தொங்கச்சிக்கினா -விடமோக்க
பட்டிவச்சி கட்டிவைச்சி கொட்டுகொட்டென்பார் ( 126 )
சோராயெ பக்டுரேயரே -வெட்டி
சோது மதுநிரை வாதியென்பார்
ஏலாத களவு செய்தான் -கள்ளனிவன்
எந்தநக ரத்திருந்து வந்தானென்பார் ( 127 )
குச்சுக்சூளை மகனிவன்தான் -குதிரையை
உச்சிக்கொள்ள வந்தானென்று கச்சுப்பிச் சென்பார்
எச்சுப்போய்க் கிடக்கிறானென்பார் -இனிக்கரை
யேற்றுமென்பார் யார்பொறுப்பார் நாற்றமென்பார் ( 128 )
மூக்கைச் சுளித்துக்கொள்வார் -முகமாறி
மூச்செறிந் திவனுக்கு வாய்ச்சுதென்பார்
காக்கை களும்பொருந்தா -நாற்றத்தைக்
கண்டா னிவன் பொறுத்துக்கொண்டானென்பார் ( 129 )
துடக்கென்று பாராமல் -அடியேன்
துலைக்குழிக்கழுதைபோற் சலக்கத்திலே
கிடக்கிற சமயத்திலே -முட்டுக்
கீழ்க்கையிட் டொருபயல் தூக்கினனே ( 130 )
முட்டுக் காளவாய்போலே -தீண்டாமல்
முழுகச்சொன் னாருடல் கழுவிக்கொண்டேன்
கட்டிக்கொண் டேனைக்கொடுபோய் -நான்செய்த
காரியம் சொல்லித்தலை யாரிமுன்னே ( 131 )
விட்டிவன் பதனமென்றார் -அவனொரு
வீட்டிற்குள் ளேயடைத்துப் போட்டுவைத்தான்
கட்டோடே கிடந்துருண்டேன் -விடிந்திடுங்
காலைக்குள் ளேசிறைச் சாலைக்குள்ளே ( 132 )

பெரியோர் பெருந்தலையார் -இல்லாமல்
பேயும் நாயுமயிர் பிடித்திழுத்துத்
தரியா தெனைநடத்திக் -கொண்டுபோய்த்
தாவூது கான்முன் னேவிடுத்தார். ( 133 )
பட்டாணி ராவுத்தர்மார் -துரைமக்கள்
பாளையக் காரர்கள் அனைவோரும்
அட்டான தேசத்துண்டோ -கள்ளனிவன்
அடக்கமும் ஒழுக்கமும் பாருமென்பார் ( 134 )
எல்லோரு மொருமுகமாய்க் -கூடிவந்
திருக்கிற சமயத்தி னெருக்கத்திலே
நில்லாமல் துரத்துமென்பார் -தவறுசெய்
நெறிகேடன் தன்முகத்தில் அறையுமென்பார் ( 135 )
வெட்டவா ளுறைவிடுவார் -கோபித்து
மிதிப்பார் சவுக்கெடுத்து வீசுமென்பார்
கிட்டவா வெனவுதைப்பார் -ஏதென்று
கேட்பார் நல்லபலன் கிடைத்ததென்பார் ( 136 )
ஆரிவன் காணுமென்பார் -நேற்றெல்லாம்
ஆண்டியாய்த் திரிந்தவன் காணுமென்பார்
பாரிவன் துணிவையென்பார் -ஆள்விட்டுப்
பார்க்கப் படாதிவன் மார்க்கமென்பார் ( 137 )
உடந்தையாய்த் திரிந்தானென்பார் -அளவிட்டு
மொட்டைக்காட்டில் முழக்கம்பு வெட்டு வானென்பார்
திடந்தனைப் பாருமென்பார் -மணலையுந்
திரிப்பான் கல்லில்நா ருரிப்பானென்பார் ( 138 )
களவுசெய் பாதகனை -துரைமக்கள்
கண்ணாரப் பார்க்கவு மொண்ணாதென்பார்
பிளவுசெய் தெறியுமென்பார் -வாஞ்சித்த
பேரைப் பொறுபொறென்று பூரையிட்டு ( 139 )

மரகத மலையதிபன் -தாவுதுகான்
மறுமொழி பேசாமல் முறுவல்செய்தார்
நரபதி சூலூபுகான் -சமூகத்தில்
நடத்தும் இவனையப்பால் கடத்துமென்றார் ( 140 )

சந்தடி தனைவிலக்கி -சமுகத்தில்
தடுக்காமலே நடத்திக் கொண்டேபோய்
சுந்தர மகராசன் -சூலூபு
சுமூகன் துரையுடை சமூகத்தில் விடுத்தார் ( 141 )

கொண்டுபோய் முன்னேவிட்டு -நான்செய்த
கோலத்தை யுந்திருட்டுச் சாலத்தையும்
பண்டுபார்த் ததைப்போலப் -படிப்படி
பகர்ந்தா ரவர்முகம் பார்த்தேனே ( 142 )

கோன்ரே ஜாத்து வென்றார் -சாய்புநீர்
கோபஞ்செயா தேயும்நான் காபரென்றேன்
ஏன்தானோ சிரித்துக்கொண்டார் -இருந்தவர்
எல்லாரு மெனைப்பார்த்துச் சவ்வாசென்றார் ( 143 )

சிரித்துத் தலையசைக்கவே -தமக்கினிச்
சீவனுக் கழிவில்லை யெனநினைத்தேன்
தரித்துத் திடமாய்நின்றேன் -காதிமார்
தன்னை யழைத்திவனுக் கென்னவென்றார் ( 144 )

காதிமா ரெல்லாரும் -பொறுக்கானிற்
காணு முறைமை கடக்காமலே
கோதிலா தறிந்துணர்ந்தே -இவன்றனைக்
குறிப்புடன் காலுங்கையுந் தறித்திடென்றார் ( 145 )

சொலுமொழி தனைக்கோட்டுச் -சுலூபுகான்
துரைதன் முத்திரைமோ திரந்தனையே
தலையாரி கையிற்கொடுத்தே -இவன்றனைச்
சாகாமல்காலுங்கையுந் தறித்திடென்றார் ( 146 )

சொன்னக்ட் டளைப்படியே -அடியேனைத்
துடித்திடக் கையைக்கட்டிப் பிடித்துக்கொண்டு
முன்னும்பின்னு மாகவென்னைச் -சவுக்கடி
மூட்டிக் கடைத்தெருவில் கூட்டிச்சென்றார் ( 147 )
காதினி லறையறைந்து -கழுத்துக்கும்
காதுக்கும் எருக்க மாலையிட்டு
வீதி தொறும்நடத்திக் -கண்டவர்கள்
விலக்கவும் கேளாமல் அலக்கழத்தார் ( 148 )
கோட்டைக்கப் புறநடத்தி -அவரவர்
குழுவும் கடைத்தெருவும் வெளியும்விட்டுப்
பேட்டைத் தெருவி லிருத்தி -அம்பட்டப்
பிரமனை யழைப்பித்தார் அரமனையார் ( 149 )
கருவி பிரமனெடுத்தே -கூர்மைகள்
காட்டக்கற் சாணையில் தீட்டிக்கொண்டே
வரையும் குறிப்புங் குறித்துச் -சுருக்கினில்
வலக்காலும் இடக்கையும் வாங்கினானே ( 150 )
ஆக்கினைக் களரிக்குள்ளே -அங்ஙனே
அயர்ந்து களைத்தேங்கி மூர்ச்சைவந்து
நாக்கொடு வாய்குழறி -உடலும்
நடுங்கிப் பதைபதைத் தொடுங்கிவிட்டேன் ( 151 )
துலங்கிய சோலைமலை -தனிலுள்ள
தோழ ருடனிருந்து வாழாமல்
இலங்கிய மதுரையிற்போய் -சொக்கரை
யடுத்தபலன் நமக்குக்ட கிடைத்ததென்றே ( 152 )
அழுதுபுலம் பிப்புலம்பி -விதிப்படி
யாச்சு தென்றேபெரு மூச்செறிந்து
பொழுது புகுமளவும் -வேதனையால்
புரண்டு புழுதிமண்ணி லுருண்டுருண்டு ( 153 )

விதியால் மதிமயங்கிக் -கிடக்கின்ற
வேளை தனிலேயந்தப் பாளையத்தில்
பதியா யிருக்கின்றபேர் எனை -வந்து
பார்ப்பாரு மேதென்று கேட்பாருமே ( 154 )
ஈனக் கள்ளனிவன்தான் -காலுங்கையும்
இழந்தா னிதுதிரு வுளந்தானென்று
அதிசியம் பார்க்கவந்து -சுற்றிச்சுற்றி
அலைவாரை எண்ணவும்தான் தொலையாதே ( 155 )
அந்த நல்ல சமயத்திலே -வகுதைவாழ்
அவுதல் காதிருபிள்ளை சுதனானோன்
மந்தரத் திண்புயத்தான் -கனதுரை
மாமுநயி னார்ப்பிள்ளை மகிபாலன் ( 156 )
வெம்பிய மதகரியான் -காயலில்
விசைய ரகுநாதப் பெரியதம்பி
தம்பித் துணையெனவாழ் -குங்குமத்
தாம மிலங்குபுய மாமுநயினான் ( 157 )
சென்னபட் டணமிருந்து -செஞ்சியில்
செருக்குட னேவந் திருக்கையிலே
அந்நகர் தனிலடியேன் -களவுசெய்
தாக்கினைப் பட்டவென்னைப் பார்க்கவந்தார் ( 158 )
வந்துநின் றேதெனவே -எனையந்த
மண்ட லாதிபதி கண்டிரங்கி
எந்தவூ ரெந்தத்தேசம் -நீயாரென்
றியம்பினர் வார்த்தையெலாம் நயம்பெறவே ( 159 )
வார்த்தையெலாங் கேட்டே -வளச்சோலை
மலைக்கள்ள னென்றுநான் தலத்தைச்சொன்னேன்
பார்த்தவர் சவ்வாசென்றே -எலுமிச்சம்
பழத்துக்கு மெண்ணெய்க்கும் பணங்கொடுத்தார் ( 160 )

ஏதுமற்ற பரதேசி -இவனைக்கை
யேற்றுப் பரிகரித்துப் பார்த்திடென்றே
தீதற்ற பண்டிதர்க்கு -நூறுபொன்
திட்டமாய்ச் சம்பளமுங் கட்டளையிட்டே ( 161 )
காயத்தை யாற்றிக்கொண்டு -கீழக்
கரையில் பெரியதம்பி மரைக்காயன்
வாயிற் றலத்தில்வந்தால் -உன்னுடைய
வறுமை தொலைந்திடுமென் றுறுதிசொல்லி ( 162 )
கனதுரை மாமுநயினாப் -பிள்ளையென்மேற்
கருணை புரிந்தெழுந் தருளியபின்
அனைவோருங் கூண்டிருந்தே யெண்ணெய்க் -காய்ச்சி
ஆயசத்ரத்தில் ஒத்திட்டு மருந்தும்கட்டி ( 163 )
பத்தியந் தவறாமல் -சோறும்
பசியறிந்தே கொடுத்தார் ருசிபெறவே
முத்திரைப் பதமாகக் -கெடுவிட்டு
மூன்றுநா ளைக்குள்ளே கடுப்பகற்றி ( 164 )
காயமு நாளுக்குநாள் -குணமாய்க்
கருந்தழும் பேறவே மருந்தும்கட்டித்
தாயென உபசரித்து -நோய்தீர்த்து
தற்காத்து ரட்தித்தார் மிக்காகவே ( 165 )
நடுத்தலம் புகழ்மதவேள் -மாமு
நயினா மகிபதி கையினாலே
கொடுத்திடும் பணத்தாலே -நானொரு
குதிரையும் வாங்கிக்கொண்டேன் சதிருடனே ( 166 )
ஆளொன்று கூட்டிக்கொண்டேன் -செஞ்சியில்வந்
தலைந்த பாவமெல்லாந் தொலைந்ததென்றே
நாளொன்றும் கேட்டுக்கொண்டேன் -சீக்கிரத்தில்
நடந்தேன் தொலைவழி கடந்துசென்றேன் ( 167 )

வாலிகொண்ட புரங்கடந்து . -அரியலூர்
வழியும் புதுக்கோட்டை வெளியும்விட்டுச்
சோலியொன்று பாராமல் -திருமயத்
தூருங் கடந்துதொண்டி யூரில்வந்தேன் (168)
கோதற்ற தொண்டிகடந்தேன் -நல்லமணக்
குடியுந் திருப்பாலைக் குடியும்விட்டேன்
பாதைக்குள் வாடியும்விட்டேன் -தேவி
பட்டணமும் வந்துகண்டே னிட்டமுடனே (169)
திருந்தலர் பணிபாதன் -நரபதி
செகபதி சேதுபதி ரகுநாதன்
பொருந்தமனு முறைசெய்யும் -ராமநாத
புரத்தில்வந் தன்றிரவு தரித்திருந்தேன் (170)
வர்த்தக மன்னியர்சூழ் -பெரியதம்பி
மரக்காய ராசார வாசல்வந்தேன்
சுத்தவீர ரணசூரன் -செய்தக்காதி
துரையெங்கே யென்றேன்கீழக்கரையிலென்றார் (171)
அத்தலந் தனைக்கடந்தே -கண்மாயும்
அளத்தையுங் கண்டுதிருக் குளத்தில்வந்தேன்
வைத்த பனைமரத்துக்குங் -காலுக்கும்
வாருகட்டிச் கொண்டேன் அம்மோருக்குளத்தில் (172)
கணத்தினில் வழிகடந்தேன் -பாலையாறுங்
கடந்தே னொண்டிநொண்டி நடந்தேனே
மணவச்சேரி வந்ததனைக்கண்டேன் -சாலையும்
வாய்ப்பான சிங்காரத் தோப்புங்கண்டேன் (173)
கொடிக்கால் மணலுங்கண்டேன் -செம்பொன்
குடம்வைத்த வேகாந்தர் மடமுங்கண்டேன்
கடைத்தலை வீதிகண்டேன் -லெப்பைமார்
காலிமா ரோதும்பள்ளி வாயில்கண்டேன் (174)

விருதுமன் னியர்கண்டேன் -காயலில்
விசய ரகுநாதப் பெரியதம்பி
கருதலர் திறையளக்கும் -வாசலைக்
கண்டேன் மனங்களி கொண்டேனே ( 175 )
சந்திக்க வந்திருக்குந் -துரைமக்கள்
தானா கதித்தலைவர் யூகிகளும்
மந்திரிப் பிள்ளைமாரும் -கணக்கரும்
வடுகரு மீடுகரும் வன்னியரும் ( 176 )
நிறைந்திடு மாசாரத்தில் -நானுமந்த
நெருக்கத்தி லொருபுற மிரக்கச்செய்தே
சிறந்திடு சமயத்திலே -ரட்சித்த
சீமான் அவுதல்காதிர் மாமுநயினான் ( 177 )
வரக்கண் டெழுந்திருந்தே -கும்பிட்டேன்
மார்க்கண்டேன்போலிரென்று வாழ்த்திக்கொண்டேன்
இரக்கஞ்செய் தெனைநோக்கி -ஏன்பிள்ளாய்
எப்போவந்தாய் என்றார் இப்போவென்றேன் ( 178 )
செங்கைமுகில் மாமுநயினான் -நல்லதென்று
சேகுக்கண்டு மன்னவன்முன் பாகச்சென்றார்
தங்களி லிருபேரும் -என்கருமம்
தனைப்பேசி மரக்காயற் சமுகத்திற்போய் ( 179 )
சேகுக்கண்டு மகிபாலன் -என்னுடைய
சேதிசெய்தக் காதிதிருக் காதிலுரைக்தார்
ஆகட்டென்று முடிதுளக்கி -அவனையிங்
கழையுமென் றாளையவ ரனுப்பினரே ( 180 )

## <u>கிழக்கரையில் செய்தக்காதி கொலு வீற்றிருத்தல்</u>

ஆனவர்கள் வந்துசொலவே -நமக்கினி
அட்டயோகங் கிட்டுமினித் திட்டமெனவே
கானுலா வியகொடையான் -செய்தக்காதி
கதிர்ப்பிரபை தங்குந்தங்கச் சவுக்கையின்மேல் ( 181 )

பிறைநுத லியர்மதவேள் -மீராப்
　　பிள்ளை மரக்காயர் வள்ளலுடன்
திறமுட னடுத்திருந்தே -பலபல
　　செய்திகள் யோசனை செய்திடவே (182)
வரிசை செய்யிதுநயினா - னுடைசுதன்
　　வாலமன் மதன் ஒரு பாலிருக்க
அரசர்கள் தொழுசரணன் -குட்டி
　　ஆலிப்பிள்ளை,,யொருபாலிருக்க (183)
மாதர்கள் மதரூபன் -எனவரு
　　மாப்பிள்ளை மாமுறயி னாப்பிள்ளையும்
பூதர புயசயிலன் -சேகுக்கண்டுப்
　　பூபதி யிடனொரு புறத்திருக்கச் (184)
சந்தமுத் தமிழ்தேறுங் -கல்வித்
　　தலைவர் மகிழ்உமறுப்புலவருடன்
செந்தமிழ்க் கந்தசாமிப் -புலவனுஞ்
　　சீராட் டெனத்தமிழ் பாராட்டவே (185)
துரைமக்க ளருகிக்க -மறுமன்யர்
　　சூழ்ந்துகை வாய்புதைத்துத் தாழ்ந்துநிற்கத்
திரைசுற்று மணித்தவிசில் -சருவந்து
　　சிறந்திடக் கிளைவந்து நிறைந்திருக்க (186)
கரணிகர் நிறைந்து நின்றே -அருட்கடைக்
　　கண்பார்த்து வாய்புதைத்துக்காரியஞ்சொல்லச்
சரணிற் சலாமுரைத்தே -தீவாந்தச்
　　சத்திரரும் வர்த்தகரு முத்திரஞ்சொல்ல (187)
குச்சலியர் வச்ரமணியும் -நகைகளும்
　　கொண்டு களிகூர்ந்துநல் தெண்டமிடவும்
எச்சரிக்கை சாமியென்றே -பக்கலில்
　　இராசதக்காரர்நின்று வாசகஞ்சொல்ல (188)

மத்தளமுங் கைத்தாளமுந் -தம்பூரு
வாத்தியங்கள் கொண்டுபலர் கீர்த்தனஞ்செய்ய
முத்தமிழ்க் கவிவாணர் -சமுகத்தில்
முதுதமிழ்க் கவிராசர் பதமுரைக்க (189)
இலக்கிய நிலமகளும் -தனசம்பத்
திலட்சுமி யும்வீரமுயரி லட்சுமியுங்
கலைமக ளொடுமிவர்கள் -சுவாமியெம்
கத்த னெனப்புகழ்ந்து நித்தமுநிற்க (190)
தருப்போல் கொடை கொடுக்குந் -வட்டாவும்
தாம்பூலமுந் துகிலும் தாங்கிநிற்க
திருப்பாற் கடல்போலும் -சமுகத்தில்
திரைபோல நிறைசா மரையெறிய (191)
சங்கநிதி பத்மநிதிபோல் -நிதிவாரிச்
சடையாம விருகையுங் கொடைகொடுக்க
இங்கிதசெயந் தரியமின்னார் -ஆலாத்தி
யேந்தி யிருபுறமுஞ் சேர்ந்துநிற்க (192)
நிறைந்தகலை மதிவந்தே -சமுகத்தில்
நின்றதென்ன வெள்ளைவட்ட மொன்றுநிழற்றச்
சிறந்தசிங் காதனத்தில் -செய்தக்காதி
சிலைமத னைப்போலக் கொலுவிருந்தான் (193)
இருந்தசமு கத்திற்சென்றேன் -உடல்பூரித்
திளகி மனநன்றாய்த் தளதளத்துக்
கருந்தடங் கண்ணியர்வேள் -செய்தக்காதி
கன்னாவ தாரனைப் போலிருந்தான் (194)
விஞ்சையர்க் கனுகூலன் -காயலில்
விசைய ரகுநாதப் பெரியதம்பி
கஞ்சமலர்ச் சரணத்தைக் -கண்ணாரக்
கண்டு களிகூர்ந்து தெண்டனிட்டேன் (195)

அடைக்கலங் காத்தபெருமான் -மன்னவர்க்
கரசு நிலைநிறுத்துஞ் செய்தக்காதி
கடைக்கண்ணா லருட்பார்வையைக் -கண்ணாரக்
கண்டு களிகூர்ந்து தெண்டனிட்டேன் ( 196 )
தெண்டைனிட்டு வணங்கிநின்றேன் -செய்தக்காதி
திருவுள மகிழ்ந்தரு ளகங்குளிர்ந்து
பண்டுபழ கினவர்போல் -அடியேன்
பாட்டைச் செவிதாழ்த்துக் கேட்டனனே. ( 197 )
கேட்டு மனதிலிரங்கி -அடியேன்
கிலேசந் தவிரநல்ல வாசகஞ்சொல்லி
நாட்டிற் றிரிந்துபிழைப்பான் -இவன்றனை
நாமிசுலாமக்கு வோமெனவே ( 198 )
தாராள மாநினைந்தே -அடியேன்
தன்கையி லாயிரம் பொன்கொடுத்துப்
பேரான சதக்கத்துல்லா -முன்பாகப்
பேதமில் லாக்கலிமா வோதச்சொல்லி ( 199 )
பரிவுசெய் தெனையனுப்பக் -கொத்துவாப்
பள்ளிவா சலில்வந் துள்புகுந்தேன்
எரிகதிர் மணித்தவிசில் -ஆலிம்க
ளெல்லா ருடன்சதக்கத் துல்லாவைக்ககண்டேன் ( 200 )
கண்டுதொழு திறைஞ்சி நின்றேன் -இசுலா
மாக்குமெனை யென்றொரு வாக்குச் சொன்னேன்
சடுதியில் சதக்கத்துல்லா கலிமாத்
தானுஞ்சொன் னாரதை நானுஞ் சொன்னேன் ( 201 )
அடைவொடு கலிமாவின் -பொருள்கள்
அனைத்தையுஞ் சொன்னாரென்றன்-மனத்திருத்தி
..........................................................................................
.................................................................................... ( 202 )
படித்த பறுலு சுன்னத்து -நவிலுடன்
பாத்திகா வோதி சலவாத்தறிந்து

முடித்துக்கலா தொழுதேன் -இவன்நல்ல
முசிலி மெனச்சொன்னார் இசுலாமானோர் ( 203 )
தொழுகையுஞ் சக்காத்துடனே -நோன்பையும்
தொகுத்த படிமுடித்து நடத்திடென்றார்
பழுதற்ற கச்சுசெய்யவே -போவென்றார்
பக்கத்தி லேயிருந்தோர் மக்கந்தனக்கு ( 204 )
சொற்படி செல்லமனமாய்ச் -சதக்கத்
துல்லா வுடன்சலாமுஞ் சொல்லிக் கொண்டேன்
சற்குண நிதியனையான் -செய்தக்காதி
தாமரைத் தாளுக்குஞ் சலாம்செய்தேன் ( 205 )
கன்னாவ தாரனையா -செய்தக்காதி
காரியக் காரர்கள் வீரியமாய்ப்
பொன்னாருஞ் சரக்கேற்றித் -தொழில்செய்யப்
போறபத் தாசினி லேறிக்கொண்டேன் ( 206 )
அணிபெறு பத்தாசிலே -ஏறி
ஆட்களுடன் பொன்போல் வாழ்க்கையிற்சென்றே
திணிசுடர்ப் புரிசைசுற்றுங் -கோழிக்கூட்டிற்
செப்பமுடன் சென்றமறு கப்பலேறி ( 207 )
கடற்றுறை வழிகடந்தே -இறங்கிமக்
காவுங் காபத்துல் லாவுங்கண்டேன்
இடத்தினி லெப்பைமாரும் -எல்லார்க்கு
மீவுகள் கொடுக்குஞ்ச் ரீபுகளும் ( 208 )
அறபிகள் செய்யிதுகளும் -செயிகுக
ளாலிங்க ளோடும்பள்ளி மோதீன்களுந்
திறமுட னிருக்கக்கண்டேன் -யாவர்க்கும்
செப்ப முடன்சலாம் செப்பினனே ( 209 )
மக்கமுங் கருபாவும் -கண்டந்த
வரிசைத் தலங்களெல்லாந் தெரிசித்தபின்
மிக்கபுறுக் கான்படியே -அடியேன்
மேலோனைத் தொழுதொரு பாலிருந்தேன் ( 210 )

அய்யமில்லா தத்தலந்தனில் . -இருந்தே
அருந்தவம் புரிந்தங்கே யிருந்ததற்பின்
மைதவழ் முகிற்குடையார் -அரசுசெய்
மதினா தனக்கிரு பதுநா ளில் ( 211 )
போனேன் மதினாவில் போய் -அப்பதி
புரிசையெல் லாங்கண்டேன் வரிசையுடன்
தானே மகிழ்ந்து நபி -திருவடி
சார்ந்த தலத்தைக்கண்டு சேர்ந்தேனே ( 212 )
செல்லை குடைதரித்தோர்மதினாச்
செகமெலாம் புகழ்நபிமுகம் மதுநயினார்
சொல்லிற் சுவனபதிபோல் -வாஞ்சையாய்த்
துலங்கிய மாளிகை வலஞ்சுற்றினேன் ( 213 )
சூகைமலையருந்தி னோர்மதினாச்
சுகம்பெரு நபிமுகம்மது நயினார்
ஏகனைச் தொழுதிறைஞ்சி வாழ்ந்திருந்
திலங்குமாளிகையை வலஞ்சுற்றினேன் ( 214 )
சுற்றிவந் தெதிரே நின்றேன் -அவிடத்தில்
துய்யோன் மறையோதுஞ் செய்துகள் முன்னே
வெற்றிச் சலாமுரைத்தேன்ட -அவிடத்தில்
மேலோனைத் தொழுதொரு பாலிருந்தேன் ( 215 )
வரிசை நபியிறசூல் -முகம்மது
மந்தார முகிற்குடைக் கொந்தாலத்தை
அருகிலே சென்றுநபியைப் -போற்றி
ஆத்திரந் தீர்ந்திடத் தோத்திரஞ்செய்தேன் ( 216 )
படியேழ் புகழ்நபியை -அவுதுல்லா
பாலக ராமிற சூல்நபியை
அடியேன் மனக்குறையு ம் -போகவென்
றாத்திரந் தீர்ந்திடத் தோத்திரஞ்செய்தேன் ( 217 )

மதியைய ழைத்தநபி கஸ்தூரி
வாசம் பொருந்தி வந்த கோசாலத்தை
நதியை யழைத்தநபி யிடத்திற் கையுங்
காலும் வளந்திட துவாவிரந்தேன் ( 218 )
போற்றித் துவாவோதியே -பரவசமாய்ப்
புத்தி மயங்கியொரு நித்திரைசெய்தேன்
ஏற்றுக் கவூலாக்கியே -எனக்குமுன்
னிருந்த காலுங்கையும் வளர்ந்திடவே ( 219 )
சுறுக்கா வெழுந்திருந்தேன் -எங்களிற
சூலரு ளாற்கையுங் காலுங்கண்டே
குறிப்பா யதிசயித்தே -ஈமான்
கொண்ட பலன்கைம்மேலே கண்டோமென்றே ( 220 )
காயலின் மகராசன் -செய்தக்
காதியைத் திசைநோக்கிக் கையெடுத்தேன்
தாயென வுபசரித்த மாமுநயி -னார்ப்பிள்ளை
தன்னையு நினைந்தே தாழ்ச்சிசெய்தேன் ( 221 )
அறபுக் கரையு மக்கமு -மரச
ரவர்வாழி யவர்குல முறைவாழி
குறைசிக் கிளையும்வாழி -செய்யிதுக்
கூட்டமும் வாழிபுறுக் கான்வாழி ( 222 )
ஆழிசூழ் புவிவாழி -செருவில்
அரிய துரைசேது பதிவாழி
கீழக் கரைவாழி -சிங்கக்
கேசச் சதக்கத்துல் லாவாழி ( 223 )
தீனவர் குலம்வாழி -செய்தக்காதி
செல்வமுங் கல்வியுங் தினம்வாழி
ஆனமதி மூன்றுமழை -பெய்தே
அனைவோரும் வாழிரப்பில் ஆலமீனே!( 224 )

**வள்ளல் சீதக்காதி தொண்டி நாடகம் முற்றிற்று.**

## இந்த நூலில் குறிப்பிடப்படும் பெயர்ச் சொற்களின் தொகுப்பு


### அ

அச்சுதராய தும்பிச்சி - 6
அச்சைன் - 23
அஞ்சுவண்ணம் - 2
அண்ணல் நபி(ஸல்) - 58
அதிராம்பட்டினம் - 25, 69, 70
அபிசீனிய நாட்டுவீரர்கள்- 48
அபுல்காசீம் மரைக்காயர் - 117
அமுத கவிராயர் - 55
அரபி மத்ரஸா - 25
அரபு முஸ்லிம்கள் - 12,13,17,19, 26
அரபுக்குதிரை - 26, 49
அர்ரகார் - 1
அல் ஜோபர் - 21
அழகன்குளம் - 10
அனுத்தொகை மங்கலம் - 5, 6, 7, 10

### ஆ

ஆங்கிலேயர் - 75, 76, 77,79,80
ஆதம் வான்டெர்டயன் - 105
ஆயிரம் மசாலா - 26, 57, 58
ஆலம்கீர் - 118
ஆல்ப்ஸ் மலை - 12
ஆற்காடு நவாப் - 66

### இ

இந்தியா - 13
இபுனு பதூதா - 2
இப்னு சுவாது - 55
இப்னு ஸலாம் - 58
இராமநாதபுரம் - 27, 33, 38, 41, 54, 84, 90, 100, 101, 103,104, 108, 110, 116,121
இராமநாதபுரம் அரண்மனை - 41, 44, 48,54,116,
இராமநாதபுரம்கோட்டை - 45, 48, 52, 54, 67,116
இராமலிங்க குருக்கள் - 27
இராமலிங்க விலாசம் அரண்மனை - 45
இராமப்பையன் அம்மானை - 60
இராமாயணம் -18, 36
இராமேஸ்வரம் - 16, 20,37,59, 60, 81, 120
இலங்கை - 14, 20, 28, 32, 53, 76, 80, 81,82, 86, 77
இறங்குதுறை - 10

### உ

உக்காசா - 2
உத்திரகோசமங்கை - 27
உப்பங்கழி - 115
உப்பளம் - 115
உமர்கத்தாப் புலவர் -59,72,101,116
உமறுப்புலவர் - 69, 116, 117

### எ

எட்டி - 7
எட்டையாபுரம் - 59, 101, 116
எலிசபெத் மகாராணி - 77

### ஏ

ஏறுபதி - 7
ஏனாதி மங்கலம் - 39

### ஒ

ஒடுங்காப்புலி - 66

### ஓ

ஓடக்கரைப்பள்ளி - 70

### ஔ

ஔரங்கசீப் - 60, 118

### க

கபாடபுரம் - 18
கடல் கட்டிகள் - 17
கந்தசாமிப்புலவர் - 59
கண்ண அகமது மகுதூம் புலவர் - 105
கர்ணன் - 96
கலோகரை - 21

கறுப்பாறு காவலர் - 58
கன்னியாகுமரி - 15, 81, 85, 87
கஸீதா - 55

கா

காரைக்கால் - 84
கார்னலீஸ் ஹீ - 85
கால்கரை - 21
காயல்பட்டினம் - 2,13, 14, 15, 16, 18, 19, 21,25, 53, 69, 89, 90, 93,100, 105,113,114,115,116
காஜா அகமது மரைக்காயர் - 24

கி

கிழக்குக்கடற்கரை - 13, 14, 17, 23, 26, 36, 119
கிழவன் ரெகுநாத சேதுபதி - 39, 41, 43, 67, 103, 104, 109,110, 116, 119,120

கீ

கீழக்கரை - 2, 6, 7, 12, 16, 18, 19,20,21,22, 23, 25, 26,27,28, 29,31,32, 39, 40, 44,52,56,57,59 65, 66, 70, 72,73, 77, 86,90,92,96, 99, 100,102,103, 108, 109,110, 111,113,114, 115,116,117,118,119
கீழக்கரை துறைமுகம் - 27, 28, 49,79

கு

குமரி முனை - 15
குமாரப் பிள்ளை - 43
குழிமுத்து - 19
குயில்கரை - 21
குஜராத் - 20, 77

கூ

கூத்தன் சேதுபதி - 38

கே

கேரளக்கரை - 13, 14, 23

கை

கைத்தறி துணி - 6, 33, 80, 84, 108
கைபோர்டு - 78

கொ

கொச்சி - 13
கொடி வழிப்பட்டியல் - 106
கொண்டாச்சி - 54
கொலம்பஸ் - 13
கொல்லங்கோடு - 50

கோ

கோழிக்கோடு - 13, 14, 18, 20,23, 24
கோவளம் - 2
கோவா - 14, 24
கோவை நூல் - 60

ச

சங்ககால இலக்கியங்கள் - 19
சங்கு - 26, 28, 49, 86, 87
சங்கு குளிகார தெரு - 28
சங்கு வெட்டிகள் - 28
சங்கு வெட்டிதெரு - 28
சதக்கத்துல்லாஹ் அப்பா - 25, 66,68,69, 70, 73,105,114, 115,118, ,119,
சடைக்கண் சேதுபதி - 38, 60
சம்மாட்டி - 29
சரபோஜி - 43
சர்தாமஸ் மன்ரோ - 77

சா

சாகுல் ஹமீது வலி - 69
சாந்தோம் - 23, 82
சாலியூர் - 1

சி

சிந்து களஞ்சியப்புலவர் - 117
சிலப்பதிகாரம் - 19
சிலாபத்துறை - 16
சின்ன அரண்மனை - 44

சின்ன நெய்னார் ஆலிம் - 25, 69, 70
சிற்றம்பலக்கவிராயர் - 55

## சீ

சீதக்காதி மரைக்காயர் - 25, 28, 29, 31, 32,40, 44, 50, 51, 52, 53,54, 55, 56, 58,59,60, 65, 66, 67,68, 70, 72, 79, 80, 86, 91,92, 93, 96,98, 100,101,102,103, 104, 105,107, 108, 109,110, 111, 116
சீதக்காதி நொண்டி நாடகம் - 44, 66,67,103
சீறாப்புராணம் - 69, 105,116, 117

## சு

சுந்தரபாண்டி பட்டினம் - 109
சுலைமான் ஆலிம் - 69
சுல்த்தான் செய்யது இபுறாகீம் - 7
சுல்த்தான் செய்யது இபுறாகீம் ஷஹீது வலி - 68

## செ

செஞ்சிக்கோட்டை - 44,49,60,66
செத்தும் கொடுத்த சீதக்காதி - 96, 117, 118
செப்பேடு - 27
செட்டி - 23
செயின்ட் பீட்டர்ஸ் வர்க் - 100
செய்கு அப்துல்காதர் மரைக்காயர் -38,39,41,42, 77,102, 116
சென்னைப்பட்டினம் - 77, 79, 82,87

## சே

சேகனாப்புலவர் - 116
சேகு இபுறாகீம் மரைக்காயர் - 29,31,40,101
சேகு கண்ணுமரைக்காயர் - 111
சேது அணை - 36, 37
சேது நாடு - 37, 38, 39,41, 43, 48, 50, 51, 53,54, 59, 60,68, 70, 85, 89, 93, 96,103, 104, 108
சேதுபதி - 36, 82
சேதுபதி மன்னர் - 27, 36, 37, 38, 42,43, 44,45, 48, 49,50, 51, 52, 53,54,68, 80,84, 85, 87,89, 90,91, 92,93, 104, 105, 108, 109,110,116, 119, 120,
சேரமான் பெருமான் - 50

## சொ

சொக்கநாதர்கோயில் கல்வெட்டு - 5, 16,19, 22
சொக்கநாத நாயக்கர் - 42, 43

## சோ

சோழப்பேரரசு - 19, 76
சோனகர் - 2, 26, 27

## ட

டச்சுக்காரர்கள் - 31, 32, 39,40, 49, 81, 82, 84, 85, 86,87, 89,90,91, 92, 93,108, 109, 110
டச்சு ஆவணங்கள் - 33, 40, 44, 49, 100,101,102,103,104,105,106, 108, 109, 110, 119
டான்வெர் - 24

## த

தகோபர் - 75
தஞ்சாவூர் - 19, 43, 82, 110
தப்லே ஆலம் - 69
தமிழ் இலக்கியம்- 25, 26, 35, 56, 59,67
தமீமுல் அன்சாரி - 2
தண்டல் - 29
தண்டலை மேலக்கரை - 6, 8
தர்ஹா - 51
தளவாய் சேதுபதி - 38
தலமலை கண்டதேவர் - 55

## தா

தாய்லாந்து - 23

தாலமி - 1

## தி

திருஉத்ரகோசமங்கை - 50, 120, 121
திருச்சி - 42, 43
திருப்புவனம் - 59
திருமண வாழ்த்து - 33, 40, 60, 116
திருமலை சேதுபதி - 6, 37, 38, 41, 44, 52, 120
திருமலை நாயக்கர் - 38, 44, 60
திருமெய்யம் - 38
திருநெல்வேலி - 33, 44, 52, 53, 59, 84
திர்ஹம் - 5
தில்லி - 118
தில்லையேந்தல் - 8
தினார் - 5

## து

துருக்கர் - 2
தும்பிச்சி நாயக்கர் - 20
துர்ரத் பர்போஸா - 20

## தூ

தூத்துக்குடி - 13, 15, 53, 87 93, 105, 109, 114

## தெ

தென்காயல் - 114
தென்கிழக்கு ஆசியநாடுகள் - 33

## தே

தேவிப்பட்டினம் - 78,79, 85, 90 109

## தை

தைக்கா சாஹிப் வலி - 115

## தொ

தொண்டி - 2, 8, 115
தொண்டைமண்டலம் - 59

## ந

நடுத்தெரு - 101,103
நபி அவதாரஅம்மானை - 117
நமச்சிவாயப் புலவர் - 59

## நா

நாகப்பட்டினம் - 23, 24, 82, 87,
நாகூர் ஆண்டகை - 69
நாயகம் (ஸல்) - 55

## நெ

நெசவு - 27, 33
நெசவுத்தொழில் - 26
நெய்னார் - 20, 21, 22, 91,

## ப

பகதூர்ஷா - 119
படிக்காசுத்தம்பிரான்- 59, 96, 97, 114, 115,
பட்டேரியா - 76
பட்டேவியா - 86
பதினெண் விஷயத்தார் - 6, 22
பத்தன் - 2
பத்தலார் - 17
பண்டகசாலை - 28, 77, 81, 82, 110
பரமக்குடி பாளையக்காரர்- 20, 60
பரவர் - 13, 44, 52, 53, 84, 85, 89, 114
பராக்கிரம பட்டினம் - 2
பருத்திக்காரத் தெரு - 26
பர்தோஸ் - 21
பழைய குத்பா பள்ளி - 29, 70, 115
பள்ளிவாசல் - 51
பவளப் பாறை - 15
பவளவேற்காடு - 15, 81, 82
பவானி சங்கரன் - 110

## பா

பாசா - 1
பாத்திமா பீவி - 69
பாத்திமா நாச்சியார் - 100
பாபர் - 119
பாபா நத்ஹர் வலி - 69
பாம்பன் - 8
பாம்பன் நீரிணைப்பு - 7, 87, 89
பாரசீக மொழி - 49

பாளையக்காரர் - 37, 43
பாவோடி தெரு - 26

பி

பிரன்னிஸ் மலை - 12
பிரான்சிஸ் டிரேக் - 100
பிலிப் - 12

பு

புது அரண்மனை - 44
புரவலர்கள் - 35
புலவர்கள் - 35, 54, 55, 56, 58, 59, 72, 93, 96, 97, 99, 111, 116, 117, 118
புலிக்காட் - 15, 81, 82
புன்னைக்காயல் - 21

பெ

பெரியதம்பி - 31, 32, 39, 40, 42, 53, 102, 103, 104, 108, 109
பெரியதம்பி மரைக்காயர் - 75, 77, 78, 80, 84, 85, 86, 87, 89, 90, 91, 101, 109
பெரியதம்பி மர்கான் - 77
பெரியபட்டினம் - 2, 8, 16
பெரோலஸ் - 21

பொ

பொடம்கின் - 100
பொலிக்காசு மரைக்காயர் - 89

போ

போகலூர் - 38, 39, 44, 104
போர்ச்சுக்கல் - 12, 17, 20, 22, 24, 82
போர்ச்சுக்கீசியர் - 12, 14, 18, 20, 21, 22, 23, 24, 52, 76, 81, 82, 85
போர்ட்டோ நோவோ - 81

ம

மக்கா - 50, 66
மசூலிப்பட்டினம் - 77
மதுரை - 33, 108
மதுரை நாயக்க மன்னர் - 20, 37, 41, 82, 110
மத்ரஸா - 70
மணிக்கிராமம் - 75
மணியக்காரர் - 89, 90, 91
மரக்கலராயர் - 2
மராட்டிய மன்னர் - 42, 110
மருங்கூர் - 1
மரைக்காயர் - 14, 16, 18, 22, 28, 32, 33, 35, 42, 44, 45, 48, 49, 50, 53, 54, 55, 56, 67, 68, 70, 72, 73, 78, 85, 86, 89, 91, 105
மலபார் - 20
மலாக்கா - 23
மறவர் சீமை - 26, 60
மன்னார் வளைகுடா - 16, 18, 20, 23, 53, 82, 86
மஹ்மூது பந்தர் - 2

மா

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் - 115
மாமு நெய்னா மரைக்காயர் - 31, 92, 103
மார்க்கோபோலோ - 17
மான் தோல்கள் - 108
மாவிலாத் தோப்பு - 8

மி

மிராண்டா - 14
மிளகு - 33, 77, 78, 79, 80

மீ

மீரா சாகிபு மரைக்காயர் - 111
மீராப்பிள்ளை மரைக்காயர் - 103
மீன் காரத்தெரு - 25, 73
மீஸான் - 29, 115

மு

முகலாயப் பேரரசு - 49, 118, 119
முத்து - 2, 6, 13, 14, 16, 18, 19, 20, 21, 22, 26, 28, 32, 80, 84
முத்துக்குளித்தல் - 15, 16, 17, 21, 52, 53, 86, 89, 90, 91, 109
முத்துச்சாவடி - 16

முத்துச்சிப்பி - 15, 17
முத்துச்சிலாபம் - 15, 16, 53, 89, 90, 91, 93, 105, 109
முத்துப்பேட்டை - 16
முத்துவாப்பா - 16
முத்து விஜயரெகுநாத சேதுபதி - 110
முர்ரி - 27

மௌ

மௌலா அலி - 100

ரா

ராஜா தேசிங்கு - 60
ராஜேந்திரசோழன் - 75

ரீ

ரீஜென்ட் பெரியதம்பி - 44

ரு

ருஸ்தம்கான் - 42, 43

ரோ

ரோமாபுரி - 19, 23

ல

லஸ்கர் - 90

லி

லிஸ்பன் - 14, 21

லெ

லெப்பை நெய்னா மரைக்காயர் - 101

வ

வகுதை நாட்டு மன்னன் - 33
வச்சிராபுரி இறைவன் - 33
வடுகர்கள் - 57
வம்சா வழிப்பட்டியல் - 101, 103, 111
வணிகர் - 35, 38, 39, 49, 50, 79, 87, 90, 100, 108, 115, 117
வண்ணப்பரிமளப்புலவர் - 26, 57, 58,
வள்ளல் சீதக்காதி- 29, 31, 32, 36, 40, 41, 49, 59, 60, 76, 93, 96, 97, 98, 99, 103, 105, 108, 113, 114, 115, 116, 117, 119, 120
வள்ளல் பாரி - 70
வலம்புரி முத்து - 19

வா

வாசனைப் பொருட்கள் - 26
வாணிபச் சாத்துக்கள் - 75
வால்மீகி - 18
வாவாளி மரைக்காயர் - 29, 115
வாஸ்கோடகாமா - 13, 14, 20

வி

வி. ஓ. சி. - 81
விரையாத கண்டன் - 38
விஜய நகரம் - 14, 57, 76, 82
விஜய ரெகுநாத- 42, 53, 103, 104

வே

வேதாளை- 22, 29, 40, 90, 91, 101, 102, 115
வேதாளை கூரைப்பள்ளி கல்வெட்டு- 31, 32

ய

யவனர் - 2, 19

யா

யாழ்ப்பாணம் - 22, 54, 81, 84, 86

ஜ

ஜஹாங்கீர் - 77

ஜா

ஜாமிஆ மஸ்ஜித் - 73
ஜாவா - 23, 76
ஜாவோ புளோரஸ் - 15, 21

ஜூ

ஜூல்பிகார்கான் - 60

ஸ

ஸமோரின் - 13

ஸ்

ஸ்பெய்ன் - 12

ஷ

ஷக்கூர் - 7

ஹெ

ஹெர்முஸ் தீவு - 49



## ஆசிரியரது பிற படைப்புகள்

- இராமநாதபுரம் மாவட்ட வரலாற்றுக் குறிப்புகள் - (1984)
- விடுதலைப்போரில் சேதுபதி மன்னர் (1987)
  (தமிழக அரசின் பரிசும் பாராட்டும் பெற்றது)
- தமிழகமும் முஸ்லிம்களும் (1988)
  (சென்னை சீதக்காதி அறக்கட்டளை பரிசும் பாராட்டும் பெற்றது)
- மாவீரர் மருதுபாண்டியர் (1989)
  (தமிழக அரசின் பரிசும் பாராட்டும் பெற்றது)
- மன்னர் பாஸ்கர சேதுபதி (1992)
- சேதுபதி மன்னர் செப்பேடுகள் (1994)
  (தமிழக அரசின் பரிசும் பாராட்டும் பெற்றது)
- சேதுபதியின் காதலி (வரலாற்றுப் புதினம்) 1995
  (தமிழக அரசின் பரிசும் பாராட்டும் பெற்றது)
- சீர்மிகு சிவகங்கைச் சீமை (1996)
- சேதுபதி மன்னரும் ராஜ ராஜேஸ்வரியும் (வரலாற்றுப் புதினம்) 1998
- திருமலையின் திருவுருவம் ராஜா தினகர் (1999)


**சர்மிளா பதிப்பகம்**
21, ஈசா பள்ளிவாசல் தெரு
இராமநாதபுரம் - 623 501